வாடகை நூ. நிலையம்
37-B, ஆரிய கௌடா சாலை

# பனிமலர்ச் சோலை

## 1

“அம்மா...! இங்க வா..!”

“அம்மா... ந்தா... ஹை... மிட்டாய்...” என்று விதவிதமாகப் பிரகாஷின் குரல் கேட்கிற மாதிரியே இருந்தது ஜெயஜோதிக்கு.

பார்க்கிற இடமெல்லாம் அவன் தத்தித் தத்தி நடப்பது போலவும், விழுவது போலவும், கை நீட்டி அழைப்பது போலவும் இருந்தது. தவித்துப் போனாள்.

“அம்மா... மூணு நாளாச்சும்மா... குழந்தையைப் பார்த்து... நானாவது போய்ப் பாத்துட்டு வரேம்மா...” என்றாள் அம்மா ராஜலக்ஷ்மியைப் பார்த்து.

அவர் ஒன்றும் பேச வில்லை. கணவனைப் பார்த்தார். கோவிந்தராஜனும் அழுத்தமான மௌனம் சாதித்தார்.

ஜெயஜோதி உடனே ஃபோனை எடுத்து எண்ணைச் சுழற்றினாள்.

அந்தப் பக்கம் சண்முகம் ஃபோனை எடுத்தார்.

''பெரியப்பா... குழந்தை எப்படி இருக்கிறான்...?'' என்று கேட்டாள்.

சரியாக அந்த நேரம் குழந்தையின் அழுகுரல் கேட்டது.

''அழறான் போல இருக்கே...'' என்று தவித்தாள். தொண்டை யில் ஏதோ வந்து அடைக்கிறாற் போல இருந்தது.

''இந்த நேரமானா உன்னோட ஞாபகம் வந்துருது. அழுது அழுதுதான் டயர்டாய்த் தூங்கறான். தம்பிகிட்ட சொன்னா முதல்ல அப்படித்தான் இருக்கும், அப்புறம் சரியாய்ப் போயிருங்கறான். என்ன செய்றதுன்னே புரியலை...'' என்று புலம்பினார் சண்முகம்.

''நான்... இப்ப அங்க வரேன்...'' என்று ஃபோனை வைத்தாள்.

அம்மா அப்பாவின் முகத்தையும் பார்க்கவில்லை. அனுமதிக் காகக் காத்திருக்கவும் இல்லை. சடாரென்று வெளியேறி ஒரு ஆட்டோ பிடித்தாள்.

தாவிக் கொண்டு வருகிற குழந்தையைக் கண்கள் கலங்க அள்ளி அணைத்துக் கொண்டாள், ஜெயஜோதி. அன்பும், ஆவேசமுமாகக் கொஞ்சிக் கொண்டு நிமிர்கையில் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தான் சரவணபவன்.

ஆழமான அவன் பார்வையை வைத்து அவளால் எதையும் கண்டுபிடிக்க முடிந்ததில்லை. 'எங்கே வந்தாய்?' என்று கேட்பானோ என்று கலக்கத்துடன் நிற்கையில் ஒற்றைச் சொல்லில், ''வா!'' என்று வரவேற்றான். அதற்குப் பிறகுதான் சண்முகமே சற்று ரிலாக்ஸானார்.

''குழந்தை சாப்பிட்டானா?''என்றான் சரவணபவன்.

''இல்லை!'' என்பது போல் தலையை ஆட்டினார்.

''பெரியப்பா... கொண்டு வாங்க. நான் ஊட்டி விடறேன்,'' என்றாள் ஜெயஜோதி.



''தாத்தா... தாத்தா...? பாத்தி... வல்லே?'' என்றான் குழந்தை.

''வர்லடா... ராஜா...நாளைக்கு வருவாங்க...'' என்று அவள் வெகுசீரியஸாகப் பதில் சொல்வதைப் பார்த்தபடி,

''சாப்பிடு... ஜோதி...!'' என்றான் சரவணபவன்.

''முதல்லே... குழந்தைக்கு!'' என்ற அவளிடம்,

''அங்கேயே... டைனிங்... ஹாலுக்கு வந்துடேன்...'' என்றான்.

இந்த மட்டும் அனுமதிக்கிறானே என்று மகிழ்ச்சியில் அவள் அவசரமாகக் குழந்தையை எடுத்துக் கொண்டு போய் அந்த வட்ட வடிவ டைனிங் டேபிளின் மேல் உட்கார வைத்தாள்.

நேர் எதிராகச் சரவணபவன் வந்து அமர, சண்முகத்தின் மேற்பார்வையில் பரிமாறினார்கள்.

''ஜோதி... நீ?'' என்றான்.

''நீங்க சாப்பிடுங்கத்தான்...'' என்றாள். அவன் அலட்டிக் கொள்ளாமல் சாப்பிட ஆரம்பித்தான்.

''பாத்தி... எப்ப...வரும்?'' என்றான் குழந்தை.

''நீ இப்ப இந்த இட்டிலி சாப்பிடுவியாம். அப்புறம் பாட்டி வருவாங்களாம்...'' என்று பேசியபடியே குழந்தையைச் சாப்பிடச் செய்வதையும், அவன் ஒருவன் இருப்பதையே மறந்து அவர் கள் தங்கள் உலகில் ஆழ்ந்திருப்பதையும் கண்ட சரவண பவனின் முகத்தில் ஒரு விசித்திரப் புன்னகை மலர்ந்தது.

''டேய்! அப்பா... ஒருத்தன் இங்க இருக்கேன்டா...'' என்றான் இடையில் புகுந்து.

''நீ வேண்டாம்... போ...!'' என்றான் பிரகாஷ்.

''போச்சுரா... இவனும் நம்மளை வேண்டாங் கறான்...''என்று சண்முகத்தைப் பார்த்தான். அவர் மிகவும்

கஷ்டப்பட்டுப் புன்னகைத்தார். சரவணபவன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

நாள் முழுதும் அழுதிருந்ததாலோ என்னவோ, உண்டு முடித்தவுடன் அவள் தோளிலேயே உறங்கி விட்டான்.

கண்பார்வையில் எதிரில் ஒரு புறம் இருந்த சோஃபாவில் படுக்க வைத்து விட்டு முத்தமிட்டு நிமிர்ந்தாள். திரும்பினாள். மறுபடியும் அதே ஆழமான பார்வையுடன் அவன் பார்த்துக் கொண்டிருக்க, அவள் முகம் சிவந்தது.

அவன் அதைக் கண்டு கொள்ளாதவன் போல், ''உட்கார்! உன்கிட்ட பேசணும்!'' என்றான்.

உட்கார்ந்தாள். ''சாப்பிடு,'' என்றான்.

அவள் மௌனமாகச் சாப்பிட ஆரம்பித்தாள். சண்முகம் குறிப்பறிந்து உணவுப் பதார்த்தங்களை வேலையாட்களை டேபிளில் வைக்கச் சொல்லி விட்டு நகர்ந்தார்.

''ஹெல்ப் யுவர்செல்ஃப்!'' என்று இரண்டு இட்லிகளை எடுத்து அவனே வைத்தான்.

''அத்தை... உன்கிட்ட எதுவும் சொல்லலையா?'' என்றான்.

''இல்லை...'' என்று தலையாட்டினாள். ஆனால் தொடர்ந்து, ''குழந்தையை மூணு நாள் ஏன் அனுப்பலை?'' என்றாள்.

''காரணமாத்தான்...'' என்றான்.

உண்மையில் குழந்தை பிரகாஷ் ஜெயஜோதியின் அக்கா சிவஜோதியின் குழந்தை. அவள் கணவன்தான் சரவண பவன். குழந்தைக்கு ஆறு மாதம் இருக்கும் போது சிவஜோதி இறந்து போனாள். அதிலிருந்து குழந்தையை ஜெயஜோதிதான் வளர்த்தாள். குழந்தையின் மேல் உயிரையே வைத்திருந்தாள்.

அக்காவின் இறப்பைக் குறித்து அவள் ஆராய்ந்ததில்லை. ஆனால், அக்கா அத்தனை சீக்கிரம் போய்ச் சேர்ந்ததற்குச்



சரவணபவன் ஏதோ ஒரு வகையில் காரணம் என்ற எண்ணம் அவள் மனதில் ஊறியிருந்தது. அதனால் அவனிடம் அள வாகப் பேசுவாள். ஒதுங்கியே இருப்பாள்.

கடந்த ஆறு மாதங்களாகத் தங்களிடம் வளர்ந்த குழந்தையைச் சமீப காலமாக அவ்வப்போது எடுத்துக் கொண்டு போக ஆரம்பித்தார்கள்.

சண்முகம் வந்து காரில் அழைத்துப் போவார். கொண்டு வந்து விடுவார். ஆனால், கடந்த வாரத்தில் சரவணபவனே கொண்டு வந்து விட ஆரம்பித்தான். பிறகு ஒரு நாள் அம் மாவைத் தனியாய் அழைத்துக் கொண்டு போய்ப் பேசினான்.

அன்றைக்குக் குழந்தையை எடுத்துப் போனவன்தான். பிறகு குழந்தையை அனுப்பவில்லை. அம்மாவிடம் கேட்டாள்.

''சொத்து அவங்களுதுடி, நாம எப்படி உரிமை கொண்டாட முடியும்?'' என்றார்.

இப்போது காரணமாய்த்தான் அனுப்பவில்லை என்று சொல்கிறான் இந்த வில்லன் என்று மனதுக்குள் திட்டிக் கொண்டு அவனை வெறித்துப் பார்த்தாள்.

''எங்க வசதிக்காக... உங்களை எக்ஸ்ப்ளாய்ட்... பண்ணக் கூடாதில்லே...'' என்றான்.

''இதில... என்ன எக்ஸ்ப்ளாய்ட்டேஷன்? குழந்தை மேலே எங்களுக்குப் பாசம் இருக்கக் கூடாதா?'' என்றாள்.

''இருக்கலாம். அதுவே பிரச்சினையாயிடுமோன்னு இருக்கு...'' என்றான்.

''எப்படி?'' என்று கேள்விக் குறியாய்ப் பார்க்க...

''இப்பவே உன் மேல ரொம்பப் பாசமாய் இருக்கான். நீ வேற அம்மா... அம்மான்னு கூப்பிடப் பழக்கியிருக்கே...!'' என்றான்.

அவள் கீழே பார்த்தபடி, ''அது அம்மா ஏக்கம் வராம இருக்கட்டுமேன்னு...'' என்றாள்.

''அதுசரி... நீ கல்யாணம் ஆக வேண்டிய... பொண்ணு... நாளைக்குப் பிரிவு குழந்தைக்குக் கஷ்டமாயிருக்கும். ஏற்கெனவே உங்க அக்கா போய்ச் சேந்துட்டா... இவந்தானே எங்க குடும்பத்து வாரிசு... இவனை எப்படி அங்க விடறது? அது சரிவராது...''என்றான்.

''ஓ...!'' என்றாள் உள்ளடங்கிய குரலில். பிறகு தொடர்ந்து, ''அத்தான்... நான் கல்யாணமே செஞ்சுக்கறதாயில்லை. இவனை மட்டும் என்கிட்டே விடுங்க... நானே வளர்க்கறேன்,'' என்றாள்.

''அது எதுக்கு? ஊர் வாயில் விழவா? இப்பவே அந்தப் பொண்ணுக்குத்தான் புரியலை, இவனுக்காவது அறிவு வேண்டாமான்னு பேசறாங்க,'' என்றான்.

''யாரோ... பேசிட்டுப் போறாங்க...'' என்றாள் ஜெயஜோதி.

''ஐ...ம்... சாரி ஜெயஜோதி. சும்மா எதுக்குப் பேசிகிட்டு... குழந்தை எங்களுது. நாங்க வளர்த்துக்கறோம்... விடு...'' என்றான்.

அவள் திகைத்துப் போய்ப் பார்த்தாள். கண்களில் கண்ணீர் நிறைந்தது.

''ப்ளீஸ்... அத்தான். என்னாலே அவனைப் பார்க்காம இருக்க முடியாது...'' என்றாள்.

அவன் இரக்கத்துடன் பார்த்தான். ''இங்க பாரு ஜோதி... முதல்ல கொஞ்ச நாள் கஷ்டமா இருக்கும். அப்புறம் சரியாய்ப் போயிடும். பாரு... எங்கண்ணன் போனான். அப்புறம்... உங்கக்கா... இப்ப... நான் என்ன செத்தா போனேன்? வாழ்க்கைன்னா... எல்லாந்தான் இருக்கும்...'' என்றான் வறண்ட குரலில்.



'அடப்பாவி... இவ்வளவு சாதாரணமாய்ப் பேசுகிறாயே!' என்பது போல் அவள் பார்க்க...

''என்னடா... கல் நெஞ்சுக்காரா! அப்படீங்கறயா? நான் சொன்னது பொய்யா நிஜமா?'' என்றான்.

அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. பிறகு குரலே எழும்பாத ஒரு குரலில், ''சரி... நான் வேண்ணா தினம் வந்து காலையில இருந்து நைட் வரை குழந்தையைப் பாத்துக் கவா?'' என்றாள்.

''அப்புறம்? நைட்ல யார் பாத்துக்கறது? வேலைக்காரங்க தானே. அதை நாள் முழுக்கவே செஞ்சுட்டுப் போகட்டும்!'' என்றான்.

''என்னத்தான்... இப்படிப் பேசறீங்க...'' என்றாள் இரங்கிய குரலில்.

''என்னை... என்ன செய்யச் சொல்றே? நீ வர்றதைப் பத்தி எனக்கொண்ணும் இல்லே... உன்னையும்... என்னையும் இணைச்சுப் பேசுவாங்க... கேரக்டர் அசாஸினேஷன்... ஐ வோன்ட்... கேர்... ஆனா... உன் ஃப்யூச்சர் என்னாறது?''

அவள் முகத்தில் உறுதி தோன்றியது. ''பரவாயில்லே... என் ஃபியூச்சரே அவன்தான். நான் இங்கேயே வந்து பாத்துக்கறேன்...'' என்றாள் ஜெயஜோதி.

''ஐ' ம் சாரி... ஜோதி... ஐ கான்ட் பர்மிட் இட்...'' என்றான்.

அவள் செய்வதறியாது அவனைப் பார்த்தாள். ''வேற வழியே இல்லையா?''

''சாப்பிட்டு முடி... சொல்றேன்,'' என்றான். அவள் அவசர மாகச் சாப்பிட்டு முடித்தாள். அதற்குப் பிறகு நிதானமாக அந்த வழியைச் சொன்னான்.

அவள் திகைத்துப் போனாள். அவள் கண்களில் மின்னிய வெறுப்பையும் அவன் அலட்சியமாய்ப் பார்த்தான்.

''சாய்ஸ் இஸ்... யுவர்ஸ்...'' என்றான்.

அறைக்குப் போய் விட்டான்.

## 2

''அத்தான்... குழந்தையை எங்கே படுக்க வைக் கட்டும்...?'' என்ற ஜெயஜோதியின் குரல கேட்டுப் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை வைத்து விட்டுத் திரும்பினான் சரவணபவன்.

''இங்கதான்...'' என்று தன் படுக்கையைக் காட்டி விட்டு எழுந்து நின்றான். அவள் உள்ளே நுழைந்து பிரகாஷைப் படுக்க வைத்து விட்டு அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

''அத்தான்... உங்க கிட்டே பேசணும்...'' என்றாள். அவன் மௌனமாக வெளியே வந்தான். சோஃபாவில் அமர்ந்தான். எதிர் சோஃபாவை நோக்கிக் கையைக் காட்டினான். அவளும் பட்டும் படாமலும் அமர்ந்தாள். பதட்டமாக இருந்தாள். கைவிரல்களைக் குனிந்து பார்த்துக் கொண்டாள். நிமிர்ந்தாள்.

''அது எப்படி... முடியும்... அத்தான்?'' என்றாள்.

''எப்படியாவது முடியணும்னு நான் கட்டாயப்படுத் தலியே... நீ உன்னோட பிரச்சினைகளைச் சொன்னே. நானும் என் பக்கத்துப் பிரச்சினைகளைச் சொன்னேன். இரண்டு பக்கத்துக்கும் ஒரு சுலபமான தீர்வில்லையா இது?'' என்றான்.

'அடப்பாவி... அத்தான்... சுமுகமான தீர்வா இது.... எவ்வளவு சுலபமாச் சொல்றீங்க...' என்று எண்ணிக் கொண்டாள்.



''இல்லைங்க... அத்தான்... பிரகாஷை என் பொறுப்பில் விட்டுட்டு... நீங்க வேற... யாராவது... நல்ல பொண்ணாப் பார்த்து...'' என்று இழுத்தாள்.

''ஏன்... நீ நல்ல பொண்ணில்லையா?''

அவள் திகைத்துப் போனாள். அவள் அக்கா இறந்து ஆறு மாதம்தான் ஆகியிருந்தது. அப்படியிருக்க அடுத்த கல் யாணத்துக்கு அடிப் போடுகிறானே என்ற வெறுப்பு உள் ளுக்குள் மண்டியது.

எத்தனை ஆண்களை இதுவரை பார்த்து விட்டாள்! தங்களுடைய பெண்கள், அமைப்பில் எத்தனை பெண் களுடைய சோகக் கதைகளைக் கேட்டு விட்டாள்! அதனால் தானே கல்யாணமே வேண்டாம் என்ற மனப்பான்மையில் இருந்தாள். அதிலும் உள்ளூரத் தான் வெறுக்கிற அத் தானையா? அட ஆண்டவா... இது என்ன சிக்கல் என்ற குழப்பத்தில் ஆழ்ந்தாள். மறுபடியும் அவன் பேசும் குரல் கேட்டு நனவுலகுக்கு வந்தாள்.

''என்ன... நான் கேட்டுகிட்டே இருக்கேன்.... பதிலைக் காணோம்...''

தட்டுத் தடுமாறிய குரலில்..." இல்லே... எனக்கு மேரேஜ் லைஃப்ல இண்ட்ரஸ்ட் இல்லே... சோஷியல் சர்வீஸ்லதான்...'' என்றாள்.

அவன் முகத்தில் கிண்டலான ஒரு புன்னகை மலர்ந்தது.

''இத பார்றா... சொந்த வீட்ல ஒரு சின்னக் குழந்தைக்கு... உன்னோட தேவையிருக்கு... அதுக்கு வழி செய்யாம... உலகத்துக்குச் சேவையாக்கும்!'' என்றான்.

அவள் திகைத்துப் போய் நின்றாள். ''ஜோதி... நீ நினைக்கிற மாதிரி எனக்கும் ஒண்ணும் கல்யாண வாழ்க்கை வேணுங் கறதில்லே... உன் தத்து மகன்... தினமும்... கண்ணும்... மூக்கும் சிவந்து போற வரைக்கும் அழறான். நீயும் அவனை

விட்டுட்டு இருக்க முடியாமத் தவிக்கறே...'' என்று தோளைக் குலுக்கினான்.

அரக்கன்... அரக்கன்... சரியான வீக் பாயிண்ட்ல அடிக்கிறான்... என்று நொந்து கொண்டாள். அவன் பார்வை கூர்மையாகியது.

''வேற... யாராவது?'' என்று இழுத்தான்.

''இல்லே... இல்லே...'' என்று அவசரமாக மறுத்தாள்.

''உன்னோட சோஷியல் சர்வீஸையும் தொடர்ந்து செய்யலாம். எனக்கொண்ணும் அப்ஜக்ஷன்... இல்லே...'' என்றான்.

அவள் தலையாட்டிக் கொண்டாள். ''அவசரமில்லே... நல்லா யோசிச்சுச் சொல்லு...'' என்றான்.

குழந்தை திரும்பிப் படுத்தான். அவள் அனிச்சைச் செயல் போல் பாய்ந்து அவன் அருகில் அமர்ந்து தட்டிக் கொடுப்பதைச் சரவணபவன் ஆழ்ந்த பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு என்ன நினைத்தானோ தெரிய வில்லை, ''சரி... வா... நானே டிராப் செய்யறேன். குழந்தையை எடுத்துட்டுப் போ... இரண்டு, மூன்று நாள்ல முடிவு சொல்லு... எதுவும் கட்டாயம் இல்லே...'' என்றான்.

அவள் ஆர்வமாகக் குழந்தையை அள்ளிக் கொண்டாள். பின் சீட்டில் அமர்ந்து கொண்டாள். வீட்டில் இறக்கி விடும் வரை ஒன்றும் பேசவில்லை.

அவர்கள் வீட்டில் அவனை விழுந்து விழுந்து உபசரிப்பதை வெறுமையாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அம்மா கலக்கிக் கொடுத்த ஹார்லிக்ஸைக் குடித்து விட்டுப் புறப்படுகையில்,

''அத்தை... உங்ககிட்டே பேசணும்,'' என்றான்.

அம்மா கார்வரை போய் காரருகில் நின்றபடி மெல்லிய குரலில் அவனுடன் தீவிரமாக விவாதம் செய்வதைப்



பார்த்துக் கொண்டு நின்றாள். அவன் புறப்பட்டுப் போன பிறகு உள்ளே வந்தார்.

''என்னடி சொன்னார் மாப்பிள்ளே... உன்கிட்டே...?'' என்றார்.

சொன்னாள். அப்பாவும், அம்மாவும் சற்று நேரம் வெளியில் போய்ப் பேசிவிட்டு வந்தார்கள். உள்ளே வந்த பிறகு தனியாய் அழைத்துப் போனார்.

''நீ என்னடி சொல்றே... ஜோதி...'' என்றார் அம்மா.

''நான் என்ன சொல்லட்டும்... எனக்குப் புரியலே...'' என்றாள்.

''இத பாரு... ஜோதி... எப்படி இருந்தாலும்... மாப்பிள்ளைக்குச் சின்ன வயசு. இன்னும்... ஒரு வருஷமோ... ரெண்டு வருஷமோ கல்யாணம் செய்யத்தான் செய்வாங்க. வர்றவ... நம்ம குட்டியை எப்படி வச்சுக்குவாளோ... தெரியலியே... யோசிச்சுப் பாரு...'' என்றார்.

''அம்மா... நான்தான்... குழந்தையை வளர்க்கறேன்னு... சொல்றேனே...'' என்றாள் தன்னிரக்கத்துடன்.

அம்மா நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

''ஜோதி... தியாகம்ங்கறது நம்ம மனசைப் பொறுத்தது. நீ ஊருக்கெல்லாம் சேவை செய்யறது இருக்கட்டும். நம்ம வீட்டுக் குழந்தைக்கு நாளைக்குக் கண்ல தண்ணி வராமப் பாத்துக்கணுமில்லே...'' என்றார்.

ஜோதியின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. ''அம்மா... அக்கா... செத்துப் போய் ஆறு மாசம் கூட ஆகலே...'' என்றாள்.

''ஜோதி... நான் ஒண்ணு சொல்லட்டா... சிவா இறந்த துக்குக் காரணம்... அவளேதான். வாழ்க்கையைச் சந்திக்கிற தைரியம் அவளுக்கு இல்லாமப் போயிடுச்சு... ஆனா... நீ...

தைரியமானவ. நீ அப்படித் தோத்துப் போக மாட்டே!'' என்றார்.

அவளுக்குச் சற்றே பலம் கூடினாற்போல் இருந்தது. அம்மா தொடர்ந்தார்.

''எனக்கும்... உங்கப்பாவுக்கும் பெரியவங்க எங்க சம்மதத்தைக் கேட்டா... செஞ்சாங்க? அதிலும்... உங்க அப்பா எவ்வளவு முரடர் தெரியுமா? ஆனா... இப்ப எப்படி சாதுவா மாறிட்டாரு. அப்படித்தான்... வாழ்க்கையில நமக்குப் பிடிச்ச தாவே எல்லாம் அமையும்னு எதிர் பார்க்கக் கூடாது!'' என்றார்.

அவள் மௌனமாகத் தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தாள். அம்மா மீண்டும் அவள் கன்னத்தை வருடினார்.

''ஜோதி... ஆம்பளைங்கன்னா... அப்படித்தான்... வித... விதமா... இருப்பாங்க... நாம பெண்கள்... அப்படியில்லே... மனசால... வாழ்றவங்க... அதனால... சில விஷயங்களை... இல்லையில்லை... காயங்களைத் தாங்கித்தான்... ஆகணும்!'' என்றார்.

ஜெயஜோதி ஒன்றும் பேசவில்லை. ''நல்லா... யோசிச்சுப் பாரும்மா... சிவஜோதி போன காயத்தையே இந்தக் குழந்தை முகம் பார்த்துத்தான் ஆத்திக்கறோம். இப்ப அந்த வாய்ப்பும் இல்லேன்னா...'' என்றார். நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

அவளை யோசிக்க விட்டுவிட்டு நகர்ந்து விட்டார். அந்தக் கடைசி வார்த்தைகள் அவளை வெகுவாக யோசிக்க வைத்தன. படுக்கைக்கு வந்தாள். குழந்தை எழுந்து அமர்ந்திருந்தான்.

''அம்மா... அம்மா...'' என்று தாவிக் கொண்டான்.

''போக மாட்டேன்டா... கண்ணா...'' என்று தழுதழுத்தாள்.

''அப்பாவை... உனக்குப் பிடிச்சுதாடா... ராஜா...'' என்றாள்.

''ம்... அப்பா... நல்ல அப்பா... ஆனா... நீயும் வேணுமே...'' என்றான்.



ஜெயஜோதி நெகிழ்ந்து விட்டாள். அத்தான் கேட்டது சரிதான். வீட்டுக் குழந்தையை ஏங்க வைத்துவிட்டு எப்படி ஊர்க் குழந்தைங்களுக்குச் சேவை செய்யப்போவது!

இறுக அணைத்துக் கொண்டாள். ''நீ மம்மு சாப்பிட்டியா?'' என்றான் பிரகாஷ்.

''சாப்பிட்டேன்டா... ராஜா...'' என்றாள். ''அந்த வீட்டுல உனக்கு என்னென்ன குடுத்தாங்க?'' என்றாள்.

''நெய்ய... பொம்மை... லட்டு... கேக்... பிஸ்கட்... எல்லாம் குடுத்தாங்க...'' என்றான்.

''அம்மா... வேணுமா... அந்த வீடு வேணுமா?'' என்றாள்.

''ரெண்டும்... நம்ம ரெண்டு பேரும் அங்க போலாமா?'' என்றான்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. பரவாயில்லை. அப்பனும் மகனும் ஒன்று போல் பேசுகிறீர்கள் என்று சிரித்துக் கொண்டாள். ஆனால் குழந்தை உறங்கியபின் மனசுக்குள் பீதி கிளம்பியது.

திருமணம் என்றால் எல்லாவற்றுக்கும் ஒத்துப் போக வேண்டுமே.. அத்தான் மேல் தனக்கு நல்ல கருத்தே இல்லை. பிறகு எப்படி ஒத்துப் போவது? ஆனால், அத்தானும் தனக்கு ஒன்றும் திருமண வாழ்க்கையில் ஆர்வம் இல்லை என்கிறாரே. எல்லாம் சொல்வதுதான். நாளைக்கு நிலைமை எப்படி இருக்குமோ!

சிவஜோதி சாகும்போது, 'ஜோதி... உன்னை நம்பி என் குழந்தையை விட்டுட்டுப் போறேன்டி...' என்று கலங்கியது நினைவில் வந்தது.

இப்போதும் அவள் இறப்பை நினைத்தால் அவள் நெஞ்சில் பெரிய பாறாங்கல்லை வைத்தது போல் கனக்கும். இனி, இவனையும் பிரிவது என்றால் வாழ்க்கை

வெறுமையாய்த்தான் இருக்கும். அதற்காக... மனதுக்குப் பிடிக்காதவனுடன் வாழ நேர்ந்தால்... அது எவ்வளவு கடினமாக இருக்கும்!

குழந்தை புரண்டு அவளை இறுகக் கட்டிக் கொண்டான். அந்தக் கணம் அந்தக் குழந்தையின் தேவை ஒன்றுதான் முக்கியம். மற்ற எல்லாமும் இரண்டாம் பட்சம் என்று தோன்றியது.

★ ★ ★

''நான்... சரவணபவன்... பேசறேன்... பையன் தூங்கிட்டானா?'' என்றான்.

''ம்... நல்லாத் தூங்கறான்...'' என்றாள்.

''ஒண்ணும் பிரச்சினை.... இல்லையே?'' என்றான்.

''இல்லையே.... ஏன் கேக்கறீங்க...?''

''இல்லே... இங்கே மூணு நாளா... ராத்திரியெல்லாம் நடுவில நடுவில முழிச்சு... அழுது... ஏக ரகளை... செஞ்சான். இப்ப அங்க... நிம்மதியாத் தூங்கறானாக்கும்!'' அவன் குரலில் தெரிந்த எரிச்சலைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''அது... அது... பழக்கமில்லாத இடம்னு...'' என்றாள்.

''சரி... சரி... ரொம்பப் பெருமைப் பட்டுக்க... வேண்டாம்...'' என்று கடுகடுத்தான். அவள் அதற்குள் -

''அத்தான்... நீங்க சொன்ன யோசனைக்கு...'' என்று ஆரம்பிக்கையில் அவன் இடையில் புகுந்தான்.

''நான்தான்... மூணு நாள் டைம் குடுத்திருக்கேனே. வந்தா... ரெண்டு பேரும் வாங்க... இல்லே... அவனை மட்டும் கொண்டு வந்துவிட்டு... ஒன்ஸ் ஃபார் ஆல்... ஒதுங்கிக்குங்க... ரெண்டே... ரெண்டு ஆல்டர்நேட்டிவ்ஸ்தான்...'' என்றான்.

வைத்து விட்டான்.

பேசுவதே வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு மாதிரித்தான் பேசுகிறார். அதனால்தான் அக்காவால் தாக்குப்பிடிக்க



முடியவில்லை போலும். சிவஜோதி மிகவும் மென்மையானவள். பயந்த சுபாவம். இவனை எந்த விதத்தில் சேர்ப்பது? குழந்தையைப் பற்றி அக்கறையாக விசாரித்தானா? அல்லது எரிச்சலாக விசாரித்தானா? ஒன்றும் புரியவில்லை.

இப்படித்தான் அக்கா ஒவ்வொரு முறை ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகும்போது பெஸ்ட் ட்ரீட்மெண்டுக்கு ஏற்பாடு செய்வான். ஆஸ்பத்திரியில் வெகு நேரம் செலவழிப்பான்.

குழந்தை நேரத்துக்குச் சாப்பிட்டானா... என்று அவனைப் பற்றியும் விசாரித்துக் கொள்வான். ஆனால், முகத்தில் மட்டும் எந்த உணர்ச்சியையும் காட்ட மாட்டான்.

சிவஜோதி இறந்த அன்றைக்கு மட்டும் தனிமை நாடினான். சற்று நேரம் மேல் நோக்கி வெறித்துப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தான். பிறகு எழுந்து எல்லாக் காரியங்களுக்கும் ஏற்பாடு செய்தான். அவன் அம்மாவும் அப்பாவும் ஊரிலிருந்து வந்திருந்த போதும் அதே அழுத்தம்தான். அம்மா அவன் தோளில் சாய்ந்து கதறியபோது மட்டும் லேசாக உதடுகள் நடுங்கின. கண்கள் கலங்கின. பரவாயில்லை. மனுஷன்தான் என்று ஜெயஜோதி எண்ணிக் கொள்கையிலேயே மீண்டும் தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டான்.

''அம்மா... ப்ளீஸ்... கன்ட்ரோல் யுவர்செல்ஃப்!'' என்றான். அந்த அம்மா என்ன புரிந்து கொண்டாரோ, அமைதியானார். அதற்கப்புறம் சடங்குகள் எல்லாம் வேகமாய் நடந்தன. இன்றைக்கும் அதே மேட்டர்... ஆஃப் ஃபாக்ட் குரலில் தன்னிடம் கல்யாணம் பேசுகிறான். தன் விதியை நினைத்து நொந்து கொண்டாள் ஜெயஜோதி. ஆனால் ஒரு கணம் திரும்பிப் பிரகாஷின் முகம் பார்த்ததும் எல்லாம் துச்சமாகத் தோன்றின.

தூக்கத்தில் லேசாகச் சிரித்தான் குழந்தை. அந்தக் கொள்ளை கொள்ளும் சிரிப்பில் அவள் குளிர்ந்தாள். இவனுக்காக எந்தத் துக்கத்தையும் எதிர் கொள்ளலாம் என்று நினைத்தாள்.

'டேய்... கண்ணா... உங்கம்மா மாதிரிக் கைவிட மாட்டேன்டா... உன்னை...! சந்திப்பேன்... எதையும்... சந்திப்பேன்...'' என்று எண்ணிக் கொண்டாள்.

அதற்குப் பிறகுதான் உறக்கம் பிடித்தது.

## 3

திருமணம் முக்கிய உறவினர்களை மட்டும் அழைத்து, அவர்கள் முன்னிலையில் நடந்தது. மாலையில் பெரிய அளவில் ரிசப்ஷன். வழக்கம் போல் முகத்தில் எந்த உணர்வும் காட்டாமல் ஆனால் இயல்பாக நடந்து கொண்டான் சரவணபவன்..

ஜெயஜோதிக்கு அதிர்ச்சி என்னவென்றால் ராஜலக்ஷ்மியும், கோவிந்தராஜனும் முடிவெடுக்கும் வரை காட்டிய தயக்கத்தை முடிவெடுத்ததற்குப் பின் காட்டவில்லை. மாறாக மகிழ்ச்சியடைந்தார்கள். வெகு ஆர்வமாக ஏற்பாடுகளைச் செய்தார்கள் என்பதுதான்.

தனது நெருங்கிய தோழிகள் லதாவிடமும், சுபாவிடமும் தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டாள் ஜெயஜோதி. லதா எப்பவும் நெகடிவ் பாயிண்டில் யோசிப்பாள் என்றால் சுபா எப்போதும் நல்ல விதமாகவே யோசிப்பாள்.

லதா சொன்னாள்: ''ஜோதி... சரவணபவன் எவ்வளவு பணக்காரன்னு உனக்குத் தெரியாதுடி. அவருக்குப் பொண்ணைக் கொடுக்கறதுன்னா... கசக்குமாடீ?'' என்று.

சுபா, ''ஜோதி.... அதையும் இதையும் யோசித்து மனசைக் குழப்பிக்காதே. நம்மளை மாதிரிப் பெண்களுக்குக் கல்யாணங்கறதே எப்படியும் ரிஸ்க்கான விஷயம்தான். வாய்ச்சா



வாய்க்கும்... ஏய்ச்சா... ஏய்க்கும். அதனாலே... டேக் திங்ஸ் ஆஸ் தே கம்...'' என்றாள்.

ஜோதி ஒரு பெருமூச்சு விட்டாள். ''ம்...வேற வழி?'' என்றாள்.

சுபா மேலும் ஒன்று சொன்னாள். ''எது எப்படியோ... ஜோதி... உங்க அத்தானுக்கு ஏற்கெனவே ஒரு கல்யாணம் ஆகி ஒரு குழந்தை இருக்குன்னா... யாரும்.. நம்ப முடியாது. ஆள் பாரு... எவ்வளவு ஃபிரெஷ்ஷா இருக்காரு...''என்றாள்.

உண்மைதான். ஜோதிக்கே அப்படித் தோன்றியது. ஆள் கம்பீரம்தான். அழகன்தான். மற்றவர்களிடம் பேசும்போது அழகாகப் பேசுகிறான். அளவாகப் பேசுகிறான். அவர்கள் உறவினர்கள் பலர் தங்கள் வீட்டுப் பெண்களுக்கு அவனைக் குறி வைத்திருந்தார்கள் போலும். அதிலே ராதாமணி என்று ஒரு அம்மா கல்யாண மேடையிலேயே, 'பரவாயில்லை. ராஜலட்சுமியம்மா... ரெண்டு மகளுகளுக்கும் ஒரே மருமகனா அமைஞ்சு போச்சு... அதனாலே... ரெண்டு மருமகனையும் மாத்தி மாத்தித் தாங்க வேண்டிய அவசியமில்லே...' என்றார்.

ராஜலட்சுமி சட்டென்று மௌனமாகி விட்டார். காயப் பட்டவர் போல் மருமகனைப் பார்க்க அவன் அலட்டிக் கொள்ளாமல் -

''என்னங்க... ராதாமணி அத்தே... சங்கடப்படறீங்களா? சந்தோஷப் படறீங்களா?'' என்றான்.

அவனே பதில் தரவும் ராதாமணி அரண்டு விட்டார்.

''ஐயய்யோ... நான் ஏப்பா சங்கடப்படறேன். சந்தோஷம் தான். அதுசரி... இதென்ன... இப்படி வக்காலத்து வாங்கறே...'' என்று கலாட்டா செய்ய...

''பின்னே... என் மகனுக்கு அம்மாவோட மனசு சங்கடப் பட்டா... எனக்கில்லே... நஷ்டம்?'' என்று பகபகவென்று

சிரித்துக் கொண்டு, மனைவியின் தோளில் கைபோட்டு ஒரு முறை அழுத்திக் கொடுத்தான்.

எல்லாரும் சிரித்தார்கள். மீண்டும் சூழ்நிலை மாறியது.

தளர்நடையில் வந்த மகனை வாரிக் கையில் வைத்துக் கொண்டாள்.

''ஹை... அம்மா... புதுப் பொண்ணு...'' என்று குழந்தை சிரிக்க...

''அப்ப... நான் என்னடா பழைய மாப்பிள்ளையா?'' என்று முத்தமிட்டுக் கொஞ்சி மகிழ்வதை மனைவி பார்க்கக் கண்டு -

''டேய்... அம்மா... முறைக்கறாடா... பொறாமை... பொறாமை... இந்தா, நீ அங்க போ...!'' என்று சிரித்துக் கொண்டே கையில் கொடுக்க, அவளையும் அறியாமல் புன்னகைத்தபடி வாங்கிக் கொண்டாள்.

''ம்... அப்படித்தான்.... முகத்தைக் கொஞ்சம் சாதாரணமா... வை. இஞ்சி தின்ன மாதிரி... நிக்காதே...'' என்றான் அடிக் குரலில். அவள் திடுக்கிட்டுப்போய்த் தன்னை மீட்டுக் கொண்டாள்.

ரிசப்ஷனுக்கு வந்தவர்களைப் பார்த்துத்தான் அவனது உண்மையான அந்தஸ்து என்ன என்று ஜெயஜோதிக்குப் புரிந்தது.

நகரத்தின் முக்கியப் புள்ளிகள், வியாபாரப் புள்ளிகள் என்று நிறைய வந்திருந்தார்கள். வைஸ் டெசிஷன்... என்று பாராட்டினார் ஒருவர். உடன் நின்ற ஒருவர், 'ஆமா... இதுவரைக்கும்தான் சரவணன் டெஸிஷன் எடுக்க முடியும். இனி எல்லாம்... வைஃப் டெஸிஷன்தான்!' என்று சிரிக்க, அவனும் மனதாரச் சிரித்தான். அவரே மறுபடியும் தொடர்ந்தார்.

''ஆனா... அதிலயும் ஒரு சுகம் இருக்கும்டா... பயலே... ஆஃபீஸ்ல நாம மிரட்டிட்டு வருவோம். இங்க... இவங்க



நம்மளை மிரட்டிப் போடுவாங்க... இந்த டிரைவர்கள்ளாம்... உள்ளுக்குள்ளே சிரிச்சுகிட்டு நிப்பாங்க... பாரு...'' என்று பகபகவென்று சிரித்தார்.

''அதுதான்... சார்... நான் செல்ஃப் டிரைவ்தான்...'' என்றான்.

''பாத்தியாம்மா... மிரட்டவெல்லாம்... விடமாட்டேன்னு... வீரமாச் சொல்வான்னு பாத்தா... பய... செல்ஃப் டிரைவ்ங் கறான்!'' என்று அவர் மீண்டும் சிரித்தார்.

ஜெயஜோதி தன்னையும் மறந்து சிரித்து விட்டாள். அவன் பார்வை அவள் மேல் படிந்து மீண்டது.

''சரி... சரி... பய எப்படி இப்படி விழுந்தான்னு நீ சிரிக்கும் போது புரியுதும்மா...'' என்று இன்னொருவர் சொல்ல... அவள் முகம் சிவந்தது.

அவன் பார்வை அவள் முகத்தின் மேல் படிந்து மீண்டு அந்தக் கணத்தில் ஜெயஜோதிக்கு முதுகு சில்லிட்டாற்போல் இருந்தது. கண்கள் படபடத்தன. சட்டென்று வேறு பக்கம் பார்த்தாள்.

விருந்தினர்கள் அந்தப் பக்கம் நகர, அவள் டென்ஷனுடன் நிற்பதைப் பார்த்து லேசாகப் புன்னகைத்துக் கொண்டான்.

''ரிலாக்ஸ்... ரிலாக்ஸ்...'' என்றான் லேசான... இதமான... குரலில்... அவள் தலையை ஆட்டிக் கொண்டு குழந்தையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

''அம்மா... இன்னைக்கேவா... கொஞ்சம் தள்ளி வைக்கக் கூடாதா?'' என்று தவிக்கிற மகளை அம்மா பரிவுடன் பார்த்தார்.

''என்னை... என்னடி செய்யச் சொல்றே? அவங்க அம்மா... அப்பாதான் எல்லா ப்ரொகிராமும்... முடிவு செய்றாங்க... நாங்க... என்ன சொல்ல...?''

ஜெயஜோதி திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள்.

இரவு உணவுக்கு ஜெயஜோதியின் வீட்டில் நன்றாக அமரச் செய்தார்கள். அவள் மறக்காமல், 'பிரகாஷ் எங்கே...?' என்று குழந்தையை மடியில் அமர்த்திக் கொண்டாள்.

உணவுக்குப் பிறகு அம்மா, அப்பாவிடம் என்ன சொன் னானோ... தெரியவில்லை... அவர்கள் அதற்குப் பிறகு அமைதியாகி விட்டார்கள்.

''சரி... நாங்கள்ளாம்... அந்த வீட்டுக்குப் போறோம்... மாப்பிள்ளை இங்கிருக்கட்டும்...'' என்று கிளம்பினார்கள்.

லதாவும், சுபாவும் மட்டும் சற்று நேரம் இருந்தார்கள்.

ஆச்சரியம் என்னவென்றால் அவன் லதாவிடமும், சுபா விடமும் இயல்பாக உரையாடினான். பொதுப்படையாகப் பேசினான். அவர்கள் கணவன்மார் வேலை பற்றியெல்லாம் விசாரித்துக் கொண்டான். பேசிக் கொண்டிருக்கும் போதே குழந்தையை மடியில் கிடத்தித் தட்டிக் கொடுத்து உறங்கச் செய்து விட்டான்.

அவன் குழந்தையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்ட போது, ''குழந்தை எங்ககிட்டே...'' என்று ராஜலட்சுமி எங்கிருந்தோ வலது கை நீட்ட...

''இல்லல்லே... எங்ககிட்டேயே இருக்கட்டும்!'' என்று சொல்லி விட்டான்..

லதாவும், சுபாவும் சற்று நேரம் ஜெயஜோதியிடம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்படுகையில் சுபா அவளிடம் வந்து காதருகில் சில அறிவுரைகள் தந்து விட்டுப் புறப்பட்டாள்.

பயந்து போன ஜெயஜோதி அம்மாவைத் தேடினாள். ஏதோ கடைக்குப் போயிருப்பதாகச் சொன்னார்கள். ஒன்று விட்ட அத்தை ஒருத்தர் வந்து -

''ரூமுக்குப் போ... பால் சொம்பு... அது... இது எல்லாம்.. எதுவும் வேண்டாம்னு தம்பி சொல்லிருச்சு...'' என்றாள்.



ஜெயஜோதி படபடக்கிற இதயத்தோடும் பயத்தோடும் அறைக்குள் போனாள்.

அவன் கையில் ஏதோ புத்தகத்தை வைத்துக் கொண்டு காலை நீட்டி அமர்ந்திருந்தான். அவள் வருவதைப் பார்த்து எழுந்து வந்தான். உட்கார் என்றான். அறைக் கதவைச் சாத்தித் தாழிட்டான். திரும்பினான்.

லேசான நடுக்கத்துடன் தலை குனிந்து அமர்ந்திருக்கிற மனைவியைப் பார்த்தவுடன் அவன் முகத்தில் விசித்திரமான புன்னகை ஒன்று தோன்றி மறைந்தது.

அவள் முன்னால் வந்து நின்றான். ''ஹலோ! கொஞ்சம் நிமிர்ந்து பாக்கறது...'' என்றான்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். ஆனால், அவன் கண்களைச் சந்திக்க மறுத்தாள். தன் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

'ஹேய்!' என்று அவன் சிரித்தான். தொடர்ந்து, 'உன்னைப் பொறுத்தவரை... நான் அரக்கன்... இல்லே..? பழைய புராணப் படத்துல வர்ற ரங்காராவ்... மாதிரி... கிரீடம்... இல்லாத... கதாயுதம்... இல்லாத... அரக்கன்... இல்லே!''என்று மீண்டும் சிரித்தான்.

இடக்கையால் அவள் முகத்தை நிமிர்த்தினான்... அவளது வலக் கன்னத்துக் குழியில் லேசாகச் சுண்டி விட்டு விட்டுச் சிரித்தான்.

''பயப்படாதே... ஜோதி.. இந்தப் பயலுக்கு நீ அம்மாவா... இரு.... போதும்... ஐ வோன்ட் டிரபிள்... யு...'' என்றான். நகர்ந்து விட்டான்.

அவள் நம்பவே முடியாமல் அமர்ந்திருந்தாள்.

அவன் கட்டிலைச் சுற்றி வந்து அந்தப் பக்கம் கால் நீட்டி ரிலாக்ஸ்டாகப் படுத்துக் கொண்டான். இடையில் குழந்தை.

''அதுக்காக சோஃபாவில் படுத்துக்கற அளவுக்குத் தியாகம் செய்ய முடியாதுப்பா.. நீ அந்தப் பக்கம்... நான் இந்தப் பக்கம்...'' என்றான்.

அவள் மௌனமாகப் படுத்துக் கொண்டாள். ''ரெண்டு மூணு நாளா... சடங்கு... சடங்குன்னு... போட்டு அலைக் கழிச்சுட்டாங்க. இல்லே... அந்தக் காலத்துல எல்லாம் விலாவாரியா நடக்கும். நேரமும் இருக்கும். இப்பப் பாரு... ரெண்டு முக்கியமான மீட்டிங்குகளை நான் கான்சல் செய்ய வேண்டியதாப் போச்சு... எல்லாம்... இந்தப் பயலுக்காக... இவனுக்கும் பொறுப்பா... அன்பா ஒரு அம்மா... தேவைங் கறதுக்காக...'' என்று தலைக்குக் கைகளை அணையாகக் கொடுத்து விட்டம் பார்த்தபடி பேசிக் கொண்டிருந்தவன் திரும்பி உறங்குகிற மகனை ஆழமாகப் பார்த்தான். கன்னத்தில் முத்தமிட்டான்.

''குழந்தை தூங்கறப்போ... அப்படிப் பார்க்கக் கூடாது... திருஷ்டி படும்!'' என்றாள் ஜெயஜோதி... மெல்லிய குரலில்.

''போச்சுரா... வைஃப் போடற முதல் ஆர்டர். பணிஞ்சுர வேண்டியதுதான்...'' என்று கிண்டல் செய்தான்.

அவள் மௌனமாக இருந்தாள். ''சரி... மகன் தூங்கும் போது பார்க்கக் கூடாது... அவங்கம்மா... தூங்கும்போது?'' என்று கேட்கவும் அவள் சட்டென்று திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

தனக்கு முதுகைக் காட்டிக் கொண்டு படுத்திருக்கிற மனைவியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டான்.

''ஹேய்... ஜோதி... சும்மா... தமாஷ் பண்ணினேன்... ரிலாக்ஸ்... நான் ரொம்ப டீசன்டான ஆளு...'' என்று மீண்டும் சிரித்தான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. ஆனால், அதற்குப் பிறகு ஆழமான சீரியஸான குரலில்.



''ஜோதி..!'' என்று அவன் அழைத்தபோது அவள் 'ம்...!' என்றாள்.

''ரூம்ல... நடக்கறது....நமக்கு மட்டும்தான்... மற்றவர் களுக்கு... எதுவும் தெரிய வேண்டியதில்லே... எல்லாம் இயல்பாய்ப் போயிட்டிருக்கு என்று சொல்லணும்...'' என்றான்.

''ம்...!''

''நம்ம வீட்லயும்... நான் ஒருத்தன் இருக்கறதையே... மறந்துட்டு... அம்மாவும்... மகனும்... ஃப்ரீயா இருக்கலாம்.. என்ன?'' என்றான்.

அவள் வியப்படன் திரும்பிப் படுக்கிற அதே கணத்தில் அவன் அவளுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு திரும்பிப் படுத்துக் கொண்டு, 'குட்நைட்!' என்றான்.

ஜெயஜோதி நம்பவே முடியாமல் அவன் முதுகைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தாள்.

# 4

தண்ணீர் விழுகிற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தாள் ஜெயஜோதி.

அதிகாலை ஐந்து மணியிருக்கும். அந்த நேரத்துக்கே எழுந்து குளித்துக் கொண்டிருந்தான் சரவணபவன். அவளுக்கே வெட்க மாகப் போய் விட்டது. அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந் தாள். தனக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்து குளித்தாள். அவசர அவசரமாக ரெடியாகி வெளியே வந்தாள்.

அவன் டிரஸ்ஸிங் டேபிளுக்கு முன்னால் கைலியும், பனியனுமாய் நின்றபடி தலையை வாரிக் கொண்டிருந்தான்.

''ஹலோ! குட்மார்னிங்!'' என்றான்.

''குட்மார்னிங்!'' என்றாள்.

அறைக்குள் இருந்த பீரோக்களின் சாவியை அவள் கையில் கொடுத்து, ''முதல் பீரோ முழுக்க டாகுமென்ட்ஸ் அண்ட் ஃபைல்ஸ். ரெண்டாவது பீரோவில் என்னோட துணிமணிகள். மூணாவது பீரோ உனக்கு!'' என்றான். அவள் உடனே அவள் பீரோவைத் திறந்து மேட்சிங்காக ஒரு செட் டிரஸ் எடுத்து வைத்தாள்.

''இன்னைக்கே ஆஃபீஸ் போறீங்களா?'' என்றாள்.

''ஆமா... முக்கியமான ஒரு மீட்டிங் இருக்கு,'' என்றான்.

எட்டு மணி வரை அமர்ந்து ஏதோ ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தான். அதற்குள் அவள் பிரகாஷைக் குளிக்கச் செய்து உடை மாற்றித் தயார் செய்தாள். விருந்தினர்கள் வரக்கூடும் என்பதால் தானும் நன்றாகவே உடுத்துக் கொண்டாள். பிறகு மெதுவாக அவனிடம் -

''இல்லே... நேத்து வர முடியாதவங்க இப்ப... வீட்டுக்கு வரக்கூடும்...'' என்று இழுத்தாள்.

''ஒரு மணிக்கு வந்தர்றேன்...'' என்றான். லேசாகப் புன்னகைத்தாள்.

''ரெடியா... டிஃபன் சாப்பிடப் போலாமா?'' என்றான்.

டைனிங் டேபிளுக்குப் போனவுடன் அவள் உள்ளே போய் என்னென்ன தயாராகி இருக்கிறது என்று பார்த்துப் பரிமாறத் தயாரானாள். அதற்குள் அவள் மாமியார் வந்து,

''இப்பப் புதுப்பொண்ணும்மா... நீ! ரெண்டு மூணு நாள் போகட்டும்... அப்புறம்... செய்யலாம்... உட்காரு...'' என்று உட்கார்த்தி வைத்தார்.

அவள் குழந்தைக்கு முதலில் ஊட்டி விட்டுப் பிறகு சாப்பிடுவதாகச் சொன்னாள். அவன் அவசரமாகப் புறப்பட்டுப் போனான்.



அவளே எதிர்பாராத விதமாக வாழ்க்கையில் வேகம் பிடிக்க ஆரம்பித்து விட்டது. சரவணபவனின் ஒழுங்கான வாழ்க்கை முறையைப் பார்த்த பின்பு அவளுக்கு வெட்கம் ஏற்பட்டது. எல்லாவற்றையும் திட்டமிட்டுக் கொள்கிறான்..

வந்த மூன்றாவது நாளே, ''நான் அஞ்சு மணிக்கே எழுந்து நாளுக்கான வேலைகளைத் திட்டமிட்டுக்கறது வழக்கம். நேரம் எனக்கு ரொம்ப முக்கியம். நீ வேணும்னா ஆறு வரைக்கும் தூங்கலாம்,'' என்றான். ஆனால் அவளும் ஐந்து மணிக்கே எழுந்திருக்க ஆரம்பித்தாள் நாள் முழுக்க ஃபிரெஷ்ஷாக இருப்பதாக உணர்ந்தாள். அவனுக்காகத் திட்டமிட்டு உதவி செய்யவும் ஆரம்பித்தாள்.

உறவினர்கள் எல்லாம் போன பிறகு அவர்கள் மட்டுமே என்றான பிறகு ஒரு சமயம் மெதுவாகச் சண்முகத்தின் அறையை எட்டிப் பார்த்தாள்.

''என்னம்மா?'' என்று புன்னகைத்தார்.

''இல்லே... இந்த வீட்டு நடைமுறைகளைப் பத்தித் தெரிஞ்சுக்கணும்னுதான்...'' என்றாள்.

''பிரகாஷ்... எங்கே?''

''இங்கே கெஸ்ட் ரூம்ல படுக்க வச்சிருக்கேன். கண்ணம்மா பாத்துக்கறாப்ல...'' என்றாள்.

அவரும் மனசு விட்டுப் பேசினார். அவர் இந்த வீட்டுக்கு வந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டதாம்.

இரண்டு மகன்கள். அப்பாவுக்கு ஐம்பத்தைந்து வயது வரை, உழைத்துப் போடும் வரை உபயோகமாகத் தெரிந்த அப்பா அதற்குப் பிறகு அவசியமற்றவராகப் போனார். அந்த மகன் வீட்ல இரேன் என்று ஆளுக்காள் பந்தாட, மனம் நொந்தவராய் ஒருநாள் தன் ஒன்றுவிட்ட சகோதரியை... சரவண பவனின் அம்மா... பார்க்கப் போனார். தன் கவலைகளைச்

சொல்ல, அவரும் யோசித்து விட்டு, ''பேசாம நம்ம கோய முத்தூர் பங்களாவுக்குப் போய் அங்க நிர்வாகம் பண்ணுங்க. ரெண்டு பசங்களும் தனியாய் இருக்கானுங்க. உங்க மச்சானும் அங்கே வர மாட்டேங்கறாரு. நீங்க இருந்தா எங்களுக்கும் கொஞ்சம் நிறைவா இருக்கும்!'' என்றார். சரியென்று வந்தவர்தான். படுத்துக் கிடந்தவனுக்குப் பால்சோறு கிடைத்த மாதிரி அந்த வீடு அவருக்குத் தஞ்சமளித்ததோடு வாழ்க்கை யில் ஒரு பிடிப்பையும் ஏற்படுத்தியது.

சரவணபவனை விட அவன் அண்ணன் மூன்று வயது பெரியவனாம். சிவஹரிபவன் என்று பெயர்..

ரொம்ப கெட்டிக்காரன். ஆனா, எல்லாத்துலயும் ஒரு பதட்டம், அவசர முடிவுகள். ஆனா, தொழில்ல கெட்டிக்காரன். சரவணபவன் நேர்மாறாக அழுத்தக்காரன். உணர்வுகளை வெளிக்காட்ட மாட்டான். ஆனால், நிர்வாகத்தில் கெட்டிக்காரன்.

இரண்டு பேருமாகச் சேர்ந்து நடத்திய தொழில்கள் எல்லாம் வெற்றியாக அமைந்தன. அப்பாவின் பணத்தைப் பல மடங்குகளாகப் பெருக்கினார்கள்.. கோவையில் மிக முக்கியமான தொழிலதிபர்களாக உருவானார்கள்.

இருபத்தோரு வயதிலேயே அண்ணனுக்கு உதவியாக வந்து விட்டானாம் சரவணபவன். கடந்த எட்டு வருடங்களில் அவன் கால் வைத்த துறைகளில் எல்லாம் வெற்றிதானாம். ஆனால், கடவுளுக்கே பொறுக்கவில்லை. சிவஹரி பவன் இறந்து போனான்.

சிவஹரிபவன் சாகசச் செயல்களில் ஆர்வம் உள்ளவன். கார் ரேஸ், பைக் ரேஸ், ஃபிளையிங் கிளப் என்று எல்லாப் பக்கமும் கால் பதித்தான். முப்பது வயதை எட்டுகிற நிலையில் அந்த வருடம் திருமணம் செய்து கொள்கிறேன் என்று அம்மாவிடம் வாக்குறுதி கொடுத்த நிலையில் ஒரு நாள் ஃபிளையிங் கிளப்புக்குப் போய் ஹெலிகாப்டர் ஓட்டுகிறேன் என்று போனான். வரும்போது தூக்கிக் கொண்டு வந்தார்கள்.



அந்த மரணம் அந்த வீட்டையே உலுக்கிப் போட்டது என்றால் அடுத்த மாதத்திலேயே சரவணபவன் சிவஜோதியைக் கல்யாணம் செய்து கொண்டு வந்து நின்றது இன்னொரு விதமாக அதிர்வை ஏற்படுத்தியது. ஆனால், அம்மாவோ, அப்பாவோ யாரும் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

இதையெல்லாம் சண்முகம் சொல்லும் போது அந்தத் திருமணத்தினால் தங்கள் வீட்டில் ஏற்பட்ட பூகம்பங்கள் அவளுக்கும் நினைவு வந்தது. அப்பா அதிர்ச்சியடைந்ததும், குழப்பங்கள் ஏற்பட்டதும், அம்மாதான் தைரியமாக நின்று எல்லாவற்றையும் சமாளித்தார் என்பதும் அவளுக்கு நினை வுக்கு வந்தது. அப்போதுதான் அந்தக் கேள்வியைக் கேட் டாள் ஜெயஜோதி.

''ஏன் பெரியப்பா, அக்காவும் அத்தானும் சந்தோஷமா இருந்தாங்களா?'' என்று.

அவர் ஒரு நிமிடம் தயங்கினார். ''அம்மா... நீ யதார்த்த மான பொண்ணுங்கறதால சொல்றேன். இந்தப் பணக்கார வங்க வீட்டிலே உள்ளே என்ன நடக்குதுன்னு யாருக்கும்மா தெரியும்? ஆனா, எதுவும் வித்தியாசமா தெரியலே. அதுவும் ரெண்டு பேரும் மாடியில இருந்தாங்க. கல்யாணமான வுடனே அக்கா உண்டாயிட்டா இல்ல. அப்புறம் பெரும் பாலும் உங்க வீட்டிலதானே? ஐந்தாம் மாதம் இங்க வர்றதுக் குள்ளேயே ஒரு தடவை ஆஸ்பிட்டல்ல அட்மிட் ஆயிட்டா. ஹெல்த் பத்தலே. வேறென்ன சொல்ல?'' என்றார்.

ஜெயஜோதி நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். உண்மை தான். சண்முகம் பெரியப்பா சொல்வதைக் கேட்டால் அத் தான் ஒன்றும் அக்காவுடன் மிகவும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்து விடவில்லை என்று தோன்றியது. ஆனால், எப்படிக் கேட்பது? நாகரிகமில்லையே! ஆனால், அக்காவுக்கு அப்படி அட்மிட் ஆகிற அளவுக்கு என்ன நேர்ந்தது? கடைசியாக

அட்மிட் ஆகிற போது மட்டும் தற்கொலைக்கு முயன்றதாகச் சொன்னார்கள். அப்படி அக்காவைத் தற்கொலைக்குத் தூண்டுகிற அளவுக்கு இந்த வீட்டில் என்னதான் நடந்தது?

நெஞ்சில் முதல் முதலாகப் பயம் ஏற்பட்டது. ஆனால், உடனேயே அவளுக்கு இயல்பான துணிவும் கூடியது. அப்படி என்ன ஆகிவிடும்? அதிக பட்சம் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். ஆனால், இந்தக் குழந்தையை வளர்ப்பதற்குத் தன்னுடைய தேவையும் இந்தவீட்டுக்கு இருக்கிறதே. பார்க்க லாம். அத்தானைப் போலவே நாமும் அழுத்தமாக இருந்தே சாதிக்க வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டாள்.

''அக்கா போனப்போ அத்தான் சங்கடப் படவில்லையா?'' என்றாள்.

''நாந்தான் சொன்னேனே... அம்மா... அவன் ரொம்ப அழுத்தக்காரன் எதையும் அவ்வளவு சீக்கிரம் வெளியே காட்டமாட்டான். ஆனா, ஒண்ணும் மட்டும் நிச்சயம். பிரகாஷ் பயமேலே ரொம்பப் பாசம் வச்சிருக்கான்!'' என்றார்.

'பரவாயில்லை... அது ஒண்ணை வச்சிகிட்ட அவனை மனுஷனா மாத்தப் பாக்கலாம்,' என்று எண்ணிக் கொண்டாள்.

அன்றைக்கிருந்து அவளும் அளவாகப் பேச ஆரம்பித் தாள். முதலிரண்டு நாட்கள் கண்கள் சுருங்க அவளைப் பார்த் தவன் அதற்குப் பிறகு அவள் போக்கில் விட்டு விட்டான்.

இந்தத் திருமணத்திற்குப் பிறகு ஒரே ஒரு மாற்றம். தினமும் ஒன்பது மணிக்கு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவன் இப்போது எட்டு மணிக்கே வந்தான்.

குழந்தையைச் சற்று நேரம் வைத்துக் கொண்டிருப்பான். பிரகாஷுக்கு அவனிடம் சொல்வதற்கு நிறைய இருக்கும். சீரியஸாகக் கேட்பான். அவனும் மகனுக்கு இணையாக மழலை பேசுவான். அவள் மட்டும் படாமல் அவர்கள் உலகத்தில் நுழையாமல் பின்னணியில் இருந்து கொள்வாள்.



குழந்தை எட்டரைக்கு உறங்கிப் போன பிறகு அவளிடம் ஒரு பத்து நிமிடம்பேசுவான். வீட்டுத் தேவைகளை விசாரிப் பான். அவளது தேவைகள் ஏதேனும் உண்டா என்று கேட்டுக் கொள்வான்.

பிறகு சண்முகத்திடம் சற்று நேரம் பேசுவான். தோட்டத் தில் காலார உலவி விட்டு வருவான். பிறகு புத்தகம் ஏதாவது ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு முன்னறைக்குப் போய் விடுவான்.

அவன் திரும்ப வருவதற்குள் அவள் உறங்கி விடுவாள். ஒருநாள் இடையிலே பதினோரு மணிக்கு விழித்தாள் ஜெய ஜோதி. குழந்தையை அருகில் காணவில்லை. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். கணவனையும் காணவில்லை.

அவர்கள் அந்தப் பெரிய பங்களாவின் பின்கட்டுப் பகுதி யில் இருந்தார்கள் இடையிலே கண்ணாடியால் தடுப்புகள் அமைத்திருந்தான். அந்த நீளத் தடுப்புக்குப் பின்னிருந்து அவர்கள் பங்களா முழுதையும் பார்க்க முடியும். ஆனால் அவர்கள் உள்ளே நடமாடுவது தெரியாது.

உள்ளே ஒரு பெரிய ஹால். அவனது அறை. ஆனால் பொது வான படுக்கையறை ஒன்றிருந்தது. அதனால் தனிமை வேண் டும் போது அவரவர் அறைக்குள் புகுந்து கொள்வார்கள்.. ஒருவேளை அந்த அறைக்குப் போய் விட்டானோ என்று எட்டிப் பார்த்தாள்.

அப்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டாள். மகனை மடியில் சாய்த்துக் கொண்டு சோஃபாவில் சரிந்து உட்கார்ந் திருந்தான். வலது கை மகனின் தலையை வருடிக் கொண் டிருக்க, முகத்தை விட்டம் பார்த்தபடி மேல் நோக்கி வைத் திருந்தான். முகத்தில் எல்லையற்ற வேதனை தெரிந்தது.

ஒரு கணம் அவள் உருகிப் போனாள். சத்தம் செய்யாமல் அருகில் நின்றாள்.

'அத்தான்!' என்றாள்.

அவன் திடுக்கிட்டவனாய்த் தன்னை மீட்டுக் கொண்டான்.

''என்ன, ஜோதி! ராஜா திடீர்ன்னு சிணுங்கினான். நீயும் நாள் முழுக்க அவனைக் கவனிக்கறதுல டயர்டாயிடறே. உன் தூக்கத்தைக் கெடுக்க வேண்டாம்னு அதான் இங்க தூக்கிட்டு வந்தேன்...'' என்றான் அவசரமாக.

அவள் அதைக் கண்டு கொள்ளாமல் எதிரில் அமர்ந்தாள்.

''அத்தான்! மனசுல ஏதாவது சங்கடமா?''என்றாள்.

அவன் அவளைப் பார்த்து விரக்தியாய்ப் புன்னகைத்தான். ஆமாம் என்பது போல் லேசாகத் தலையாட்டினான்.

''எங்கண்ணன் ஞாபகமும், உங்கக்கா நினைப்பும் வந்துருச்சு!'' என்றான்.

''ஓ..!'' என்று அவள் செய்வதறியாது மௌனமானாள்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். எழுந்தான். அவள் வாடிய முகம் பார்த்தான். பின் புன்னகைத்தான்.

''ஹேய்! இத்தனை துரதிர்ஷ்டத்திலயும் நீ இவனுக்கு அம்மாவா வாய்ச்சது அதிர்ஷ்டம்னு நெனச்சுகிட்டிருக்கேன். நீ... நீ... ஏதாவது அப்செட்டாயிராதே...'' என்றான்

அவள் ஒன்றும் பேசவில்லை. குழந்தையை எடுத்துக் கொண்டாள். அறைக்குப் போக அவன் பின்னாலேயே வந்தான்.

திருமணமான நாளிலிருந்து அன்றைக்குத்தான் முதன்முறையாக இரண்டு பேரும் வெகு நேரம் உறங்காமல் புரண்டு படுத்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் திடீரென்று -

''ஜோதி!'' என்று அழைத்தான்.

''ம்...''



''நாளைக்கு நான் லீவு போடறேன். நம்ம ஊருக்குப் போகலாம்,'' என்றான்.

# 5

''ஏண்டா, கல்யாணம் முடிஞ்ச கையோடு வந்துட்டுப் போனது. மூணு மாசமா வரணும்னு தோணலையா? பாக்கலாம். உனக்கா எப்ப வரத் தோணுதுன்னுதான்டா நான் கூப்பிடலே!'' என்று பாதி பொய்யாகவும், பாதி உண்மையாகவும் கோபப்படுகிற அம்மாவிடம் அவன் குறும்பு செய்து மாட்டிக் கொண்ட சிறுவனைப் போல் நிற்பதைக் கண்ட ஜோதிக்கு ஒரே ஆச்சரியம்.

''சரி... விடு. இப்பவாவது வந்தானல்லோ? வந்த குழந்தைகளை இப்படிப் பேசாட்டி என்னொ?'' என்றார் அப்பா.

ஜெயஜோதி மௌனமாக இந்த நாடகத்தைப் பார்த்தபடி நின்றாள்.

அவர்கள் வருகையால் வீடே கலகலப்பானது. தங்கள் மேல் பாசத்தைப் பொழிகிற மாமியாரைக் கண்டு அவளுக்கு உள்ளூர வியப்பாக இருந்தது. இவ்வளவு வெளிப்படையாக இருக்கிற அம்மாவுக்கு இப்படி ஒரு அழுத்தக்கார மகனா என்று.

''டேய், பார்றா... பயலே... உங்க அப்பத்தா... என்னைத் திட்டறதை!'' என்று மகனிடம் புகார் சொன்னான் சரவணபவன்.

பிரகாஷ், இப்போது சின்னச் சின்ன வாக்கியங்களை அழகாகப் பேசினான்.

''அப்பத்தா... எங்கப்பாவை எதுக்குத் திட்டறே?'' என்று ஆட்காட்டி விரல் நீட்டி மிரட்டவும் எல்லாரும் சிரித்தார்கள்.

''அப்படிப் போடுறா... பயலே... வரவர இந்தக் கிழவி யோட தொல்லை தாங்கலே..'' என்று சிரித்தார் ஞானவேல் - சரவணபவனின் அப்பா. தாத்தாவிடம் தாவிக் கொண்டான் குழந்தை.

பொழுது சுகமாகக் கழிந்தது. கணவன் மனம் தேறினாற் போல் உணர்ந்தாள் ஜெயஜோதி. அன்றிரவு தங்கள் படுக்கையறையில் குழந்தையைப் படுக்க வைத்து விட்டு இலக்கில்லாமல் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள். அப்போது முத்துலட்சுமியும், சரவண பவனும் பின்கட்டில் கயிற்றுக் கட்டில் நோக்கிப் போய் அமர்வதைக் கண்டாள்.

போகும்போது அப்படியே அப்பன் ஜாடை என்று அவர் சொல்லிக் கொண்டே போவது காதில் விழுந்தது.

அவள் எதிர்பாராத நிகழ்வு ஒன்றும் நிகழ்ந்தது. சரவண பவன் அம்மாவின் மடியில் தலை வைத்துக் கொள்வதையும் சற்று நேரத்தில் தோள் குலுங்க அழுவதையும் பார்த்துத் திகைத்துப் போய் நின்று விட்டாள்.

அந்த நேரத்தில் முத்துலட்சுமியின் முகத்திலும் எல்லை யற்ற வேதனை தெரிந்தது. இளம் வயது மகன் ஒருவனையும் ஒரு மருமகளையும் பறி கொடுத்த சோகம் அதில் முழுமையாக இருந்தது.

அவர் மகனின் தலையைக் கோதிக் கொடுத்தார். கண்களில் கண்ணீர் வழிந்தது. அவன் கண்களிலும் கண்ணீர் நிறைந்தது. அந்தக் கணத்தில் அறை வாசலில் நிழலாடத் திரும்பினாள்.

மாமனார் நின்றிருந்தார். ''பயலை என்கிட்டே கொடும்மா... ஒரு நாளாவது என்கிட்டே படுக்க வச்சுக்கறேன்!'' என்று வாங்கிக் கொண்டார். சற்று நேரம் அறைக்குள் கட்டிலின் மேல் அமர்ந்து கொண்டாள்.



அந்த நேரம் அவள் மனதில் பட்டது. தன் கணவன் தன் னிடம் எதையோ மறைக்கிறான் என்று. அவன் குடும்பத்தினர் மட்டும் என்ன? அவர்களும் சேர்ந்துதான் தன்னிடம் மறைக்கிறார்கள் என்று தோன்றியது. அரை மணி நேரம்வரை அப்படியே அமர்ந்திருந்தாள். பிறகு மறுபடியும் ஜன்னல் வழியாகப் பார்த்தாள். அம்மா போய் விட்டிருந்தார்.

சரவணபவன் மட்டும் நிலாவைப் பார்த்த வண்ணம் இரு கைகளையும் தலைக்கு அணையாகக் கொடுத்து மல்லாந்து படுத்திருந்தான். அவள் ஒரு முடிவுக்கு வந்தவளாக எழுந்து அவனை நோக்கிப் போனாள்.

அவன் திரும்பவில்லை. ஆனால் அவள் வருவதை முழுமையாக உணர்ந்தவனாக, ''வா ஜோதி!'' என்றான்.

உட்கார் என்றான். ''நானே நீ வந்தா நல்லாருக்குமேன்னு நினைச்சேன். வந்துட்டே...'' என்றான்.

அவள் முதல் முதலாகத் தானாகச் சென்று அவன் அருகில் அமர்ந்தாள்.

''ஜோதி! அம்மாவும், அப்பாவும் நாம ரொம்ப சந் தோஷமா இருக்கறதாத்தான் நெனச்சுகிட்டிருக்காங்க!'' என்றான்.

அவள் புரியாதவளாய் விழித்தாள். ''ஏன் நாம சந்தோஷ மாத்தானே இருக்கோம்?'' என்றாள்.

அவன் இப்படிப் பதிலை எதிர் பார்க்கவில்லை. சற்று நேரம் மௌனம் சாதித்தான். பிறகு, ''நான் சொல்றது... வேற மாதிரி!'' என்றான்.

அவள் முகம் சிவந்தது. ''ஓ!'' என்றாள். அவன் இதழ்க் கடை நெளியப் புன்னகைத்தான்.

''ரொம்பப் பயப்படாதே. கொஞ்ச நேரம் இங்க உட்காரு. பேசிகிட்டிரு. எந்தக் குப்பையையாவது பேசு. போதும்,'' என்றான்.

அவள் சட்டென்று ரிலாக்ஸானாள்.

''அப்ப... என்ன... என்னைக் குப்பைக் கூடைன்னு சொல் நீங்களா? இல்லே... நீங்க குப்பைக் கூடைன்னு சொல்றீங் களா?'' என்றாள்.

அவன் வியப்புடன் ஒருக்களித்துப் படுத்தான்.

'நீ இப்படியெல்லாம் பேசுவியா என்ன...' என்பது போல் பார்த்தான்.

'ஏன்... பேச மாட்டேனாக்கும்!' என்பது போல் அவளும் நேர்பார்வை பார்த்தாள்.

''அட்றா... சக்கை! என்று சட்டென்று சிரித்து விட்டான். 'சரி... நல்லதாவே ஏதோ சொல்லு!'' என்றான்.

அவள் கல்லூரி நாட்களில் சுபாவும், லதாவும் தானும் செய்த குறும்புகளைப் பற்றிச் சொன்னாள். சக மாணவன் ஒருவனை முட்டாளடித்த கதையைச் சொல்லிச் சிரித்தாள்.. உண்மையாகவே அவன் சுவாரசியமாகக் கேட்டான்.

''கடைசியிலே என்ன ஆச்சு தெரியுமா?'' என்றாள்.

''என்ன ஆச்சு?'' என்று அவன் ரொம்பத் தீவிரமாகக் கேட்பது போலும் நடிக்கவும் -

''ஐயோ! அத்தான் பயங்கர ஆக்டர் நீங்க!'' என்று கலகல வென்று சிரித்தாள். பிறகு, ''என்னைக் கல்யாணம் செஞ்சுக் கறேன்னு கேட்டான். நான் சாரி சொல்லிட்டேன்!'' என்றாள்.

''அதுதானே! வாழ்க்கை பூரா முட்டாளாகறதுக்கு நான் இருக்கேனே!'' என்று அவன் சோகமானான்.

கண்களில் குறும்பு மின்ன,

''சட்டியில் இருக்கறதுதானே அகப்பையில் வரும்!'' என்று தனக்குச் சரியாக அவள் பதில் கொடுப்பதைக் கண்கள் மின்ன ரசித்தான். பிறகு கலகலவென்று சிரித்தான்.



''ஆமாமா! அம்மாவும் மகனுமா என்னை எவ்வளவு முட்டாளாக்கிறீங்கன்னு உனக்குத் தெரியாது. ஏழு மணிக்கு மேலே இருப்பே கொள்றதில்லை, தெரியுமா? அந்தப் பயல்... சிரிக்கிற மாதிரி... அழற மாதிரி... அதான் ஓடி வந்தர்றேன்...''

அவள் உல்லாசமான மனநிலையில் இருந்தாள்... ''அந்தப் பயல்ன்னா... யாரு? பிங்கியா...'' என்றாள்.

அவன் பொய்க் கோபம் காட்டினான். ''ஹேய்! என்ன, என் மகனுக்குப் பிங்கி கிங்கின்னு நாய்க் குட்டி மாதிரி பேர் வைக்கிறே? ராஜாப் பயல்டி அவன். ராஜா...ன்னு சொல்லு...'' என்றான்.

அவனுடைய அந்த உரிமைப் பேச்சில் அவள் உடம்பில் ஒரு சிலிர்ப்பு ஓடியது. தான் அப்படிப் பேசினோம் என்பதையே அவன் புரிந்து கொள்ளவில்லை. அவள் சட்டென்று மௌனமாகி விட்டாள்

''என்ன... பேச்சைக் காணோம்?'' என்றான். அவள் சுதாரித்துக் கொண்டாள்.

''சரிப்பா... சரி... அவன் ராஜாதான்!'' என்றாள்.

அப்போது தன்னுடைய கல்லூரி நாளில் நடந்த ஒரு கலாட்டாவைச் சொன்னான். தங்கள் சக மாணவன் ஒருவன் ஏற்கெனவே கல்யாணம் ஆனவன் என்றும், அவனுக்குக் குழந்தை இருப்பதாகவும் ஒரு பொய்யைச் சொல்லி, எம்.காம். படித்த இரண்டு ஆண்டுகளும் அந்தப் பொய்யை மெயின்டெய்ன் செய்ததையும், கடைசியில் போட்டு உடைத்ததையும் சொல்லிச் சிரித்தான். இரண்டு பேரும் ரசித்துச் சிரித்தார்கள்.

''எல்லாருக்கும்... எப்படி இருந்திருக்கும்?'' என்றாள் ஜெயஜோதி.

''எப்படி இருக்குமா? ஒவ்வொரு லீவு முடிஞ்சு வரும் போதும் வைஃப் நல்லாருக்காங்களா? குழந்தை எப்படி

இருக்கறான் என்று எல்லாரும் அக்கறையாய் விசாரிப்பாங்க. கடைசியில எப்படி இருந்திருக்கும்?'' என்று சிரித்தார்கள்.

அவள் சற்றே சிந்தனை வயப்பட்டவளாகச் சொன்னாள். ''ஆமா.. பொய்கள் ரொம்ப நாளைக்கு நிலைக்காது...'' என்றாள்.

அவன் சட்டென்று அமைதியானான்.

''என்ன, ரொம்பத் தத்துவம் பேசறே! சாமியார் மாதிரி...'' என்றான்.

''அத்தான்... இப்ப சாமியார்கள் எல்லாரும் தத்துவம் பேசறதில்லே... தெரியுமா? வாழ்க்கையைச் சந்திக்கச் சொல்றாங்க. இயல்பாக் குழந்தைகளைப் போல இருக்கச் சொல்றாங்க.''

'யார்?' என்பது போல் அவன் பார்க்க, ''ஸ்ரீ... ஸ்ரீ... ரவி சங்கர்...ஓஷோ... எல்லாருந்தான்!'' என்றாள்.

''ஆமா... ஓஷோ... எனக்கும் பிடிக்கும்!'' என்றான்.

''சுமைகளை நெஞ்சுக்குள்ளே சுமக்கறதை விட இறக்கிக்கறது நல்லது இல்லையா?'' என்றாள் ஜெயஜோதி.

''இறக்கலாம்தான். ஆனா, எதிரில டீ பாட் காலியா இருக்கணுமில்ல. அதுவே ஏற்கெனவே நிறைஞ்சு வழிஞ்சா... என்ன செய்ய?'' என்றான்.

தான் கேட்ட பாணியிலேயே அவன் பதில் சொல்லி விட, அவள் திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள்.

அவன் சட்டென்று நகைச்சுவைக்குத் தாவினான். ''பரவாயில்லே. ஒரு விஷயம் தெளிவாயிருச்சு. நீ நெனச்ச அளவுக்கு நானும் முட்டாளில்லே.... நான் நெனச்ச அளவுக்கு நீயும் முட்டாளில்லே...'' என்றான்.

அவள் குறும்பாக அவனைப் பார்த்தாள். ''இது ஒரு ஜோக்காக்கும்! இதுக்கு நான் சிரிக்கணுமாக்கும்!'' என்றாள்.



அவன் அசரவில்லை. ''நீதானே சொன்னே? குழந்தைகள் மாதிரி இருக்கணும். குழந்தைகள்ளாம் அர்த்தம் புரிஞ்சா சிரிக்கும்? அர்த்தத்தோடவா பேசும்?'' என்றான்.

''ஐயோ! அத்தான்! தாங்கவே முடியலை. சரண்டர் அத்தான்!''என்று அவள் கலகலவென்று சிரிக்க, அவன் உள்ளத்து உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு ஆழமாகப் பார்த்தான். அவள் அதைக் கவனிக்கவில்லை.

''ஜோதி! எப்படிப்பட்ட அறிவாளியும் யாராவது ஒருத்தர்கிட்டே முட்டாளாயிருந்துதான் தீரணும். அதில ஒரு சுகமும் இருக்கும்,'' என்றான்.

அவள் எதுவும் பேசவில்லை.

சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள்.

''சரி! போலாம்... வாங்க...'' என்று எழுந்தாள்.

''நீ... போ... நிலா காயுது. வ்யூ ரொம்ப நல்லாருக்கு... நான் கொஞ்சம் கழிச்சு வரேன்,'' என்றான்.

''ஆமா... ரொம்ப நல்லாருக்கு இல்லே! சரிங்கத்தான். நான் போய்த் தூங்கறேன்!'' என்று நகர்கிற அவளை அவன் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரண்டு பேரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததை அம்மா சற்றுத் தொலைவில் மனம் நிறையப் பார்த்துக் கொண்டிருந்ததை அவன் அறியவில்லை.

அம்மா... திரும்பவும் வந்து அமர்ந்தார். ''என்னடா.. கண்ணா! எல்லாம் சரியாயிட்டதா? பிரச்சினை ஒண்ணுமில்லையே?'' என்றார்.

அவன் மீண்டும் ஒருக்களித்துப் படுத்தான்.

''அம்மா! அவகிட்டே ஒண்ணும் பிரச்சினையில்லை. எனக்கு நான்தான் பிரச்சினை!''' என்றான்.

அப்போதுதான் அம்மா அந்தக் கேள்வியைக் கேட்டார். அவன் முகம் வெகுவாகச் சிவந்தது.

''அம்மா! ப்ளீஸ்!'' என்றான் வெட்கத்துடன்.

''சரி... நான் அதைப் பத்திப் பேசலே!'' என்றார் - சின்னச் சிரிப்புடன்..

''சரி... நான் தூங்கப் போறேன்,'' என்று எழுந்தான்.

ஒரு பிஸினஸ் சாம்ராஜ்யத்தையே கட்டி ஆள்கிற மகன் தான் கேட்ட ஒரு கேள்வியில் முகம் சிவந்து போனதை அம்மா புன்னகையுடன் ரசித்துக் கொண்டார்.. ஆனால், அதேசமயம் பல விஷயங்களையும் புரிந்து கொண்டார்.

உள்ளுக்குள் லேசாகக் கவலையும் மண்டியது.

# 6

ஜெயஜோதிக்கு அது ஒன்றுதான் புரியவில்லை. கிராமத்தில் கலகலப்பாகச் சிரித்த கணவன் ஊருக்கு வந்ததும் மீண்டும் மாறிப் போனது எப்படி என்று.

மறுபடியும் தன்னுடைய அட்டவணை வாழ்க்கைக்கே போய்விட்டான். குழந்தைக்கும் இரண்டு வயது நிறைவு நெருங்கிக் கொண்டிருந்தது.

அவன் ஓட்டத்துக்கு அவள் ஈடு கொடுக்க வேண்டியிருந்ததாலோ என்னவோ இரவு நேரங்களில் அவள் களைத்து உறங்கி விடுகிறாள்.

வழக்கம் போல் அவளிடம் பத்து நிமிடம் பேசி விட்டுச் சண்முகத்தை அவன் பார்க்கப் போவதற்குள்ளாகவே குழந்தை உறங்கியிருப்பான். அவளும் உறங்கி விடுவாள்..



அவர்களுக்கும் திருமணமாகி ஓராண்டு நிறைவாகி இருந்தது. ஒரு குழந்தையை வளர்ப்பது என்பது எப்படி ஒரு முழுநேர வேலை என்றும், எவ்வளவு பொறுப்பான வேலை என்றும் முழுமையாக உணர்ந்தாள். இதற்கிடையில் சமையல் மேற்பார்வை, வீட்டு நிர்வாகம் இதற்கும் நேரம் ஒதுக்க வேண்டியிருந்தது.

ஏற்றுக் கொண்ட வாழ்க்கை நிறைவாகவே இருப்பதாய் உணர்ந்தாள். சரவணபவன் நேரடியாக அன்பைப் பொழியா விட்டாலும் அவன் பாதுகாப்பே போதும் போல உணர்ந்தாள்.

சுபாவும், லதாவும் தங்கள் கணவன்மாருடன் மாதம் ஒரு நாள் வருவார்கள். அன்றைக்கு மட்டும் சரவணபவன் விரைவில் வீட்டுக்கு வருவான்.

போன மாதத்தில் ஒரு நாள் சுபா ஃபோன் செய்தாள். அப்போது அன்றைக்கு மாலை வீட்டுக்கு வருவதாகச் சொன்னாள். அவளும், அவள் கணவனும் வந்து பெரிதாக ஒரு கேக் பெட்டியைக் கொடுத்து விட்டு நன்றி சொன்னார்கள். சுபாவின் கணவன் குமரேஷ் திரும்பத் திரும்ப நன்றி சொல்வது எதற்கு என்று அவள் விழிக்க அவனே சொன்னான்.

''சார் உங்களுக்குச் சொல்லலையா? உங்களோட எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு சப்போர்ட்டிவ்வா ஒரு சின்ன யூனிட் போட்டுக் குடுத்திருக்காரு!'' என்றான்.

'ஓ!' என்றாள் வியப்பாக.

சரவணபவன் அதைப் பெரிதாகக் காட்டிக் கொள்ளாதது, அவளுக்கு வியப்பாய் இருந்தது.

''இதிலென்ன இருக்கு! உங்ககிட்டே பொட்டென்ஷியல் இருக்கு. திறமை இருக்கு. காப்பிட்டலும், வாய்ப்பும் அமையலே. நான் ஸ்ட்ரீம்லைன் செஞ்சு குடுத்தேன்!'' என்றான் சரவணபவன் லேசு போல.

ஆண்கள் இருவரையும் பேச விட்டுவிட்டுப் பெண்கள் தனியே பேசப் போனார்கள்.

பிரகாஷைச் சற்று நேரம் வேலையாட்கள் பொறுப்பில் விட்டு விட்டு வந்தாள் ஜெயஜோதி.

''ஜெய்! உன் ஹஸ்பென்ட் எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா? அவர்கிட்டே அப்பாயின்ட்மென்ட் கிடைக்கறதே கஷ்டமாம். ஆனா, நீ என் ஃப்ரெண்டுங்கறதுனால இவ்வளவு ஃப்ரீயாய்ப் பாக்க முடியுதாம். எங்க வீட்ல சொல்றாரு. அது மட்டுமில்லே, எங்க வீட்டுக்காரரை நல்லா என்கரேஜ் செய்றாரு. பாங்க் லோன் மொபிலைஸ் செஞ்சு இந்த யூனிட் போட்டுக் குடுத்திருக்காரு,'' என்றாள்.

ஜெயஜோதி உண்மையில் திகைத்துப் போனாள்.

''ஆனா, இங்கே எதையுமே காமிச்சுக்க மாட்டாரு. ஒரே ஒரு தடவை உன் ஃப்ரெண்ட் சுபாவோட ஹஸ்பெண்ட்கிட்டே நல்ல பொட்டென்ஷியல் இருக்குன்னு மட்டும் சொன்னாரு,'' என்றாள்.

மாய்ந்து மாய்ந்து நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பிப் போனார்கள் இருவரும். அன்றிரவு வழக்கம் போல் அவளிடம், ''வீட்டுத் தேவை ஏதாவது இருக்கா, ஜோதி?'' என்று அவன் கேட்க,

''இல்லே... ப்ரொவிஷன்ஸ் கொஞ்சம் தேவையிருக்கு. நானே மளிகைக் கடைக்கு ஃபோன் செஞ்சு சொல்லீட்டேன்,'' என்றாள்..

''குட்!'' என்று அவன் நகர்ந்த போது, ''அத்தான்!'' என்றாள். அவன் நின்று திரும்பிப் பார்த்தான்.

''என்னம்மா?'' என்றான்.

''தாங்க்ஸ்!''

''எதுக்கு?'' என்று அவன் வியப்பாய்ப் பார்க்க..



''இல்லே! என் ஃப்ரெண்டுங்கறதுனாலதான் சுபா வீட்டுக்காரருக்கு இதெல்லாம் ஏற்பாடு செஞ்சு குடுத்திங்கன்னு சுபா ரொம்பத் தேங்க் பண்ணிட்டுப் போனா. அதுக்குத்தான்...'' என்றாள்.

அவன் தோளைக் குலுக்கி விட்டுப் புன்னகைத்தான். நகர்ந்து விட்டான்.

வழக்கமாகத் தோட்டத்தில் உலாவி விட்டு அவன் திரும்பி வரும்போது அவள் உறங்கியிருப்பாள். அதுவுமில்லாமல் பிரகாஷ் வேறு அப்பாவோடு தானும் வருவேன் என்று போயிருந்தான். இன்றைக்குச் சரவணபவன் திரும்பி வரும்போது குழந்தை அவன் தோளில் சாய்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

அவள் குழந்தையை வாங்கிப் படுக்க வைத்தாள்.

அவன் வழக்கம்போல் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு நகர,

''அத்தான்! உங்ககிட்டப் பேசணும்,'' என்றாள். அவன் புத்தகத்தை வைத்து விட்டு எதிர் சோஃபாவில் அமர்ந்தான். அவள் லேசாக முகம் சிவக்கக் கட்டிலின் மேல் காலைக் கட்டிக் கொண்டு அமர்ந்தாள்.

''அது என்ன யூனிட்ன்னு கூடச் சொல்ல மாட்டீங்களா?'' என்றாள்..

அவன் ரிலாக்ஸ்டாக சோஃபாவில் சாய்ந்து கொண்டான்

''அது ஒண்ணுமில்லடா. எங்க எக்ஸ்போர்ட் யூனிட்ல ஆர்டர்ஸ் நிறைய வரும்போது எங்களால் வொர்க் முடிக்க முடியாமப் போகும். அப்ப அயர்னிங் பேக்கிங்னு கொஞ்சம் வெளியே ஹெல்ப் வாங்க வேண்டியிருக்கும். அந்த மாதிரி ஒரு யூனிட் போடுங்கன்னு சொன்னேன். அவரும் சூடா பக்குன்னு ஐடியாவைப் பிடிச்சுகிட்டாரு. உங்க லதா

வீட்டுக்காரருக்குக்கூட ஒரு ஐடியா குடுத்துருக்கேன். பார்க்கலாம், எப்படி ரியாக்ட் செய்யறாருன்னு,'' என்றான்.

மறுபடியும் அவள் ரொம்பத் தாங்க்ஸ் என்றாள்.

அவன் கண்களில் சிரிப்பும், குறும்பும் மின்ன அவளைப் பார்த்தான். ''சரி சரி! ரொம்ப மூவ் ஆயிடாதே!'' என்றான்.

அவள் அந்தப் பார்வையைக் கவனிக்கவில்லை. மாறாக மெதுவான குரலில்,

''ஏன் அத்தான்! நமக்கு என்னென்ன பிஸினஸ் இருக்கு?'' என்றாள்.

அவன் தன்னை மறந்து ஒரு கணம் அசையாமல் நின்று அவளை ஆழ்ந்து பார்த்தான்.

''அப்படிப் பாக்காதீங்க! எனக்கு இதெல்லாம் இத்தனை நாளாக் கேக்கணும்னு தோணல்லே!'' என்றாள் - முணுமுணுப்புப் போல்.

அவன் முகம் மென்மையாக மாறியது. ''ஒரு டெக்ஸ்டைல் எக்ஸ்போர்ட் யூனிட் இருக்கு. நாலைஞ்சு ஏஜென்சி இருக்கு. கார், பைக் அப்படின்னு, ஒரு ஃபைனான்ஸ் கம்பெனி இருக்கு. நிறைய வாடகை வருது. இதெல்லாம் தவிர எந்த விதமான லாப நோக்கமும் இல்லாம ஒரு மெட்ரிகுலேஷன் ஸ்கூல் அஞ்சு வருஷமா ரன் ஆயிட்டிருக்கு,'' என்றான்.

''இத்தனையும் நீங்க ஒருத்தரா மேனேஜ் பண்றீங்க?'' என்றாள்.

''என்ன திடீர்னு சந்தேகம்?'' என்றான்.

அவன் தன்னைக் குழந்தையாய் எண்ணிச் சிரிப்பது புரிந்தது.

''அத்தான்! நீங்க என்னைக் கிண்டல் செய்றீங்க!'' என்று சிணுங்கினாள்.



''ஓ...கே...! ஓ...கே..!'' என்று இரு கைகளையும் தூக்கிச் சரணடைவது போல் சைகை செய்தான். பிறகு சீரியஸாக -

''ஒவ்வொரு இடத்திலயும் நல்ல நம்பிக்கையானவங்களைப் பொறுப்பான இடத்திலே உட்கார வச்சிருக்கிறேன். நான் மேற்பார்வை செய்தா போதும். ஆனாலும், நானும் எல்லாத்திலயும் ஒரு கண் வச்சுக்கிட்டுத்தான் இருக்கணும்,'' என்றான்.

அவள் 'க்ளுக்'கென்று சிரித்தாள்.

அவன் என்ன என்பது போல் பார்க்க...

''இல்லே. ஆயிரங் கண்ணுடையாள்ம்பாங்களே, அது மாதிரியா?'' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. அவளைப் பார்த்து வாய் மலரப் புன்னகைத்தான்.

'இனியெங்க படிப்பது' என்பது போலப் புத்தகத்தை வைத்து விட்டு மகனுக்கு அந்தப்புறம் படுத்துக் கொண்டான்.

''லைட் ஆஃப் பண்ணிடவா?'' என்றான்.

''ம்...'' என்று அவளும் படுத்தாள்.

''ஆனா, நான் குழந்தையை ஒழுங்கா வளர்க்கறனான்னு மேற்பார்வை பார்க்கறதில்லையே?'' என்று அவள் வம்பிழுத்தாள்.

வழக்கம் போல் அவன் இரு கைகளையும் தலைக்கு அணையாகக் கொடுத்து விட்டம் பார்த்துப் படுத்துக் கொண்டான்.

''ஜோதி! ஒரு தாய் மனசைச் சந்தேகிக்கக்கூடாது. நீ அவன் மேல உயிரையே வச்சிருக்கேன்னு எனக்குத் தெரியும். குழந்தை வளர்ப்புப் பத்தித் தெரிஞ்சுக்கறதுக்காக நீ எத்தனை புத்தகம் படிக்கறேங்கறது தெரியும். உன்னுடைய எத்தனை சொந்தப் பொழுது போக்குகளை, லட்சியங்களை உதறினேன்னு எனக்குத் தெரியும். உன்னோட அன்பை, பிரியத்தை

மேற்பார்வை பார்க்கிற தகுதி எனக்கில்லே. என் மகன் இந்த ஒரு விஷயத்துலயாவது குடுத்து வச்சவன்னு எனக்குத் தெரியும்!'' என்றான்.

ஜோதி சற்று நேரம் பேச்சற்றுப் போனாள். பிறகு நெகிழ்ந்த குரலில்,

''தாங்க்ஸ்... அத்தான்...'' என்றாள். இவ்வளவு நீளமாக அவன் பேசி இதுவரை அவள் கேட்டதில்லை. அந்த ஆச்சரியத்திலே அவள் முழுகி இருக்கையில்,

''நானும் உனக்குத் தாங்க்ஸ் சொல்லணும்,'' என்றான்.

''எதுக்கு?'' என்றாள்.

''உங்களுக்கு எத்தனை பிஸினஸ் இருக்குன்னு கேட்காம நமக்கு எத்தனை பிஸினஸ்ன்னு கேட்டயே, அதுக்கு...'' என்றான்.

''ஓ...!'' என்று அவள் மறுபடியும் பேசத் தோன்றாமல் படுத்துக் கிடந்தாள்.

''ஜோதி! எது எப்படின்னாலும் சரி... நீ வந்ததுக்கு அப்புறம்தான் வீடு வீடா இருக்கு. எனக்கும் வீட்டுக்கு ஓடி வரணும்னு இருக்கு. நான் இப்ப வெளியூர்ப் பிரயாணங் களையே குறைச்சுகிட்டேன் தெரியுமா? பயலையும் அவன் அம்மாவையும் பார்க்காம இருக்க முடியறதில்லை!'' என்றான்.

அவள் மௌனமாகவே ஆனால் ஏதோ உணர்வு தனக்குள் பாய்வதை உணர்ந்தவள் போல் படுத்திருந்தாள். திடீரென்று அவளுக்கு அத்தான்... அக்காவுடன் எப்படிப்பட்ட வாழ்க்கை தான் வாழ்ந்திருப்பார் என்ற எண்ணம் தோன்றியது. அதற்குள்ளாக அவன் மறுபடியும் -

''ஜோதி... ஹேய்...!'' என்று அழைப்பது கேட்டது.

''ம்...!'' என்றாள்.



''என்ன... இன்னைக்கு அம்மாவுக்கு என்மேல் கருணைப் பார்வை விழுந்திருச்சு... நானும் மனுஷன்னு தோணிப் போச்சாக்கும்!'' என்றான்.

''ப்ளீஸ்!'' என்றாள் கெஞ்சலாக.

''சரி.. சரி...'' என்று அவன் சிரித்தான்.

கொஞ்ச நேரம் வரை இருவரும் பேசவில்லை. பிறகு அவள் மெல்லிய குரலில்,

''அத்தான்! நாளைக்கு உங்க ஆஃபீஸுக்கு என்னைக் கூட்டிட்டுப் போறீங்களா?'' என்றாள்.

''ம்...! முதலாளியம்மா கேட்டு மறுக்க முடியுமா? தங்கள் சித்தம் என் பாக்கியம்!'' என்றான்.

''பாக்கியமா? அது யாரு?'' என்றாள் அவள்.

சட்டென்று அவன் சிரித்து விட்டான். ''அட... உனக்குத் தெரியாதா? அது எங்க பாட்டி...'' என்றான்.

இருவரும் சிரித்தார்கள். சிரித்து ஓய்ந்த பிறகு, ''ஜோதி! நிஜந்தான். எங்க அப்பத்தா பேரு பாக்கியந்தான். தனபாக் கியம்!'' என்றான்.

மறுபடியும் சிரித்தார்கள்.

## 7

**கா**லையில் நேரத்தில் புறப்பட்டுக் குழந்தையைக் கொண்டு போய் அம்மாவிடம் விட்டு விட்டு அவனோடு முதலில் எக்ஸ்போர்ட் யூனிட் போனாள்.

சுற்றிப் பார்த்தார்கள். முந்நூறு பேர் வேலை செய்தார்கள். பிரமித்துப் போனாள். இவ்வளவு பெரிய கம்பெனியை நிர்வகிக்கிறவரா கணவன் என்று. ஒரு ரவுண்டு சுற்றி வருவதற்குள்ளாக அவள் ஒரு விஷயம் புரிந்து கொண்டாள். சின்னச் சின்ன விஷயங்கள் கூட அவன் கண்ணில் இருந்து தப்புவதில்லை என்று.

இடது பக்க பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டபடி வலது கையை வீசிக் கொண்டு நடக்கிற அவன் நடைக்கு ஈடு கொடுத்தபடி மேனேஜரும், மற்றவர்களும் ஓடி வருவதைக் கவனித்துக் கொண்டாள். ஒரு சுற்றுச் சுற்றி முடித்தவுடன் இப்போது அலுவலகத்தில் அமர்ந்து இருந்தார்கள்.

அறையும் அழகாக இருந்தது. அவளுக்கு மில்க் ஸ்வீட், காரம், காபி என்று வந்தது. ''முதல் முதலா வந்திருக்கே! சாப்பிடு!'' என்று உபசரித்தான்.

மில்க் ஸ்வீட்டை ஸ்பூனால் எடுத்துச் சாப்பிட்டபடியே அவள் அறையை அளப்பதை அவன் கவனித்தான்.

''எனி கமெண்ட்ஸ்?''என்றான்.

''அத்தான், இந்த ஃப்ளவர் வாஸும், அந்தப் படமும் கொஞ்சம் இடமாற்றி வைத்தால் இன்னும் நல்லா இருக்கும்!'' என்றாள்.

''ஓ! கேரி ஆன்!'' என்றான்.

எழுந்து மாற்றி வைத்தாள். அறையின் தோற்றத்திலும் மாற்றம் தெரிந்தது.

''குட்! நான் ப்ரொடக்ஷன் சைட் பார்க்கறதோட சரி... இட் லுக்ஸ் ரியலி குட்!'' என்றான்.

''இன்டீரியர் டெக்கரேஷன் ஒரு கோர்ஸ் எடுத்திருக்கேன்,'' என்றாள் ஜெயஜோதி.



''ஹேய்! சொல்லவே இல்லை?'' என்றான்.

''சொல்றதுக்கு வாய்ப்பு அமையலை,'' என்றாள்.

''அதுவும் சரிதான்!'' என்றான்.

அங்கேயே பகல் உணவு வரை இருந்தார்கள். 'இன்னைக்கு வெளியே சாப்பிடலாமா?' என்று நல்ல ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துப் போனான்.

அவனுடைய கம்பெனியில் எல்லாரும் அவளிடம் இயல்பாகவும் ஆனால், சற்றே அச்சங் காட்டியும் நடந்து கொள்வதை நினைவு கூர்ந்தாள்.

அவன் அந்தப் பக்கம் போயிருந்தபோது, ''உங்க பாஸ் ரொம்பக் கோபப் படுவாரா?'' என்று அவனுடைய ரிசப்ஷனிஸ்ட்டிடம் விசாரித்த போது -

''கோபமே படமாட்டார். ஆனா, வொர்க் சரியில்லைன்னா வார்த்தைகள்தான் சாட்டையடி மாதிரி விழும். அதனால், எல்லாருக்கும் கொஞ்சம் பயம்தான்!'' என்றான்.

''இல்லே! எல்லாரும் உங்ககிட்டே பயப்படறாங்க!'' என்றாள்.

''அதெல்லாம் நம்பிடாதே. எம்ப்ளாயராச்சே... அதனால், இருக்கறதுதான்,'' என்றான்.

''டென்ஷனே... இருக்காதா?'' என்றாள்.

''டென்ஷனா...? சமயத்துக்குச் சரக்கு ரெடியாகலேன்னா... வம்புதான். ஆனா... நான் எப்பவுமே சக்திக்கு மீறி ஆர்டர்ஸ் எடுக்கறதில்லை. வெல் அட்வான்ஸ்டா பிளான் பண்ணிக்குவேன்,'' என்றான்.

அவள் பார்வையில் அவன் மேல் மதிப்புக் கூடியது. பிற்பகலில் பைக் சேல்ஸ் சென்டருக்கு அழைத்துப் போனான். மிகப் பிரபலமான அந்த பைக் ஒரு நாளைக்குக் குறைந்தது ஐந்து வண்டியாவது சேல்ஸ் ஆகும் என்றான்.

அந்த ஷோரூமுக்கு மேல் தளத்தில் இருந்த ஃபைனான்ஸ் ஆஃபீஸுக்கு அழைத்துப் போனான்.

''இங்கயும் அப்படித்தான் ஜோதி. ரொம்ப ரிஸ்க் எடுக்கற தில்லை. நம்ப ஷோரூம்ல வண்டி எடுக்கறவங்களுக்கு மட்டுமே ஃபைனான்ஸ். வசூலாகலேன்னா வண்டி இருக்கவே இருக்கு!'' என்றான்.

அங்கே சற்று நேரம் கழித்த பிறகு மாலையாகிவிட்டது. கார் விற்பனை ஷோ ரூமுக்கு அழைத்துப் போனான். மேட்டுப்பாளையம் ரோட்டில் இருந்த ஷோரூமில் இடம் சற்று அதிகமாகவே இருந்தது.

அழகான ஒரு வெள்ளை நிற மாருதி 800 பார்த்து வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தாள் ஜெயஜோதி. அவள் பார்வை பார்த்து.

''கார் ஓட்டுவாயா ஜோதி?'' என்றான்.

''ம்... ஓட்டுவேன். லதாகிட்டே கார் இருந்தது. நானும் சுபாவும் ஓட்டிப் பழகிட்டோம்!'' என்றாள்.

''எங்கே ஒரு ரவுண்ட் ஓட்டு!'' என்று அந்த வெள்ளை மாருதியைக் கொடுக்கச் சொன்னான்.

ஒரு ரவுண்ட் ஓட்டினாள். 'குட்!' என்றான். அவள் ஒரு ரவுண்டு ஓட்டி வருவதற்குள்ளாக ஷோரும் மேனேஜரை அழைத்துப் பேசினான்.

அவனது அறைக்கு வந்தவுடன் அவளுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

''மாப்பிளே! அந்தப் பார்ட்டி...'' என்று ஏதோ சொல்லியபடி கோவிந்தராஜன் வந்தார். அவள் அமர்ந்திருப்பதைக் கவனிக் காதவராய் அவன் எதிரில் அமர்ந்து பேசினார்.

''மாப்பிளே! அந்தப் பார்ட்டிக்குச் சிவப்பு நிறம்தான் வேணு மாம். ஃபான்ஸி நம்பர் கேக்கறாங்க!'' என்று தொடர்ந்து பேச...



''மாமா! இன்னைக்கு நம்ப கம்பெனிக்கு ஒரு கெஸ்ட் வந்திருக்காங்க. பாக்கலையா?'' என்று சரவணபவன் சொல்ல வும்தான் திரும்பிப் பார்த்தார்.

''அடடே! ஜோதி... நீ எப்பம்மா வந்தே? என்னம்மா இது அதிசயம்!'' என்றார் மகிழ்ச்சியுடன்.

''அப்பா...நீங்க எங்க இங்கே?'' என்று அவள் ஆச்சரியப் பட்டாள்.

''மாப்பிள்ளைதாம்மா வீட்ல இருந்தா போரடிக்கும். இங்க எனக்கு நம்பிக்கையா ஒருத்தர் வேணும் மாமான்னு ஓவராலா ஒரு சூப்பர்வைசர் மாதிரி ஒரு காபின் குடுத்து உட்கார வச்சிருக்கார்!'' என்றார்.

சிவஜோதியின் மறைவுக்குப் பிறகு தளர்ந்து போயிருந்த அப்பா இப்போது உற்சாகமாக இருப்பதைப் பார்த்த ஜெயஜோதியின் மனம் நெகிழ்ந்தது. மணி ஆறாகி விட்டது. 'சரி, புறப்படலாமா?' என்று அவன் எழுந்தபோது அவளும் எழுந்தாள்.

அறை வாசல் வரை வந்தவுடன், மேனேஜர் வந்து ஒரு கார் சாவியை நீட்ட, ''அங்க குடுங்க,'' என்றான் சரவணபவன்.

''உனக்குப் பிடிச்ச வெள்ளை மாருதி.. என் பிரசன்ட். நம்ம வெட்டிங் ஆனிவர்சரிக்கு...'' என்றான் புன்னகையுடன்.

ஜெயஜோதி மலைத்துப் போனாள். அவன் கொடுத்த ஆனந்த அதிர்ச்சிகள் ஒரு தொடராக அமைய, பேச்சற்றவ ளாய் அவள் காரில் ஏறினாள்.

''அத்தான்! நான் இதையெல்லாம்... எதிர்பார்க்கலை...'' என்றாள் தயக்கமாய்.

''தெரியும். நீ எதையும் எதிர்பார்க்கறதில்லை. அதனால தான்... குடுக்கணும்னு எனக்குத் தோணுது. ஃபார்மாலிட்டீஸ் முடிஞ்சு ரெண்டு மூணு நாள்ல கார் நம்ம வீட்டுக்கு வந்துரும்,'' என்றான்.

''எனக்கெதுக்கு அத்தான் தனிக்கார்?'' என்றாள் மெல்லிய குரலில்.

''உனக்கே... ஏதாவது வெளியே போகணும்னு இருந்தா... உன்னோட சோஷியல் வொர்க்... எல்லாம் தொடரலாம்...'' என்றான்.

''ராஜாப் பய!'' என்று இழுத்தாள்.

''இன்னைக்கு மாதிரி கொஞ்ச நேரம் அம்மா வீட்ல விட்டுட்டுப் போயிட்டு வா. உனக்கும் ஒரு சேன்ஜ் வேணு மில்ல...'' என்றான்.

அவள் கைவிரல் நகத்தைப் பார்ப்பதும், பிறகு அவன் முகத்தை நிமிர்ந்து பார்ப்பதையும் கண்ட அவன் சிரித்தான்.

''அவுட் வித் இட்... மேடம்...'' என்றான்.

''இல்லே! வெட்டிங் ஆனிவர்சரி கொண்டாடற அளவுக்கு... இந்தக் கல்யாணத்துல...'' என்று மேலே பேச முடியாமல் நிறுத்தி விட்டாள்.

''என்ன இலாபம்னு கேக்கறியா? ஆஃபீஸ்ல எவ்வளவு டென்ஷன்னு பார்த்தியில்ல. ஆனா, வீட்டுக்கு வந்தவுடன் நம்மளை மிரட்டு மிரட்டுன்னு ராஜாப் பய மிரட்டறதையும் அதைப் பாத்து நீ சிரிக்கறதையும் பார்த்தாலே எல்லா டென்ஷனும் வடிஞ்சுருது. உங்க ரெண்டு பேரோட பிரசன்ஸ்... இட் கிவ்ஸ் மி எ லாட் ஆஃப் பீஸ் அன்ட் ஸ்ட்ரெங்த்!'' என்றான்.

''தாங்க்ஸ்... அத்தான்...'' என்றாள் மனப்பூர்வமாய். அவன் பதில் பேசவில்லை. அதற்குள் அம்மா வீடு வந்து விட்டது. பிரகாஷ் தாவிக் கொண்டு வர, இருவருக்கும் அவனிடம் பேசுவதற்கு நிறைய இருந்தது.

மறுநாள்!

மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு அழைத்துப் போனான்.



அங்கே செயலராக அனுபவம் வாய்ந்த ஒருவரைப் போட்டிருந்தான். அவரோடு நிறையப் பகிர்ந்து கொண்டாள் ஜெயஜோதி.

திரும்ப வரும் போது, ''இன்னும் ஒரு நாலைஞ்சு வருஷம் தான் இவரு இருக்கேங்கறாரு. அப்புறம் நீதான் அங்கே செகரட்டரி!'' என்றான்.

பல விஷயங்களையும் பகிர்ந்து கொண்டு வீட்டுக்கு வந்தார்கள்.

வீடு நிசப்தமாக இருந்தது.

கண்ணம்மா கையைப் பிசைந்து கொண்டு நின்றாள்.

''என்ன கண்ணம்மா?'' என்று ஜெயஜோதி பதட்டமாக -

''அம்மா... சின்னத் தம்பிக்குக் காய்ச்சல்!'' என்றாள் அவள்.

ஜெயஜோதி வேகமாகப் போய்ப் பார்க்க, கெஸ்ட் ரூமில் பிரகாஷைப் படுக்க வைத்திருந்தார்கள்

எப்போதும் துறுதுறுவென்று அலைந்து கொண்டிருக்கிற குழந்தை சோர்ந்து போய்க் கிடப்பதைக் கண்டவுடன் ஜெய ஜோதியின் கண்களில் கண்ணீர் தாரையாய் வழிந்தது.

சட்டென்று சரவணபவனின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''அத்தான்! இவனைப்பாருங்க... எப்படிக் கிடக்கறான்னு...'' என்று அழுதாள்.

அவனும் இடக் கையால் அணைத்துக் கொண்டான்.

''ஹேய்! பைத்தியம்! எதுக்கு இப்படி அழறே. குழந்தை கன்னா... எல்லாம் இருக்குந்தான். வைரல் ஃபீவராயிருக்கும்,'' என்று பாக்கெட்டில் இருந்த செல்ஃபோனை எடுத்து டாக்டரிடம் பேசி வரவழைத்தான்.

டாக்டர் வந்து பார்த்து விட்டு, ''பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லை. வைரஸ் ஃபீவர்தான். மூணு நாள்ல சரியாயிரும்.

ஆனா, மத்தவர்களுக்கு ஒட்டக் கூடும். ஜாக்கிரதை!'' என்று எச்சரித்து விட்டுப் போனார்.

ஜெயஜோதி அந்த எச்சரிக்கையைக் கண்டு கொள்ளவில்லை.

காய்ச்சல் இறங்கும்வரை குழந்தையின் அருகிலேயே இருந்தாள். சரவணபவனும் கூடப் பிற்பகல் வேளைகளில் விரைவில் வந்து விட்டான்.

அவளை வற்புறுத்திச் சாப்பிடச் செய்வான். ''ஜெய்! நீ ஜாக்கிரதையாயிரு. உனக்குக் காய்ச்சல் வந்துடப் போகுது!'' என்று சொல்லிக் கொண்டே இருந்தான்.

நடந்தது என்னவென்றால் காய்ச்சல் அவளுக்கு வரவில்லை. நான்காம் நாள் காலை காய்ச்சல் அவனுக்கு வந்து விட்டது.

## 8

நடுநாயகமாகச் சரவணபவன் அமர்ந்திருக்க, அருகில் அவன் அப்பா அமர்ந்திருந்தார்.

சுற்றிலும் அவனது அம்மா, சண்முகம் மாமா, ஜெய ஜோதியின் தாய், தந்தை என்று எல்லாரும் அமர்ந்து கொண் டிருந்தார்கள்.

மகனுக்குக் காய்ச்சல் என்று ஜெயஜோதியிடம் இருந்து தகவல் கிடைத்ததுமே முத்துலட்சுமியும், ஞானவேலும் புறப்பட்டு வந்து விட்டார்கள்.

நான்கு நாட்களுக்குப் பிறகு இன்றைக்குத்தான் தெளிவாகி இருந்தான் சரவணபவன்.

களைத்து உறங்கிய கணவனைப் பார்த்து மிகவும் கலங்கிப் போனாள் ஜெயஜோதி.



''அத்தை... நான் இவரை இவ்வளவு டயர்டாப் பாத்ததே இல்லை!'' என்று மாய்ந்து போனாள்.

''இருக்கறதுதாம்மா. தொடர்ந்து அலைஞ்சுகிட்டே இருக் கான் இல்ல. இப்படியாவது ரெஸ்ட் எடுக்கட்டும்!'' என்று தன் கவலையை மறைத்துக் கொண்டு தேற்றினார்.

''அப்பா! உன் பொண்டாட்டி அத்தானை இப்படி டயர்டா நான் பாத்ததே இல்லைன்னு புலம்பிப் புலம்பி என்னைத் துளைச்சு எடுத்துட்டா!'' என்று முத்துலட்சுமி போட்டுக் கொடுக்கவும் -

'அப்படியா!' என்பது போல் அவன் பார்த்தான்.

''ஆமா! பின்னே? கவலையா இருக்காதாக்கும்!'' என்றாள் அவளும்.

முதலிரண்டு நாட்களும் கண்ணே விழிக்கவில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

மூன்றாம் நாள்தான் உணவு சென்றது. தெளிவு ஏற்பட்டது. முத்து லட்சுமியும், ஞானவேலும் பிரகாஷைத் தங்கள் பொறுப் பில் பார்த்துக் கொள்ள, அவள் கணவனை முழுமையாகக் கவனித்தாள்.

சரவணபவன், ''இருந்தாலும், காய்ச்சல்னு வரவும்தானே நீயும் அப்பாவும் வந்து இங்கே இருக்கீங்க... என்று பேச்சை மாற்றினான்.

இரவு பத்து மணி இருக்கும்.

''ஜோதி! உனக்கும் அலைச்சல் சரியா இருந்திருக்கும். இன்னைக்கு நான் ஓ.கே..தான். நீ ரெஸ்ட் எடு!'' என்று வாஞ்சையாய்ச் சொல்லவும் அவளும் மறுக்காமல் உறங்கி விட்டாள்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிற அவளைத் தாபமும், கிறக்கமுமாகப் பார்த்துக் கொண்டே தலையணையில்

சாய்ந்து அமர்ந்திருக்க, எதிர்பாராத விதமாக அம்மா உள்ளே நுழைந்தார்.

''என்னம்மா?'' என்று அவன் பதட்டமாக, ''இல்லப்பா, நீ தூங்கறியா... என்ன? பார்க்க வந்தேன்!'' என்றார்.

''இன்னைக்கு கொஞ்சம் பிரிஸ்க்கா இருக்கு. தூக்கம் வரலே,'' என்றான்.

அம்மா, ''ஏப்பா அன்னைக்கு நான் சொன்னேனே. அவகிட்டே பேசினியா?'' என்றார்.

அவன் முகம் சிவந்தது. ''இல்லைம்மா,'' என்றான்.

''தம்பி! உன் மேலே ரொம்பப் பிரியம் வச்சிருக்கா. நீதான் தயங்கறே,'' என்றார்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். அம்மா அவன் அருகில் நின்று தலையைக் கோதிக் கொடுத்தார்.

''அம்மா! அவ எல்லார் மேலயும்தான் பிரியம் வைக்கிறா. ஆனா, இந்த விஷயத்துக்கு வெறும் பிரியம் மட்டும் போதாதும்மா...'' என்றான்.

இப்போது அம்மா பெருமூச்சு விட்டார். ''என்னவோ, நீயும் உன் தத்துவமும்! ஒண்ணும் புலபடலே...'' என்றார். நகர்ந்து விட்டார்.

ஒரு மாதம் வேகமாக ஓடிவிட்டது.

இடையில் பிரகாஷின் பிறந்த நாளை வீட்டளவுக்குக் கொண்டாடினார்கள்.

அவர்கள் திருமண நாளுக்கு அவன் பரிசளித்த காரும் வந்து சேர்ந்தது.

அவள் அவ்வப்போது சற்று வெளியே போய் வந்தாள். அவள் சார்ந்திருந்த அந்தப் பெண்கள் சேவை அமைப்புக் குக்கூட அவ்வப்போது போய் வந்தாள்.



ஒரு நாள் மாலை..

''ஜோதி! இன்னைக்கு ஒரு திறப்பு விழா போக வேண்டியிருக்கு. ரொம்ப நாள் கழிச்சு ஒத்துகிட்டேன். நாலு மணிக்கே வந்து ரெடியாகணும்,'' என்று அலுவலகத்திலிருந்து ஃபோன் செய்தான்.

அவளும் அவனுக்கேற்ற உடைகள் எடுத்துத் தயாராய் வைத்தாள். முகமும் மனமும் மட்டும் வாடி இருந்தது.

அவன் புறப்பட்டுக் கொண்டே, ''என்ன ஜோதி, டல்லா யிருக்கே...!'' என்றான்.

அவள் உச்சுக் கொட்டினாள் ''ஒண்ணுமில்ல, அத்தான்!'' என்றாள்.

அவன் லேசான எரிச்சலுடன், ''கேக்கறேன் இல்லே? சொல்லேன்...'' என்றான்.

பிறகுதான் சொன்னாள். இன்று காலை சங்கத்துக்குப் போயிருந்த போது ஒரு இளம் பெண் தனியாக அவளை அணுகினாள்.

ஆதரவில்லாத பெண்ணாம். தனியாகத்தான் இருந்தாளாம். ஏரியாவில் தொல்லை அதிகமாக இருக்கிறதாம். ரௌடிகள் தொல்லைக்கு அவளது சொந்தக்கார மாமன் ஒருத்தனே மறைமுக ஆதரவு தருகிறானாம்.

கண்ணீர் விட்டுக் கதறி அழுத அந்தப் பொண்ணோட முகமே கண்ணுக்குள் நிற்கிறது என்றாள் ஜெயஜோதி.

அவன் ஆதரவாகக் கேட்டுக் கொண்டான்.

''ஒண்ணு செய்யேன். நீயும் இந்த ஃபங்ஷனுக்கு வா. கலெக்டர் கூட வர்றாரு. இன்ட்ரொட்யூஸ் பண்றேன். ஏதாவது செய்ய முடியுமா, பார்க்கலாம்,'' என்றான்.

அவள் உற்சாகமானாள்.

சொன்னது போலவே பேசினான். கலெக்டர் வழி செய்கிறேன் என்றாராம். விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்களில் ஒருவர் -

''ஏம்ப்பா சரவணன், இவங்கதானா நீ வெளியே விடாம வச்சிருந்த பொக்கிஷம்!'' என்று கலாட்டா செய்தார்.

''நீங்க வேற... ஏன் சார்? அவங்க வெளியே வரணும்னு பிரியப்பட்டாதானே? இன்னைக்கு என்னமோ அதிசயமாய் என்னை நம்பி வெளியே வந்துட்டாங்க!'' என்றான்.

திரும்பி வரும் போது கலகலவென்று சிரித்தான்.

''ஜோதி! நீ ரொம்ப அழகாம் அதனால கண்ணு பட்டுடும்னு வெளியே கூட்டிட்டு வராம இருக்கேனாம். ஆளாளுக்குப் படுத்தறானுங்க!'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. அவனே தொடர்ந்தான். ''ஒரு விஷயம் மட்டும் நிஜம். நீ ரொம்ப அழகுங்கறதுதான்!'' என்றான்.

அவள் பதில் பேசாமல் வெளியே பார்த்துக் கொண்டு வரவும், சற்றே ஏமாற்றத்துடன் மௌனமாகி விட்டான்.

ஒரு வாரம் போயிருக்கும்!

இரவு எட்டு மணி வாக்கில் ஊரில் இருந்து ஃபோன்.

ரிசீவரை வைத்து விட்டு வந்த சரவணபவன், ''ஜோதி! தொலைஞ்சோம்!'' என்றான்.

'ஏன்?' என்று அவள் வியப்பாகப் பார்க்க, ''பாம்பேல இருக்காங்கன்னு சொன்னேனே, அத்தை வர்றாங்க!'' என்றான்.

''வந்தா என்னங்கத்தான்? சந்தோஷம்தானே!'' என்றாள் ஜெயஜோதி.

''நல்லவங்கதான். ஆனா, ரொம்ப கலாட்டாப் பேர்வழி. அம்மாவோட அண்ணி. அம்மா மேல ரொம்பப் பிரியம். அவர்களை நல்லபடியாகக் கவனிச்சு அனுப்பலேன்னா, அம்மாவுக்கு வருத்தமாப் போய்டும்!'' என்றான்.



அவள் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகத் தலையாட்டினாள். கிராமத்தில்தான் இருந்தார்களாம். ஆனால், மகன்கள் இரண்டு பேரும் நல்ல வேலையில் பாம்பேயில் செட்டிலானதால் நான்கைந்து வருடங்களாகப் பாம்பேயில் வாசமாம். அவன் அத்தையைப் பற்றிப் பில்டப் செய்த விதம் பார்த்து ஜெயஜோதிக்கு உள்ளூரப் பயம்தான்.

அத்தையும், மாமாவும் ஒரு வழியாக வந்து சேர்ந்தார்கள்.

இரட்டை நாடி உடம்பும், உரத்த குரலிலான பேச்சும் அவரைப் பார்த்துப் பயப்பட வைத்தன. ஆனால், அடிப்படையில் அன்பானவர் என்று ஜெயஜோதி புரிந்து கொண்டாள்.

''வாடா! பேராண்டி!'' என்று பிரகாஷை வாரிக் கொண்டார்.

வழக்கம்போல் பிரகாஷும் இயல்பாக ஒட்டிக் கொண்டான்.

''பாட்டி, பாட்டி என்று அவன் அவர் கன்னம் பிடித்துக் கொஞ்ச, அவர் சிரித்தார். ''இப்படியேதான் ஹரியும் இருப்பான். இந்தச் சரவணபவனும் இதே மாதிரிதான். நல்லா நைஸ் பண்ணிடுவானுங்க...'' என்றார்.

''ஆனா, நீ அப்ப இப்படி இருக்கலையே, அத்தை?'' என்றான் சரவணபவன்.

''எப்படி?''

''இப்படி டபுள் தி சைஸா? ஒல்லியா அழகா இருப்பியே...'' என்றான்.

''அதை யெல்லாம் ஏப்பா ஞாபகப்படுத்தறே?'' என்று சோகமானார் தங்கவேல் மாமா.

''ஆமா. அப்ப நீங்களுந்தான் இவனை மாதிரியே அழகா, உயரமா இருந்தீங்க...'' என்று கமலா திருப்பித் தாக்கவும் -

''சரி! விடு. காம்ப்ரமைஸ்...'' என்று சமாதானமானார்கள்.

சரவணபவனும் ஜெயஜோதியும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்..

''பாரு, சரவணா! பத்து நாள்தான் டைம். குழந்தைகளுக்கு லீவு. அதனால் மருமக்கள்மார் எங்களுக்கு பர்மிஷன் குடுத்திருக்காங்க. மூணு நாள் கிராமத்திலே, மூணு நாள் என்ற தம்பியோட தாராபுரத்தில.. உங்க கூட நாலு நாள். ஆனா, ஒரு மூணு நாள் ப்ரோகிராம் போட்டு நவக்கிரகக் கோயி லெல்லாம் பார்க்கோணும்,'' என்றார்.

''எப்படி அத்தை முடியும்?'' என்றான் பவன்.

''ஏன் முடியாது? நீயும் மகளும் குழந்தையோட எங்க ளோட நவக்கிரகக் கோவிலுக்கெல்லாம் வர்ரீங்க. உங்க ளோட இருந்த மாதிரியும் ஆச்சு. உனக்காகத்தான்டா வேண்டி யிருக்கேன்,'' என்றார்.

உண்மையில் தங்கவேல்தான் தாய்மாமன் என்றாலும் முத்துலட்சுமிக்குத் திருமணமான புதிதில் இரண்டு குடும் பமும் அருகருகில் இருந்ததாலோ என்னவோ சரவணபவன் மேல் மிகவும் ஒட்டுதலாக இருப்பார்.

சிவஜோதி இறந்தவுடன் அந்தப் பையன் வாழ்க்கையில் அமைதியைக் கொடு என்று வேண்டுதலாம். அதனால் அவர்களும் வர வேண்டும் என்று பிடிவாதமாக நின்றார்.

ஒரு வழியாகச் சரவணபவன் ஒத்துக் கொண்டான். உடனடியாக செல்ஃபோனில் தனது நிறுவனங்களின் மேலாளர் களுக்கெல்லாம் தொடர்பு கொண்டு இன்ஸ்ட்ரக்ஷன்கள் கொடுத்தான்.

''கார்... எந்தக் கார் அத்தை? நானே டிரைவ் செய்கிறேன்,'' என்று கேட்டபோது,

''என்ற தம்பி கார் அனுப்பறான். அம்பாஸிடர். நீ டிரைவ் செய்யறதெல்லாம் வேண்டாம்.. பேசாம என் கூடப் பக்கத்துல



உட்காந்துகிட்டு ரெஸ்ட் எடுக்கறே...'' என்று ஆணையிட்டு விட்டார்..

ஜெயஜோதி அவசர அவசரமாகத் துணிமணிகளை எடுத்து வைக்க ஆரம்பித்தாள்.

''ஹையா! ஊருக்குப் போறோம். ஊருக்குப் போறோம்!'' என்று பிரகாஷ் துள்ளிக் குதித்த விதத்தில் வீடே அதிர்ந்தது.

# 9

**கா**ர் திருச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

அதிகாலை நான்கு மணிக்கே கிளம்பி விட்டார்கள்.

''அத்தை! வேற ஏதாவது கார் அரேன்ஜ் பண்றேனே!'' என்று விதவிதமாகக் கேட்டுப் பார்த்தான் சரவணபவன்.

''எனக்கு அம்பாஸிடர்தான்டா பிடிக்குது. ஊர்லயே எங்க ரெண்டு பேருக்கும் அம்பாஸிடர்தான்டா!'' என்று மறுத்து விட்டார் கமலா.

பின் ஸீட்டில் பாதியை அடைத்துக் கொண்டு அமரவும், செய்வதறியாமல் கணவனைப் பார்த்தாள் ஜெயஜோதி.

அவன் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு தோளைக் குலுக்கினான்.

''என்னை என்ன பண்ணச் சொல்றே! யு வில் ஹேவ் டு டாலரேட் மி அண்ட் அத்தை!'' என்று கிசுகிசுத்தான்.

அவள் ஒன்றும் பேசாமல் நடுவில் அமர, அவன் இந்த ஓரத்தில் அமர்ந்து கொண்டான். மூன்று பேருக்கும் சரியாக இருந்த அந்த ஸீட்டில் பிரகாஷ் வேறு இடைச் செருகலாய்,

''நான் தனியாத்தான் உட்காருவேன். ஜன்னல் கிட்டேதான் உட்காருவேன்!'' என்று அடம்பிடித்தான்.

'வேறு வழியில்லாமல், ''ஐ...ம்...சாரி... ஜோதி!'' என்று முணுமுணுத்தபடி நெருங்கி அமர்ந்தான் சரவணபவன்.

''பரவால்லே...'' என்று அவளும் இடம் கொடுத்தாள். ஆனால், முகம் சிவந்து விட்டது. அவன் அதைக் கவனிக் காதவன் போல் அமர்ந்து கொண்டான்.

கொஞ்ச தூரம் போனவுடன் உறங்கி விட்ட குழந்தையை எடுத்து மடியில் அமர்த்திக் கொண்டான். ஆனாலும் விலகி அமரவில்லை. அப்படியே விலகினாலும் அத்தை தன் ஒருத்திக்கு மட்டுமே கார் என்பது போல் விஸ்தாரமாக அமர்ந்து கொள்ள, மீதி இடத்தில் இருவரும் பங்கு போட வேண்டி இருந்தது.

முதல் நாள் திருச்சியில் வெக்காளியம்மன் கோவில், சமயபுரம் என்று அக்கம் பக்கத்துக் கோவில்களைப் பார்த்து முடித்து விட்டு இரவு ஒரு ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கினார்கள்..

தனிமை கிடைத்தவுடன், ''அப்பாடா... ரொம்ப நாளாச்சு இப்படி ஃப்ரீயாய் இருந்து!'' என்று கையைத் தூக்கிச் சோம்பல் முறித்தான் சரவணபவன்.

''கதை சொல்லுப்பா...'' என்று மார்பில் சாய்ந்த மகனிடம் கதை சொன்னான்.

''ஃபைட் கதைப்பா!'' என்றான். கதை சொல்வதுமல்லாமல் நடித்து வேறு காட்ட வேண்டியிருந்தது.

''டுமில்... டமார்'' என்று நடித்தபடி, ''அப்பா... விழறே னாம்...'' என்று கண்ணைச் சிமிட்டியபடி, ஜெயஜோதியின் மேல் முழுமையாகச் சாய்ந்தான் சரவணபவன்.

''ஹையா... அப்பா விழுந்துட்டாரு!'' என்று மகன் குதிக்க...



''போதும் விளையாட்டு. அப்பாவும், மகனும் தூங்குங்க!'' என்று அவள் வெட்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் விலக, சரவணபவன் அவளைக் குறுகுறு வென்று பார்த்தான்.

''டேய்! உங்கம்மாவுக்கு நாம விளையாடினா பொறாமை பார்றா...'' என்று புகார் செய்தான் சரவணபவன்.

''அம்மா... ப்ளீஸ்ம்மா... இன்னொரு தடவை... சண்டைம்மா...'' என்று பிரகாஷ் கெஞ்ச,

''அம்மா மேல் விழுந்தா... அம்மா கோபிச்சுக்கறா ளேடா...'' என்று குறும்பாகச் சிரித்தான்.

அந்தக் கணத்தில் கணவன் தன்னிடம் சீண்டி விளை யாடுவது புரிந்து போக, செய்வதறியாது நின்றாள்.

''அம்மா... கோச்சுக்காதம்மா!'' என்று மகன் மறுபடியும் கெஞ்சினான்.

மறுபடியும் அதே நாடகம் தொடர்ந்தது. அவள் தடுக்க வில்லை. ஆனால், ஆர்வமாகப் பங்கெடுத்துக் கொள்ளவு மில்லை. வெட்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் இருக்க முயற்சித்தாள்.

விளையாடி ஓய்ந்த குழந்தையைப் பால்கனியில் நின்றபடி தட்டிக் கொடுத்து உறங்க வைக்கிற கணவனை ஓரக்கண்ணால் பார்த்தபடி அவள் கட்டிலில் காலைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அந்த நிமிடத்தில் அவளுக்கு ஒன்று புரிந்தது. தன் விருப்பத்துக்கும், எண்ணத்துக்கும் மாறாகச் சரவணபவனின் அண்மை தனக்கும் பிடிக்கிறது என்பதுதான். முகம் சிவக்க முழங்கால்களுக்கிடையே முகம் புதைத்துக் கொண்டாள்.

சற்று நேரம் கழித்து உள்ளே சரவணபவன் உறங்கிய குழந்தையைப் படுக்கையில் கிடத்திவிட்டு, ''ஜோதி!'' என்று கிறக்கக் குரலில் அழைத்தான்.

''ம்...!'' என்றாள் தலை நிமிராமல்.

''ரொம்பத் தொல்லை பண்றமோ?'' என்றான்.

'இல்லை' என்பது போல் தலையாட்டினாள். ஆனால், தலை நிமிரவில்லை.

சற்று நேரம் நின்றபடி அவளைச் சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்த சரவணபவன் -

''நீ டயர்டா இருக்கே. தூங்கும்மா. நான் கொஞ்ச நேரம் ரிலாக்ஸ் பண்ணிட்டு வரேன்,'' என்று விளக்கணைத்து விட்டுப் பால்கனியில் போய் நின்று கொண்டான்.

அந்த இருளில் ஒருக்களித்துப் படுத்தபடி சரவணபவனின் தோற்றத்தை முதன் முதலாக ஆழமாய்ப் பார்த்தபடி சிந்தனையி லாழ்ந்தாள் ஜெயஜோதி.

வந்த நாளில் இருந்து தன்னுடைய தேவைகள் எதற்குமே குறை வைத்ததில்லை சரவணபவன். கடமைகளிலும் தவறிய தில்லை. அவள் முழு மனதாக ஒத்துக் கொள்ளவில்லை என்பதனாலேயே இதுவரை விரதம் காக்கிறான்.

சென்ற முறை வந்திருந்தபோது அவளுக்கும் சுபாவுக்கும் நடந்த உரையாடல் நினைவுக்கு வந்தது.

''என்ன சுபா, இந்த லதா எப்பப் பாரு நெகடிவ்வாவே பேசறா? என்று ஜோதி அங்கலாய்க்க, அப்போதுதான் சுபா சொன்னாள்.

''அவ கொஞ்சம் வெக்ஸாயிட்டா ஜோதி!'' என்று.

''ஏன்?'' என்று ஜோதி கேட்க, லதா போன தடவை பேறுகாலத்திற்காக அம்மா வீட்டுக்குப் போயிருந்தபோது அவள் கணவன் வேறு ஒரு பெண்ணிடம் தொடர்பு வைத்துக் கொண்ட விஷயத்தைச் சொன்னாள். அதிலிருந்து யார் மேலயும் நம்பிக்கை வைக்கக் கூடாதுன்னுதான் பேசறா என்றாள்.



தன்னுடைய விஷயத்தில் நம்பிக்கையில்லாமல்தானே இந்த வாழ்க்கையில் நுழைந்தோம். ஆனால், இதுவரை சரவணபவன் மிகவும் கண்ணியமாகத்தான் நடந்து கொள் கிறான். சட்டபூர்வமான உரிமை இருந்தும், வற்புறுத்தினால் அவள் மறுக்க மாட்டாள் என்பது தெரிந்தும், நாகரீகம் காக்கிறான்.

ஒரு தொழிலதிபராக ஒரு முக்கியப் பிரமுகராக மதிக்கப் படுகிற அவன் பெருமை புரிந்ததற்குப் பிறகு, தான் என்ன ஸ்டான்ட் எடுக்க வேண்டும் என்பதே அவளுக்குப் புரிபடவில்லை.

முதல் முறையாகத் தன்னிடம் சீண்டி விளையாடுகிற அவன் மேல் அவளுக்குக் கோபம் வரவில்லை. மாறாக அது தனக்கும் பிடிக்கிறதே என்று எண்ணிக் கொள்ளவும் முகம் சிவந்து போனது.

கண்களை இறுக மூடிக் கொண்டு திரும்பிப் படுத்துக் கொண்டாள். அதே சமயத்தில் முகத்தில் புன்சிரிப்புத் தவழ உள்ளே வந்த சரவணபவன் சற்று நின்று மனைவியின் முகத்தை உற்று நோக்கினான்.

இரவு விளக்கின் ஒளியில் இமைகள் மூடியிருந்த போதும் படபடக்க, முகம் சிவந்து படுத்துக் கிடப்பதைக் கண்டதும் முகம் மலர்ந்தது. ஆனால் எதுவானாலும் இங்கே... இல்லை... ஊரில் தங்கள் வீட்டில்தான் என்று முடிவு கட்டிக் கொண்டு வழக்கம் போல் மகனுக்கு அந்தப்புறம் படுத்துக் கொண்டான்.

இரண்டு நாட்களும் வேகமாக ஓடியது. வழக்கத்துக்கு மாறாக ஜெயஜோதி அவனுக்குச் சரியாக வாயடிக்காமல் அமைதியாக இருந்தாள். தொடர்ந்து கோவில்கள் போனதால் வேறு சிந்தனைக்கும் இடம் இருக்கவில்லை.

இரண்டாம் நாளிரவு கும்பகோணத்தில் தங்கினார்கள். அங்கே இருந்த பெரிய கோயில்களில் பிராகாரங்களில் நடந்து விட்டு வந்த களைப்பில் விரைவில் உறங்கி விட்டார்கள்.

மூன்றாம் நாள் இரவு நான்கு மணிக்குக் கிளம்பிப் பிற்பகலில்தான் தாராபுரம் வந்து சேர்ந்தார்கள். அங்கே மாலைச் சிற்றுண்டி அருந்தினார்கள்.

அத்தையும், மாமாவும் விடைபெற்றுக் கொண்டார்கள். தங்களது காரை டிரைவரை விட்டுத் தாராபுரம் கொண்டு வர ஏற்பாடு செய்திருந்தான் சரவணபவன்.

டிரைவரை பஸ்ஸில் அனுப்பி விட்டான். ஏழு மணி வாக்கில் இருவரும், குழந்தையுடன் கிளம்பினார்கள்.

''அப்பா, ஊருக்காப்பா?'' என்று கேட்ட மகனிடம் -

''ஆமாடா, ராஜா!'' என்று கொஞ்சி முத்தமிட்டு மனைவியின் கையில் கொடுத்து விட்டுக் காரை எடுத்தான் சரவணபவன்.

''கார் கதவை லாக் பண்ணியிருக்கியா?'' என்று கையை நீட்டிச் செக் செய்தான். அந்தக் கணங்களில் தன் கை பட்டதும் மனைவி முகம் சிவப்பதைக் கவனித்துப் புன்னகைத்துக் கொண்டான்.

விசிலடித்துக் கொண்டே காரை ஓட்ட, மகனுக்கு உற்சாகம். கனகாரியமாய் அவனும் விசிலடித்துப் பார்க்க, காற்றுத்தான் வந்தது. இருவரும் சிரித்தார்கள்.

''குட்டிப்பய... சீக்கிரம் தூங்குவியாம். அப்பாவுக்கு ஊருக்குப் போனவுடனே நிறைய வேலையிருக்காம்...'' என்று அவன் குறும்பாய்ச் சிரிக்க, அந்த வார்த்தைகளின் பொருள் புரிந்த ஜெயஜோதி கண்கள் படபடக்க வெளியே பார்த்தாள்.

''என்ன வேலைப்பா?'' என்றான் மகன்.

''நிறைய வேலையிருக்குடா. அதெல்லாம் பெரியவங்க விஷயம்டா... உங்கிட்டே சொல்ல முடியுமா? வேண்ணா அம்மா கிட்டே கேளு,'' என்று உல்லாசமாகச் சிரிக்க.



''என்ன... நீங்க குழந்தைகிட்டே போயி...'' என்று தடுமாறினாள் ஜோதி.

அவன் குறும்பாக அவளைத் திரும்பிப் பார்த்தான்.

சிவந்து கிடந்த முகத்தை ரசனையுடன் பார்த்தான். அவள் தலை குனிந்து கொண்டாள். அவள் தவிப்பைப் பார்த்து அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

ரேடியோவை ஆன் செய்ய நல்ல பாடல்கள், அதுவும் கண்ணதாசனின் பாடல்களாக ஒலிக்க, ரசித்துக் கேட்டான். பிரகாஷ் உறங்கி விட அவள் குழந்தையை மடியில் சாய்த்துக் கொண்டாள்.

இடையில் ஒரு இடத்தில் நிறுத்தி ''காஃபி சாப்பிட்டாத் தேவலை!'' என்று தானும் பருகினான். அவளுக்கும் வாங்கிக் கொடுத்தான்.

சற்று தூரம் சென்றதும் காரை நிறுத்தி அவள் பக்கம் திரும்பி அமர்ந்தான்.

''ஏன் ஜோதி, உங்க அம்மா வீட்டுக்குப் போய்ப் பிரசாதம் குடுத்துட்டு, இன்னைக்குப் பயலை அங்கே விட்டர்லாமா?'' என்றான்.

அவள் மௌனமாக அமர்ந்திருந்தாள். இடக்கையால் அவள் முகம் தொட்டு நிமிர்த்தினான்.

''ஹேய்! உன்னைத்தான் கேக்கறேன். பதில் சொல்லு...'' என்றான்.

''உங்க இஷ்டம்!'' என்றாள் அவள் வெட்கத்துடன் கீழே பார்த்தபடி.

''தட்ஸ் குட்!'' என்று கலகலவென்று சிரித்தபடி காரை எடுத்தான்.

# 10

''எப்படிச் சொல்வது?'' என்ற அவர்களின் தவிப்பைப் புரிந்து கொண்டவராகவோ என்னவோ, ராஜலட்சுமி -

''ராஜாவை இங்கயே விட்டுடுங்களேன். ரெண்டு நாள் இருக்கட்டும்,'' என்றார்.

கார் போர்ட்டிகோவில் நிற்க, ஜெயஜோதி வேகமாக இறங்கி உள்ளே போக, கார் சாவியைக் கையில் சுழற்றியபடி அவன் ஒரு விதமான சிரிப்புடன் பின் தொடர்வதை வீட்டுக் கதவைத் திறந்து விட்ட சண்முகம் கவனித்தார்.

நிலைமையைப் புரிந்து கொண்டு பிரயாணம் பற்றி எதுவும் விசாரிக்காமல், ''ரெஸ்ட் எடு தம்பி...காலையில் பேசலாம்,'' என்று அறைக்குப் போய்விட்டார்.

வேகமாக அறைக்குள் போய்த் தூய்மை செய்து கொண்டு படுக்கையறைக்கு வந்தாள். பிரகாஷ் இருந்தால் அவனுடன் பேசிக் கொண்டு நேரம் போவதே தெரியாமல் இருக்கும்.

ஓரிரு முறை அவர்கள் தனியாகவும் தங்கியதுண்டு. அப்போதெல்லாம் சற்று முன்னதாகவே தோட்டத்துக்கு உலவப் போய்விடும் கணவன் திரும்பி வருவதற்குள்ளேயே அவள் உறங்கி விடுவாள்.

அப்படியே விழித்திருந்தாலும் ஆளுக்கொரு புத்தகத்தில் ஆழ்ந்து விடுவார்கள். ஆனால், இன்று அவன் நடத்தையே வேறாக இருந்தது.

கண்களில் குறும்பு மின்னியது. உற்சாகமாக, உல்லாச மனப்பான்மையில் இருந்தான். அவனும் தூய்மை செய்து கொண்டு கைலி பனியனில் வெளியே வந்தான்.



அந்த நேரத்தில் ஜெயஜோதி மேஜையறையில் எதையோ வைப்பவள் போல் நின்று கொண்டிருக்க, அவன் நெருங்கினான்.

தனது உணர்வுகளின் கனம் தாங்க முடியாதவளாய், அவள் சுவரில் சாய்ந்து கொள்ள, அவன் அவள் முன்பு நின்று அவள் முகத்தைக் கிறக்கப் பார்வையால் அளக்க, அவள் அவன் முகம் பார்க்க மறுத்தாள்.

''ஹேய், என்னைப் பார்க்க மாட்டியா?''என்று கிறக்கக் குரலில் கேட்க, அவள் மெதுவாக நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

கெஞ்சலாக அவளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

தனது அலுவலகத்தில் அத்தனை பேரையும் மிரட்டி விடுகிற அவன் கெஞ்சல் பார்வையுடன் நிற்பதைக் கண்டவுடன் வெட்கம் ததும்பச் சிரித்துக் கொண்டு அவன் மார்பில் முகம் பதித்தாள்.

தன்னை மறந்த அவன் இடக்கையால் அணைத்துக் கொண்டு அவள் முகம் நோக்கிக் குனிந்தான் - முகம் முழுவதும் தனது முத்திரைகளாய்ப் பதித்தபடி.

''என்ன... சிரிப்பு...?'' என்றான், கிறக்கக் குரலில்.

''இல்லே! ஆஃபீஸ்ல எல்லாரையும் எப்படி மிரட்டறீங்க! இங்க மட்டும்... கெஞ்சறீங்க!'' என்றாள் குரலே எழும்பாமல்.

''அங்கே... மிரட்டலேன்னா தொழிலுக்கு நஷ்டம்தான்... முதலாளி... இங்கே... நீதான்... எஜமானி... இங்க மிரட்டினா... நஷ்டம்... எனக்காச்சே...'' என்று கிறக்கக் குரலில் பேசியபடியே மேலே தொடர, அவள் விலகிக் கொண்டாள்.

''மாட்டேன்னு சொன்னா, வீட்டுடுவீங்களா?'' என்பது போல முணுமுணுத்தாள்.

அவன் அசரவில்லை. ''பிடிக்கலேன்னு சொல்லு. விட்டர் றேன். எங்கே... சொல்லு... பார்க்கலாம்,'' என்று சவால் வைத்த படி வேகமாக அருகில் இழுக்க அவள் சிக்கிக் கொண்டாள்.

''போதும்... பேச்சு... வேணுங்கற அளவுக்குக் காத் திருந்தாச்சு. இனியும்... சோதிக்காதே!'' என்றபடி அவன் இறுக அணைத்தான். அவளை மேலே பேச விடவில்லை.

அவளும் இடம் கொடுத்துக் கைப்பிடியில் அடங்கிக் கொண்டாள்.

**எ**ன்றைக்கும் தனக்கு முன்பே விழித்து விடுகிற கணவன் இன்று ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைப் பார்த்ததும் புன் னகைத்தபடி தான் குளித்து விட்டுத் தேநீர் எடுத்து வரப் போனாள்.

சற்று நிதானமாகவே அறைக்கு வந்த போது, சரவணபவன் விழித்திருந்ததோடு மட்டும் அல்லாமல், முகம் நிறைய ஷேவிங் க்ரிமைப் பூசிக் கொண்டு ஷேவிங்கில் ஆழ்ந்திருந்தான்.

தேநீர் ட்ரேயை டேபிளில் வைத்துவிட்டு, 'குட்மார்னிங் அத்தான்!' என்றபடி அருகில் வந்த மனைவியை இடக் கையால் இழுத்து அவள் முகத்தில் ஷேவிங் க்ரீம் பூசி விளையாடிக் கொண்டு வெடிச் சிரிப்புச் சிரித்தான்.

ஜெயஜோதி பொய்க் கோபத்துடன் அவனைக் கட்டிலில் தள்ளி விட, அவளையும் சேர்த்து இழுத்துக் கொண்டு விழுந்து சூழ்நிலையைக் கலகலப்பாக்கினான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சிரித் தார்கள்.

சரவணபவன் தன் மகிழ்ச்சியை இவ்வளவு வெளிப்படை யாகக் காட்டிப் பார்த்திராத ஜெயஜோதி உள்ளம். நெகிழ்ந் தாள். முகம் கழுவிக் கொண்டு வந்த அவளைத் தன் மார்பில் சாய்த்த வண்ணம் அவன் தேநீரைச் சுவைத்து அருந்தினான்.



அவள் அவன் முகம் நிமிர்ந்து பார்த்து, ''அத்தான்! உங்களை இப்படி சந்தோஷமாப் பார்க்கறதுக்கு ரொம்ப நல்லாருக்கு...'' என்று முணுமுணுத்தாள்.

''ம்... அப்படியா?'' என்று குறும்பாகச் சிரித்தபடி, அவளை மேலே பேச விடாமல், சற்று நேரம் ரகளை செய்தான்.

''பவன்... ப்ளீஸ்...'' காலையில்... என்ன இது!'' என்று அவள் விலக,

''ஹேய்! தட்ஸ் நைஸ்! அப்படியே கூப்பிடு!'' என்று முகம் மலர்ந்தான்.

அவள் முகத்தைக் கைகளில் ஏந்திக் கொண்டு கொஞ்சிய படி தன்னை மறந்து,

''சந்தோஷம் இருக்காதா பின்னே? வாழ்க்கையின் முதல் அனுபவம் மனசுக்குப் பிடித்தவளோடு அமைஞ்சா எவ் வளவு சந்தோஷமா இருக்கும்!'' என்று முணுமுணுத்தான்.

''ஹலோ! ஆபீஸ் போகலியாக்கும்!'' என்று அவள் முணு முணுக்க,

''ஆஃபீஸா? அதுக்கு வேற போகணுமாக்கும்!'' என்று சலித்துக் கொண்டான். அவள் சிரித்தாள்.

பிறகு, ''ஆஃப்டர் நூன் போய்க்கறேன். கொஞ்ச நேரம் ரெஸ்ட்,'' என்றான்.

பிற்பகல் வரை அவளுடனேயே இருந்தான். ''ஹேய்! எல்லா நேரமும் உன் கூடவே இருக்கணும்னு இருக்கு!'' என்றான்.

''அது சரி! மற்ற கடமையும் இருக்குங்க பவன் சார்!'' என்று ஒரு விதமாகத் தேற்றி, பிற்பகல் அலுவலகம் அனுப்பினாள்... மனசே யில்லாமல் புறப்பட்டுப் போனான்.

பிற்பகலில் குழந்தையும் இல்லாததால் அறையை ஒழுங்கு படுத்தலாமே என்று எண்ணிய ஜெயஜோதி ஒழுங்கு படுத்த ஆரம்பித்தாள்.

அப்போதுதான் அந்தக் கேள்வி அவளுக்குத் தோன்றியது. தன் கணவன் தன் சகோதரியுடன் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருப்பான்?

குழந்தை உண்டான இரண்டாம் மாதத்தில் இருந்தே அக்கா அவர்கள் வீட்டில்தான் இருந்தாள்.

சிவஜோதி ஜெயஜோதிக்கு நேர் எதிரானவள். அமைதி யானவள். அதே சமயம் அழுத்தமானவளும் கூட. ஆனால், தைரியமானவள் என்று சொல்ல முடியாது.

சரவணபவன் வருவான். அவர்களுக்கு மாடியில் அறை ஒதுக்கி இருந்ததால் ஜெயஜோதி அங்கே அவசியமின்றிப் போனதில்லை.

அப்போதெல்லாம் அவளோடு ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசி இருக்கிறான். அவ்வளவுதான். பெண்கள் நல அமைப்பு ஒன்றில் உறுப்பினராக இருந்தாள். நன்றாக வாயடிப்பாள்.

அந்த அமைப்பின் மூலமாக இலவசச் சட்ட ஆலோசனை உதவி கூடச் செய்து வந்தார்கள். அப்போது ஆலோசனைக்காக வரக்கூடிய பெண்கள் வந்து சொல்லும் சோகக் கதைகளைக் கேட்டுக் கேட்டு அவளுக்கு ஆண் வர்க்கத்தின் மீதே ஒரு கடுப்பு வந்திருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

தினம் ஒரு கதையை வந்து சகோதரியிடம் சொல்லிக் கொண்டிருப்பாள். அம்மாதான் அவளிடம், ''ஏண்டி, இப்பப் போய் அவகிட்டே இதையெல்லாம் சொல்லிகிட்டிருக்கே. இப்ப அவ நல்ல விஷயமாத்தான் கேக்கணும் அப்பத்தான் நல்லபடியா குழந்தை பிறக்கும்!'' என்று கடிந்து கொள்வார்.

குழந்தை பிறக்கும் வரை சிவஜோதி ஓரளவு கலகலப்பாக இருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். குழந்தை பிறந்ததற்குப் பின்பும் ஆறு மாதங்கள் வரை குழந்தையை நன்றாகப் பராமரித்தார்கள். ஆனால், சிவஜோதி அடிக்கடி தனியாகப் போய் அமர்ந்து கொள்வாள்



இடையிலே பத்து நாட்கள் போய் கணவன் வீட்டில் இருப் பாள். ஆனால், திரும்பவும் வந்து விடுவாள். எதைப் பற்றியும் ஜெயஜோதி அப்படி விவரமாக அப்போது யோசித்தது இல்லை.

குழந்தை பிறந்ததற்குப் பின்பு ஜெயஜோதிதான் வளர்த் தாள் என்று சொல்ல வேண்டும். பட்டுப் போன்ற அந்தப் பிஞ்சுக் கைகால்கள், மலரைப் போல் சிரிக்கும் குழந்தை என்று குழந்தை வளர்ப்பு அவளை முழுமையாக ஆட் கொண்டது.

''அக்கா, நான் கல்யாணமே செஞ்சுக்கப் போறதில்லே.. பேசாம இவனை என்கிட்டே குடுத்துடு. நீ இன்னொண்ணு பெத்து வளர்த்துக்கோ...'' என்பாள்.

லேசான புன்னகையுடன் சிவஜோதி நகர்ந்து விடுவாள்.

அப்போதெல்லாம் சரவணபவன் அவர்கள் வீட்டுக்கு வந்தால், அம்மாவிடம் தனியாகக் கொஞ்ச நேரம் பேசுவான்.

சிவஜோதி தன்னைச் சரியாகக் கவனித்துக் கொள்வ தில்லை என்று அம்மாவிடம் புகார் சொல்வான். அம்மாவும் சேர்ந்து கொண்டு சிவஜோதிக்கு அறிவுரை சொல்வார்.

ஓரிரு முறை அவன், ''என்ன ஜெயஜோதி, கண்டுக்கவே மாட்டேங்கறே?'' என்று வம்பிழுத்தால் கூட, சுருக்கமாகப் பதிலளித்து விட்டு நகர்ந்து விடுவாள் ஜெயஜோதி.

பிரகாஷுக்கு ஆறு மாதம் இருக்கும். ஒரு நாள் அவள் வெளியே போய் விட்டு வீட்டிற்குத் திரும்பிய போது வீடே பரபரப்பாக இருந்தது.

சிவஜோதிக்கு உடல் நிலை சரியாக இல்லை. ஆஸ்பத் திரிக்குப் போயிருக்கிறார்கள் என்றார்கள்.

அவளும் புறப்பட்டபோது, அம்மா போன் செய்து, ''ஜெயா, நீ குழந்தையைப் பாத்துக்க, ஆஸ்பத்திரிக்கெல்லாம் குழந்தையை எடுத்துட்டு வர வேண்டாம்!'' என்றார்.

ஜெயஜோதியும் அப்படியே செய்தாள். அடுத்த மாதத்தி லேயே இரண்டாவது முறையாக அக்கா அட்மிட் ஆன போது அவள் யார் சொல்லியும் கேட்கவில்லை.

ஆஸ்பத்திரிக்குப் போனாள். அப்போதுதான் அக்கா விடம் கேட்டாள்.

''ஏங்க்கா, உனக்கு ஏதாவது பிரச்சினையா? அத்தான் ஏதாவது தொல்லை செய்வாரா?'' என்று கேட்டாள் அக்கறையாக.

சிவஜோதி உச்சுக் கொட்டினாள். மறுநாளும் ஜெயஜோதி அதையே கேட்டபோது சிவஜோதி,

''அத்தான்கிட்டேயெல்லாம் ஒரு பிரச்சினையும் இல்லே. எனக்கு நானேதான் பிரச்சினை!'' என்றாள்.

ஜெயஜோதி ஒரு கணம் விழித்தாள். பிறகு அக்கா, ''மருத மலைக்குப் போனா படியில பாத்திருக்கியா? உடம்பு முழுதும் நோயா இருக்கும். சக்கர வண்டியிலே உட்கார்ந்துகிட்டு பிச்சை கேட்டுகிட்டிருப்பான். ஏன் தெரியுமா? வாழணுங்கற ஆசை. மனுஷன்னா மற்றவங்க எல்லாத்தையும் நேசிக்கணும். அதுக்கு முதல்லே தன்னையும் நேசிக்கப் பழகணும்,'' என்றாள்.

''சரிங்க! பாட்டி!'' என்று சிரித்தாள் சிவஜோதி. கண்களில் அப்படி ஒரு பலவீனம்.

ஜெயஜோதி அவளை ஆழப் பார்த்து விட்டுத் திரும்பினாள். சரவணபவன் நின்று கொண்டிருந்தான். ஜெயஜோதி சரேலென்று வெளியேறி விட்டாள்.

## 11

ஜெயஜோதி வெளியே அமர்ந்து கொண்டாள். அவள் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து சிவஜோதியின் அறையைப் பார்க்க முடிந்தது.



அக்கா ஏன் இப்படி இருக்கிறாள்? அழகான கணவன், வசதியான வாழ்க்கை, நல்ல குழந்தை. வேறென்ன வேண்டு மாம் இவளுக்கு என்று அவளுக்கே சலிப்புத் தட்டியது.

பார்வையைத் திருப்பி அறையைப் பார்த்தாள். அங்கே சரவணபவனும் சிவஜோதியின் படுக்கை அருகில் சேரைப் போட்டபடி அமர்ந்து இரு கைகளையும் மேலும் கீழும் ஆட்டியபடி அவளுக்கு ஏதோ புரிய வைக்க முயலுபவன் போல் பேசிக் கொண்டிருந்தான்.

சிவஜோதி மிகவும் மரியாதையுடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பத்து நிமிடங்களுக்கு மேல் பேசிக் கொண்டிருந்துவிட்டு வெளியே வந்தான்.

பிறகு ஹாலில் அமர்ந்திருந்தவர்களுக்கு முதுகைக் காட்டியபடி வெளியே பார்த்துக் கொண்டு நின்றான்.

அந்த நேரத்தில் ஜெயஜோதிக்கு ஏதோ வழி தெரியாமல் தவிக்கிற குழந்தையைப் போல் தோற்றம் அளித்தான். ஆனால், மிகவும் பர்சனலாகப் பேசிப் பழக்கம் இல்லாததால் தயங்கினாள்.

ஒரே நிமிடம்தான் தயக்கம்.

''அத்தான்!'' என்றாள்.

''ம்..''என்று திரும்பினான்.

''அத்தான்... அக்கா என்னதான் சொல்றா? அவ மனசிலே என்னதான் இருக்கு?'' என்று கேட்டாள் தவிப்புடன்.

அவன் ஒரு நிமிடம் மௌனமாக நின்றான். பிறகு, ''உங்கக்கா எதையும்... சொல்லவும் மாட்டேங்கறா... நாம சொல்றதைக் கேட்கவும் மாட்டேங்கறா...'' என்றான்.

''என்னதான் பிரச்சினை?'' என்றாள். அவன் சற்று நேரம் பதில் சொல்ல விரும்பாதவன் போல் நின்றான்.

''பேஷண்டும் கொஞ்சமாவது கோ-ஆப்ரேட் பண்ணி னாத்தானே... டாக்டர் ஏதாவது செய்ய முடியும்?'' என்றான்.

ஜெயஜோதிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. மீண்டும் ஹாலுக்கே வந்து விட்டாள்.

பிற்பகல்.

சிவஜோதியின் நிலைமை கவலைக்கிடமாகி விட்டது.

குழந்தையைப் பார்த்துக் கொள்ள அவள் வீட்டிற்கு வந்து விட்டாள். செய்தி கேட்டு மீண்டும் மருத்துவமனைக்குச் செல்வதற்குள்ளாக எல்லாம் முடிந்திருந்தது.

எல்லா நினைவுகளும் ஒன்றன் பின் ஒன்றாகத் திரண்டு வர, அவள் அறையைச் சுத்தம் செய்து விட்டுக் கொஞ்ச நேரம் படுக்கையில் அமர்ந்து விட்டாள்.

சிவஜோதியுடன் தங்கள் வீட்டுக்கு வந்த காலத்தில் ஒரு நாளும் அக்காவோ, கணவனோ இப்படிக் கலகலவென்று சிரித்து அவள் பார்க்கவில்லை.

அப்படியென்றால் ஏன் அப்படி விழுந்தடித்துக் கொண்டு திருமணம் செய்து கொண்டார்கள்.

அக்கா இறப்பைப் போலவே, அவளது திருமண நினைவுகளும் அவள் மனதில் படையெடுத்தது.

அப்போது அவள்...

இன்ட்டீரியர் டெகரேஷனில் ஒரு டிப்ளமோ செய்து கொண்டிருந்தாள்.

அன்று ஒரு புதன்கிழமை...

அவள் புறப்பட்டுக் கொண்டிருக்கையில் அவர்கள் வீட்டு வாயிலில் ஒரு கார் வந்து நின்றது.

சரவணபவனும், சிவஜோதியும் மாலையும் கழுத்துமாய் இறங்கி வீட்டுக்குள் வந்தார்கள்.



வீடே திகைத்துப் போனது.

சரவணபவன் அலட்டிக் கொள்ளாமல் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான். பிறகு தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நாங்க கல்யாணம் பண்ணிக்க வேண்டியதாய்ப் போச்சு என்றான்.

கல் மாதிரி அலட்டிக் கொள்ளாமல் நின்றான். அப்பா கூடக் கண்ணீர் விட்டார். அம்மா ஒரு பக்கம் -

''இப்படிப் பண்ணிட்டு வந்து நிக்கிறியேடி!'' என்று அழுதார்.

சிவஜோதியும் அழுதாள். அவன் மட்டும் உணர்ச்சி வசப்படாமல் நிலைமையைச் சமாளித்தான்.

''நாங்க எதுவும் தப்புப் பண்ணிடலே. எங்க வீட்டுல ஒத்துக்கிட்டாங்க. ப்ளீஸ்... புரிஞ்சுக்குங்க...'' என்றான்.

அவன் யார்? அவன் அந்தஸ்து என்ன என்று புரிந்த தாலோ என்னவோ, அவர்கள் - சிவஜோதியின் பெற்றோர்கள் - தங்கள் கோபத்தை வெளிப்படையாகக் காட்ட முடியாமல் தவித்தார்கள் போலும்.

முறையாக ரெஜிஸ்ட்ரார் ஆஃபீஸில் திருமணம் என்ற பிறகு எதுவும் செய்வதற்கில்லை என்றாகிப் போனது.

கோபதாபங்கள் ஆறிய பிறகு ஒரு நாள் மாலை சிவஜோதியை அவர்கள் வீட்டில் விட்டு விட்டுச் சரவணபவன் வந்தான்.

அந்த நேரம் ஜெயஜோதி வெளியே கிளம்பிக் கொண் டிருந்தாள்.

லேசான விசாரிப்புக்குப் பின் நகர்ந்து விட்டாள். அவன் அம்மாவிடம் அன்றைக்கு என்ன பேசினானோ தெரிய வில்லை. அதற்குப் பிறகு அம்மா அடியோடு மாறிப் போனார்.

அதற்குப் பிறகு மாப்பிள்ளை மாப்பிள்ளை என்று தங்கத் தட்டில் வைத்துத் தாங்காத குறையாகத் தாங்கினார். ஆனால், சரவணபவன் ஒரு உயரத்திலேயே நின்றான்.

ரொம்பவும் ஒட்ட மாட்டான். ஆனால், விலகி விடவும் மாட்டான்.

சிவஜோதி பெரும்பாலும் அம்மா வீட்டில்தான் இருப்பாள். அவனும் கண்டு கொள்ள மாட்டான். ஆனால் சிவஜோதியின் தேவைகள் அத்தனையும் நிறைவேற்றப் படும். அவளுக்கு அனுப்புகிறேன் பேர்வழி என்று காய்கறி, பழங்கள், அரிசி மளிகை என்று வீட்டுக்குத் தேவையான தெல்லாம் அனுப்பி வைத்து விடுவான்.

தினமும் ஃபோன் செய்து விசாரிப்பான். அல்லது வந்து விட்டுச் செல்வான்.

குழந்தை பிறந்ததற்குப் பிறகும் அப்படித்தான். அவளுக்குக் கவனிப்புக்குக் குறைவிருக்கவில்லை. ஆனால் அவளுக்குத் தான் வாழக் கொடுத்து வைக்கவில்லை.

சிவஜோதி மறைந்த பிறகு ஏனோ சற்று விலகி இருந்தான். அதுவும் இரண்டு மாதங்களுக்குத்தான்.

அதற்குப் பிறகு இரண்டு மூன்று நாட்களுக்கொரு முறையாவது வந்து குழந்தையைப் பார்த்துச் செல்வான்.

வெளியூர் போய் விட்டால் வந்த வுடனே பார்த்துச் செல்வான்..

ஒரே ஒரு முறை அம்மாவிடம், ''அத்தை, ஜெயஜோதி குழந்தையைப் பார்த்துக்கறதுனால நான் கொஞ்சம் நிம் மதியாயிருக்கேன்!'' என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது.

அவள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அப்போதெல்லாம் ஜெயஜோதிக்கு அத்தானுக்கும், அம்மா வுக்கும் இடையே ஒரு பாசப் பிணைப்பு இருக்கிறது என்று தோன்றும். ஆனால், எதையும் பெரிதாக யோசிக்க அவளுக்கு நேரம் இருக்கவில்லை. பிரகாஷுக்கு ஒதுக்கவே



அவளுக்கு நேரம் போதாமல் இருந்தது என்று எல்லா நினைவுகளும் அலை அலையாய் வந்து மோதியது.

திடீரென்று பொறி தட்டினாற் போல் அவளுக்கு ஒன்று தோன்றியது.

இன்று காலை தன்னை மறந்த நிலையில் கணவன் சொன்ன வார்த்தைகள்.

திடுக்கிட்டாற் போல் எழுந்து நின்றுவிட்டாள்.

அதற்குப் பிறகு அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

நேராகச் சண்முகத்திடம் போனாள். 'பெரியப்பா! பெரியப்பா!' என்று அதையும் இதையும் பேசிக் கொண்டிருந்து விட்டு மெதுவாக -

''பெரியப்பா, நான் கொஞ்ச நேரம் மாடிக்குப் போறேன் அங்கிருக்கிற ரூம்ஸ் எல்லாம் நான் பார்த்ததே இல்லை,'' என்று சாவிகளை வாங்கிக் கொண்டு போனாள்.

மேலேயும் கீழே அவர்களது பின்கட்டுப் பகுதியைப் போல் ஒரு ஹால். ஹாலைத் தாண்டி இரண்டு மூன்று படுக்கையறைகள் என்று இருந்தன.

இப்போதும் கூட யார் வேண்டுமானாலும் தங்குகிறமாதிரி எல்லா வசதிகளுடனும்தான் இருந்தது.

ஒருவேளை மேலே இருக்கிற அறைகளில் தங்கினால் அக்காவின் நினைவு வரும் என்பதினால்தான் கீழ்ப்பகுதிக்கு மாற்றிக் கொண்டானோ கணவன் என்று எண்ணினாள்.

அந்த நேரத்தில் அக்காவின் வாழ்க்கையைத் தான் திருடிக் கொண்டோமோ என்ற குற்ற உணர்வு கூடத் தோன்றியது.

சட்டென்று அந்த அறைக்கு முன்னால் நின்றாள்..

அந்த ஒரு அறையை மட்டும் அவளிடத்திலிருந்த எந்த சாவியையக் கொண்டும் திறக்க முடியவில்லை.

கீழே வந்தாள்.

''பெரியப்பா... அந்த ரூமை மட்டும் திறக்க முடியலியே!'' என்றாள்.

பெரியப்பா ஒரு நிமிடம் மௌனம் சாதித்துவிட்டு,

''அது உங்க அக்காவோட ரூம். அதோட சாவி மட்டும் தம்பிகிட்டதான் இருக்கு...'' என்றார்.

ஐந்து மணிக்கே வந்து விட்டான் சரவணபவன். குறும்புச் சிரிப்புடன் -

''ஹேய், ஜோ! கட் அடிச்சுட்டு வந்துட்டேன்!'' என்று சிரித்தான்.

''அழகுதான்!'' என்று அவளும் சிரித்தாள். கணவன் சிரிக்கிற சிரிப்பைப் பார்த்தவுடன் மற்ற எல்லாம் மறந்து போனது.

''ஹேய்! ஜோ! எந்த ஃபைலையும் பார்க்க முடியலை. அம்மா முகந்தான் எதில் பார்த்தாலும் தெரியுது. அப்புறம்... எங்கயாவது லெட்டர்ஸ்ல எல்லாம் ஜோதி... ஜோதின்னு அடிச்சு வச்சேன்னு வை. எல்லாப் பயலுகளும் பின்னாடி சிரிப்பானுக!'' என்று சிரித்தான்.

அவள் அவன் முகத்தைத் தன்னை மறந்து பார்த்துக் கொண்டு நின்றாள்.

''ஏய்! அப்படிப் பார்க்காதே!'' என்று மேலும் நெருங்க, அவள் தடுக்கவில்லை. பாந்தமாய் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''பயங்கரமான ஆள்... நீங்க!'' என்றாள்.

''ஏன்?''

''உங்களுக்கு வேலையாகணும்னவுடனே குழந்தையை அங்க விட்டுட்டீங்களே!'' என்றாள்.

''ஆமா! பின்னே... ஒரு வருஷம்... ஒரு வருஷம்... கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி... அம்மணி... நான்!'' என்று சிரித்தான். பிறகு அவள் தலையைக் கோதிக் கொடுத்தபடி -



''ரொம்ப கவலைப்படாதே செல்லம்ஸ். அப்பப்ப ஃபோன் செய்து கேட்டுகிட்டேன். எந்த நிமிஷம் அழுதாலும் கொண்டு வந்து விடச் சொல்லி இருக்கேன். ஆனா, அவன் ஜாலியாத் தான் இருக்கான். இன்னைக்கு ஐயா தாத்தா பாட்டியோட கோயில் கோயிலா டூர்ல இருக்காரு. நாளைக்குத்தான் வருவாரு...'' என்று வெடிச் சிரிப்புச் சிரித்தான்.

''நாளைக்கா? நாளைக்குத்தான் அவனைப் பார்க்க முடியுமா?'' என்று ஜெயஜோதி திகைக்க, ''என்ன நாளைக் கான்னு வாயைப் பொளக்கறே? ஹேய்! ஒரு நாள்தானே! அதுவரைக்கும் அவங்க அப்பனைக் கவனி!'' என்றான் கெஞ்சலாக.

''அதுதான் குறையில்லாம நடக்குதே!'' என்று முணு முணுத்தாள். அவள் முகம் நோக்கிக் குனிந்த கணவனைத் தடுக்கவில்லை. பிறகு மெள்ள அவன் முகம் பார்த்து,

''பவன்...'' என்றாள்.

''ம்...!'' என்றான் குழைந்த குரலில்.

''இன்னைக்கு அக்கா ஞாபகம் வந்துடுச்சு அவ வாழ வேண்டிய வாழ்க்கை...'' என்றாள்.

அவன் திடுக்கிடுவான், திகைப்பான் என்று நினைத்தாள். மாறாக அவன் அவள் கழுத்தில் முகம் புதைத்தபடி மெதுவான குரலில் சொன்னான்.

''ஜோ! ஒண்ணு புரிஞ்சுக்கோ!'' என்றான்.

''நீயோ, நானோ உங்க அக்காவுக்கு எந்த விதத்திலும் துரோகம் செய்யலை. விதிக்கப்பட்டது நடந்தது.. போனதை மறந்துட்டு இனிமே ஆக வேண்டியதைப் பார்ப்போம்... என்ன?'' என்றான்.

அவள் மௌனமாக ஒத்துக் கொண்டாள். ஆனால் பூட்டிய அறை நினைவுக்கு வந்தது.

இப்போது அதைக் கேட்பது உசிதமில்லை என உணர்ந்து அமைதியானாள். அவனது அன்பின் ஆதிக்கத்தில் கரைந்தாள்.

## 12

என்றைக்கும் இல்லாத வழக்கமாகச் சமையலறைக்கே வந்தான் சரவணபவன்.

சண்முகத்தின் அறையை எட்டிப் பார்த்தான். அவர் அங்கே இல்லை. பூஜையறையில் இருந்தார்.

குதுகலமாகச் சமையலறைக்குள் நுழைகிற அவனை அவள் எதிர்பார்க்கவில்லை.

''அத்தான்! இங்கே என்ன வேலை, உங்களுக்கு?'' என்றாள் ஆச்சரியமாக.

''நீங்க எங்கே இருக்கீங்களோ அங்கேதானே இனிமே வேலை நமக்கு!'' என்றான். அலட்டிக் கொள்ளாமல்.

அவள் திடுக்கிட்டுப் போய் உதவிக்கு நின்றிருந்த வேலைக்காரப் பெண்கள் இருவரையும் பார்க்க, அவர்கள் நமுட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு, அவசரமாக ஏதோ வேலையிருப்பது போல் நகர்ந்தார்கள்.

அவன் கண்களில் குறும்பு மின்ன, அவள் முகபாவத்தை ரசித்துக் கொண்டிருந்தான்.

''என்ன, இப்படி வேலைக்காரங்க முன்னாலே மானத்தை வாங்கறீங்க?'' என்று அவள் பொய்க் கோபத்துடன் சிணுங்க.



''இதென்னடா வம்பாப் போச்சு! என் வீட்ல என் பொண்டாட்டி கிட்டே பேச கால நேரம் பஞ்சாங்கம் பாக்கணுமாக்கும்!'' என்று நெருங்கி இழையவும் அவள் மௌனமாகி விட்டாள்.

அவன் இடக் கையால் அவளை அருகில் இழுத்து வலக் கையால் அவள் தலையைக் கோதிய வண்ணம், ''ஒரு மணி நேரமா ரூம் பக்கமே வர்லே! அப்படி என்னத்தைப் பண்றே?'' என்றான்.

''உங்களுக்குப் பிடிச்ச வெஜிடபிள் குருமா சப்பாத்தி செய்தேன். கூடவே கொஞ்சம் பொங்கல்,'' என்றாள் புன்னகையுடன்.

''அட்றா சக்கை! அப்ப சரி சரி, சாப்பிடக் குடு!'' என்றபடி அமர்ந்தான். ''நீயும் உட்காரு,'' என்று அருகில் அமர்த்திக் கொண்டு கலாட்டா செய்து கொண்டிருந்தான்.

அவனை இப்படிப் பார்த்திராத ஜெயஜோதிக்கு வியப்பாக இருந்தது. மிகவும் இயல்பாக அவன் பேசுகிற நகைச்சுவை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவன் சுவைத்துச் சாப்பிடுவதை நிறைவாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஹேய்! சாப்பிடறப்ப கண்ணு போடாதே! நீயும் சாப்பிடு!'' என்று அவளையும் சாப்பிடச் செய்தான்.

''நிஜமா, ஜோதி, நல்லா டேஸ்டாப் பண்றே! பரவாயில்லை.. எல்லா விதத்திலும் நல்ல வைஃப்தான்!'' என்று குறும்பாகச் சிரிக்க, அவள் முகம் சிவந்தாள்.

''போதும்! பேசாம சாப்பிடுங்க!'' என்றாள். அவன் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டான்.

''சரி! இப்ப நீ சொல்றதை நான் கேக்கறேன். அப்புறம் நான் சொல்றதை நீ கேக்கணும்!'' என்றான்.

அவள் கேள்விக் குறியாய்ப் பார்க்க, ''இன்னைக்கு நான் லீவ்! ஜஸ்ட் ஒன் அவர் டிரைவ்ல நமக்கு ஒரு தோட்டம் இருக்கு. அங்கே சின்னதா ஒரு வீடும் இருக்கு. அருமையா இருக்கும். போறோம். ஓ.கே?'' என்றான்.

அவள் மறுக்கவில்லை.

அங்கே முற்றிலுமாக வேறொரு சரவணபவனை அவள் பார்த்தாள்.

மகனுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தான் சரவணபவன்.

வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு மகனின் உயரத் துக்குக் குனிந்து பந்தை வீச, குழந்தை அதைத் திருப்பி வீச, பிடிக்க முடியாதவன் போல் கீழே விழுந்து சிரிக்கிற அப்பாவைக் கைகொட்டி ரசித்தான் பிரகாஷ்.

ஜெயஜோதியையும் அழைத்துக் கொண்டார்கள்.

நேற்றே இங்கே வந்து விட்டார்கள். நேரம் மகிழ்ச்சியாகக் கழிந்தது. அவனுக்குத் தன் மனைவியிடம் பேசவும், சீண்ட வும் நிறைய விஷயங்கள் இருந்தன. அர்த்தமேயில்லாமல் சிரித்துக் கொள்வதும், அந்தரங்கம் பகிர்ந்து கொள்வதுமாக இளமை அங்கே ஆட்சி செலுத்தியது. என்றாலும் மாலை யாக ஆக ஜெயஜோதியின் முகத்தில் அவ்வப்போது சிந்தனை ரேகைகள் படிவதைக் கண்டான் பவன்.

''என்ன ஜோதி?'' என்றான்.

''இல்லே... பிரகாஷைப் பாக்காம இருக்க முடியலே...'' என்றாள். கண்கள் கலங்கி விட்டன.

''மக்கு...! இவ்வளவுதானே, இன்னைக்கு நைட் அத்தை யும் மாமாவும் வந்துடுவாங்க... நாளைக்குக் காலையிலே பயல் இங்க இருக்கற மாதிரிப் பாத்துக்கறேன். போதுமா...?'' என்றான்.



''ம்...!'' என்று அவள் மகிழ்ச்சியடைவதை ஆழப் பார்த்தான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் அங்கேயே தங்கிக் கொள்ளலாம் என்று அவன் சொன்னதை அவளும் மறுக்கவில்லை.

சூழ்நிலை ரம்யமாக இருந்தது. சின்னதொரு அழகான வீடு. ஓட்டுக் கட்டிடம் என்றாலும் சுற்றிலும் செடி, கொடிகள் தோப்போடு கூட அழகாக இருந்தது.

அதிகாலையிலே எழுந்து இருவரும் சற்று நேரம் காலார நடந்து விட்டு வந்தார்கள். அவள் மகனைப் பார்க்க வேண்டும் என்று ஆவலுடன் காத்திருப்பதைக் கவனித்துக் கொண்டான்.

அதேபோல சண்முகத்துடன் காரில் வந்து இறங்குவதைக் கண்டதும் ஓடிப்போய் அவனை வாரி அணைத்துக் கொண்டாள் ஜெயஜோதி.

மகனுக்கு முத்தமழை பொழிகிற அவளை அவன் கண்கள் விழுங்கிக் கொண்டிருந்தன.

சண்முகம் இங்கிதம் தெரிந்து உடனே கிளம்பி விட்டார். புறப்படும் போது,

'பரவால்லே... தம்பி... சொந்தத் தாய் கூட இவ்வளவு பாசம் வைக்க மாட்டாங்க...'' என்று அவனிடம் சன்னக் குரலில் சொன்னார்.

''அம்மா... சாமி கும்புத்தோம். ஸ்வீட் சாப்பித்தேன். பலூன் வாங்கித் தந்தாங்க.. பாட்டி!'' என்று அவனுக்குச் சொல்வதற்கு நிறைய இருந்தது.

பிறகு அப்பாவிடம் தாவினான். ''பரவால்லடா... அம்மா வும், மகனும் நான் ஒருத்தன் இருக்கேன்கறதையே மறந் துட்டீங்களோன்னு நினைச்சேன்...'' என்று பகபகவென்று சிரித்தான்.

அவள் முறைத்தாள்.

''ப்பா... இங்க எதுக்கு வந்துருக்கோம்...?'' என்று குழந்தை அப்பாவியாகக் கேட்க.

''இங்கயா? எதுக்குன்னா?'' என்று அவன் ஏதோ ஆரம்பிக்க... அவன் மேலும் இடக்காய்ப் பதில் சொல்லப் போகிறான் எனப் புரிந்து அவள் இடையில் புகுந்தாள்.

''அதுவா... தங்கம்! இங்கே நிறையப் பூ இருக்கு... அது பார்க்க வந்தோம்!''

''ஏன்.... நம்ம வீட்லயும் இருக்குதே!'' என்றான் அவன்.

''அப்படிப் போடு!'' என்று ரசித்துச் சிரிக்கிற கணவனை இரகசியமாய் முறைத்தாள். அவன் அலட்டிக் கொள்ளவில்லை.

''இங்க தோப்பு... இருக்கு பாரு... தென்னை மரம் பாக்கலே?'' என்று மேலும் விளக்கவும் அவன் ஒரு விதமாக ஒத்துக் கொண்டான்..

''சரி... மகனை ஒரு வழியாக் கன்வின்ஸ்... பண்ணிட்டே.... என்னை...?'' என்றான்.

''உங்களையா? நாலு போட்டா சரியாகும்!'' என்று அவள் சிரிக்க, அவன் பார்வை மாறியது.

''ஐயோ... இந்தப் பார்வை சரியில்லே... இது சரிவராது...'' என்று அவள் நகர்ந்தாள்.

''அப்பா... இத பாருப்பா...'' என்ற மகனின் குரல் கேட்டு அவன் கவனம் மாறியது.

**நா**ன்கு நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டதற்கும் சேர்த்து அவனுக்கு வேலையிருந்தது.

அடுத்த இரண்டு நாட்களும் இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் வந்தான்.



அன்றைக்கு வரும்போது டெக்ஸ்டைல் யூனிட்டுக்குப் பெரிய ஆர்டர் ஒன்று கிடைத்திருக்கிறது என்று மகிழ்ச்சியாக வந்தான்.

அந்த வாரத்தில் முக்கிய நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

சரவணபவனின் அண்ணன் சிவஹரிபவனுக்கு நினைவு நாள் வந்தது. சடங்குகள் செய்ய வேண்டியிருந்தது. ஊருக்குச் செல்ல வேண்டுமென்று அவளையும் மகனையும் அழைத்துக் கொண்டு போனான்.

வீட்டளவுக்குச் செய்தார்கள்.

ஐயர் வீட்டுக்கே வந்து விட்டார். சடங்குகள் நடக்கையில் திதி கொடுப்பதற்குச் சரவணபவன் அமர்கையில் மகனையும் மடியில் அமர்த்திக் கொண்டான்.

ஜெயஜோதி திடுக்கிட்டுப் போனாள். ஆனால் எதுவும் சொல்ல முடியவில்லை.

குழந்தையின் கையால் சடங்குகள் செய்ய வைத்ததைப் பார்த்த போது மேலும் திகைத்தாள்.

சடங்குகள் முடிந்து உணவு மட்டும் தோட்டத்து வேலையாட்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. முத்து லட்சுமியிடம் பேசலாம் என்று போனாள். அவரே முகம் வாடி இருந்தார்.

மகனின் நினைவு வந்துவிட்டது எனப் புரிந்து கொண்டு ஒதுங்கிக் கொண்டாள். முகம் வாடி இருந்தாள்.

அன்று இரவு வரைக்கும் கூடச் சரவணபவன் படு பிஸியாக இருந்தான்.

இரவுதான் அவர்கள் அறைக்கு வந்தான். ஜெயஜோதி குழந்தையை உறங்க வைத்து விட்டுப் படுக்கையில் பேருக்கு ஏதோ ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அறைக்கு வந்த பவன் -

''அப்பாடா! ஒரு வழியா எல்லாம் முடிஞ்சுது!'' என்றபடி கட்டிலில் கால் நீட்டி அமர்ந்தான்.

ஜெயஜோதி ஒன்றும் பேசவில்லை. மீண்டும் அவன் பேச ஆரம்பித்தபோது அவன் குரலில் எல்லையற்ற வேதனை இருந்தது.

''ஜோ! மூணு வருஷம் முன்னாடி வரைக்கும் நானும் சிவாவும் எப்பவும் ஒண்ணா இருப்போம். ஆனா... இன்னைக்கு அவன் இல்லை. சில நேரம்... வாழ்க்கையை நினைச்சா... கோபமா...வருது... பொம்மலாட்டம்... மாதிரி... ஆடறோம் இல்லே!'' என்றான்.

அவள் மௌனமாகத் தலையாட்டினாள்.

''பயல் தூங்கிட்டானா?'' என்றான்.

''ம்... தூங்கிட்டான்,'' என்றாள் சன்னக் குரலில்.

''ஹேய்...! இங்க வா... பக்கத்துல கொஞ்ச நேரம்... அம்மாவுடைய கருணை கிடைச்சா... எல்லாத் துக்கத்தையும் மறக்கலாம்...'' என்றான். அருகில் இழுத்தான்.

அவள் தடுக்கவில்லை ஆனால் சட்டென்று அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு கேவிக் கேவி அழுதாள்.

அவன் சில நிமிடங்கள் திகைத்துப் போனான்.

''ஹேய்! ஜோ! என்ன ஆச்சு? சொல்லு...'' என்று திரும்பத் திரும்பக் கேட்டான்.

அவள் பதிலே சொல்லாமல் மேலும் மேலும் அழுதாள்.

''என்னடா... அக்கா.... ஞாபகம் வந்துடுச்சா?'' என்றான்.

அவள் இல்லையென்று தலையாட்டினாள்.

''என்னடா... என்ன விஷயம்? சொன்னாத்தானே... தெரியும்...'' என்றான் ஆதரவாக அவள் தலையைக் கோதியபடி.



''ஏன்... ஏன்.. அப்படிச் செஞ்சீங்க?'' என்றாள் கேவியபடி.

''எப்படி...?'' என்றான் புரியாதவனாய்.

''பிரகாஷை... குழந்தையை...''

''ம்... சொல்லு...''

''அவனை எதுக்கு சடங்கு செய்ய வச்சீங்க? அதுவும் நீங்க... நல்லா... இருக்கும் போது...'' என்று முகம் நிமிர்த்தி வேகமாகக் கேட்டாள்.

''ஓ...!'' என்று அவன் திகைத்துப் போனான். சற்று நேரம் மௌனம் சாதித்தான்.

''உங்களுக்கு... உங்களுக்கு... ஏதாவது ஆச்சுன்னா... ஐயோ... நினைக்கவே முடியலையே... ஏன் அப்படிச் செஞ்சீங்க...'' என்று மீண்டும் வெடித்து அழுதாள்.

தன் மார்பில் புரண்டு அழுகிற மனைவியை அவன் ஒரு விதமான கையாலாகாத்தனத்துடன் பார்த்தான். முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

வெகு நேரம் எதுவும் பேசவில்லை. பிறகு மெதுவாக அவளிடம் இருந்து விலகி எழுந்து ஜன்னலைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அந்த நேரம் அவன் முகத்தில் இருந்த எல்லையற்ற வேதனையை அவள் பார்க்கவில்லை.

சற்று நேரம் கழித்து நீண்டதொரு பெருமூச்சு விட்டபடி அவன் திரும்பினான்.

''ஜோ! அண்ணன் சின்ன வயசிலே போயிட்டான். அவனுக்கும், ஒரு குழந்தையிருந்திருந்தா கதை வேற. ஆனா, இப்பக் குடும்பத்துக்கு இவன்தானே வாரிசு. ஐயர்கிட்டே கேட்டுட்டுத்தான் செஞ்சுது,'' என்றான்.

அவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். ''அதனாலே... உங்களுக்கு... ஏதும் பாதிப்பு?'' என்று

தொடரவே, அஞ்சியவள் போல் நிறுத்தினாள். அவன் வேகமாய் நெருங்கி அணைத்துக் கொண்டான்.

''ஜோ! அப்படியெல்லாம் எனக்கு எதுவும் வராது. வேணுங்கற துக்கம் நான் ஏற்கெனவே அனுபவிச்சாச்சு. இனி... நமக்கு எதுவும் ஆயிடாது. எது முறையோ... எது நியாயமோ... அதைத்தான் செஞ்சிருக்கு... போதுமா?'' என்றான்.

அவள் அமைதியானாள். ஆனால் முழுவதும் சமாதான மாகி விடவில்லை என்பது புரிந்தது.

''ஜோ! உங்க அம்மாகிட்டேயும் பேசி அவங்க ஆலோசனை யும் வாங்கிகிட்டுத்தான் செஞ்சேன். அவங்களும் ஒண்ணும் மறுக்கலே...!'' என்றான்.

அவள் ஓரளவு சமாதானமானாள். பிறகு மெல்லிய குரலில் சொன்னாள்.

''சாரி, பவன்... நீங்க மனசு வேதனையில் இருக்கும் போது, நான் இப்படியொரு பிரச்சினையைக் கிளப்பி...''

''பரவால்லே பரவால்லே. உன்னோட பயமும் நியாய மானதுதான்...'' என்று விஷயத்தை லேசாக்கி விட்டான்.

ஆனால், கொஞ்ச நேரத்துக்கு முன் ஆசையாய் அருகில் நெருங்கியவன் அதற்குப் பிறகு சற்றே விலகி விட்டான்போல் தோன்றியது. தான் ஏதும் தவறு செய்து விட்டோமோ என்று லேசான அச்சம் அவளுக்குள் தோன்றியது.

இன்னொன்றும் அவளுக்கு அன்று புரிந்தது. எப்போதும் அவன் அண்ணனைப் பற்றிப் பேசினாலே சுருங்கி விடுகிறான் என்பது.

அவள் கேள்விக் குறியாய் அவன் முகம் பார்க்க... 'வேணாம்டா... தூங்கு... நீயும் டயர்டாயிருக்கே!'' என்று தட்டிக் கொடுத்து அவளை உறங்கச் செய்து விட்டான்.

அவன் வெகு நேரம் உறங்கவில்லை.



## 13

இரவு மணி பதினொன்றரையாகி விட்டது.

இன்னமும் சரவணபவனைக் காணவில்லை. குழந்தையும் உறங்கி விட்டான். ஜெயஜோதிக்கும் உறக்கம் வரவில்லை.

களைத்துப் போய் வந்தவனுக்கு மௌனமாய் உணவு பரிமாறிச் சாப்பிடச் செய்தாள். இப்போது பேச்சுக் கொடுப்பது நல்லதல்ல என்று அவள் உள்மனது சொன்னது. பேசாமல் பணிவிடைகள் செய்தாள்.

அவன் எதையும் கண்டு கொள்ளவில்லை. அடித்துப் போட்டாற் போல் உறங்கினான். ஆனால் அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து புறப்பட்டுப் போய்விட்டான்.

பிற்பகல் செல்லில் அழைத்து, ''எங்கே இருக்கிறீங்க? நான் சாப்பாடு கொண்டு வரட்டுமா?'' என்றாள்.

''வேண்டாம் ஜோ. சாதத்தை நல்லாப் பிசைஞ்சு குழம்போ மோரோ எதையோ ஊற்றி டிஃபன் பாக்ஸில் போட்டு டிரைவர்கிட்டே குடுத்தனுப்பு. மறக்காம ஸ்பூன் போட்டுக் குடுத்தனுப்பு!'' என்று ஆஃப் செய்து விட்டான்.

அவளுக்குக் கோபம் பொங்கியது. யாருக்குப் பணம் சேர்க்க இப்படி உழைக்கணும் என்று.

இப்படித்தான் அக்காவை வறுத்திருப்பானோ? அக்கா இயல்பில் ரொம்ப மென்மையானவள். யாராவது அவளைத் தாங்கிக் கொண்டு இருக்க வேண்டும் என்று நினைப்பாள். இந்த மாதிரி அலட்சியத்தை யெல்லாம் அவளால் ஜீரணித்திருக்கவே முடியாது.

அன்று மாலையானதும் அவளுக்கு இருப்புக் கொள்ள வில்லை. குழந்தையை எடுத்துக் கொண்டு அம்மா வீட்டுக்குப் போய் வந்தாள். பத்து மணிக்குத்தான் வந்தாள்.

மகன் வேறு, ''அப்பா... எங்கேம்மா? எப்பம்மா வருவார்?'' என்று நச்சரித்தான். அந்தக் கோபத்தில் அவனை ஃபோனில் அழைத்து,

''வீடுன்னு ஒண்ணு இருக்கு. நினைப்பிருக்கா இல்லையா?'' என்றாள்.

அந்தப்புறம் இதை எதிர்பாராமல் அவன் ஒரு நிமிடம் மௌனம் சாதித்தான். பிறகு, ''ஜோ!'' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்க. அவள் மேலும் கடுப்பாகி,

''ஒண்ணும் சொல்ல வேண்டாம். முக்கியமான வேலைம் பீங்க... வேறென்ன சொல்வீங்க?'' என்றாள்.

அவன் சற்றே எரிச்சலானான்.

''தெரியுதில்ல... அப்புறம் எதுக்கு ஃபோன் செய்யறே. எப்ப வரணும்னு எனக்குத் தெரியும். நீ சித்த வை ஃபோனை,'' என்றான். ஆஃப் செய்து விட்டாள்.

அன்றைக்கும் பதினோரு மணிக்கு மேல்தான். ஆனால், வலுக்கட்டாயமாக உறக்கம் வரவழைத்துக் கொண்டு அவள் உறங்கியிருந்தாள். அவன் அவளை எழுப்பவில்லை.

அவன் உடைமாற்றிக் கொண்டு போய் வேலையாட்களைப் பரிமாறச் செய்து சாப்பிட்டு விட்டு உறங்கி விட்டான்.

காலையில் ஐந்து மணிக்கே கலகலவெனச் சிரிப்புச் சத்தம் கேட்டு, அவள் விழித்தாள். அந்த நேரத்தில் பிரகாஷுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தான் சரவணபவன்.

அவளைக் கண்டு கொள்ளவேயில்லை.



''சரிடா... தங்கம்... அப்பா... ஃபாக்டரிக்குப் போகணும். நீ தூங்குவியாம்... என்ன?'' என்று அவனைப் படுக்கச் செய்து விட்டுக் கிளம்பி விட்டான்.

நேற்று அவன் கோபம் காட்டியதாலோ என்னவோ இன்று அவனிடம் பேசவே அவளுக்கு அச்சமாய் இருந்தது. மௌனமாகவே பணிவிடை செய்தாள். 'வரேன் ஜோ!' என்று தலையசைத்துக் கிளம்பி விட்டான்.

அவன் கிளம்பிப் போனதற்குப் பிறகு அவளுக்கு அழுகை பொங்கிப் பொங்கி வந்தது. தான் என்ன கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டு விட்டோம் என்று இப்படி விலகி விலகி ஓடுகிறான்.

அவளுக்குத் தலையே வெடித்து விடும் போல் இருந்தது. பேசாமல் மகளிர் சங்கத்துக்காவது மகனை அம்மா வீட்டில் விட்டு விட்டுப் போகலாம் என்று கிளம்பினாள்.

அங்கே போனால் ஒரே கணவன், மனைவி பிரச்சினையாக விவாதம் நடந்து கொண்டு இருந்தது. இதேதடா தலைவேதனை என்று வீட்டுக்கே வந்து விட்டாள்.

தலைவலித் தைலத்தை எடுத்துத் தேய்த்துக் கொண்டு சற்றும் நேரம் உறங்கினாள். எப்போது இருட்டியதோ தெரிய வில்லை.

''அம்மா... என்ன இப்பப் போய் தூங்கறே? தூங்குமூஞ்சி'' என்று மகன் கை கொட்டிச் சிரிக்கிற சத்தம் கேட்டது. கனவு என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், உண்மையாகவே தன்னை மகன் உலுக்குவதைக் கண்டு விழித்தாள்.

''குட்டி.... தங்கம்ஸ்...நீ எப்படா வந்தே?'' என்று கேட்க, மகன் இடப்புறம் கை நீட்டினான். பவன் நின்று கொண் டிருந்தான்.

''என்னடா, உங்க அப்பாவுக்கு இன்னைக்காவது நேரம் கிடைச்சுதா?'' என்றாள் தூக்கக் கலக்கத்தில்.

‘‘ஹேய்! நான் இப்ப சண்டை போடற மூடில் இல்லை. எழுந்திரு, புறப்படு... எங்காவது போயிட்டு வரலாம்,’’ என்று சமாதானக் கொடி பிடிக்கிற கணவன் முகம் பார்த்து அவள் ஒன்றும் பேசாமல் கிளம்பினாள்.

பார்க்குக்கு அழைத்துப் போனான். குழந்தையைச் சற்று நேரம் விளையாட விட்டு விட்டுப் பிறகு அந்தப் புகழ் பெற்ற ஹோட்டலுக்கு அழைத்துப் போனான்.

மிகக் குறைவான வெளிச்சத்தில் ஏ.சி. அறையில் அவளிடம் இழைந்து கொண்டு நகைச்சுவை பேசிச் சிரிக்கச் செய்தான். பிறகு மெதுவாகப் பேச்சினூடே,

‘‘ஜோ! நமக்குப் பெரிய எக்ஸ்போர்ட் ஆர்டர் ஒண்ணு கிடைச்சிருக்கு. இது முதல் முறையா இருக்கறதுனால நானே பக்கத்தில் இருந்து பார்க்க வேண்டியிருக்கு. ரெகுலர் ஆர்டர் கிடைக்கிற மாதிரி ஆயிடுச்சுன்னா. இன்னொரு யூனிட் போட்டர்லாம். அப்பச் சரியா ஆளுங்க போட்டர்லாம். நீயே கூட வர வேண்டியிருக்கும். அந்த வொர்க்னாலதான் லேட்... ஆயிருது...’’ என்றான்.

‘‘ஓ...!’’ என்றாள் இரங்கிய குரலில். தனது தாமதத்துக்கு அவன் தன்னிலை விளக்கம் அளிப்பது புரிந்தது. தன் பங்குக்குத் தயங்கிய குரலில் -

‘‘நான்... நான்... உங்களுக்கு ஏதோ கோபம்னு... நினைச் சுட்டேனே...’’ என்றாள்.

‘‘உன்மேலயா... கோபமா? நீ என் வாழ்க்கையில் வந்த வசந்தமாச்சே! கோபப்படுவேனா?’’ என்றான்.

‘‘ஐயோ! போதுமே... டயலாக்...’’ என்று சிரித்தாள். பிறகு சற்றும் யோசிக்காமல் யதார்த்தமாக -

‘‘நான்... வசந்தம்... அப்ப... எங்கக்கா... சிவஜோதி... என்னவாம்?’’ என்றாள்.



அவன் ஒரு விநாடி திகைத்து விட்டான். தான் வேளை கெட்ட வேளையில் அபத்தமாக ஒரு வாக்கியத்தைச் சொல்லி விட்டோம் என்பது புரிந்தது. இறந்து போனவளைப் பற்றி இப்போது பேச்சு எடுத்திருக்கக் கூடாது என்பது புரிந்து போய் அவன் முகத்தைத் திகைத்துப் போய்ப் பார்த்தாள். ஆனால், அவன் சட்டென்று சிரித்துச் சூழ்நிலையைச் சகஜமாக்கினான்.

‘‘உங்கக்கா... வசந்தத்துக்கு முன்னால... வீசின... தென் றல்ன்னு... வச்சுக்கலாமா?’’ என்றான். இருவரும் செயற்கை யாகச் சிரித்துக் கொண்டார்கள். சூழ்நிலையை மாற்ற அவன் வெயிட்டரை அழைத்து ஏதோ ஆர்டர் செய்தான். பேச்சை மாற்றினான்.

குழந்தைக்குப் போர்வையை நன்றாகப் போர்த்து விட்டுத் திரும்பினாள் ஜெயஜோதி.

அருகில் நெருங்கி நின்றான் பவன். ‘‘ஹேய்! தேவியார் வரம் கொடுத்து ஒரு வாரமாச்சு!’’ என்று கெஞ்சலாகப் பேசவும் அவள் இதழ்களில் புன்னகை விரிந்தது.

அவன் அரவணைப்பில் உலகம் மறந்தாள். ஆனால், அவன் உறங்கியதற்குப் பிறகு அவள் வெகு நேரம் யோசித் துக் கொண்டு படுத்திருந்தாள்.

கணவன் எப்போது சிவஜோதியின் பேச்சை எடுத்தாலும், விரும்புவதில்லை என்று அவளுக்குத் தோன்றியது.

அக்காவுடன் ஒரு வருடம் வாழ்ந்திருக்கிறான். அவள் இவன் வாரிசைச் சுமந்திருக்கிறாள். ஆனால், அவளை நினைக்கவும் மறுக்கிறானே, இயல்பாக ஒரு நேரம் கூட உங்கக்கா அப்படிச் செய்வா... இப்படி இருப்பா... என்ற பேச்சே கிடையாது.

சிவஜோதியைப் பற்றிய எந்த விஷயத்தையும் பகிர்ந்து கொண்டதும் கிடையாது. ஏன் தன் வாழ்க்கையின் அந்தக்

கதவை மூடிக் கொள்கிறார்? விடக்கூடாது. கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

எல்லா ஆண்களும் இப்படித்தானோ? ஒரு வேளை தனக்கே ஏதாவது ஆனாலும் நாளைக்கு இப்படித்தான் மறக்க விரும்புவானோ... என்று ஏதேதோ எண்ணங்கள் தோன்றியது. சேச்சே! அப்படியெல்லாம் இல்லை. அக்கா வும், அவரை... ஏதோ விஷயத்தில் காயப்படுத்தியிருக்கிறாள் என்ற எண்ணம் தோன்றியதும் ஓரளவு தேறிக் கொண்டாள்.

ரொம்பவும் அனலைஸ் செய்ய வேண்டாம். வருகிறதை வருகிற விதத்தில் எதிர்கொள்வோம் என்று எண்ணியபடியே உறங்கினாள்.

மறுநாள் காலை!

அவன் சற்று நிதானமாகக் கிளம்பினான்.

''இன்னைக்குச் சுதாகரைப் பாத்துக் கொள்ளச் சொல்லி யிருக்கேன்,'' என்றான். பிறகு, ''ஆனா... ஈவ்னிங் லேட்டாகும்!'' என்றான்.

''ஐயோ! ரொம்பப் போரடிக்கும்!'' என்று அவள் சிணுங் கினாள்.

''ஒரு வாரம் பொறுத்துக்க... காம்பன்ஸேட் பண்ணீரலாம்!'' என்று சிரித்தான்.

அவள் கண்டு கொள்ளாதவள் போல், ''பேசாம... மாடியில் இருக்கிற ரூம்ல இருக்கற ஃபர்னிச்சர் எல்லாம்... மாத்தி அரேன்ஜ் பண்ணட்டுமா?'' என்றாள் ஆர்வமாக.

''வேண்டாம்... விட்டுடு... பாவம்... பிழைச்சுப் போகட் டும்...'' என்று வெடிச் சிரிப்புச் சிரித்தான்.

அவள் செல்லமாகக் கோபித்துக் கொண்டு அவன் தலையில் எட்டி ஒரு குட்டு வைத்தாள்.



''இப்படி எம்பி எம்பிக் குட்டு வைக்கலேன்னு யார் கேட்டா?'' என்று மறுபடியும் சிரித்தான். அவன் நல்ல மூடில் இருப்பதைப் புரிந்து கொண்டு.

''சரி... அப்ப அக்கா ரூம்... சாவியைக் கொடுங்க... நான் அந்த ரூமையாவது கிளீன் பண்றேன்...'' என்றாள்.

''வேண்டாம்... ஜோ! வேற - ஏதாவது வேலை இருந்தாப் பாரு...'' என்றான்.

'ஏன்?' என்றாள் பிடிவாதமாக.

''வேண்டாம்ன்னா... விடு...'' என்றான். பிறகு தொடர்ந்து -

''என்ன... எப்பப் பாரு... உங்க அக்காவைப் பத்தின பேச்சி லயே வந்து நிக்கறே!'' என்று எரிந்து விழுந்தான். இதுவரை இல்லாத விதமாக அவளும் கோபமாகப் பதில் சொன்னாள்.

''ஏன்? நீங்க... ஏன்... அவளைப் பத்தின பேச்சையே பேசக் கூடாதுங்கறீங்க?'' என்றாள்.

''அது அப்படித்தான்...'' என்றான் பிடிவாதமாக.

''அப்ப... எனக்கு... ஏதாவது... ஆனாக்கூட இரண்டே வருஷத் துல... மறக்கத்தான்... நெனப்பீங்க... இல்லே?'' என்றாள்.

அவள் சற்றும் எதிர்பாராத விதமாக அவன் அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

''என்னடி... பேசறே? நீ...?''என்றான். அவள் கன்னத்தைப் பிடித்தபடி மலங்க விழித்தபடி நின்றாள்.

அடுத்த கணம் அவன் முகம் மாறியது. மென்மையானான். அருகில் இழுத்தான்.

''ஹேய்... ஐ...ம்... சாரி... ஆனா... நீயும்... இனியொரு தடவை... அப்படிப் பேசாதே... போதும்... இழப்புகள்... போதும்... இனித் தாங்காது... இனி யாரையும்... இழக்க எனக்குத் தெம்பில்லை!'' என்றான் உருக்கமான குரலில்.

அவளும் இளகி விட்டாள். சற்று நேரம் அவன் பிடியில் நின்றாள். அவனே தொடர்ந்தான்.

‘‘வேண்டாம்... விட்ரு.... அந்த ரூமை எனக்கு டைம் இருக்கும்போது நானே கிளீன் பண்ணிக்கறேன். உனக்கு உங்கக்கா... ஞாபகம்... வந்தா... ரொம்பக் கஷ்டப்படுவே...’’ என்றான்.

அவள் மௌனம் சாதித்தாள். பிறகு, ‘‘நீங்க... உங்களையே ஏமாத்திக்கப் பாக்கறீங்க... பவன். அக்கா... வாழ்ந்தது நிஜம்... நாம வருத்தப்படறதும்... இயற்கைதான்... நீங்க... அவள் இருக்கவே இல்லைங்கற மாதிரி ஒரு செயற்கையான கற்பனையை வளர்த்துக்கறீங்க...’’ என்றாள் அழுத்தமான குரலில்.

அவன் முகம் இறுகியது அவன் நின்று அவளைப் பார்த்தான். பிறகு, ‘‘பாரு... ஜோ! நீ எப்படிப் பேசினாலும்... என்னோட ஸ்டாண்ட்... இதுதான்!’’ என்றான்.

வேகமாகப் போய் விட்டான்.

அவள் அவன் போன பாதையைப் பார்த்துக் கொண்டு நின்றாள். ஆனால், மனதுக்குள் அழுத்தமான ஒரு தீர்மானம் செய்து கொண்டாள்.

## 14

ஒரு வாரம் கழிந்திருக்கும்.

அந்த ஒரு வாரத்திலும் அவர்கள் இருவரும் சிவஜோதியைப் பற்றிப் பேசிக் கொள்வதை முற்றிலும் தவிர்த்து விட்டார்கள். அதனால் எல்லாம் இயல்பாய்ப் போய்க் கொண்டிருந்தது.



சரவணபவன் இரண்டு, மூன்று நாட்கள் வரை அவள் முகத்தை முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் இரவு உணவு உண்ணும்போது, ‘‘ஆமாங்க, அத்தான்... நீங்க சொல்றதுதான் சரி.. எதுக்குக் கடந்த காலத்தை வைத்துக் கொண்டு நமக்குள் பிரச்சினைகள்?’’ என்றாள்.

‘‘புரிஞ்சுகிட்டியே, பரவாயில்லை,’’ என்பது போல் பார்த்து விட்டுப் பரிவாகப் புன்னகைத்தான்.

ஆனால், ஜெயஜோதிக்குள் ஒளிந்திருக்கிற இன்னொரு ஜெயஜோதியை அவன் புரிந்து கொள்ளவில்லை. ஏன்? அவளே புரிந்து கொள்ளவில்லை.

அன்றைக்கு வெள்ளிக் கிழமை.

பரபரப்பாக வந்தான்.

‘‘ஜோ! நான் உடனே மும்பை கிளம்பறேன். இந்தத் தடவை நாம அனுப்பிச்ச சரக்கு... அந்தக் கம்பெனிக்குப் பிடிச்சுப் போச்சு. பர்மனென்ட்... கான்ட்ராக்ட்... போடலாங்க றானுங்க... நான் வர ரெண்டு மூணு நாளாகும்,’’ என்றவன், ‘‘ஹேய்! நீயும் வர்றியா?’’ என்றான்.

அவள் ஒரு நிமிடம் யோசித்தாள்.

‘‘வேண்டாம்...பவன்... இந்தத் தடவை நீங்க போங்க... நீங்க அங்கே மீட்டிங்ல இருப்பீங்க... நான் ஹோட்டல்ல வெட்டியா பொழுது போக்கணும். நமக்காகவே இன்னொரு தடவை போலாம்... என்ன?’’ என்றாள்.

அதுவும் சரிதான் என்று ஒத்துக் கொண்டான்.

அன்றிரவு சரவணபவன் கிளம்புவதாக ஏற்பாடு.

சரவணபவன் எப்போதும் முக்கியமான சாவிகளை மட்டும் தன் பொறுப்பிலேயே வைத்திருப்பான்.

இரண்டு நாட்களுக்கு முன்பு மாடிக்கு யதேச்சையாகப் போவது போல் போன ஜெயஜோதி பூட்டப்பட்டிருந்த

அறையின் பூட்டு எண்ணை மட்டும் குறித்து வைத்துக் கொண்டு மனப்பாடம் செய்து கொண்டாள்.

பவன் சற்றே அஜாக்கிரதையாக இருக்கிற தருணத்தை எதிர் நோக்கி இருந்தாள் அதே போல இரவு புறப்பட வேண்டுமே யென்று பாக்கிங் செய்து கொண்டிருந்தவன் திடீரென்று நினைவு வந்தவனாக,

''ஜோ! நீ பாக்கிங் முடிச்சுடு. ஒரு முக்கியமான பேப்பரை ஆஃபீஸ்ல மறந்து வச்சுட்டேன். எடுத்துட்டு வந்தர்றேன்,'' என்று அவசரமாகக் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

அவன் புறப்பட்டுப் போன இரண்டு மூன்று நிமிடங்களுக் கெல்லாம் அவள் அவன் கைப்பையை எடுத்துப் பார்த்தாள். அதில் இதுவரை அவர்கள் இருவருக்கும் நடுவேயான கண்ணாமூச்சி விளையாடலுக்குக் காரணமாய் இருந்த அந்தச் சாவி அவளைப் பார்த்துச் சிரித்தது.

ஒரு சோப் கட்டியை எடுத்துக் கவனமாக அதைப் பதிந்து கொண்டாள். பிறகு அந்தச் சாவியைச் சுத்தமாகக் கழுவி நன்றாகத் துடைத்து இருந்த இடத்திலேயே வைத்து விட்டாள்.

இப்படி யெல்லாம் செய்ய வேண்டுமா என்ன என்ற எண்ணம் உள்ளே ஓடிக் கொண்டேயிருந்தது. ஆனால், அவன் மட்டும் ஏன் அந்த அறையைத் திறக்கக் கூடாது என்று நிபந்தனை விதிக்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது.

சிறுவயதிலேயிருந்தே ஜெயஜோதியின் சுபாவம் அப்படி. எந்த ஒரு விஷயத்தையும் அலசிப் பார்ப்பாள். எந்த ஒரு விஷயத்தையும் செய்யக் கூடாது என்றால் ஏன் செய்யக் கூடாது என்பதற்கான காரணம் அவளுக்குச் சொல்லப்பட வேண்டும்.

நயமான வேண்டு கோள்களுக்குப் பணிவாள். பயமுறுத்தல் களுக்கு அஞ்ச மாட்டாள். எதிர்த்து நிற்பாள். அதனாலேயோ



என்னவோ சரவணபவன் மறைக்கிற மாதிரி அந்த அறையில் என்னதான் இருக்கிறது என்று பார்க்க வேண்டும் என்று... பிடிவாதமாக எண்ணினாள்.

சரவணபவன் இவள் இப்படியெல்லாம் செய்யக் கூடும் என்று எதிர்பார்க்காததாலோ என்னவோ, அவன் எதையும் நினைக்கவில்லை. ஒரே ஒரு முறை எல்லாம் சரியாய் இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

இந்தப் பிரச்சினை ஒருபுறம் இருந்தாலும், ''ஹேய்! மூணு நாளைக்கு உன்னப் பாக்காம இருக்கணும். இந்தப் பயலைப் பாக்காம இருக்கணும்!'' என்று தன் தாபத்தை அவளிடம் கொட்டிய போது அவள் இளகி விட்டாள்.

''ஆமா... எனக்கும் கஷ்டந்தான். இப்படியெல்லாம்... ஓடி... ஓடி... யாருக்குச் சம்பாதிக்கணும்? இருக்கறது... போதாதா?'' என்றாள் மனத் தாங்கலுடன்.

''இல்லே... ஜோ... பணத்துக்காக மட்டுமில்லே... ஒரு சாலன்ஜுக்காக... எத்தனை பேருக்கு வேலை குடுக்க முடியும் தெரியுமா? அது மட்டுமில்லே, ஒவ்வொருத்தரும்... தங் களாலே எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்யணும். ஜோ! என்னாலே இது முடியுது. வாய்ப்பும் கிடைக்குது.,.. இல்லே...? அதைப் பாக்கணும்,'' என்றான்.

''சரி... சரி...'' என்று அவள் சிரித்துக் கொண்டே, அவன் தாபம் தீர்த்து அனுப்பி வைத்தாள்.

அவன் புறப்பட்டுப் போனபிறகு பெரியப்பாவிடம் போய் வீடே வெறிச்சோடிப் போன மாதிரி இருக்கு என்று புலம்பினாள். அவர் மென்மையாகச் சிரித்தார்.

''நீயும் கூடப் போயிருக்கலாமே அம்மா?'' என்றார்.

''ஆமா... போயிருக்கலாம். இல்லே? அவரு கூடக்கூப்பிட் டாரு!'' என்று தனக்குத் தானே நொந்து கொள்வதைப் பார்த்து, வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டார்.

மறுநாள்

காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். பூட்டு சாவி ரிப்பேர் கடையைத் தேடிப் பிடித்தாள்.

கடைக்காரரிடம் சொல்லி அருகிலேயே இருந்து டூப்ளி கேட் சாவி தயாரித்துக் கொண்டு வந்தாள்.

இதெல்லாம் செய்கையில் உள்ளுக்குள்ளே ஏதோ திரில்லர் மாதிரி இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், இன்னொரு மனது சொன்னது.

வேண்டாம்... ஜோ, பவன் ஒரு விஷயத்தை வேண்டாம் என்று சொன்னால் ஏதோ ஒரு காரணத்தோடுதான் சொல்வார். நேரம் வரும் போது தெரிய வேண்டிய விஷயங்கள் தானே தெரிந்து விட்டுப் போகட்டும் என்று நீ இருந்து கொள்வது நல்லது என்று சொல்லிக் கொண்டே இருந்தது.

இதுவரையிலும் தனக்கு அவன் எந்தக் குறையும் வைக்க வில்லை. அன்பைப் பொழிகிறான். ஆசையாய் இருக்கிறான். தன் மேல் காதல் வைத்திருக்கிறான். இன்னும் என்ன வேண்டும் என்றும் தோன்றியது.

அவனது வழக்கமான இன்னொரு மனது கேட்டது. எல் லாம் சரிதான். ஏன், அக்காவைப் பற்றி மட்டும் பேச மறுக் கிறான்? அவள் அப்படித் தன்னையே மாய்த்துக் கொள்கிற அளவுக்கு என்ன நேர்ந்தது என்று புரிந்து கொள்ள வேண்டாமா? ஒருவேளை... ஒருவேளை.... அவள் விஷயத் தில் ... ஏதா... பிசகு நடந்திருக்கிறது... அது... வெளிவரக் கூடாது... என்பதற்காகவே... ஹுஷ் அப் செய்வதற் காகவே... தன்னை நன்றாக வைத்துக் கொள்கிறாரோ. என்னவோ... எல்லாவற்றையும் ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டியது அவசியமில்லையா என்றும் கேட்டது.

உறுதியாக மேலே தொடர வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், தன் சொந்த வீட்டிலேயே



வேவு பார்ப்பது என்பது எவ்வளவு கொடுமையானது என்றும் அவளுக்குப் புரிந்தது.

ஆழமாக ஒரு பெருமூச்சு விட்டாள். வேறு வழியில்லை... என்று முடிவு செய்து கொண்டாள்.

இரவு பதினோரு மணிக்கு மேல் அழைத்தான்.

''ஹேய்... ஜோ!'' என்ன பண்ணிகிட்டிருக்கே? என்றான்.

''என்ன, பண்றது? போர் அடிச்சுக்கிட்டிருக்கேன்!'' என்றாள். ''அங்கே எப்படி? எல்லாம் நல்ல படியாய் முடிஞ்சுதா?'' என்றாள்.

''ஃபர்ஸ்ட் ரவுண்ட்... டாக்ஸ்... முடிஞ்சுது. இனி நாளைக்கு... டர்ம்ஸ்... ஃபைனலைஸ் செய்ய வேண்டியதுதான். ஆனா... கெட்டிக்காரனுங்க... ஜோ... அவ்வளவு சீக்கிரம் பிடி கொடுக்க மாட்டேன்கறானுங்க... நானும் விடறதாயில்லை!'' என்று சிரித்தான்.

''இங்கேயும்... அப்படித்தான்!'' என்று எண்ணிக் கொண்டாள்.

''ஹேய்! தூக்கமே வரமாட்டேங்குது. பேசாம நாளைக்கு... நீ... வந்துடேன்...'' என்றான்.

''பிஸினஸை ஸக்ஸல் ஃபுல்லா முடிச்சுட்டு வாங்க. நான் எங்கே போயிடப் போறேன்?'' என்றாள்.

''புரிஞ்சுக்கவே மாட்டியா நீ?'' என்று முணுமுணுத்து விட்டு ஃபோனை ஆஃப் செய்தான்.

அவள் சிரித்துக் கொண்டாள். அவன் தவிப்பு அவளுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. ஆனால் பிரிவின் வேதனை அவளை யும் தாக்கியிருந்தது. சற்று நேரம் அமைதியாய்க் கழித்தாள். பின் படுக்கைக்குப் போனாள்.

அடுத்த நாள்... தனக்கு என்ன வைத்திருக்கிறதென்பதை அறியாமல்.

மறுநாள்

காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். பூட்டு சாவி ரிப்பேர் கடையைத் தேடிப் பிடித்தாள்.

கடைக்காரரிடம் சொல்லி அருகிலேயே இருந்து டூப்ளி கேட் சாவி தயாரித்துக் கொண்டு வந்தாள்.

இதெல்லாம் செய்கையில் உள்ளுக்குள்ளே ஏதோ திரில்லர் மாதிரி இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், இன்னொரு மனது சொன்னது.

வேண்டாம்... ஜோ, பவன் ஒரு விஷயத்தை வேண்டாம் என்று சொன்னால் ஏதோ ஒரு காரணத்தோடுதான் சொல்வார். நேரம் வரும் போது தெரிய வேண்டிய விஷயங்கள் தானே தெரிந்து விட்டுப் போகட்டும் என்று நீ இருந்து கொள்வது நல்லது என்று சொல்லிக் கொண்டே இருந்தது.

இதுவரையிலும் தனக்கு அவன் எந்தக் குறையும் வைக்க வில்லை. அன்பைப் பொழிகிறான். ஆசையாய் இருக்கிறான். தன் மேல் காதல் வைத்திருக்கிறான். இன்னும் என்ன வேண்டும் என்றும் தோன்றியது.

அவனது வழக்கமான இன்னொரு மனது கேட்டது. எல் லாம் சரிதான். ஏன், அக்காவைப் பற்றி மட்டும் பேச மறுக் கிறான்? அவள் அப்படித் தன்னையே மாய்த்துக் கொள்கிற அளவுக்கு என்ன நேர்ந்தது என்று புரிந்து கொள்ள வேண்டாமா? ஒருவேளை... ஒருவேளை.... அவள் விஷயத் தில் ... ஏதா... பிசகு நடந்திருக்கிறது... அது... வெளிவரக் கூடாது... என்பதற்காகவே... ஹுஷ் அப் செய்வதற் காகவே... தன்னை நன்றாக வைத்துக் கொள்கிறாரோ. என்னவோ... எல்லாவற்றையும் ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டியது அவசியமில்லையா என்றும் கேட்டது.

உறுதியாக மேலே தொடர வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், தன் சொந்த வீட்டிலேயே



வேவு பார்ப்பது என்பது எவ்வளவு கொடுமையானது என்றும் அவளுக்குப் புரிந்தது.

ஆழமாக ஒரு பெருமூச்சு விட்டாள். வேறு வழியில்லை... என்று முடிவு செய்து கொண்டாள்.

இரவு பதினோரு மணிக்கு மேல் அழைத்தான்.

''ஹேய்... ஜோ!'' என்ன பண்ணிகிட்டிருக்கே? என்றான்.

''என்ன, பண்றது? போர் அடிச்சுக்கிட்டிருக்கேன்!'' என்றாள். ''அங்கே எப்படி? எல்லாம் நல்ல படியாய் முடிஞ்சுதா?'' என்றாள்.

''ஃபர்ஸ்ட் ரவுண்ட்... டாக்ஸ்... முடிஞ்சுது. இனி நாளைக்கு... டர்ம்ஸ்... ஃபைனலைஸ் செய்ய வேண்டியதுதான். ஆனா... கெட்டிக்காரனுங்க... ஜோ... அவ்வளவு சீக்கிரம் பிடி கொடுக்க மாட்டேன்கறானுங்க... நானும் விடறதாயில்லை!'' என்று சிரித்தான்.

''இங்கேயும்... அப்படித்தான்!'' என்று எண்ணிக் கொண்டாள்.

''ஹேய்! தூக்கமே வரமாட்டேங்குது. பேசாம நாளைக்கு... நீ... வந்துடேன்...'' என்றான்.

''பிஸினஸை ஸக்ஸஸ் ஃபுல்லா முடிச்சுட்டு வாங்க. நான் எங்கே போயிடப் போறேன்?'' என்றாள்.

''புரிஞ்சுக்கவே மாட்டியா நீ?'' என்று முணுமுணுத்து விட்டு ஃபோனை ஆஃப் செய்தான்.

அவள் சிரித்துக் கொண்டாள். அவன் தவிப்பு அவளுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. ஆனால் பிரிவின் வேதனை அவளை யும் தாக்கியிருந்தது. சற்று நேரம் அமைதியாய்க் கழித்தாள். பின் படுக்கைக்குப் போனாள்.

அடுத்த நாள்... தனக்கு என்ன வைத்திருக்கிறதென்பதை அறியாமல்.

காலையில் இருந்து அறையைத் திறப்பதற்கான நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அமைய மாட்டேன் என்கிறது.

சண்முகம் வெளியே போனால்தான். அவள் அறையைத் திறக்க முடியும்.

என்ன செய்வது என்று யோசித்தாள். எப்போதாவது சரவணபவன் வெளியூர் போயிருக்கும் போது கம்பெனியை ஒரு நடை போய்ப் பார்த்து விட்டு வாங்களேன் மாமா என்று அனுப்பி வைப்பான் என்று அவர் எப்போதோ சொன்னது நினைவுக்கு வந்தது.

சண்முகத்தின் அறையை எட்டிப் பார்த்தாள்.

''ஏன், பெரியப்பா... இன்னைக்கும் ஞாயிற்றுக்கிழமை கூட எக்ஸ்போர்ட் யூனிட்டில் வேலை நடக்குமா என்ன?'' என்றாள்.

''ஆமாம்மா... கான்ட்ராக்ட்தானே? நடக்கும்...'' என்றார்.

''யாரும் போய்ப் பார்க்க வேண்டாமா?'' என்றாள்.

''அதாம்மா... நானும் யோசிக்கிறேன்... ஒரு நடை போய்ப் பாத்துட்டு வரட்டுமா?'' என்று அவரே முன்வந்தார்.

''ஆமா... பெரியப்பா... அதுதான்... நல்லது...'' என்று அவருக்கு உணவு கட்டிக் கொடுத்து, காரிலேயே அனுப்பினாள்.

எப்படியும் அவர் திரும்பி வர நான்கைந்து மணி நேரமாகும் என்று நிம்மதியானாள்.

அவளும் டிஃபனைச் சாப்பிட்டு விட்டுக் கண்ணம்மாவை அழைத்தாள்.

மகனை உறங்கச் செய்து அவள் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு,

''பாரு கண்ணம்மா... நான் மாடியில் இருக்கேன். மாடியில் இருக்கற கம்ப்யூட்டர்ல வேலையிருக்கு. யார் வந்தாலும் கூப்பிடாதே...'' என்று திரும்பினாள்.



அவள் எதிர்பாராத விதமாக மாமனார் ஊரிலிருந்து வந்து நின்றார்.

''ஏனம்மிணி! அவன்தான் ஊருக்குப் புறப்பட்டுப் போயிட்டானே. நீயாவது பேரப்புள்ளையை எடுத்துக்கிட்டு ஊருக்கு வந்திருக்கலாமல்லோ?'' என்று தன் வெண்கலக் குரலில் ஒரு அதட்டல் போட்டார்.

''மாமா... வாங்க... வாங்க!'' என்று தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு வரவேற்றாள்.

''வரக்கூடாதுன்னு இல்லீங்க... மாமா... அவர் ஊர்லருந்து ஏதாவது விஷயம் ஃபோன் பண்ணிக் கேப்பாரு... ஃபைல் பாத்துச் சொல்லணும். இங்க... வீட்டை விட்டுட்டு நானும் கிளம்பிட்டா... நல்லாயிருக்காதுங்களே...'' என்று தன்மையாய்ப் பதில் சொல்லி அவரை உபசரித்தாள்.

ஊரிலிருந்து புத்தம் புதிதாகக் காய்கறிகளைக் கொண்டு வந்து குவித்தார். அவருக்குப் பிடித்த விதத்தில் சமைத்துச் சாப்பிடச் செய்தாள்.

கண் விழித்த பேரனை மார்பில் தாங்கிக் கொண்டு மகிழ்ச்சியாய்ச் சற்று நேரம் கழித்தார்.

''என்னமோம்மா... உங்கக்கா... போனதுக்கப்புறம்... இந்தச் சின்னவனோட வாழ்க்கை என்னாகுமோன்னு உங்க அத்தைக்கு ஒரே கவலை... இப்பத்தான் அவ முகத்திலே நிம்மதியே தெரியுது...'' என்றார்.

அவள் சமையலை வெகுவாகப் பாராட்டினார்.

''அம்மிணி... இனிமே டவுனுப் பக்கம் வந்தா உன்ற சமையலை ஒரு கை பாத்துற வேண்டியதுதான்...'' என்று சொல்லிக் கொண்டார். அப்படி இப்படி என்று அவர் புறப்பட மூன்று மணியாகி விட்டது.

சண்முகம் பெரியப்பா வருவதற்குள்ளாக அறையைத் திறந்து பார்த்து விட வேண்டுமென்று உள்ளே தவிப்பு அவளை அரித்துக் கொண்டு இருந்தது.

நல்ல வேளையாக அவரே ஃபோன் செய்தார்.

''அம்மா... ஒண்ணும் பிரச்சினையில்லையே. நான் பத்து நிமிஷத்துல கிளம்பிடுவேன். மேக்ஸிமம் அரை மணி முக்கால் மணி நேரத்துல வந்துடுவேன்...'' என்றார்.

''ஒண்ணும் அவசரமில்லே. நிதானமா வாங்க...'' என்று சொல்லி விட்டு மீண்டும் குழந்தையைக் கண்ணம்மாவிடம் ஒப்படைத்து விட்டு அரக்கப் பரக்க மேலே போனாள்.

இன்றைக்கு இரவு கணவன் வந்து விடுவான். அதற்குப் பிறகு இப்படியொரு வாய்ப்பு எப்போது கிடைக்குமோ என்ற எண்ணம் அவளுக்கு.

ஒரு வழியாக அறையைத் திறந்தாள். ஏதோ நூலாம் படைகள் தொங்க மர்ம மாளிகை அறை மாதிரி இருக்கும் என்ற எண்ணத்தோடு உள்ளே நுழைந்தாள்.

முன்னாலே ஒரு சிட் அவுட் மாதிரி ஒரு சின்ன அறை. உள்ளே ஒரு பெரிய படுக்கையறை. எல்லாம் சுத்தமாக இருந்தது.

அக்கா எப்படி உபயோகத்தில் வைத்திருந்தாளோ, அப் படியே இருந்தது. தனக்கும் தெரியாமல் அவர் வந்து அடிக்கடி சுத்தம் செய்வார் போல என்று எண்ணிக் கொண்டாள்.

படுக்கைக்குப் பக்கத்தில் அக்காவின் ஃபோட்டோ. சிரித்துக் கொண்டிருந்தாள். இது எப்போது எடுத்தது, இதைத் தான் பார்த்ததே இல்லையே என்று எண்ணியபடியே திரும்பினாள்.

இந்தப் பக்கம் சற்று உள்ளடங்கிய டிரஸ்ஸிங் டேபிளில் நடுவே ஒரு பெரிய ப்ளோ-அப் இருந்தது மங்கலான வெளிச்சத்தில்... பார்க்க முடியவில்லையே... என்று லைட்டைப் போட்டாள்.



அப்படியே திகைத்துப் போய் நின்றாள். உடம்பெல்லாம்... ஒரு கணம் நடுங்கியது. கால்கள் தளர்ந்தன. அதிர்ச்சியின் உச்சத்துக்கே போனாள்.

எப்படி அறையைப் பூட்டினாள், எப்படி அறைக்கு வந்து சேர்ந்தாள் என்பதே தெரியாத வண்ணம் அறைக்கு வந்து சேர்ந்தாள். ஒரு மணி நேரம் ஆகிவிட்டிருந்தது. பயம். இன்னமும் படபடப்பு அடங்கவில்லை.

கடவுளே! எப்படிக் கணவனை நேருக்கு நேராகப் பார்ப்பது என்று தவித்துப் போனாள். பிறகு ஒரு முடிவு செய்தாள்.

ஒரு சூட்கேஸில் கொஞ்சம் துணிமணிகளை அடைத்தாள். குழந்தையை எடுத்துக் கொண்டாள்.

அவசரமாக ஒரு கடிதம் எழுதிக் கவரை ஒட்டினாள்.

'பெரியப்பா... உங்க மருமகன் வந்தாக் குடுங்க...' என்று அவர் ஏதும் சொல்லு முன்பே கிளம்பினாள்.

கார் விரைந்து போவதை அவர் திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டு நின்றார்.

# 15

''மாப்பிள்ளைதான் ஊருக்குப் போயிட்டாரே... இந்தப் புள்ளை அங்க உட்கார்ந்துகிட்டு என்ன பண்றா? நம்மளோட வந்து ரெண்டு நாளாவது இருக்கலாமில்லே?'' என்று அம்மா சொல்லிக் கொண்டே திரும்பினார்.

ஜெயஜோதி நின்று கொண்டிருந்தாள். கையில் குழந்தை.

குழந்தை தாவிக் கொண்டு வந்தான்.

பாட்டியுடன் உலகம் மறந்து அவன் மழலையில் பேசிக் கொள்வதை ஜெயஜோதி ஆழ்ந்த மௌனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளிடத்திலே ஏதோ ஒரு வித்தியாசம் அம்மாவுக்குப் புரிந்தது. ஏதோ உடல் நிலை சரியில்லை போலும் என்று எண்ணிக் கொண்டார்.

''என்ன ஜெயா? உடம்பு சரியில்லேன்னா நீ போய் ரெஸ்ட் எடுத்துக்கோ. நான் குழந்தையைப் பாத்துக்கறேன்...'' என்றார் அவளுக்கும் அது சரியென்றே தோன்றியது.

அப்பா அவளிடம் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு, ''வெளியே போய்விட்டு வருகிறேன்.. அம்மா,'' என்று கிளம்பினார்.

ஜெயஜோதி மாடியில் இருந்த தங்கள் அறைக்குப் போனாள். தனிமை அவளுக்கும் தேவையாய் இருந்தது.

பிழியப் பிழிய அழுதாள். இது என்ன வாழ்க்கை, எங்கே தொடங்கி எங்கே வந்திருக்கிறது என்ற சுய பச்சாதாபம் மேலிட்டது.

எல்லாருமாகச் சேர்ந்து தனக்குப் பெரிய துரோகம் செய்து விட்டதாக உணர்ந்தாள்.

கேட்க வேண்டும். அம்மாவிடமும் கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். அடுத்துத் தான் செய்ய வேண்டியது என்ன என்று யோசித்து முடிவு கட்டிக் கொண்டாள்.

சற்று நேரம் கழித்து எழுந்து குளித்தாள். தெளிவான முகத்துடன் கீழே இறங்கி வந்தாள். அம்மா அதற்குள் கீழே குழந்தையை உறங்க வைத்திருந்தார்.

அவனும் ரொம்ப டயர்டா இருந்தான். அதான் கொஞ்ச நேரம் தூங்க வச்சிருக்கேன் என்றார்.

அவளுக்குச் சூடான டிஃபன் பரிமாறினார். மௌனமாகச் சாப்பிட்டாள். பிறகு அம்மாவிடம் கேட்டாள்.



''அம்மா... நான் உன்கிட்டே பேசணும்,'' என்றாள்.

அம்மா தீர்க்கமான பார்வையுடன் அவளைப் பார்த்தார்.

''சொல்லு... ஜெயா...'' என்றார்.

அவள் தன் மனதை அழுத்திக் கொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

அம்மா திடுக்கிடுவாள், பதில் சொல்லத் திணறுவாள் என்றெல்லாம் ஜெயஜோதி எதிர்பார்த்ததற்கு மாறாக அம்மா ஒரு நிமிடம் தீர்க்கமான சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு ஒரே ஒரு வார்த்தை சொன்னார்.

''ஜெயா, உனக்கு இப்போதைக்கு எல்லாத்தையும் சொல்றதுக்கு எனக்கு அனுமதியில்லை,'' என்றார்.

ஜெயஜோதி கோபமடைந்தாள்.

''ஏன்? யார் அனுமதிக்கணும்?'' என்றாள் காட்டமாக.

அம்மா அசராமல் புன்னகைத்தார். ''அதைச் சொல்ல முடிஞ்சா எல்லாத்தையும் சொல்லீடுவனே!'' என்றார்.

''என்னம்மா... இது? மர்ம நாவல் முடிச்சு மாதிரி பேசறே! என் வாழ்க்கைம்மா!'' என்று தான் சிவஜோதியின் அறையில் கண்ட காட்சியைச் சொன்னாள்.

அம்மா அதற்கும் அழுத்தமான மௌனமே சாதித்தார். பத்து நிமிடங்களுக்கு மேல் அமர்ந்து பார்த்த ஜெயஜோதி எழுந்தாள்.

''சரி, உன்னைக் கேட்டுப் பிரயோஜனமில்லே! நான் கேட்கற இடத்திலே கேட்டுக்கறேன்,'' என்றாள். எழுந்தாள்.

அம்மா கவலையுடன் அவள் முகத்தைப் பார்த்தார். பிறகு சொன்னார்.

''ஜெயா, போனதை யெல்லாம் விட்ரு. மாப்பிள்ளை ரொம்பத் தங்கமானவர்... அவர் எது செய்தாலும் நம்ம

குடும்பத்துக்கு நல்லதாத்தான்டி இருக்கும். என்னை நம்பு!'' என்றார்.

ஜெயஜோதி ஒன்றும் பேசவில்லை. அம்மாவை வெறித்துப் பார்த்தாள்.

''எல்லாம் பணம் செய்கிற வேலைம்மா!'' என்று பொருமி விட்டுத் தன் அறைக்குப் போய் விட்டாள்.

பத்தரை மணிக்கு செல்ஃபோன் ஒலித்தது. அந்தப் பக்கம் பவன் என்பது புரிந்தது. உடனே செல்ஃபோனை ஆஃப் செய்து வைத்து விட்டாள்..

ஐந்து நிமிடம் கழித்து கீழே ஃபோன் மணி ஒலிக்கிற சத்தம் கேட்டது. அம்மா பேசி விட்டு,

''ஜெயா! மாப்பிள்ளை ஏர்போர்ட்டுக்கு வந்தாச்சாம்!'' என்று கீழேயிருந்து குரல் கொடுத்தபடி மேலே வந்தார். அவள் உறங்குபவள் போல் படுத்துக் கொண்டாள்.

டாக்ஸியிலிருந்து இறங்கி வேகமாக வந்த சரவணபவனிடம் சண்முகம் கவரை நீட்டினார். அவன் சாதாரணமாக அதை வாங்கிக் கொண்டான்.

'ஜோ எங்கே?' என்று கேட்க, ''தெரியலை தம்பி... அவசரமாகக் கிளம்பிக் குழந்தையை எடுத்துக்கிட்டுப் போனாங்க,'' என்றார்.

அவன் சிந்தனையுடன் அறைக்குப் போனான். முகம் திருத்திக் கொண்டு வந்து கவரைப் பிரித்துப் பார்த்தான்.

''பொய்களின் அடிப்படையில் அமையும் வாழ்க்கை சீட்டுக் கட்டு மாளிகை போல... எந்த நேரமும் சரிந்து விடும். நம்பிக்கைகள் சரிந்தால் அதற்குப் பிறகு என்னதான் இருக்கிறது வாழ்க்கையில்?'' என்று எழுதி இருந்தாள்.

திடுக்கிட்டான், உடனே தன் கைப்பையை எடுத்துப் பரிசோதித்தான். அதிலே சாவி பத்திரமாய் இருந்தது. இரண்டையும் செக் செய்தான்.



மெது மெதுவாக அவனுக்கு ஏதோ புரிகிற மாதிரி இருந்தது.

உடனே ஜெயஜோதியை செல்லில் அழைத்தான். அவள் ஆஃப் செய்து விட, வீட்டிற்கு அழைத்தான்.

அவள் உறங்கப் போய் விட்டதாக அத்தை சொன்ன பதிலிலேயே தெரிந்த தயக்கத்தை உணர்ந்தான்.

அன்றிரவு வெகு நேரம் சிந்தனையிலாழ்ந்தான்.

இரண்டு நாட்கள்!

இரண்டு நாட்கள் முழுமையாகச் சரவணபவனிடம் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை, தொடர்பு கொள்ளவும் முயற்சிக்கவில்லை என்றவுடன் ஜெயஜோதி தன்னையும் மீறி ஏமாற்றமாக உணர்ந்தாள்.

அம்மாவிடம் அந்தக் கோபத்தை எல்லாம் காட்டினாள். தன் வேதனை மறக்கத் தோழிகள் வீட்டுக்குப் போய் வந்தாள். உள்ளே ஆனால் ஒரு இழையாக நெருப்புப் போல் கோபம் கனன்று கொண்டே இருந்தது.

யு ஸீ மிஸ்டர் பவன்... ஐ... ம் நாட் யுவர் ப்ளேதிங்... யு வில் ஹேவ் டு ஆன்சர் மீ... என்று கறுவிக் கொண்டே இருந்தாள்.

அன்று மாலைவெளியே போய்விட்டு வந்தவள் மகனைக் காணாமல் அம்மாவிடம் கேட்டாள்.

''சண்முகம் மாமா... வந்து எடுத்துட்டுப் போனார்,'' என்றார் அம்மா.

''உன்னை யார் என்னைக் கேட்காம அனுப்பச் சொன்னாது?'' என்று சீறினாள்.

''இதென்னடி வம்பாப் போச்சு! குழந்தைக்கு அப்பங்காரன் அனுப்பச் சொன்னா... எப்படிடீ மாட்டேன்னு சொல்றது?'' என்றார் அம்மா. ஆனால், இரவே குழந்தையைக் கொண்டு வந்து விட்டுப் போனார் டிரைவர்.

''அம்மா... இது பாரு... அது... பாரு...'' என்று ஒரு அட்டைப் பெட்டி நிறைய விளையாட்டுச் சாமான்களோடு வந்து இறங்கிய குழந்தையைப் பார்த்து அவளுக்கு மேலும் கோபம் வந்தது.

மறுநாளும் இதே நாடகம் தொடரவே அவள் கடுப்பானாள். தானே கணவனுக்கு ஃபோன் செய்தாள்.

''என்ன... கண்ணா மூச்சி காட்டறீங்களா?'' என்று சீறினாள்.

அவள் கோபத்தை அவன் ரசித்துச் சிரித்த மாதிரி இருந்தது.

''நானா? நீயா?'' என்றான்.

அவள் திகைத்து விட்டாள்.

''சொல்லாமல் கொள்ளாமல் போனது நீ. நீதான் விளக்கம் சொல்லணும்,'' என்றான் அலட்டிக் கொள்ளாமல்.

''நான் எந்த விளக்கமும் சொல்லத் தேவையில்லை. நீங்கதான் விளக்கம் சொல்லணும்,'' என்றாள்.

''சரி... விடு. நான் என்ன விளக்கம் சொல்லணுமோ அதை ஒரேயடியாக் கேளு. அதை விட்டுட்டு இப்படி ஓடிப்போனா என்ன அர்த்தம்? கேள்வி கேட்கறது நீ. பதில் சொல்ல நான் எப்பவும் தயார்,'' என்றான்.

''எனக்கு எல்லாம் புரியற வரைக்கும்... நான்... அங்கே வர மாட்டேன்!'' என்றாள்.

''ஓ.கே.... உன்னிஷ்டம்...'' என்றான், வைத்து விட்டான்.

''திமிர்... திமிர்... உடம்பு... பூரா... திமிர்!'' என்று தன்னிடம் வந்து பொருமுகிற மகளைப் பார்த்தார் அம்மா.

பிறகு கேட்டார்.

''பாரு ஜெயா... உனக்கும் மாப்பிள்ளைக்கும் உங்க உறவில் ஏதாவது பிரச்சினையா?''



''இல்லை.''

''உன்னை அவராய்ப் போகச் சொன்னாரா?''

''இல்லை!''

''நீ அங்கே வரக்கூடாதுன்னு அவரு சொன்னாரா?''

''இல்லை,'' என்றாள். இந்த மூன்றாவது பதில் சொல்லும் போது அவள் குரல் இறங்கி விட்டது.

''எதுவானாலும் சரி... நீ... உள்ளே இருந்து போராடறதுதான் நியாயம். அவங்க வீட்ல ஒரு பையனை இழந்தாச்சு. நாங்களும் ஒரு பொண்ணை வாரித் தூக்கிக் கொடுத்தாச்சு. நீங்களும் இப்படிப் பிரிஞ்சு நின்னா... ரெண்டு குடும்பமும் எவ்வளவு வேதனைப்படும்! யோசிச்சுப்பாரு. இந்தக் குழந்தைக்காகவாவது நீங்க ஒண்ணா இருக்கணுமில்லே...'' என்றார் குழந்தைக்குச் சொல்வது போல்.

''அப்ப... பொய்யா... வாழறதா?'' என்று சீறினாள்.

''அவரோட வாழ்றது உன் இஷ்டம். ஆனா, ஒண்ணு மட்டும் சொல்வேன். ரெண்டு குடும்பத்துக்காகவும் எத்தனையோ வேதனைகளைத் தம்பி தங்கியிருக்காரு. அவ்வளவு தான் சொல்வேன்,'' என்று சொன்னார்.

அதற்குப் பிறகு அவர் அதைப் பற்றிப் பேசவில்லை.

எட்டு மணி வரை குட்டி போட்ட பூனை போல் நடை போட்டாள். பிறகு கீழே வந்து, ''உன்னோட அழகு மாப்பிள்ளையையே... வந்து கூட்டிட்டுப் போகச் சொல்லு...'' என்று கடுப்பாகக் கூறினாள்.

அம்மா வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டார். அவனும் வந்தான்.

எதுவுமே நடக்காதது போல் கலகலப்பாக இருந்தான்.

அப்பாவும், மகனும் ஓடிப் பிடித்து அறை முழுவதும் கும்மாளமிடுவதை அவள் அமைதியாகப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

உணவருந்தும் போதும் வழக்கம் போல் கலாட்டா செய்து சிரித்தான். பேசினான். விளையாடினான்.

மும்பையிலிருந்து ஏதோ ஒரு கால் வரவும் அழகான ஹிந்தியில் பதில் சொல்வதை அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள்.

மகனை உறங்க வைத்தான். பிறகு எதையும் கண்டு கொள்ளாமல் ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தான்.

நொந்து போனாள் ஜெயஜோதி. அவன் சற்றும் எதிர் பாராத விதமாக அவன் கையில் இருந்த புத்தகத்தைப் பிடுங்கி வீசினாள்.

''நான் ஒருத்தி... ஏதோ வேதனையிலே இருக்கேனே... என்னன்னு கேட்கத் தோணலையா?'' என்றாள்.

அவனுக்கு ஜிவ்வென்று கோபம் ஏறுவதை அன்றைக்குத் தான் முதன் முதலில் பார்த்தாள். கொஞ்சம் பயந்து போனாள்.

முகம் சிவக்க அவளைக் கோபத்துடன் முறைத்தான்.

''என்னடி நெனச்ச நீ? நான் ஊரில் இல்லாதப்ப டூப்ளிகேட் சாவி பண்ணியிருக்கே! என்னையே வேவு பாக்கறே! செய்யக் கூடாத வேலைகளைச் சொந்த வீட்லயே செஞ்சதுமில்லாது, என்னை வேற குத்தம் சொல்றே?'' என்று விடுவிடென்று பேசவும் திகைத்துப் போய் விட்டாள்.

பேசவியலாமல் அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்ற அவளைப் பார்த்த ஒரு நிமிடத்தில் அவன் முகம் மென்மையாக மாறியது.

''சே!'' என்று தலையணையை எடுத்து வீசி விட்டு வெளியே போனான்.



அரை மணி நேரம் கழித்துத்தான் வந்தான். படுக்கைக்கு வந்தான். அச்சத்துடன் விம்மிக் கொண்டு முதுகு காட்டிப் படுத்திருக்கிற மனைவியைப் பார்த்து நெஞ்சம் பிளப்பது போல் உணர்ந்தான்.

அவனும்... குழந்தைக்கு அந்தப்புறம் படுத்தான். பிறகு ஒரு பெருமூச்சு விட்டவனாய் விட்டம் பார்த்துப் படுத்தான்.

''ஜோ...!'' என்றான்.

அவள் பதில் பேசவில்லை.

''நம்ம ரெண்டு பேர் தப்பு எதுவும் இல்லாமல் கடந்த காலம் நம்மளைப் புரட்டி எடுக்குது. கடந்த காலத்தை என்கிட்ட விட்டு!'' என்று சொன்னான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. அவனே தொடர்ந்தான்.

''சரி, உனக்கு விருப்பம் இல்லேன்னா விடு. நல்லா யோசிச்சுப் பாரு. நம்ம மேரேஜ் ஒண்ணும் பெரிய காதல் கல்யாணம் இல்லே. குழந்தைக்காக... ஒத்துகிட்டோம்... இடையிலே உனக்கும் ஒப்புதல் இருந்ததால்...'' என்று இழுத்தான்.

அவள் மறுபடியும் பேசவில்லை.

''சரி... விடு... மறுபடியும் அப்படியே... தொடரலாம். நானே உனக்கு எல்லாத்தையும் சொல்றே... நேரம் வரும் அதுவரைக் கும் நமக்காக இல்லேன்னாலும்... நம்ம பேரண்ட்ஸுக்காக... மைன்ட் யூ... மறுபடியும்... நாம ஸ்டார்ட்டிங் பாயிண்டுக்கே... வந்தாச்சு...'' என்றான்.

திரும்பிப் படுத்துக் கொண்டான்.

அவ்வளவு அருமையாக இடையிலே மலர்ந்த உறவு... இப்படி... கடைசியில்... என்று எண்ணி மௌனக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறான் என்பது புரிந்தும் அவள் தேற்ற முயற்சிக்கவில்லை.

இரவும் நீண்டு கிடந்தது. இரவு மட்டுமென்ன, வாழ்க்கையும் கூடநீண்டு கிடந்தது போல் உணர்ந்தாள் ஜெயஜோதி.

## 16

வழக்கம் போல் எல்லா வேலைகளும் நடந்தன... எதுவும் நிற்கவில்லை. அவ்ளும் காலையில் எழுந்து செய்ய வேண்டிய வேலைகளைச் செய்தாள்..

சண்முகத்தின் முன்னிலையிலும் மற்றவர்கள் முன்னிலையிலும் எப்போதும் போல் அவனால் நடந்து கொள்ள முடிந்தது. இத்தனையை உள்ளே போட்டுக் கொண்டு எப்படி அவனால் இயல்பாய் இருக்க முடிகிறது என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவளும் அதை மறந்தாற் போலேயே இருக்க முயன்றாள். ஒரு விஷயம் மட்டும் அவளுக்குப் பெருத்த ஆச்சரியமாய் இருந்தது.

தான் அவனைக் குற்றவாளியாக்க வேண்டும் என்று நினைத்தது போய் அவன் தன்னைக் குற்றவாளியாக்கி விட்டதுதான் அது. அது மட்டும் இல்லாமல் இரண்டு நாட்களுக்கு முன் பேச்சுக்கு நடுவே,

''நான் குற்றம் சாட்டப்பட்டவன் ஜோ. குற்றவாளியாய்த் தீர்மானிக்கப்பட்டவன் அல்ல. எந்த மனிதனுக்கும் தான் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்க ஒரு வாய்ப்புக் கொடுக்கப் பட வேண்டும்,'' என்றான்.

அவன் பேச்சில் இருந்த நியாயம் உணர்ந்து அவள் ஒன்றும் பேசவில்லை. ஆனால், அவள் ஏதும் பேசும் முன் அவன் மின்னல் போல் நகர்ந்து விட்டான்.



வழக்கம் போல் குழந்தையைப் பார்த்துக் கொள்ள, மற்ற பொறுப்புக்கள் என்று அவளுக்கு வேலை சரியாக இருந்தது. தனிமை கிடைப்பதும் அரிதாக இருந்தது. அது போதாமல் அவளே வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டாள். அப்போதுதான் களைத்து இரவில் உறங்கி விடமுடியும் என்று நினைத்தாள்.

ஒரு வாரம் பொறுத்து அவன் ஒரு நாள் மாலை விரைவிலேயே வந்தான்.

''ஜோ! ரொம்பவும் கஷ்டப்படுத்திக் கொள்ளாதே!'' என்றான் கவலை நிறைந்த பார்வையுடன்.

''அதைப் பற்றி உங்களுக்கென்ன?'' என்றாள் எரிச்சலுடன்.

அவன் வலக் கை அவளது இடத் தோளை இறுக்கிப் பிடித்தது. அவள் அஞ்சவில்லை. நேராகப் பார்த்தாள். சே...! என்று முணுமுணுத்து விட்டு வெறுத்துப் போய் வெளியே போனான்.

பத்து நிமிடம் கழித்து வந்து, ''நான் கோவிலுக்குப் போறேன். நீ வர்றதானா... வா!'' என்றான்.

அவளுக்கும் அப்படி எங்காவது போய் வந்தால் என்ன என்று தோன்றியது. புறப்பட்டுப் போனார்கள். மௌனமாகவே போய் மௌனமாகவே வந்தார்கள். அந்த மௌனமே கூடப் பேச்சை விட ஒரு வகையில் நன்றாகத்தான் இருந்தது அவளுக்கு.

மறுநாள் காலை

அவன் விரைவிலேயே கிளம்பி விட்டான். அவள் காலை வேலைகளை முடித்து விட்டுச் சற்று நேரம் குழந்தையைக் கண்ணம்மாவிடம் விட்டு விட்டு அறைக்கு வந்தாள்.

அப்போதுதான் மேஜையைக் கவனித்தாள். ஆச்சரியப் பட்டுக் கொண்டு நின்றாள். அங்கே இரண்டு சாவிகளும்

''அம்மா, நீயாவது சாப்பிடும்மா...'' என்று சண்முகம் பலமுறை அழைத்து விட்டார். தான் சாப்பிடா விட்டால் அவரும் சாப்பிட மாட்டார் என்பதால் எழுந்து வந்தாள்.

கண்ணம்மா பரிமாற வந்தாள்.

'எல்லாத்தையும் எடுத்து வச்சுட்டுப் போ... நாங்க சாப்பிட்டுக்கறோம்,' என அவள் சொல்லவும், கண்ணம்மா நகர்ந்து விட்டாள்.

கண்ணம்மாவின் கணவன் அவர்கள் டிரைவராகவும் இருந் தான். இருவருக்கும் பகலில் சற்று நேரம் ஓய்வுக்கு நேரம் கொடுப்பது அவர்கள் வழக்கம். பங்களாவின் அந்த ஓரத்தில் அவர்களுக்கென்று சின்னதாக ஒரு குவார்ட்டர்ஸ் இருந்தது.

கண்ணம்மா போனதற்குப் பிறகு சண்முகமும் எதிரில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார்.

சாப்பாட்டை அளைந்து கொண்டு அமர்ந்திருக்கிற ஜெய ஜோதியைப் பார்த்தார்.

'என்னம்மா... ஏதாவது பிரச்சினையா?' என்றார்.

அதற்கு மேல் ஜெயஜோதியால் பொறுக்க முடியவில்லை. கண் கலங்கினாள்.

''தம்பி, உன் மேலே கோபமா இருக்கா?'' என்று மேலும் கேட்டார்.

''ஆம்!''என்பது போல் மேலும் கீழும் தலையாட்டினாள். பிறகு தழுதழுத்த குரலில், ''ஆனா, தப்பு எம் மேலயும் இருக்கு,'' என்றாள்.

அவர் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார். ஆனா, 'தப்பு அவர் மேலயும் இருக்கு. எதையும் முழுசாச் சொன்னாத் தானே தெரியும்,' என்றாள். மேலும் அழுதாள்.

சண்முகம் சிந்தனை வயப்பட்டவராக, ''ஆமாம்மா. தம்பி அப்படித்தான் எல்லாத்தையும் மனசுக்குள்றயே போட்டுச்



சுமக்கும். குடும்ப கௌரவத்தைப் பத்தி ரொம்ப யோசிக்கும்...'' என்றார். பிறகு அவளைத் தேற்றும் விதமாக -

''சரி... சாப்பிடு... உன் மேலே ரொம்ப நாள் கோபமா இருக்கத் தம்பியால... முடியாது. ரொம்ப உன்மேல பிரியம் வச்சிருக்கு...'' என்றார்.

ஒருவாறு சாப்பிட ஆரம்பித்தாள். பிறகு, ''எப்பவும் எங் கேன்னு சொல்லுவாரு. அதைக் கூடச் சொல்லலே. அவ்வளவு கோபமா இருக்காரு!'' என்று புலம்பினாள்.

'தம்பீ... எங்கே இருக்குன்னு தெரியணும்... அவ்வளவு தானேம்மா... விடு. நான் கண்டு பிடிக்கறேன்,'' என்று ஆறுதல் கூறினார். பிறகு சாப்பிட்டு முடித்தவுடன் ஹாலில் ஒரு புறமாக விளையாடிக் கொண்டிருந்த பிரகாஷைக் கையில் எடுத்துக் கொண்டார்.

''குட்டிப் பயலே... அப்பா கிட்டே போலாமா...'' என்றார்.

''ஹை... போலாமே!'' என்று குதித்தான் அவன்.

''ஆனா... அப்பா எங்கே இருக்காருன்னு தெரியலியே. நான் அப்பாவுக்கு ஃபோன் போட்டுக் குடுக்கறேன் நீ பேசறியா?'' என்றார்.

''ம்... நான் பேசறேன்...'' என்று வீரமாகத் தயாரானான் குழந்தை.

லைன் கிடைத்ததுமே, ''அப்பா... நீ ஏன் சாப்பிட வர்லே? நான் உன்னைப் பாக்கணும்... நீ எங்கே இருக்கே... நான் வர்றேன்,'' என்று சொல்லிக் கொடுத்ததற்கு மேலேயே மகன் பேசுவதைக் கண்ட ஜெயஜோதியின் முகம் மலர்ந்தது.

வெள்ளியங்கிரி மலைக்குப் போகிற வழியில் அவர் களுக்கு ஒரு தோட்டம் இருந்தது. அங்கே இருக்கிற வீட்டில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. மகன் டிரைவரோடு வரலாம் என்று அனுமதியும் கிடைத்தது.

சண்முகமும், ஜெயஜோதியும் ஆலோசனையில் இறங்கி னார்கள்.

''என்னம்மா... நீ சொன்னது நிஜம்தான் போலே... அம் மாவைக் கூட்டிட்டு வான்னு சொல்லலை. டிரைவரோட வாங்கறாரு. சரி... நான் ஒண்ணு செய்றேன்... நான் குழந்தையைக் கூட்டிட்டுப் போறேன். போய்க் கொஞ்சம் கோபம் தணிய வச்சுட்டு உனக்கு ஃபோன் செய்யறேன்,'' என்று காரில் புறப்பட்டுப் போனார்.

அங்கே போய், ''என்ன தம்பி திடீர்னு வராம விட்டுட்டே... ஜெயா அங்கே சாப்பிடாம கொள்ளாம ஒரே... அழுகையா... இருக்கு...'' என்று திரும்பத் திரும்பக் கூறவும், அவனும் சற்றே இளகினான்.

''சரி... நீங்க போய்... அவளைச் சாப்பிடச் சொல்லுங்க... ஒண்ணும் வொரி பண்ணிக்க வேண்டாம். நாளைக்கு வந்தர்றேன்னு சொல்லுங்க,'' என்று குழந்தையைத் தன்னோடு வைத்துக் கொண்டு அவரை அனுப்பி வைத்தான்.

ஒரே மணி நேரத்தில் கோவைக்கு வந்து எல்லாவற்றையும் அவர் சொல்ல, அப்படி இப்படி என்று மணி இரவு ஏழாகி விட்டது. அவள் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு முகம் தெளிந்தவளாய் எட்டு மணி வாக்கில் மூவருக்கும் மறுநாளைக்குத் தேவையான உடைகளை எடுத்து பாக் செய்தாள். சாப்பிட்டாள். டிரைவரை அழைத்துக் கொண்டாள். புறப்பட்டாள்.

போய்ச் சேர்ந்தவுடன் சற்றுத் தொலைவிலேயே வண்டியை நிறுத்திவிட்டு, டிரைவரைத் திருப்பி அனுப்பி விட்டாள். அந்தச் சிறிய ஏர்பேக்கைத் தோளில் மாட்டிக் கொண்டு நடந்து போனாள். நேரடியாக உள்ளே நுழையாமல் பக்க வாட்டு நடவையில் நின்று மெல்ல உள்ளே என்ன நடக்கிறதென்று பார்க்க விழைந்தவளாய் எட்டிப் பார்த்தாள்.



திகைத்து நின்றாள்.

அவள் நெஞ்சம் உருகி விட்டது.

அவன் சோஃபாவில் சரிந்து அமர்ந்திருந்தான். எதிரே இருந்த மேஜையின் மேல் அவளுடைய ஃபோட்டோ ஒன்று இருந்தது. அவனது மடியில் குழந்தை உறங்கிக் கொண் டிருந்தான்.

குழந்தையின் தலையைத் தடவிக் கொடுத்தபடி, அவன் அவளது ஃபோட்டோவைப் பார்த்தபடி அமர்ந்து கொண் டிருந்தான்.

எல்லையற்ற வேதனை அவன் முகத்தில் தெரிய அமர்ந் திருக்கிற அவன் தோற்றம் அவள் நெஞ்சைப் பிளக்கிறாற் போல் உணர்ந்தாள்.

சத்தமே செய்யாமல் உள்ளே நுழைந்தாள். அவள் நுழைவதை நிழலில் புரிந்து அவன் வேகமாகத் திரும்பினான்.

''இப்ப எதுக்கு இங்கே வந்தே?'' என்று சீறினான். அவள் கண்டு கொள்ளவில்லை.

அவன் கையிலிருந்த குழந்தையை எடுத்துப் போய்ப் படுக்கையில் படுக்க வைத்தாள். அவன் அதற்குள் எழுந்து வந்தான்.

''கேக்கறேன்... இல்லே? எதுக்கு வந்தே?'' என்று மறு படியும் சீறினான்.

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள். நேருக்கு நேராகப் பார்வைகள் சந்தித்துக் கொண்டன. அவள் கண்கள் கலங்கிக் கண்ணீர் ஆறாய்ப் பெருக, அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

அழுதாள். நெஞ்சம் வெடிக்க அழுதாள். அவன் ஒன்றும் செய்ய இயலாதவனாய்ப் பார்த்துக் கொண்டிருக்கையி லேயே அவள் கைகள் அவன் கழுத்தை வளைத்தன.

அவன் முகத்தைத் தன் முகம் நோக்கிக் குனியச் செய்து அவள் அள்ளியிறைத்த முத்துக்களை அவன் ஒரு திகைப் புடன் வாங்கிக் கொண்டான்.

'ஜோ...' என்று இரங்கிய குரலில் முணுமுணுக்க, எப் போதும் அவன் சிரிப்பது போல் இன்றைக்கு அவள் சிரித்தாள்.

''பேசலாம்... அப்புறம் பேசலாம்...' என்று முணுமுணுத்த வண்ணம் அவள் அவன் இதுவரை அவளுக்குச் சொன்ன பாடங்களை எல்லாம் அவனுக்கே திருப்பிப் படித்தாள்.

''ஹேய்... என்னால நம்பவே முடியலை!'' என்று புரண்டு சிரிக்கிற கணவனை அவளும் சளைக்காமல் குறும்பாய்ப் பார்த்தாள்.

''என்னாலயும்தான்!'' என்று அவள் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல,

''என்னத்தை நம்ப முடியல?'' என்று அவன் கேட்டான் புரியாதவனாய்.

''நான் இப்படி ஆவேன்னு!'' என்று அவளும் சிரித்தாள். இருவரும் சிரித்தார்கள். பிறகு -

''விஷயத்துக்கு வருவோமா?'' என்றாள்.

''எந்த விஷயம்?'' என்று சுறுசுறுப்பாய் அமர்ந்தான்.

அவள் சொன்னாள்.

''ஓ!'' என்று பேச்சற்றுப் போனான்.

''இப்ப... நீங்க உங்க பக்கத்து நியாயத்தைச் சொல்லலாம்,'' என்றாள்.

அவன் வெறித்துப் பார்த்தான்.



# 17

''இன்னும் எத்தனை பேர் இருக்காங்க ஜென்னி மேடம்?'' என்று கேட்டுக் கொண்டே கைக் கடிகாரத்தைப் பார்த்தான் சிவஹரிபவன்.

''இரண்டே பேர்தான்,'' என்றார் ஜெனிஃபர், அவனது பி.ஏ.

''சை... என்ன... இது... ஒரு ஆள் கூட இம்ப்ரெஸ்ஸிவ்வா... இல்லை...'' என்று சலிப்பாக எண்ணிக் கொணடே சுழற்சேரை ஒரு சுழற்றுச் சுழற்றித் திரும்பினான்.

ஒரு இளம் பெண் நின்று கொண்டிருந்தாள். அழகாக, கைத்தறிப் புடவையில் கஞ்சி மடமடக்க நின்றாள்.

''குட்மார்னிங்... சார்!'' என்றாள். லேசான நடுக்கத்தில் இருந்தாள்.

உள்ளூர அவனுக்குச் சிரிப்பாக இருந்தது.

''குட்மார்னிங்... உட்காருங்க...'' என்றான்.

''நேம் ப்ளீஸ்'' என்று ஃபைலை வாங்கிக் கொண்டான்.

''சிவஜோதி... சார்'' என்றாள்.

அவன் யோசனையுடன் அவளைப் பார்த்தான்.

''நைஸ் நேம்... என்ன படிச்சிருக்கீங்க.''

''பி.பி.ஏ. முடிச்சிருக்கேன் எம்.பி.ஏ. கரஸ்ல படிக்கிறேன். கம்ப்யூட்டர் டிப்ளமா கோர்ஸ் முடிச்சிருக்கேன்,'' என்றாள்.

''எக்ஸ்பீரியன்ஸ்... ஏதாவது?'' அவளை எங்கேயோ பார்த் திருப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

''ஒரு வருஷம் ராம் எக்ஸ்போர்ட்ஸ்ல வேலை பாத்திருக்கேன். கம்பெனி இப்ப திருப்பூருக்கு ஷிப்ட் ஆயிடுச்சு. அதனால லுக்கிங் ஃபார் எ ஜாப் இன் கோயம்புத்தூர். சார்...'' என்றாள். பதில்களைத் தெளிவாகவே கொடுத்தாள்.

அவள் படித்த கல்லூரியின் பேரைப் படித்தவுடனே... ''ஓ... எங்க காலேஜ் ஸ்டுடன்ட்டா? அதான் பாத்த மாதிரி இருக்கு!'' என்று புன்னகைத்தான். பிறகு,

''இப்ப... நாம அனுப்ப வேண்டிய கன்சைன்மென்ட் லேட்டா ஆயிடுச்சு. எப்படி நாசூக்கா தெரிவிப்பீங்க? ஒரு லெட்டர் அடிங்க...'' என்றான்.

அவள் கம்ப்யூட்டரில் டைப் செய்து கொடுத்தாள். திருப்தியாக உணர்ந்தான்.

''சரி... என்ன சம்பளம் எதிர்பாக்கறீங்க?'' என்றான்.

''சார்... அங்க... எனக்கு ஃபைவ் தவுசன்ட் கொடுத்தாங்க...'' என்றாள்.

''சரி... நீங்க வெயிட் பண்ணுங்க. ஐ வில் கால் யு... ஆப்ஃடர் வேட்ஸ்,'' என்று காத்திருக்கச் செய்தான்.

அடுத்த ஆளும் திருப்திகரமாக இல்லாததால் ஜெனிஃபரிடம் ஆலோசித்தான். வந்தவர்களில் சிவஜோதியின் பர்ஃபாமன்ஸ் தான் திருப்திகரமாக இருப்பதாக அவரும் தெரிவித்தார். பிறகு அழைத்தான்.

''பாருங்க... சிவஜோதி... ஒரு த்ரீ மன்த்ஸ் வொர்க் பண்ணுங்க. அதே சம்பளம் தரேன். திருப்திகரமாக இருந்தால் அதிகம் தரேன்... ஓ.கே. யு ஆர் அப்பாயின்ட்டெட்,'' என்று எழுந்தான்.

துருதுருவென்றிருந்தான். உட்காரும்போது சேரைச் சுழற்றிக் கொண்டிருந்தான். நிற்கும் போது லேசாக ஆடினாற் போல் நின்றான்.



ஜெனிஃபர் நடுத்தர வயதில் இருந்தார். அழுத்தமாக இருந்தார்.

புறப்பட்டவனிடம் சார் என்றார். நின்றான்.

''தம்பி வரேன்னிருக்கார்,'' என்றார்.

''ஓ! ஆனா நான் ஃபிரண்ட்ஸ்கிட்டே வர்றதா சொல்லிட்டேனே. அவனையே அக்கவுண்ட்ஸ் பாக்கச் சொல்லுங்க...'' என்றான்.

கிளம்பி விட்டான். ஜெனிஃபர்தான் அலுவலக நடைமுறைகளையெல்லாம் சிவஜோதிக்குச் சொன்னார்.

வேலை கிடைத்து விட்டது என்று நினைத்த சிவஜோதிக்கு அந்த வேலையினால் தன் வாழ்க்கையையே மாறப் போகிறது என்பது அப்போது புரியவில்லை.

இரவு ஒன்பது மணி.

வீட்டுக்கு வந்த சிவஹரி, சரவணன் இன்னும் வரவில்லையென அறிந்து அலுவலகம் போனான்.

அலுவலகத்தில் அவன் கணக்கு வழக்குகளில் ஆழ்ந்திருப்பதைப் பார்த்து -

''டேய், தம்பி. இப்ப என்ன தலை போற அவசரம். கணக்கு வழக்குப் பார்க்க?'' என்றான் ஆதுரத்துடன்.

''அண்ணா!'' என்று தலை நிமிர்ந்து பார்த்த அவன், ''நாளைக்குப் போன கன்சைன்மென்டுக்கான செக் குடுக்கறாங்க. கணக்கு கரெக்டா குடுக்கணுமில்ல?'' என்றான்.

''அடடா! அது எனக்கு ஞாபகமில்லாமப் போச்சே! சாரிடா, கண்ணா!'' என்று அவனும் கூட அமர்ந்தான்.

வீட்டுக்கு ஃபோன் செய்த சரவணபவன், சண்முகத்திடம், ''மாமா டிஃபனை டிரைவர்கிட்ட குடுத்தனுப்புங்க,'' என்றான்.

சிவஹரிபவன் சிரித்தான் ''டேட... டேய்... ஏண்டா... இங்கயே டிஃபன் வாங்கிகிட்டாத் தீந்துச்சு. இதுக்கு எதுக்குடா வீட்டுக்கு ஃபோன்?''

சரவணபவன் அண்ணனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''எப்படியும் கடைக்கும் டிரைவரைத்தான் அனுப்பணும். வீட்ல செஞ்சது வேற வீணாகுமில்லே?'' என்றான்.

''டேய்... நீ அண்ணனா பொறந்திருக்கணும்டா!'' என்று பகபகவென்று சிரித்தான் சிவஹரி.

''அண்ணா, ப்ளீஸ்...'' என்று அவன் சலித்துக் கொள்ளவும்,

''சரி... சரி... வேலை பார்க்கலாம்...'' என்று வேலையில் ஆழ்ந்தார்கள்.

இரண்டு பேருக்கும் இடையே ஆழ்ந்த ஒரு நட்பு இருந்தது. மூன்று வயது இடைவெளியை இருவருமே பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. திட்டமிடுவதிலும், புதுப்புது ஐடியாக்களை உருவாக்குவதிலும் சிவஹரி கெட்டிக்காரன் என்றால் அதைப் பொறுமையாக நடைமுறைப்படுத்துவதில் சரவணன் திறமையானவன்.

அப்பா சின்னதாக நகரத்தில் வைத்திருந்த ஃபைனான்ஸை விரிவுபடுத்தி பைக் ஏஜென்சி என்று திட்டம் போட்டவன் சிவஹரி. இப்போது ஓராண்டாக எக்ஸ்போர்ட் யூனிட் ஒன்று சூலுருக்கருகில் துவங்கியிருந்தார்கள். அலுவலகம் கோவையில் இருந்தது.

ஜெனிஃபர் நடுத்தர வயது மாது. வேறொரு பெரிய கம்பெனியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். குழந்தை வளர்ப்பு என்று இடையிலே வேலையை விட்டு விட்டார். மீண்டும் சிவஹரியின் நண்பர் ஒருவர் மூலமாக அவனது கம்பெனிக்கு வந்தார். சரவணபவனுக்கும் அவரைப்பிடித்து இருந்தது.



சகோதரனின் அவசரத்தைச் சரிக்கட்டிக் கொண்டு போகிற பக்குவம் அவருக்கு இருந்தது.

வேலை முடித்து வீட்டுக்கு வந்த பின்பு அன்று நண்பர்களுடன் நடந்த கலாட்டாக்களைச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தான் சிவஹரி. படுக்கைக்குப் போன பின்பு அவனுக்கு இன்றைக்கு வேலைக்குச் சேர்ந்த சிவஜோதியை எங்கோ பார்த்திருக்கிறோம் என்றே தோன்றிக் கொண்டிருந்தது.

திடீரென்று நினைவுக்கு வந்தது அந்தக் கலாட்டா.

அப்போது அவன் எம்.காம் இரண்டாமாண்டு படித்துக் கொண்டிருந்தான். அவனது டிபார்ட்மென்ட் ஹெச்.ஓ.டிக்கு அவனை மிகவும் பிடிக்கும். அவர்களது துறை மாணவர்களுக்காக என்.எஸ்.எஸ். காம்ப் ஒன்று விடுமுறையில் நடத்த வேண்டியிருந்தது.

பட்டப் படிப்பு படிக்கும் போது சிவஹரி என்.எஸ்.எஸ்.ஸில் ஆர்வமாக இருந்தான். அதனால் அவனை உதவிக்கு அழைத்துக் கொண்டார்.

ஒரு கிராமம். அங்கே ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டும் வேலையைச் செய்து கொடுத்தார்கள்.

அங்கே ஒரு கல்யாண மண்டபம் போன்ற ஒரு சின்ன மண்டபத்தில் தங்கியிருந்தார்கள். அப்போதெல்லாம் செல்ஃபோன்கள் பிரபலமாகவில்லை. மண்டபத்தில் ஒரே ஒரு ஃபோன் தான்.

ஒரு நேரம் சிவா...உனக்கு ஃபோன் என்று அழைத்தார்கள்.

சிவஹரி போய் ஃபோனை எடுக்கவும், ''அக்கா! எப்படி இருக்கே?'' என்ற பெண் குரல் கேட்டு ஆச்சரியமானான்.

''சாரிங்க! உங்களுக்கு யார் வேணும்?'' என்றான்.

''சிவஜோதி வேணுங்க...'' என்றார்கள்.

''சாரி! சிவாங்கவும் என்னைக் கூப்பிட்டு விட்டுட்டாங்க!'' என்று போய் விவரம் சொல்லி சிவஜோதியை அனுப்பினான்.

லைன் கட்டாகி விட்டது. சிவஜோதி காத்துக் கொண்டிருந்தாள். ஃபோன் ஒலிக்கவும் பொறுப்பாளர் எடுத்தார். ''சிவாங்களா... இருங்க!'' என்று அவளிடம் கொடுத்தார்.

''ஹலோ! சிவாண்ணா, நல்லாயிருக்கியா?'' என்ற ஆண் குரல் அந்தப்புறம் ஒலிக்கவும், அவள் விதிர்விதிர்த்துப் போனாள்.

''நான்... நான்...''என்று திணறினாள். பெண்குரல் கேட்டு அந்தப்புறமும் திகைத்து விட்டார்கள் போலும்.

''நீங்க... நீங்க... யாரு? எனக்குச் சிவஹரி... வேணும்!'' எனவும், ''கட் பண்ணிட்டு... கூப்பிடுங்க...'' என்று வைத்து விட்டுச் செய்தி அனுப்பினாள். சிவஹரி மீண்டும் வந்தான்.

''இதென்னங்க... கலாட்டா. எனக்கு சிவஜோதி வேணும் னாங்க...'' என்று கடுப்பானான்.

மறுபடியும் ஃபோன் ஒலிக்க, அவனே எடுத்தான். அந்தப் பக்கம் -

''அக்கா! வந்துட்டாங்களா?'' என்று குரல் கேட்க, அவளிடம் கொடுத்தான்.

''ஹலோ ஜெயா... வசதியெல்லாம் இருக்கு... ஆனா, பயமாவும் இருக்கு... உங்களையெல்லாம் பாக்காமக் கஷ்டமா இருக்கு...'' என்று அவள் பயந்து பயந்து பேசுவதைச் சற்றுத் தள்ளித் திரும்பி நின்று கொண்டு ஒரு புன்சிரிப்போடு கேட்டுக் கொண்டிருந்தான்.

அவள் வைத்த பிறகு அவனுக்கு ஃபோன் வந்தது. அவள் நகர முற்பட்டபோது, 'இருங்க!' என்று சைகை காட்டினான்.

''இல்லடா... நோ... பிராப்ளம்டா. எல்லாம் செட் ரைட் பண்ணிக் குடுத்துட்டு நாளைக்குக் கிளம்பிர்றன்டா... பத்து



நாள் காம்ப்டா... அப்புறம் ரெண்டு நாளைக்கொரு தரம் வந்து ஹெல்ப் பண்ணிக்கறேன். அப்புறம், வாலிடக்டரிக்கு வந்தாப் போதும்டா...'' என்று பேசி விட்டு வைத்தான். பிறகு அவளிடம் திரும்பி,

''ஹலோ! எந்த வருஷம் படிக்கிறீங்க?'' என்றான்.

''ஃபர்ஸ்ட் இயர்,'' என்றாள்.

''ஒண்ணும் பயப்படாதீங்க. இதெல்லாம்தான் லைஃப்ல அனுபவங்கள். ஏதாவது ஹெல்ப் வேண்ணாக் கேளுங்க,'' என்றான்.

அவள் அவசரமாகத் தலையாட்டி விட்டு, விட்டால் போதும் என்று ஓடுவதைக் கண்டு, அவனுக்குச் சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

அந்த முகாமின் போது அவளிடம் இரண்டு, மூன்றுமுறை பேசினான்.

கல்லூரியில் பார்த்தால் கூட அவன்தான் புன்னகைப்பான். அவள் அவசரமான ஒரு அரைப் புன்னகையுடன் விலகி ஓடி விடுவாள்.

இப்போது அந்த நிகழ்வுகளெல்லாம் அவனுக்கு நினைவு வர, அவனுக்குள் புன்னகை மலர்ந்தது.

இன்னமும் அதே பயந்த சுபாவமாய்த்தான் இருக்கிறாள் போலும் என்று எண்ணிக் கொண்டான்.

மறுநாள் காலை!

சகோதரர்கள் இருவரும் காலையில் சற்று நேரம் ஷட்டில் காக் விளையாடுவார்கள்.

மீண்டும் மீண்டும் தனக்குள் புன்னகைத்துக் கொள்கிற அண்ணனிடம் சரவணபவன் கேட்டான்.

''என்னண்ணா, என்ன விஷயம்?'' என்று.

''இல்லடா தம்பி. நம்ப ஆஃபீஸுக்கு ஒரு புது அப்பாயின்ட் மென்ட் பண்ணியிருக்கேன். பேரு என்ன தெரியுமா? சிவஜோதி!'' என்று கல்லூரி நாளில் நடந்த கலாட்டாக்களைச் சொன்னான்.

இருவரும் சிரித்தார்கள்.

அன்றைக்குப் பிறகு மூன்றே மாதங்களில் வேலையில் நல்ல முன்னேற்றம் காட்டினாள் சிவஜோதி. அலுவலகத்தில் ஒரு ஸ்டாஃப் என்பதோடு மறந்து போனான் சரவணபவன். அதோடு மட்டுமல்லாமல் ஜெனிஃபர் மேடம்தான் அவனுக்கு நேர் கீழே இருந்தார்கள் என்பதால் சிவஹரிக்கோ, சரவண னுக்கோ அவளிடம் நேரடியாக அதிகம் பேச வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. ஆனால், விதி வேறு விதமாக நினைத்து விட்டது.

## 18

''**சா**ர்... உங்ககிட்டே... மாஸ் கம்பெனி எம்.டி.யோட பி.ஏ. பேசறாராம்!'' என்று டெலிஃபோன் ஆபரேட்டர் கனெக்ஷன் கொடுத்தாள்.

''ஹலோ... சொல்லுங்க,'' என்றான் இந்தியில் - மும்பைக் கம்பெனி எம்.டி.யின் பி.ஏ.

''என்ன சார், நீங்க உடனே பணம் கேக்கறீங்களாம். எங்ககிட்டே எல்லாரும் ஆறு மாசம் கழிச்சுத்தான் பணம் வாங்கிக்கறாங்க... இன்னா... நீங்க...'' என்று கடிந்து கொள்கிற மிஸ்ராவிடம் அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னான்.

''சார்! இந்த மாதிரிக் கடனை நம்பி வியாபாரம் செய்ற திலே. எனக்கு இன்ட்ரஸ்ட் இல்லே. குவாலிட்டியிலே உங்களுக்கு ஏதாவது வருத்தம் இருக்கா?''



''இல்லே... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே.''

''குடுக்கலேன்னா மட்டும் ரிஜெக்ட் பண்றீங்க. இல்லே? உடனடியா பணம் குடுக்கறதானா நாம்ப தொடர்ந்து வியா பாரம் வச்சுக்கலாம். இல்லேன்னா... இல்லை...'' என்றான். டொக்கென்று வைத்து விட்டான்.

ஜெனிஃபர் திகைத்துப் போய் விட்டார்.

''சார்... அது... பெரிய கம்பெனி...!'' என்றார் தயக்கத் துடன்.

''ஸோ... வாட்? அதுக்காக சரக்கை அவன்கிட்டே குடுத் துட்டு... நாம கெஞ்சிகிட்டு நிக்கணுமா?'' என்றான்.

அதோடு அந்த விஷயத்தை விட்டு விட்டு வேறு வேலை பார்க்க ஆரம்பித்தான்.

அவனது காபினை விட்டு வெளியே வந்த ஜெனிஃபர் சிவஹரிக்குத் தெரியாமல் சரவணபவனுக்கு ஃபோன் செய்தார். சரவணபவன் அப்போது பைனான்ஸ் கம்பெனியை யும் பைக் ஷோ ரூமையும் கவனித்துக் கொண்டிருந்தான்.

அவன் உடனே புறப்பட்டு வந்தான். அவனிடம் சிவஹரியே விஷயத்தைச் சொன்னான்.

''நீ என்னடா, தம்பி சொல்றே?''என்றான்.

சரவணபவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

''அண்ணா! நீ பேசறது கரெக்ட்தான். ஆனா, இந்த வியா பாரத்துல கொஞ்சம் கிரெடிட்க்கு குடுத்துத்தான் ஆகணும். நாம டீல் பண்ற கம்பெனியோட கிரெடிபிலிட்டி பாக்கணும் இல்ல?'' என்றான்.

சிவஹரி சற்றுத் தணிந்தான். ''ஓ...! நீ அப்படி ஃபீல் பண்றியா?'' என்றான்.

லேசான புன்சிரிப்போடு சரவணபவன் சிவஹரியைத் தன் வழிக்குக் கொண்டு வருவதைப் பார்த்துக் கொண்டு

நின்றிருந்தார் ஜெனிஃபர். அதற்குள் மிஸ்ரா மறுபடியும் பேசினார். இப்போது சரவணபவன் பேசினான்.

''சார்! அண்ணன் என்ன ஃபீல் பண்றாங்கன்னா அமௌன்ட் வர்றதுக்கு ரொம்ப லேட்டானா அடுத்த கன்சைன்மென்ட் டுக்கு இன்வெஸ்ட்மென்ட் வேணுமில்ல. நாங்க இப்பத்தான் வளர்றோம். இலாபம் கம்மியானாக் கூட எங்களுக்கு மட்டும் கொஞ்சம் கன்சிடரேஷன் குடுத்து சீக்கிரம் பட்டுவாடா செஞ்சா... வளர்ந்ததுக்கப்புறம்... எவ்வளவு வேண்ணா கிரெடிட்டுக்குத் தர்றோம்,'' என்றான்.

அவர்களது சரக்கு தரத்தில் நன்றாக இருப்பது அறிந்தவர் மிஸ்ரா. அதனால் சற்று ஆலோசனைக்குப் பிறகு,

''சரி... உங்களுக்கு மட்டும் இன்ஸ்டன்ட் பேமண்ட். ஆனா, மத்த யாருக்கும் சொல்லாதீங்க...'' என்று விஷயத்தை முடித்தார்.

விஷயம் முடிந்தவுடன் சிவஹரிபவன் இடி இடியென்று சிரித்தான்.

''டேய்! பயங்கரமான ஆள்றா... நீ. நான் சொன்னதையே தான் நீயும் சொன்னே. ஆனா, கொஞ்சம் வெண்ணெய் தடவி... சர்க்கரை தடவியே... மடக்கிட்டடா!'' என்றுமீண்டும் சிரித்தான்.

ஜெனிஃபரும் சரவணபவனும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

காரில் திரும்ப வரும்போது மறுபடியும் சிரிக்கிற அண்ணனைப் பார்த்து,

''போதும்... விடுண்ணா!'' என்று லேசாக வெட்கப்பட்டான் சரவணபவன்.

''டேய், ஐ டெல் யூ சம்திங். இதே டெக்னிக்கை பொண்ணுங்க கிட்டே யூஸ் பண்ணினேன்னு வச்சுக்க... யு வில் பி வெரி சக்ஸஸ்ஃபுல்!'' என்றான்.



''இதாவது ஏதோ ஒரு நேரம் ஐஸ் வைக்க வேண்டியிருக்கு. அது இருபத்திநாலு மணி நேரமும் இல்ல செய்யணும்!'' என்று சரவணபவன் சிரிக்கவும், இருவரும் மீண்டும் சிரித்தார்கள்.

''பார்க்கலாம்டா... பாக்கலாம்... நீயும் ஏதோ ஒரு ஆள்கிட்ட சரண்டராயித்தானே தீரணும்!'' என்று கலாட்டா செய்கிற அண்ணனிடம் -

''அண்ணா! அதில யெல்லாம் உன்னைப் பாத்துத்தான்... நான் பழகணும். ஆனா, நீயே எங்கே பொண்ணுங்க ளைக்கண்டாலும் ஓடறே!'' என்று சரவணன் கேலி செய்தான்.

''டேய்... உண்மையைச் சொல்லட்டா... உண்மையாகவே பொண்ணுங்களைக் கண்டா எனக்குப் பயம்தான்!'' என்றான் சிவஹரிபவன்.

''என்ன பயம்?''

''பின்னே நம்ம சுதந்திரத்தைப் பறிக்கறதுக்குன்னே வந்த இனமாச்சே! அவ்வளவு சீக்கிரம் சிக்கிறக் கூடாதுடா!'' என்றான்.

''அண்ணா! நானே பேசணும்னு இருந்தேன். முப்பது வயசு ஆச்சு. இன்னும் கல்யாணத்தைப் பத்திப் பேச மாட்டேங் கறானேடா... என்று அம்மா ரொம்பக் கவலைப்படறாங் கண்ணா...'' என்றான்.

''டேய்! நீயே எப்படியோ எதையோ சொல்லிச் சமாளி. கொஞ்ச நாள் ஃபிரீயா இருந்துக்கறன்டா!'' என்று கெஞ்சுகிற அண்ணனைக் கவலையுடன் பார்த்தான்.

ஆறு மாதங்கள் வேகமாக ஓடிவிட்டன.

சிவஜோதி இப்போது அலுவலகத்தில் ஒரு முக்கிய ஆளாகி விட்டாள். பி.ஏ.வுக்குப் பி.ஏ. என்று அவளை எல்லாரும் செல்லமாகக் குறிப்பிட்டார்கள்.

அன்று சனிக்கிழமை, முக்கியமான ஒரு ஆர்டர் விஷய மாகச் சிவஹரி பவன் காலையிலேயே வந்து விட்டான். ஜெனிஃபரின் வருகைக்குக் காத்துக் கொண்டிருந்தான்.

ஜெனிஃபர் வரவில்லை. செய்திதான் வந்தது.

முதல் நாளிரவு ஏதோ மயக்கம் போட்டதாகவும், டாக் டரிடம் அழைத்துப் போக, மிகவும் பலவீனமாக இருக்கிறதால் குறைந்தது மூன்று மாதமாவது ரெஸ்ட்டில் இருக்க வேண்டுமென்று சொல்லி விட்டதாகவும் தகவல்.

சரவணபவனும் அன்று வெளியூர் போயிருந்தான். சிவஹரி டென்ஷனாகி விட்டான்.

எல்லாக் கோபத்தையும் காட்டி அழைப்பு மணியை அடித்தான்.

சிவஜோதி வந்து நின்றாள் - எப்போதும் போல் லேசான நடுக்கத்துடன்.

''அந்தக் கம்பெனி சம்பந்தமான ஃபைல் எங்கேயிருக் குன்னு தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியும்... சார்... கொண்டு வந்திருக்கேன்,'' என்று அவள் தயாராய் நீட்ட, சற்றே தணிந்தான்.

லேசான அச்சத்துடனே நடமாடினாலும் அவன் கேட்ட விவரங்களை யெல்லாம் அவள் மடமடவென்று எடுத்துக் கொடுத்தாள். அன்றைக்கே ஃபோனில் தொடர்பு கொண்டு ஆர்டரை முடித்து வாங்க மாலையாகி, இருவரும் சாப்பிடக் கூடப் போகவில்லை. சமோசா, டீ என்று அவ்வப்போது சாப்பிட்டுக் கொண்டு வேலையை முடித்தார்கள்.

அதற்குப் பிறகுதான் 'அப்பாடா' என்று சோம்பல் முறித் தான் சிவஹரி. சுழற்சேரைச் சுழற்றிச் சிரித்துக் கொண்டான்.

பிறகுதான் அவள் தயங்கியபடி நிற்பதைக் கவனித்தான். அதுமட்டுமில்லாமல், அப்போதுதான் தனக்கும் பசி உணர்வு வருவதையும் உணர்ந்தான்.



''நீ வேற சாப்பிடவே இல்லை!'' என்றான்.

''நீங்களுந்தான்... சார்...'' என்றாள் தயக்கத்துடன்.

''ஆமா... இல்லே?''என்று சிரித்தான்.

ஆஃபீஸ் பியூனை விட்டு இருவருக்கும் சாப்பிட வாங்கி வரச் சொல்லி விட்டு,

''சரி... நீ போய் ஃப்ரெஷ் பண்ணிட்டு வா...'' என்று தனது ஓய்வறைக்குப் போனான். சற்றுக் கழித்து வந்தவளிடம் டேபிளில் அந்தப் பக்கம் உட்கார் என்று சைகை காட்டினான்.

அவள் வெகுவாகத் தயங்கினாள்.

''ஹலோ! வேலை நேரத்தில்தான் முதலாளி, தொழிலாளி எல்லாம்!'' என்றான்.

இருவரும் அமைதியாகச் சாப்பிட்டார்கள். பியூன் பரிமாறினான்.

சாப்பிட்டு முடித்து அறைக்கு வந்தான். கைக்கடி யாரத்தைப் பார்த்தான்.

மணி ஆறாகிவிட்டது. ''நீ கிளம்பு, சிவா,'' என்றான்.

''சரிங்க... சார்...'' என்று கிளம்பினாள்.

கதவு வரை போனவளை மறுபடியும் அழைத்தான்.

''அது சரி... எதுக்கு இப்படி நடுங்கிச் சாகறே? நான் ஒண்ணும் பூதம் இல்லே. மனுஷன்தான், தெரியுதா?'' என்றான்.

அவள் அதற்கும் பயத்துடன் தலையாட்ட, அவன் சிரித்து விட்டான்.

''உன்னைத் திருத்தவே முடியாது. நீ கிளம்பு...'' என்றான்.

வழக்கம் போல் விட்டால் போதும் என்று பரபரப்பாகப் போகிற அவளை அவன் சிரிப்பு துரத்திக் கொண்டு காற்றில் மிதந்தது.

அன்றிரவு

எட்டு மணியிருக்கும். சிவஹரி வெறுமையாக உணர்ந்தான்.

முதன் முதலாக ஒரு இளம் பெண்ணுடன் நாள் முழுதும் தனியாக வேலை செய்திருக்கிறோம் என்ற எண்ணமே திரும்பத் திரும்பத் தோன்றியது. அதிலும் சிவஜோதியின் நடுக்கமும், பயந்த முகமும் திரும்பத் திரும்ப மின்னி மறைய,

இப்படி ஒரு பெண் இருப்பாளா என்று லேசான சிரிப்பு வேறு தோன்றியது.

பெண்களைப் பற்றி யெல்லாம் யோசிக்க ஆரம் பித்தாயிற்று. இனி அநேகமாக அம்மாவிடம் கல்யாணத்துக்கு ஒப்புதல் சொல்லி விட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டான்.

சரவணன் லயன்ஸ் கிளப் செயல்பாடுகளில் ஆர்வம் காட்டினான். அது தொடர்பாக ஏதோ கான்ஃபரன்ஸ் விஷய மாகத்தான் டெல்லி போயிருந்தான். வீட்டில் சரவணனும் இல்லாததாலோ என்னவோ அன்று சிவஹரி தனிமையாய் உணர்ந்தான். அதற்கு மேல் தனிமையில் இருக்க விரும்பாத வனாய் ஊருக்குக் கிளம்பினான்.

பத்து மணிக்கு வந்திறங்குகிற மகனைப் பார்த்து, அம்மா வுக்கு ஆச்சரியமாகிப் போனது.

''என்றா பயலே, வூட்டு ஞாபகம் வந்துருச்சாக்கும்!'' என்று வரவேற்றார் தந்தை.

''அம்மா... இன்னைக்கு ஒரு பெரிய ஆர்டர் பிடிச்சேன். சந்தோஷத்தைச் சொல்லலாம்னா சரவணனும் வூட்ல இல்லே. ரொம்பப் போர்ம்மா. சரி... நாளைக்கு லீவுதானே, உங்களை யும் பாத்துட்டுப்போலாம்னு வந்துட்டேன்,'' என்றான்.

மறுபடியும் அங்கே லைட்டாக டிஃபன் சாப்பிட்டு விட்டு அம்மாவிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான். அம்மா அதே சமயத்தில் -



''டேய்... கண்ணா! இன்னும் எத்தனை நாளைக்குடா பதில் சொல்லாமலே காலம் ஓட்டுவே. நேரங் காலத்தோட ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கடா...'' என்றார்.

வழக்கம் போல் அந்தப் பேச்சை விட்டுட்டு, வேற நாயம் பேசு என்று சொல்லாமல்,

''செய்யலாம்மா... கொஞ்சம் பொறு, சொல்றேன்,'' என்றான்.

''அப்ப பொண்ணு பாக்கட்டுமா?'' என்று ஆர்வமாகக் கேட்டவரிடம்,

''வேண்டாம்மா... நானே...சொல்றேன்... அப்புறம் பாரு...'' என்றான்.

அம்மாவின் முகம் வெகுவாக மலர்வதைப் பாசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். பின் படுக்கைக்குப் போனான்.

சரவணபவன் ஃபோனில் பதினோரு மணிக்கு அழைத் தான்.

''அம்மா... என்ன அண்ணன் திடீர்னு அங்கே வந்திருக் கிறானாம்!'' என்று கவலையுடன் விசாரித்தான்.

''ஒண்ணும் இல்லடா... தம்பி... இன்னைக்குப் பெரிய ஆர்டர் ஒண்ணு கிடைச்சுதாம். சந்தோஷம் கொண்டாட,நீயும் அங்கே இல்லையா? தனியாய் இருக்கப்பிடிக்காமக் கிளம்பி வந்துட்டான்,'' என்றார்.

''அவ்வளவுதானே? நான் உங்களுக்கு யாருக்காவது உடம்பு சரியில்லையோ என்னமோன்னு பயந்து போனேன்.''

''அது சரி... இன்னொரு விஷயம் கேளு, உங்கண்ணன் கல்யாணத்துக்குப் பச்சைக் கொடி காட்டிப் போட்டான் டோய்...''என்றார் அம்மா உற்சாகமாக.

''வெரிகுட்... வெரிகுட்... அப்ப பொண்ணு பார்க்க ஆரம்பியுங்க...'' என்றான்.

''இல்ல... இப்ப வேண்டாம், நானே சொல்றேன்... அதுக்கப்புறம் பொண்ணு பாக்கலாங்கறான்...'' என்றார்.

''ஓ! அது வேற அப்படியா? சரி... விடு. அவன் போக்கில் போய்த்தான் ஆகணும். பொறுத்தது பொறுத்தாச்சு... இன்னும் கொஞ்ச நாள்தானே,'' என்று அம்மாவை நிதானப்படுத்தினான்.

'பரவாயில்லை... ரெண்டு நல்ல செய்திகள்... ஒண்ணு பெரிய ஆர்டர். இன்னொண்ணு கல்யாணத்துக்கு அண்ணன் சம்மதம் சொன்னது!' என்று எண்ணிக் கொண்டே உறங்கப் போனான் சரவணன்.

## 19

ஒரு மாதம் போயிருக்கும்.

அன்று பண்ணை வீட்டில் ரிலாக்ஸ்டாக இருந்தான் சிவஹரி பவன். போதும் ஓயாமல் அலைந்தது, ஒரு நாள் லீவுடா தம்பி என்று சரவணனிடம் சொல்லிவிட்டான்.

''சரிண்ணா!'' என்றான் அவனும். ஆனால் எதிர்பாராத விதமாக அவன் கையெழுத்து ஒரு விஷயத்துக்குத் தேவைப் பட்டது.

எந்தக் கெட்ட ஈடுபாடுகளும் இல்லாத சிவஹரிக்கு ரிலாக்ஸ்டாக இருக்கும்போது சிகரெட் பிடிப்பது மட்டும் சற்றே பிடிக்கும். அதிலும் தங்களது பண்ணை வீட்டில் மலைகளையும், பச்சை வயல்களையும் பார்த்தபடி



நெடுநேரம் புல்வெளியில் அமர்ந்திருப்பதும், இலக் கில்லாமல் நடப்பதும் வெகுவாகப் பிடிக்கும். அவ்வப்போது அப்படி வந்து ஒரு நாளாவது கழிப்பது என்பது வழக்கம். அது சரவணனுக்கும் தெரியும். அதே போல் ஃப்ளையிங் கிளப், கார்ரேஸ் என்று வீர விளையாட்டுகளிலும் ஆர்வம் அதிகம்.

''அண்ணா, இதெல்லாம் வேண்டாமே, அம்மாரொம்பக் கவலைப்படறாங்க...'' என்றான் சரவணன்.

''போடா! லைஃப்ன்னா எப்பப் பாரு, பணம்தானா? கொஞ்சம் த்ரில்லும் வேணும்டா... பரபரப்பு இருக்கணும்!'' என்பான்.

இன்றைக்கு ரிலாக்ஸ்டாக இருக்கலாம் என்றுதான் வந்திருந் தான். ஆனால்,சரவணன் ஃபோன் செய்து, ''அண்ணா! கண்டிப்பாகக் கையெழுத்து வேணுமே!'' என்றான்.

''டேய்! ஏண்டா, இப்படி ஹாலிடே மூடைக் கெடுக்கறே?'' என்றான்.

''சாரி... அண்ணா,'' என்றான்.

சற்று யோசனைக்குப் பிறகு, ''சரி, நீ ஒண்ணு பண்ணு, லேப் டாப்பை எடுத்துகிட்டு சிவஜோதியை வரச் சொல்லு. கையெழுத்துப் போடறதுக்கு முன்னாடி ஒரு தடவை செக் பண்ணிக்கிறேன். அதோட மும்பைக் கம்பெனியோட ஃபைலை யும் எடுத்துட்டு வரச் சொல்லு. இல்லாட்டி நீ வர்றியா?'' என்றான்.

''அண்ணா! நான் வர முடியாது. நான் இங்கே ஹெல்ட் அப்.. அவங்களையே அனுப்பறேன்!'' என்றான்.

சிவஜோதி வந்தவுடன் அவசரமான கையெழுத்தை மட்டும் போட்டு டிரைவரிடம் கொடுத்து நீ போய்க் குடுத்துரு. நான் இவங்களை கார்ல கூட்டிட்டு வந்தர்றேன் என்றான்.

சிவஜோதி தனியாக இருக்க அச்சப்படுவாள் என்பதற் காகப் பண்ணையாள் ஒருவனைப் பார்வையிலே இருக்கிற மாதிரி இருக்கச் செய்தான். ஆனால், அரைமணி நேரத்துக்குப் பிறகு பண்ணையாளைத் தேடிக் கொண்டு உறவினர் ஒருவர் வந்து அவசரமான சாவுச் செய்தி சொல்ல, அவன் வந்து தலையைச் சொறிந்து கொண்டு நின்றான்.

''என்னய்யா?'' என்றான் சிவஹரி.

''ஐயா! ரொம்ப முக்கியமான எழவு சேதிங்க!'' என்றான்.

''இங்கே அவசரத்துக்கு ஏதாவது வேணும்னா என்ன செய்ய?'' என்றான் கடுப்பாக.

''சாப்பாடு வேண்ணா கடையில் வாங்கிட்டு வந்து குடுத்துட்டுப் போறனுங்க. ஆறேழு மணிக்குள்ள வந்துர்ற னுங்க...'' என்றான்.

''வேற யாராவது வரச் சொல்லலாமில்லே?'' என்றான்.

''ஐயா! ஊரில முக்கியமான இழவுங்க.. ஒரு நாளைக்குப் பொறுத்துக்குங்க!'' என்று கெஞ்சவும், வேறு வழியில்லாமல் ஒப்புதல் கொடுத்தான்.

பகல் முழுவதும் கணக்கு வழக்குகள் பார்த்தார்கள். பகலுணவுக்கு ஒரு இடைவேளை எடுத்துக் கொண்டார்கள். மாலையானதும்,

''டீ சாப்பிட்டா நல்லா இருக்கும் இல்லே,'' என்றான் சிவஹரிபவன்.

லேசான அச்சத்துடனே இருந்தாள் சிவஜோதி. ஆனால் அவனே வாய்விட்டுச் சொன்னதற்குப் பிறகு, ''நான் வேண்ணா போடட்டுமா?'' என்றாள். சமையலறைக்குச் சென்று பொருட்களைத் தேடி எடுத்துத் தேநீர் தயாரித்தாள்.



இயல்பாக உள்ளே வந்த சிவஹரி நின்று அவள் தேநீர் தயாரிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் அவன் ஒரு இளம் பெண்ணுடன் தான் தனியாக முதன் முதலாகத் தனியான ஓரிடத்தில் நேரம் கழிக்கிறோம் என்று உணர்ந்தான்.

சுவாரசியமாய்க் கவனித்துக் கொண்டிருந்தான். வெகு நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அவள் வேலை செய்வதைப் பார்த்து ரசித்தான்.

அழகாகவும், எளிமையாகவும் அவள் இருப்பதை உணர்ந் தான். அவள் அங்கேயே இருந்த டம்ளர்களில் டீயை ஊற்றிக் கொடுக்க, அதைப் பருகிய வண்ணம், அவளை முதன் முதலாகப் பார்ப்பது போல் பார்த்தான்.

சிவஜோதியின் முகம் சிவந்து போனது. ''சிவா! நீ நிஜமாவே ஸ்மார்ட் அன்ட் பியூட்டிஃபுல்!'' என்றான்.

அவள் முகம் மேலும் சிவந்தது. சட்டென்று வெளியே நகர்ந்தாள். அவளது வெட்கம் பார்த்து அவனும் வெளியே வந்தான்.

''சூப்பர் அனுபவம். இந்த மேற்குத் தொடர்ச்சி மலையை வேடிக்கை பார்த்துகிட்டு, ஒரு அழகான பொண்ணு டீ போட்டுக் குடுக்க, அதை ரசிச்சுக் குடிக்கற சந்தர்ப்பம் கிடைக்கும் என் வாழ்க்கையில் என்று நினைக்கவேயில்லை!'' என்று கிண்டல் செய்தான்.

'சார், ப்ளீஸ்! கேலி செய்றீங்க!'' என்று அவள் மேலும் வெட்கப்பட்டாள். ஆனால், தொடர்ந்து,

''உண்மைதான் சார்! இந்த இயற்கைச் சூழல், ரொம்ப அருமையா இருக்கு!'' என்று மலையையும் வயல்களையும் ரசித்துப் பார்த்தாள்.

அவள் கண்களை அகல விரித்து அந்தக் காட்சிகளை ரசித்துப் பார்ப்பதை அவனும் ஒரு ஆழ்ந்த பார்வையுடன் ரசித்தான்.

''சரி சரி, பார்வையிலயே எல்லாத்தையும் அள்ளிகிட்டுப் போயிராதே. எங்களுக்கும் கொஞ்சம் மிச்சம்... வை!'' என்று அவன் மேலும் கேலி செய்ய, அவள், ''ஐயோ! சார்!'' என்று கலகலவென்று சிரித்தாள்.

அந்த மாலை நேரம் இளவெயிலும், ரம்மியமும் அவள் சிரிப்பும் அவன் உள்ளத்தில் எழுச்சியையும், கிளர்ச்சியையும் உண்டாக்கியது கண்டு திடுக்கிட்டுப் போனான்.

சட்டென்று மீட்டுக் கொண்டான். ''கொஞ்சம் வேணா சுற்றிப் பாக்கலாமா?'' என்றான்.

'ம்...' என்றாள் உற்சாகமாக.

வயல்களினூடே நடந்தார்கள். அவள் வெகுவாக ரசித்தாள்.

சூப்பர் சார் என்றுமீண்டும் மீண்டும் சொன்னாள். திரும்ப வீட்டுக்கு அருகில் வந்தவுடன் பின்புறத்தில் இருந்த தோட்டத் தில் கொய்யாச் செடி நெல்லிக்காய்கள் என்று பார்த்தவுடன் பெண்களுக்கே யுரிய ஆர்வத்துடன் -

''ஹை! கொய்யா, நெல்லிக்காய்!'' என்று அவள் ஆர்வமாகக் குதிப்பதைக் கண்டு அவனே பறித்துக் கொடுத்தான்.

அவள் வீட்டுக்குள் நுழைந்து கொய்யாக் கனிகளைத் துண்டு போட்டு அவனிடம் கொடுக்க,

''ரொம்ப நாளாச்சு, இப்படியெல்லாம் நேரம் ஒதுக்கி!'' என்று அவனும் ரசித்து உண்டான். அவள் உள்ளே போய்ப் பாத்திரங்களைக் கழுவி விட்டு வெளியே வருகையில்,

''சிவா, கொஞ்சம் தண்ணீர்!'' என்று அவனும் உள்ளே வர, இருவரும் எதிர்பாராத விதமாக மோதிக் கொள்ள, அவள் விழப் போனாள். அவன் தாங்கிக் கொண்டான்.



இதுவரை அவன் நினைத்துப் பார்க்காத உணர்வுகள் பொங்க, பார்வைகள் நிலை குத்தி நிற்க, அவன் இறுக அணைத்தான்.

அவள் சட்டென்று விலகிக் கொண்டாள். கோழிக்குஞ்சு போல் அவள் நடுங்கிக் கொண்டு நிற்பதைப் பார்த்தவுடன் அவனுக்குள் பரிவு மேலிட்டது.

''சிவா! ஏன் இப்படிப் பயப்படறே?'' என்று அணைத்துக் கொண்டு தேற்றினான். பிறகு கிறக்கமான குரலில்,

''சிவா! நான் ரொம்ப நல்ல பையன். இதுவரைக்கும் பொண்ணுங்க பக்கமே திரும்பிப் பார்க்காதவன். முதன் முதலா... இப்படி மாட்டிக்கிட்டேன். ஐ திங்க்... யு ஆர் கோயிங் டு பி மை லைஃப் பார்ட்னர்!'' என்றான்.

அவள் திகைத்துப் போய் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஹேய்! நிஜமாத்தான். கொஞ்ச நாளாவே யுவர் பிரசன்ஸ் இஸ் டிஸ்டர்பிங் மீ. ஏன்னு எனக்குப் புரியலே. இன்னைக் குத்தான் முழுசா புரிஞ்சுது. வில் யு மேரி மீ?'' என்றான்.

அவன் பிரபோஸ் செய்கிறான் என்பது புரிய, அவள் மலைத்துப் போய் நின்றாள்.

''சார்!'' என்றாள்.

''சார் இல்லே... வேற ஏதாவது கூப்பிடு.''

''உங்க லெவலுக்கும், எங்க தகுதிக்கும்...'' என்று அவள் திணற,

''ஹேய்! இதுல தகுதி...என்ன இருக்கு? நீ என் மனசுக்குப் பிடிச்ச பொண்ணு. இதுக்கு மேலே என்ன தகுதி வேணும்?'' என்றான்.

அவளுக்கு விஷயம் முழுமையாகப் புரிய அவள் மலங்க விழித்தபடி நின்றாள்.

''ஹேய்! என்ன இந்த முழி முழிக்கறே? நான் அழகா இல்லையா? உன் மனசுக்குப் பிடிக்கலையா? பொருத்தமா இல்லையா?'' என்று அவன் சரமாரியாகக் கேள்விகள் எழுப்ப,

''இல்லே... அதுக்கு இல்லே...'' என்று அவள் திணறினாள்.

''இல்லே... எதுக்கு இல்லே? மக்கு! பிடிக்குதா... இல்லையா? அதைச் சொல்லு...'' என்றான்.

''உங்களைப் போய்ப் பிடிக்கலேன்னு யாராவது சொல் வாங்களா? எட்டாத பழத்துக்கு...'' என்று அவள் ஏதோ பேசப் போக -

''எல்லாம் எட்டற பழம்தான்.பாரு, இப்பக் கிட்டக்கவே இருக்கேன்!'' என்று அருகில் முத்திரைகளைப் பதிக்க, இருவரும் தன்னிலை இழந்தார்கள்.

திகைத்துப் போய்க் காரின் பின் சீட்டில் அமர்ந்திருந்தாள் சிவஜோதி.

காரை ஓட்டிக் கொண்டிருந்த சிவஹரிபவன், ''ஐ'ம் சாரி! சிவா!'' என்று ஆயிரம் முறை சொல்லி விட்டான்.

அலுவலகத்திற்கு வந்து ஃபைல்களை வைத்துவிட்டு ஏதோ பேயறைந்தவள் போல் அவள் நிற்பதைக் கண்டு அவன் இளகிப் போனான்.

''சே! அவசர புத்திங்கறது சரியாப் போச்சு...சிவா... ஆனா, ஒண்ணு மட்டும் உண்மை. எங்க அம்மா மேல சத்தியமாச் சொல்றேன். நீதான் என்னுடைய லைஃப் பார்ட்னர். தைரியமாப் போ... பத்தே நாள்ல கல்யாணம். என்னை நம்பு!'' என்றான் வேகத்துடன்.

அதற்குப் பிறகுதான் அவள் ரிலாக்ஸானாள்.



''ஹரி!'' என்று அவன் முகம் பார்த்தாள்

''ஹேய்! தட்ஸ் நைஸ். இனிமே அப்படியே கூப்பிடு...'' என்று அவன் புன்னகைத்தான். அவள் அதைக் கவனிக் காதவள் போல் தொடர்ந்தாள்.

''ஹரி! நாங்க நடுத்தரக் குடும்பத்துக்காரங்க... எங்களுக்கு மானந்தான் பெரிசு. அது போயிருச்சுன்னா... அதுக்கப்புறம்... உசுரோட இருக்கறதுல... அர்த்தமேயில்லை!'' என்றாள்.

''ஏய்! பெரிய...பெரிய வார்த்தையெல்லாம் பேசாதே. இனி நீ வேற, நான் வேற இல்லே. நீ என்னோட உயிர். நான் உன்னோட உயிர்... சரியா? தைரியமாயிரு!'' என்று ஆறுதல் படுத்தி அனுப்பி வைத்தான்.

வீட்டுக்குப் போன சிவஜோதி ஆழ்ந்த மௌனத்தில் கரைந்தாள். அவன்தான் அவசரக்காரன். மறுப்பதற்கு ஏன் தனக்குக் துணிவில்லாமல் போயிற்று என்று வேதனையில் ஆழ்ந்தாள். ஆனால், அதே சமயத்தில் அவன் அப்படி யொன்றும் பெண்கள் விஷயத்தில் பலவீனமானவன் அல்ல என்பதும், தன் மேல் உண்மையாகவே அவனுக்கு ஈடுபாடு ஏற்பட்டுள்ளது என்றும் அவளுக்குப் புரிந்தது.

என்ன செய்வது என்றே புரியாமல் இருந்தாள். இரவு ஒன்பது மணிக்கு அவனிடம் இருந்து ஃபோன் வந்தது.

அவள் அம்மாதான் எடுத்தார். ''சிவா! உங்க முதலாளி பேசறார்,'' என்று ஃபோனைக் கையில் கொடுத்துவிட்டு, அந்தப் பக்கம் போனார்.

''சொல்லுங்க...'' என்றாள்.

''ஒண்ணுமில்லே! ரொம்பத் தப்புப் பண்ணிட்டேன்னு கவலையாப் போச்சு. ஆர் யு ஆல்ரைட்?'' என்றான்.

''ம்...'' என்றாள்.

''ஹேய்! எதைப் பத்தியும் கவலைப்படாதே. தவறுக்கு நான் பொறுப்பேத்துக்கறேன்... நான் சொன்னது சொன்னது தான். பத்தே நாள்ல அம்மாகிட்ட பேசி முடிச்சர் றேன்...'' என்றான்.

''ம்...'' என்றாள்

''ஏதாவது ரெண்டு வார்த்தை பேசேன். நீ இப்படி ஒத்தை வார்த்தையில் பதில் சொன்னா... ஐ ஃபீல் வெரி கில்ட்டி!'' என்றான் கெஞ்சுதலாக.

அவள் இளகிப் போனாள். அலுவலகத்தில் எல்லாரையும் விரட்டுகிற அவன் தன்னிடம் கெஞ்சுவது அவளுக்குள் இணக்கத்தை ஏற்படுத்தியது.

''ஓ..கே...! ஓ...கே...! நான் ஒண்ணும் நெனச்சுக்கலே!'' என்றாள்.

''தப்பாச் சொல்றே!'' என்றான்.

''வ்வாட்?'' என்றாள்.

''நீ... என்னை நினைக்கணும். நான் உன்னை நினைச்சுட் டிருக்கணும், அதுதான் நியாயம்!'' என்றான் வெடிச் சிரிப்புடன்.

''வேலை முடியறதுக்கு முன்னால இதை யோசித்திருக் கணும். தப்பாக் கணக்குப் பண்ணீட்டு...'' என்று அவள் இரு பொருளில் பதில் சொல்ல, சூழ்நிலையைக் கருதி அப்படிப் பேசுகிறாள் எனப் புரிந்து கொண்டு சிரித்தான்.

''எப்படியோ கணக்குப் பண்ணீட்டேன் இல்ல. ஒண்ணு சொல்லட்டா. கோபிச்சுக்கக் கூடாது!'' என்றான்.

''இல்லே... சொல்லுங்க...'' என்றாள்.

''இதுவரை நான் செஞ்ச தப்புக்கள்லயே... ரொம்ப ஸ்வீட்டான தப்பு இதுதான்...'' என்று சிரித்தான்.



அவள் தன்னையும் மீறிய புன்னகையுடன் ஃபோனை வைத்தாள்.

## 20

இரண்டு நாட்கள் போயிருக்கும்.

சிவஜோதி அலுவலகத்தில் அவனை நிமிர்ந்தே பார்க் காமல் வேலைகளைச் செய்தாள். அவள் சங்கடம் உணர்ந்து அவனும் தொல்லை செய்யவில்லை. ஆனாலும், அவளறி யாமல் அவள் முகத்தை ஆர்வத்துடன் கவனிப்பான்.

வெள்ளிக்கிழமை இரவு மறுபடியும் ஃபோன் செய்தான். பெரும்பாலும் சனி, ஞாயிறுகளில் விடுமுறை இருக்கும். வேலை இருக்குமென்றால் சனிக்கிழமை வந்து விடுவார்கள்.

மறுநாள் விடுமுறை என்று அறிவித்திருந்தான். அவள் ஃபோனில் லைனில் வந்ததும்,

''ஹேய்! என்ன முகம் பாத்துக்கூடப் பேச மாட்டேங்கறே!'' என்றான்.

அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ''இல்லே... சும்மாதான்...'' என்றாள்.

''என்னசும்மாதான், ரெண்டு வார்த்தை சிரிச்சுப் பேசினா... என்ன குறைஞ்சு போயிரும்!'' என்றான் கடுப்புடன்.

அவள் பயந்து போனாள். ''வந்து... வந்து...'' என்று தடுமாறினாள்.

''என்னத்தை வந்து... போயி... இங்க பாரு. நாளைக்கு நான் ஒரு இடத்துக்கு உன்னைக் கூட்டிட்டுப் போறேன். நான்

சொல்ற இடத்துல நீ நிக்கறே.. நான் வந்து பிக்கப் செஞ்சுக்கறேன்,'' என்றான்.

''ப்ளீஸ்... வேண்டாமே...'' என்றாள்.

''நோ ரெஃப்யூசல். வர்லேன்னா நீ என்னை மன்னிக்க லேன்னு அர்த்தம்...'' என்றான். டொக்கென்று வைத்து விட்டான்.

சிவஜோதிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நல்லவேளையாகப் பொள்ளாச்சிப் பக்கத்தில் ஒரு தோழி இருந்தாள். அங்கு போவதாய்ச் சொல்லி அனுமதி வாங்கிக் கொண்டு புறப்பட்டாள்.

வழியில் பிக்கப் செய்து கொண்டான். ஏ.சி.கார் என்பதால் அவள் அமர்ந்திருப்பது வெளியே தெரியாதென்றாலும் அவளுக்கு நடுக்கமாகத்தான் இருந்தது.

''என்ன... ஹரி... நீங்க... என் நிலைமை புரிஞ்சுக்காம...'' என்று வருத்தத்துடன் கூறவும், அவன் திரும்பி அவள் முகம் பார்த்துச் சிரித்தான்.

''ஹேய்... நாளைக்கு என் பர்த்டே உன் கூடக் கொண் டாடணும்னு ஆசையாய் இருந்தது. ஆனா முடியாது. அதனால இன்னைக்கு ஒரு நாள் உன்னோட செலவழிக்க லாம்னு...'' என்று அவன் கெஞ்சலாகச் சொல்லவும், அவள் கொஞ்சம் சமாதானமானாள்

பொள்ளாச்சிக்கு முன்பாகவே ஒரு குறுக்குப் பாதையில் போய், ஒரு தோட்ட வீட்டிற்குப் போனார்கள்.

''என் ஃப்ரெண்டோட வீடு, விஷயத்தைச் சொல்லி... பர்மிஷன் வாங்கினேன்...'' என்றான்.

''ஐயய்யோ... என்னைப் பத்திச் சொன்னீங்களா?'' என்று அவள் பயந்தாள்.



''நீன்னு சொல்லலே. ஆனா, மேரேஜ் ப்ரபோசலுக்காக.. ஒரு பொண்ணுன்னு மட்டும் சொன்னேன்...'' என்றான்.

அந்த கெஸ்ட் ஹவுஸும் அருமையாக இருந்தது.

மிகவும் ரசித்தார்கள்.. உனக்குப் பாடத் தெரியும்னா பாடேன் என்று பாடச் செய்தான். அவள் குடும்பம் பற்றி யெல்லாம் விசாரித்தான்.

நடுத்தரக் குடும்பம். இரண்டே பெண்கள். சொந்த வீடு. கொஞ்சம் நிலபுலம் இருக்கிறது என்று அவள் சொல்வதை யெல்லாம் ஆழ்ந்து கேட்டுக் கொண்டான். நிறைய ஃபோட்டோக்கள் எடுத்தான். தானும் கூட நின்று போஸ் கொடுத்தான். அவனுடைய வாழ்வின் நிறைய நிகழ்வுகளை நகைச்சுவையாகப் பகிர்ந்து கொண்டான். அவனும் கூடப் பாடினான். நடித்துக் காட்டினான். அவளும் தனது இளமைக் காலத்துக் குறும்புகளை யெல்லாம் பகிர்ந்து கொண்டாள்

பகலுணவு அங்கேயே உண்டார்கள். பேச்சுக்கு நடுவே அவள்,

''ஹரி, எனக்குப் பயமாயிருக்கு உங்க அம்மாகிட்டே சீக்கிரம் பேசுங்க...'' என்றாள்.

''இன்னும் மூணே நாள் டயம் குடு. நாளன்னைக்கு ஃபிளையிங் கிளப்புக்குப் போறேன். அதை முடிச்சுட்டு அடுத்த நாள் ஊருக்குப் போய் அம்மா கிட்டே பேசறேன்.''

அவள் பீதியுடன் அவனைப் பார்த்தாள். ''பிளையிங் கிளப்பா? ஹரி... ப்ளீஸ் இனிமே இந்த ரிஸ்க்கியான விஷயங் களையெல்லாம் விட்டுடுங்களேன்!'' என்றாள் கண் கலங்க.

அவன் பகபகவென்று சிரித்தான்.

''ஹரி... நான் நிஜமாத்தான் சொல்றேன். இனிமே.. நீங்க தனியாள்... இல்லை...'' என்று வெடித்து அழுதாள்.

அவன் சட்டென்று தன்னருகில் இழுத்துக் கொண்டான்.

''ஓ.கே... ஓ.கே... விட்டுர்றேன். இந்த ஒரே ஒரு தடவை பர்மிட் பண்ணு!'' என்று தேற்றினான்.

அவளுக்கும் வேறு வழியிருக்கவில்லை. 'சரி... சரி'யென்று தலையாட்டினாள்.

அவன் ஒரு கணம் சிந்தனையிலாழ்ந்தான். பிறகு சிரித்தான்.

''என்ன ஹரி?'' என்று அவள் கேள்விக் குறியுடன் பார்க்க.

''இல்லே... அம்மா எத்தனை தரம் சொன்னாங்க. தம்பி எத்தனை தரம் வேண்டாண்ணா, விட்ருன்னான். நான் கண்டுக்கவே இல்லை. ஆனா, தேவியார் கண்ல இருந்து தண்ணீர் வந்தவுடனே முடிவெடுத்துட்டேனே. அதை நினைச்சுச் சிரிக்கிறேன்,'' என்றான்.

அவள் பெருமையாக உணர்ந்தாள். முதன் முறையாக அவள் அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

'தாங்க்ஸ்' என்றாள்.

அவன் உடனே மார்பைப் பிடித்துக் கொண்டு சாய்வது போல் நடித்தான். ''ஹேய்! அப்படிப் பார்க்காதே! மயக்கமே வருது!'' என்றான்.

அவள் மேலும் முகம் சிவந்தாள்.

அவன் கிறக்கமாகப் பார்த்தபடி அவளை நெருங்கினான். தன் பாக்கெட்டிலிருந்து ஒரு சிறிய நகைப் பெட்டியை எடுத்து அதிலிருந்து ஒரு செயினை எடுத்து அணிவித்தான். ''இத பார்றா! என் பிறந்த நாளுக்கு நானே பரிசு குடுக்க வேண்டியிருக்கு. நீ ஏதும் குடுக்கமாட்டியா?'' என்று இழைந்தான்.. லேசான பயத்துடன் நிற்கிற அவளைப் பார்த்தவுடன் மீண்டும் உலகம் மறந்தான். தவிப்பும், பயமுமாக அவள் பணிந்து கொடுத்தாள்.



திரும்ப வரும் போது அவள் மௌனமாகவே வந்தாள். அவன் தவித்துப் போனான்.

''உங்க பிறந்த நாள்ன்னு சொன்னதாலே வந்தேன். ஆனா, இது தப்பு ஹரி...'' என்றாள் சற்றே கடுமையாக.

''ஆமா.... சிவா! ஆனா, நீ அப்படி முகம் சிவந்து நிற்கும் போது... என் கன்ட்ரோலையே இழந்தர்றேன்!'' என்றான்.

அவள் வெளியே வெறித்துப் பார்த்தபடி, ''நாளைக்கு நீங்களே என்னைக் கேவலமாய்ப் பேச மாட்டீங்கன்னு... என்ன நிச்சயம்?'' என்றாள் வேதனையுடன்.

''ஹேய், ரெண்டு அடி வேண்ணா அடிச்சுடு. ஆனா, இப்படியெல்லாம் பேசாதே!'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

''சரி... சிவா... இனி அம்மா கிட்ட பர்மிஷன் வாங்கிட்டுத்தான் உன்கிட்ட பேசுவேன். பத்து நாளைக்குள் கல்யாணம். சரியா?'' என்றான்.

''என்ன விளையாடறீங்களா? பத்து நாளைக்குள்ளேயெல்லாம் அரேன்ஜ் செய்ய முடியுமா?'' என்றாள் நம்பிக்கையில்லாமல்.

''ஏன் முடியாது. எங்க கிராமத்திலேயோ... இல்ல, ஃபாக்டரியிலயோ பெரிய பந்தல் போட்ற வேண்டியதுதான். ஒரே நாள்ல இன்விடேஷன் ரெடியாயிடும். எங்க சொந்தக்காரங்கள்ளாம் அக்கம் பக்கத்து ஊர்லதான். இன்விடேஷன் குடுக்க ஒரு மூணு நாள். உங்க நெருங்கின சொந்தமும் எல்லாம் உள்ளூர்தானே. தம்பி மற்ற ஏற்பாடெல்லாம் பாத்துக்குவான். அப்புறம்... என்ன?'' என்றான்.

அவன் தெளிவாகத் திட்டமிடுவதைக் கண்டு சற்றே மனம் தேறினாள். ஆனால், மீண்டும் சொன்னாள்.

''ஹரி, மறுபடியும் சொல்றேன் - என் மானம் உயிர் எல்லாம் இப்ப உங்க கையிலே இருக்கு!'' என்று.

''கவலைப் படாதே, கண்மணி. எல்லாம் பத்திரமான கையில்தான் இருக்கு!'' என்றான் புன்சிரிப்புடன்.

வழியில் ஆட்டோ பிடித்துப் போவதற்கு வசதியாக ஒரு இடத்தில் இறக்கி விட்டான். இரவும் ஃபோன் செய்து பத்திரமாகப் போய்ச் சேர்ந்தாளா என்று விசாரித்துக் கொண்டான்.

அன்றிரவு சிவஜோதிக்கு உறக்கமே வரவில்லை. தனக்கு ஏன் மறுக்கிற துணிவு வரவில்லை என்று நொந்துகொண்டாள். ஆனால், ஒரு குழந்தையைப் போல் ஏக்கப் பார்வையுடன் தன்னை நெருங்குகிற போது மறுக்கத் தோன்றவில்லையே என்று பலவும் எண்ணி மருகினாள்.

ஒன்று மட்டும் அவளுக்குத் தைரியத்தைத் தந்தது. எப்போதும் பொறுப்புகளிலிருந்து விலகியனவல்ல. அலுவலகத்திலே கூட ஏதாவது தவறுகள் நேர்ந்தால் இட் இஸ் மை மிஸ்டேக். ஐ வில் ரெடிக்ஃபை இட் என்று சகோதரனிடம் பொறுப்பேற்றுக் கொள்வதை அவளே அறிவாள்.

கல்யாணம் மட்டும் முடியட்டும். எதற்கெடுத்தாலும் அவசரப்படுகிற இயல்பை எப்படியாவது மாற்ற வேண்டும். கூடவே அவளுக்குச் சிரிப்பு வந்தது.

எல்லாவற்றிலும் அவசரம் மாதிரி இதிலயும் அவசரம் என்று எண்ணிக் கொண்டாள்.

மூன்றாவது நாள் தனக்கு நல்ல செய்தி வந்து விடும் என்று திடமாக நம்பினாள். மூன்றாம் நாள் வந்தது. ஆனால், வாழ்க்கை முழுதும் தான் எதிர்பார்த்த செய்தி மட்டும் வராது என்று அவளுக்குப் புரிந்தது.



ஃபிளையிங் கிளப் போவதற்கு முன் அவளை ஃபோனில் அழைத்தான்.

''ஹேய், இன்றைக்கு ஒரு நாள்தான். சரியா?'' என்று அவளைச் சமாதானப் படுத்தினான். பிறகு சற்று நேரம் நகைச்சுவை பேசி அவளைச் சிரிக்கச் செய்தான்.

''ம்... நீ... எதிரில் இருந்தா வீரத்திலகம் இட்டு அனுப்பி வைக்கச் சொல்லலாம். சரி, வேற ஏதாவது ஃபோன்லயாவது குடு!'' என்று கேட்டு வாங்கிக் கொண்டான்.

கலகலவென்று சிரித்தான். அந்தச் சிரிப்பே அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

அன்று பிற்பகல் இடிபோல் அந்தச் செய்தி இறங்கியது.

கிளைடர் விமானத்தில் ஏதோ கோளாறு. தலையில் அடி. ஆஸ்பத்திரியில் இருக்கிறான் என்று அலுவலகத்தில் எல்லாரும் போனார்கள்.

உயிர் பிரிகிற நேரத்தில் அவன் பார்வை அவள் மேல் ஒரு கணம் படிந்து மீண்டது.

அவள் மயங்கி விழுந்தாள்.

''பாவம்! பாஸ் பக்கத்திலேயே இருந்து வேலை பார்த்தவ இல்லே. அதான் தாங்க முடியவில்லை!'' என்று பேசிக் கொண்டார்கள்.

இரண்டு மூன்று நாட்களுக்கு அவள் ஒன்றும் சாப்பிட வில்லை. அழுதாள். துடித்தாள்.

அம்மா, அப்பா இருவருமே முதன் முதலாக ஒரு சாவைப் பார்க்க நேர்ந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி என்று நினைத்தார்கள்.

ஜெயஜோதிதான் ஃபோன் செய்து சரவணபவனிடம் லீவு கேட்டாள். அதற்கு அவன் எல்லாரும் துக்கத்திலேதான் இருக்கிறோம். நானே இன்னைக்கு ஆஃபீஸ் வரப்போறேன்.

வீட்ல இருந்தா அதிகமாகும். ஆஃபீஸ் வரச் சொல்லுங்க என்றான்..

தன்னுடைய துக்கத்தைத் தாங்கிக் கொண்டு எல்லாரையும் தேற்றினான் சரவணபவன். அதைப் பார்த்த சிவஜோதி தன்னை மெது மெதுவாகத் தேற்றிக் கொண்டாள்.

இரண்டு நாட்கள் வந்த சரவணபவன் மீண்டும் பத்தாம் நாள் சடங்குகளுக்கு விடுமுறை எடுத்தான். அந்தச் சமயத்தில் சிவஜோதியும் போய்க் கலந்து கொண்டாள்.

ஜெனிஃபரிடம், "மேடம், நீங்க... ஏன் லீவு போட்டீங்க... அவர் கூடப் பழகாம இருந்திருப்பேனே..." என்று அவள் அழுததை யாருமே தவறாக எடுத்துக் கொள்ளவில்லை.

சிவஹரிபவன் பெண்களைப் பொறுத்தவரை விசுவாமித்திரன் என்று பெயர் எடுத்திருந்ததாலோ என்னவோ எவருக்கும் சந்தேகம் எழவில்லை.

ஊமை கண்ட கெட்ட கனவைப் போல் சிவஜோதி சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் மருகிக் கொண்டிருந்ததை யாருமே புரிந்து கொள்ளவில்லை.

மறுபடியும் ஒரு வாரம் கழிந்தது. நடை பிணம் போல் அலுவலகத்துக்குப் போய் வந்தாள் சிவஜோதி. அவன் நின்ற இடம், நடந்த விதம், பேசிய வார்த்தைகள் என்று நினைத்து நினைத்து அணு அணுவாகச் செத்துக் கொண்டிருந்தாள்.

அன்றிரவு பேசாமல் தற்கொலை செய்து கொண்டு விடலாமா என்று கூட நினைத்தாள். ஆனால், அதனால் தன் குடும்பத்துக்கு ஏற்படப் போகிற அவமானத்தை நினைத்துப் பார்த்தாள். அதற்கும் தைரியம் வரவில்லை.

அப்போதுதான் அவளுக்குள் அது உறைத்தது. போன வாரமே ஆகி இருக்க வேண்டும். தள்ளிப் போயிருக்கிறது



என்று. ஒரே நேரத்தில் அதிர்ச்சியும், மகிழ்ச்சியுமாய் உணர்ந்தாள்.

படித்த பள்ளித் தோழி டாக்டராகி இருந்தாள். இப்போதும் அவளிடம் நட்பு இருந்தது. யூரின் டெஸ்ட் செய்து கொண்டாள்.

அவள் அதிர்ச்சியுடன், "சிவா! என்ன இது?" என்றாள்.

"என் தப்புக்குக் கிடைச்ச தண்டனை... இல்லை...யில்லை வரம்!" என்று விரக்தியாகச் சிரிக்கிற அவளிடம் விசாரித்தாள் கல்யாணி, டாக்டர் தோழி.

ஆள் யாரேன்று சொல்லாமல், விஷயத்தை மட்டும் சொன்னாள்.

"இப்ப... என்ன செய்யப் போறே?" என்றாள் கல்யாணி.

"பயந்து... பயந்து தப்புக்கு இடம் குடுத்தேன். ஆனா, தைரியமா... வாழ்க்கையை ஃபேஸ் பண்ணப் போறேன்!" என்றாள்.

"என்ன... விளையாடறியா? கலைச்சுடு!" என்றாள் டாக்டர்.

"ஒரு நாள் பூரா என்கூட சந்தோஷமா இருந்தார். அந்த நினைப்பே போதும், இந்தக் குழந்தையை வளர்க்க!" என்று பிடிவாதமாக நிற்கிற அவளை அனுதாபத்துடன் பார்த்தாள்.

"கவலைப் படாதே கல்யாணி. எங்க சின்ன முதலாளி கிட்டே சொல்லி, டெல்லி, பம்பாய்ன்னு எங்கயாவது வேலை வாங்கிக்கறேன்," என்று கிளம்பினாள்.

அவளே சரவணபவனிடம் பேசலாம் என்றிருக்கையில் அன்றிரவு அவனே அழைத்தான்..

"சிவஜோதி மேடம்! உங்கிட்டே கொஞ்சம் பேசணும். நாளைக்குக் காலையிலே கார் அனுப்பறேன். வீட்டுக்கு கொஞ்சம் வர்றீங்களா?" என்றான்.

"வர்றேன் சார்... நானே உங்ககிட்ட பேசணும்னு இருந்தேன்..." என்றாள்.

"நல்லதாப் போச்சு!" என்று அவன் ஃபோனை வைத்தான்.

## 21

வீடே வெறிச்சோடிப் போன மாதிரி இருந்தது.

பிறந்ததில் இருந்து அண்ணனின் அண்மையிலேயே வளர்ந்தவன் சரவணபவன்.

மற்றவர்கள் முன்னிலையில் துக்கத்தை முழுக்க வெளிப் படுத்திக் கொள்ளவில்லை யென்றாலும் உள்ளுக்குள் அவனைச் சோகம் தின்று கொண்டிருந்தது.

அவசரக்காரன், படபடப்பானவன் என்றெல்லாம் அண் ணன் பெயரெடுத்திருந்தாலும், சரவணபவனிடம் அவனுக்கு ஆழ்ந்த நேசம் உண்டு.

சிறு வயதிலேயே சிறுவர்கள் யாராவது சரவணபவனை ஏதாவது சொல்லி விட்டால், அவர்களைத் துவைத்து எடுத்து விடுவான். வளர்ந்த பிறகு நண்பர்களாகி விட்டார்கள்.

ஒருவருக்கொருவர் கலந்தாலோசிக்காமல் எதையும் செய்ய மாட்டார்கள். இவன் எதற்கெடுத்தாலும் அண் ணனைக் கேட்கணும் என்பான். அவன் எதற்கெடுத்தாலும் தம்பியைக் கேட்கணும் என்பான்.

அவனுடைய நண்பர்களை இவனும், இவனுடைய நண்பர்களை அவனும் வெகுவாக மதித்தார்கள்.

தன்னில் ஒரு பாதி தொலைந்து போனாற் போல் உணர்ந்தான் சரவணபவன். இந்த இருபது நாட்களும் எப்படி



அந்தத் துக்கத்தைத் தாங்கினோம் என்பதே அவனுக்குப் புரியவில்லை.

இன்னமும் விசாரிப்பதற்கு வந்து கொண்டிருந்தார்கள். காலையில் சாப்பிடப் பிடிக்காமல் அமர்ந்து கொண் டிருந்தான்.

"தம்பி, சாப்பிடு... தம்பி!" என்று நான்கைந்து முறை அழைத்து விட்டார் சண்முகம்.

"வர்றேன் மாமா, கொஞ்சம் லேட்டா வர்றேன்," என்று சொல்லிவிட்டு அமர்ந்திருந்தான். தினமும் தனிமையான இது மாதிரி நேரங்களில்தான் துக்கம் முழுமையாக அவனைத் தாக்கியது.

ஒரு பாட்டம் அழுது தீர்த்தான். "இறைவா, இப்படி ஏன் கொடுத்தாய்? ஏன் பறித்தாய்?" என்று உள்மனது ஓலமிட்டது. ஒரு விதமாக மனம் தேறி அமர்ந்திருக்கையில் சண்முகம் வந்து,

"தம்பி... சித்தார்த் வந்திருக்காரு," என்றார்.

சித்தார்த் சிவஹரியின் நண்பன். மீண்டும் ஒரு முறை இருவரும் அழுதார்கள். பொள்ளாச்சிக்கு அருகே சிவஹரி கடைசியாகப் போன அந்த கெஸ்ட் ஹவுஸுக்குச் சொந்தக் காரன்தான், சித்தார்த். கடந்த இருபது நாட்களுக்கு வெளியூரில் இருந்தானாம். அன்று காலையில்தான் வந் தானாம்.

சரவணபவனிடம் அப்போது சித்தார்த், "கல்யாணம் பண்ணிக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்னு சொன்னா னேடா!" என்று கண் கலங்கினான்.

சரவணபவனுக்கு அது செய்தி.

"எப்ப சொன்னாரு?" என்று கேட்டான்.

''ஓ! உன்கிட்ட சொல்லலையா? ஆமா, என்கிட்ட இனிமேதான் உங்கிட்ட சொல்லணும்னு சொன்னானே!'' என்றான்.

''சித்தார்த் அண்ணா... கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க,'' என்றான் பவன் கவலையுடன்.

அந்த நாள்

சித்தார்த்துக்குக் காலையில் ஃபோன் செய்தான் சிவஹரி.

''டேய்... சித்தார்த்... உன் கெஸ்ட் ஹவுஸ்ல ஒரு நாள் செலவு பண்ண பர்மிஷன் வேணும்டா,'' என்றான்.

''என்னடா, இது ஆச்சரியம்! உனக்கே பியூட்டிஃபுலா ரெண்டு மூணு தோட்ட வீடு இருக்கு. நீ என்கிட்டே கேட்கறே?'' என்றான் சித்தார்த்.

தயங்கியபடி, ''தப்பா நினைச்சுக்காதடா. கூட ஒரு பொண் ணும் வருவா. எங்க இடங்களுக்குப் போனாத் தெரிஞ்சு போயிடும்டா.''

''அடப்பாவி! உன்னை ரொம்ப ஒழுக்கமான ஆள்னு நெனச்சுகிட்டிருக்கேனேடா. நீ எப்ப இப்படியெல்லாம் ஆரம் பிச்சே!'' என்றான்.

''டே... டேய்... இப்பவும் நான் நல்லவன்தான்டா. இந்தப் பொண்ணைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன் நாளைக்கு என் பர்த்டே. அதனால இன்னைக்கு அவகூட ஒரு நாள் இருக்கலாம்னு இருக்கேன். இனிஅடுத்தது அம்மா கிட்டே பேசிக் கல்யாணம்தான்!'' என்றான்.

''ஓ.கே... ஓ.கே... பொண்ணு யாருடா?'' என்றான் ஆவலாக

'இன்விடேஷன் வரும்ல... அப்பப் பாத்துக்க!'' என்று சிரித்தான்.



''சரி... சரி... ஜமாய்டா... ராஜா... ஜமாய்... அது சரி... அங்கயும் உருட்டல் மிரட்டல்தானா? இல்லே... சரண்டரா?''

''டேய் அங்கயெல்லாம் மிரட்டினா வேலையாகுமாடா? பயந்த சுபாவம்டா அவ!'' என்று வெட்கத்துடன் சிரித்தபடி ஃபோனை வைத்தான்.

சித்தார்த் விவரம் சொல்லி முடித்தவுடன் சரவணபவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

''உன்கிட்டயும் சொல்லணும்னுதான் சொன்னான்,'' என்றான் மறுபடியும்.

சித்தார்த்திடம் பேசி ஒரு வழியாக அனுப்பி வைத்து விட்டு வந்த பவன் சண்முகத்தின் வற்புறுத்தலுக்காகச் சாப்பிட்டான்.

உள்ளே சிந்தனை மட்டும் ஓடிக் கொண்டே யிருந்தது. அண்ணனுடைய அறையில் நுழைந்து எல்லாவற்றையும் ஒழுங்கு செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே நினைத்துக் கொண்டுதான் இருந்தான்.

புத்தகங்களுக்கிடையே தேடினான். கடைசியில் அவ னுடைய டைரி கிடைத்தது. அதில் ஒருநாள்...

''இப்படியாகுமென்று நான் நினைக்கவேயில்லை. என்னை யும் ஒரு பெண் டிஸ்டர்ப் செய்யக் கூடுமென்று நான் நினைக்கவில்லை. அவள் பயந்து கொண்டு நிற்கும் போது என் மனது ஏன் கிடந்து அப்படிப் படபடவென்று அடித்துக் கொள்கிறது. நானா இப்படிக் கெஞ்சிக் கொண்டிருந்தேன். சும்மாவா சொன்னார்கள், பெண் எனும் மாயவலை என்று?''என்று எழுதியிருந்தான்.

அடுத்த நாள்...

நேற்று அவள் அப்படி மறுக்காமல் இடம் கொடுப்பாள் என்று நான் நினைக்கவேயில்லை. உலகமே மாறி விட்ட மாதிரி இருந்தது என்று எழுதியிருந்தான்.

நான்கு நாட்கள் கழித்து -

எல்லாமே சுகமாக இருக்கிறது. என்றாலும் அவள் பயந்த சுபாவத்தை நான் பயன்படுத்திக் கொண்டு விட்டேனோ? அவள் கேட்டுக் கொண்டபடி நாளை ஒரு நாளோடு ஃபிளையிங் கிளப் போவதற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டும்.

அம்மாவிடமும், தம்பியிடமும் விரைவாகப் பேசிக் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும்

என்றும் எழுதியிருந்தான். ஆனரல், அவளுடைய பெயரை எழுதவில்லை. இந்த உறவு எந்த அளவுக்குப் போயிருக்கிறது என்பதையும் அவன் அப்போது புரிந்து கொள்ளவில்லை.

மறுபடியும் அமர்ந்து யோசித்தான் பிறகு டேபிள் டிராயரைத் திறந்து தேடியபோதுதான் அந்த ஃபோட்டோ ஆல்பம் கிடைத்தது.

அதில் இருப்பது யார் என்று பார்த்தபோது அவன் திகைத்துப் போனான்.

சிரித்துக் கொண்டும் நின்றபடியும் அமர்ந்தபடியும் லேசான அவன் அணைப்பில் வெட்கத்துடனும் சிவஜோதி நின்றாள்.

எல்லாவற்றையும் இருந்த இடத்திலேயே வைத்து விட்டு அறையைப் பூட்டினான். தன்னறைக்கு வந்தான்.

தன் சகோதரன் சும்மா போய்விடவில்லை. தனக்கு ஒரு பெரிய பொறுப்பை வைத்து விட்டுப் போயிருக்கிறான் என்பது புரிந்தது. அப்போதும் கூட அவன் விஷயத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை.

சிவஜோதி காரில் வந்து இறங்குவதை ஆழமாகப் பார்த்த படி நின்றான் சரவணபவன்.



அவன் அண்ணன் மரணத்தில் எல்லாரைக் காட்டிலும் ஏன் துக்கத்தை அவ்வளவு வெளிப்படுத்தினாள் என்பது புரிந்தது.

வணக்கம் சொன்னான். இருவருமே புன்னகைக்க முயன் றார்கள். புன்னகை வரவில்லை.

''உட்காருங்க!'' என்றான்.

அவள் மௌனமாக உட்கார்ந்தாள்.

''சொல்லுங்க... நீங்க எதுக்காக என்னைப் பார்க்கணும்னு நெனச்சீங்க?'' என்றான்.

''இல்லே! டெல்லியிலயோ, பம்பாயிலயோ எனக்கு ஒரு வேலை வாங்கித் தாங்க சார். கொஞ்ச நாள் வெளியூர் போயிடறேன்,'' என்றாள்.

'ஏன்?'' என்றான்.

''அதெல்லாம் கேக்காதீங்க... சார்!'' என்று கண்ணீர் விட்டாள்.

அப்போதுதான் சரவணபவன் அந்த ஆல்பத்தை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவள் அந்த ஃபோட்டோக்களை ஒவ்வொன்றாகப் புரட்டியபின் விக்கி விக்கி அழுதாள்.

''சார்! இந்த ஆல்பத்தை எனக்குக் குடுப்பீங்களா?'' என்று மார்பில் சாய்த்துக் கொண்டு அழுதாள்.

அப்போது சரவணபவன், ''மன்னிக்கணும் மேடம். இந்த ஆல்பத்தை நான் உங்களுக்குத் தர்றதாயில்லை. அது விஷயமாப் பேசத்தான் உங்களைக் கூப்பிட்டேன்,'' என்றான்.

முதல் நாள் இரவு முழுக்க இது குறித்து யோசித்திருந்தான் சரவணபவன். அண்ணன் இறந்த கவலையைக் காட்டிலும் இது அவனுக்குப் பெரிய கவலையாகத் தோன்றியது.

சமீபத்தில்தான் இது ஆரம்பித்திருக்கிறது. அந்தப் பெண்ணுடைய வாழ்க்கை இறந்து போனவனால் பாதிக்கப்படக் கூடாது என்ற முடிவுக்கு வந்தான். என்ன பேசுவது என்றும் ஏற்கெனவே முடிவுக்கு வந்தான். தொடர்ந்தான்.

''சிவஜோதி மேடம். அண்ணனுக்கும் உங்களுக்கும் இருந்த நட்பு இப்போதைக்கு யாருக்கும் தெரியாது. இந்த ஃபோட்டோக்களைப் பார்த்துத்தான் நானே தெரிஞ்சுகிட்டேன்... அதனால...'' என்று நிறுத்தினான்.

அவள் கேள்விக் குறியாய்ப் பார்த்தாள். அவன் தொடர்ந்தான்.

''மேடம்... மனுஷ வாழ்க்கையில எதிர்பார்க்காததெல்லாம் நடக்குது. நீங்க நடுத்தரக் குடும்பத்துப் பொண்ணு. இது லீக்கானால் உங்க குடும்பத்துல எவ்வளவு பாதிப்பு வரும்னு எனக்குப் புரியுது. அதனால், இந்த ஃபோட்டோக்களையெல்லாம் நான் டெஸ்ட்ராய் பண்ணிடறேன். நல்ல வேளையாக... நீங்க போன கெஸ்ட் ஹவுஸ் ஓனர் சித்தார்த்துக்குக்கூட அது நீங்கதான்னு தெரியாது. அதனால... நீங்க இதை மறந்துடுங்க... மேடம்.

''கொஞ்ச நாள் கஷ்டமாயிருக்கும் வேதனைதான். வருத்தம்தான். இல்லேங்கலே. ஆனா, சில விஷயங்களை வாழ்க்கையில் கடந்துதான் ஆகணும்,'' என்றான்.

அவள் அவனை வெறித்துப் பார்த்தாள். அவன் சற்றே சங்கடத்துடன் கீழே பார்த்தான்.

'சாரி... மேடம்... சலனம், நேசம், காதல்... இதெல்லாம் எல்லாருடைய வாழ்க்கையிலும் இந்தப் பருவத்துல வந்து போறதுதான். ஆனா, உங்களுக்கு இளம் வயசு. நீங்க வாழ வேண்டியவங்க... நான் யாருகிட்டயும்...இதைப் பற்றிப் பேச மாட்டேன்!'' என்றான்.

அதற்குப் பிறகு மறுபடியும் அவள் வெடித்து அழுதாள்.



''ப்ளீஸ்! காம் டவுன்...'' என்றான், அவளை இரக்கத்துடன் பார்த்தபடி.

பிறகு அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

''ப்ளீஸ்! நான் கேட்டபடி நீங்க எனக்கு டெல்லியிலோ பம்பாயிலயோ வேலை வாங்கிக் கொடுங்க. அது பெரிய உதவியாயிருக்கும்!'' என்றாள்.

சரவணபவன் மீண்டும் குழந்தைக்குச் சொல்வது போல்,

''நான்தான் சொல்றேனே, இந்த விஷயம் என்னோட நெஞ்சுலயே இருக்கும் வெளியே வராதுன்னு. இதுக்காக நீங்க ஊரை விட்டுப் போக வேண்டிய அவசியமெல்லாம் இல்லே!'' என்றான்.

''நான் கேக்கறதை நீங்க செய்ய முடிஞ்சாச் செய்ங்க. இல்லாட்டி விடுங்க!'' என்று வெறி பிடித்தவள் போல் கூறியபடி எழுந்து ஜன்னல் பக்கம் திரும்பி அழுதாள்.

சரவணபவன் அமைதியாக அமர்ந்து இருந்தான். ''அவசரமில்லே... யோசிங்க... உங்களை வேற ஆஃபீசுக்கு வேணா மாத்தி விட்டர்றேன்,'' என்றான்.

அழுது ஓய்ந்த அவள் மீண்டும் சேரில் அமர்ந்தாள். பிறகு அழுத்தமாகப் பேசினாள்.

''சார், உங்களுக்குப் புரியலே. நான் இனி இங்க இருக்க முடியாது. வேற ஊருக்கு, என்னை யாருன்னு தெரியாத ஊருக்கு நான் போயே ஆகணும்!'' என்றாள்.

''ஏன்?'' என்றான்.

அவள் அழுகையும், சிரிப்புமாகப் பதில் சொன்னாள்.

'ஏன்னா... இத்தனை துக்கத்துக்கு நடுவிலயும் உங்கண்ணன் ஒரு சந்தோஷத்தைக் குடுத்துட்டுப் போயிருக்காரு. அவரோட வாரிசு எனக்குள்ளே உருவாயிருக்கு!'' என்றாள்.

சரவணன் எதற்கும் கலங்காதவன், அதிர்ச்சியுடன் எழுந்து நின்றான்.

''வ்வாட்?'' என்றான்.

''ஆமா... சார்.. இப்ப நான் சொல்றேன்... நீங்க பயப் படாதீங்க. ஐ வில் கிவ் பர்த் டு தட் சைல்ட். உங்களுக்கோ, எங்க குடும்பத்துக்கோ எந்த அவப் பெயரும் வரக் கூடா துங்கறதுக்குதான் நான் வெளியூர் போறேங்கறேன். பயப் படாதீங்க. நான் யார் காரணம்கறதை யாருக்கும் சொல்ல மாட்டேன் அவர் நினைப்பா அந்தக் குழந்தையை வளர்ப்பேன்!'' என்று கை கூப்பினாள்.

வேகமாக நகர்ந்து விட்டாள்.

சரவணபவன், ''ஓ... மை காட்!'' என்று திகைத்துப் போனவனாய் சோஃபாவில் சரிந்து அமர்ந்தான்.

''ஆண்டவா... இது என்ன சோதனை!'' என்று வெகு நேரம் பேச்சற்றுப் போய் அமர்ந்திருந்தான்.

ஒன்பது மணி வாக்கில் சிவஜோதிக்கு ஃபோன் செய்தான்.

''சிவஜோதி... மேடம்... இனிப் பிரச்சினை உங்களது மட்டுமில்லே. என்னுடையதும்தான். கவலை யில்லாமல் இருங்க. வழி கண்டு பிடிக்கிறேன்,'' என்றான்.

இரவே அம்மாவைப் பார்க்கக் கிளம்பினான்.

## 22

இரவு அந்த வீட்டிலே ஒரு கண்ணாமூச்சி நடந்து கொண்டிருந்தது.



துக்கத்தின் நிழல் அந்த வீட்டின் மேல் கவிந்து படர்ந் திருந்தது.

அம்மா எட்டிப் பார்க்கும் போது சரவணபவன் தூங்குவது போல் படுத்திருப்பதும், அவன் போய் எட்டிப் பார்க்கும் போது, அவன் தூங்குவது போல் படுத்திருப்பதம் ஆக யாருமே உறங்கவில்லை.

சோகம் அவர்களைத் தின்று கொண்டிருந்தது. ஒரு கட்டத்துக்கு மேல் பொறுக்க முடியாமல் சரவணபவன் எழுந்து போய் வெளியே கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கொண்டான்.

அம்மாவும் சற்றுக் கழித்து எழுந்து வந்து அவனருகில் அமர்ந்து கொண்டார்..

எது வாங்கினாலும் ரெண்டு வேணும்பான்டா. எதுக்கு டான்னு கேட்டா... தம்பிக்கு ஒண்ணு என்பான்டா என்று ஒரு நிமிடம் அழுதார்.

டிரஸ் எடுத்தால், அம்மா! ஒரே டிசைன்ஸ் எடுக்காதீங்கம்மா வேற வேற டிசைன்ஸ் எடுத்தா... ரெண்டு பேரும் மாத்தி மாத்திப் போட்டுக்கலாம்மா... என்பான்.

போம்மா... இந்த அப்பா சம்பாதிச்சதென்ன பிசாத்துக் காசு. நான் சம்பாதிக்கறேன் பார்.. அப்படின்னு... சொல்லித் தானேடா இந்தக் கம்பெனியை ஆரம்பிச்சான்... என்று சொல்லிச் சொல்லி அழுதார்.

அண்ணா இந்த அட்வென்ச்சர்ல்லாம் வேண்டாண்ணா, நம்பளை நம்பி எத்தனை தொழிலாளிங்க இருக்காங்க என்று சரவணன் சொன்னால்,

''அதுக்குப் பொறுப்புக்குத்தான் நீயிருக்கியேடா. டேய், தம்பி... இந்த வீர விளையாட்டெல்லாம்... தமிழர்களோட

கலாச்சாரம்டா. அப்ப ஜல்லிக்கட்டு மாதிரி இப்ப கார் ரேஸ்!'' என்பான்.

அவனும் அம்மாவிடம் அதையெல்லாம் பகிர்ந்து கொண்டு வருத்தப்பட்டான். பிறகு மெதுவாக,

''அம்மா... இன்னொரு விஷயமும் நடந்திருக்கு,'' என்றான்.

''என்னடா...சாமி?'' என்றார் அம்மா.

''அம்மா... அதிர்ச்சி ஆயிடாதே. அண்ணன் அவசரக் காரன்தான். ஆனா, இந்த விஷயத்துல இப்படி இருக்கக் கூடும்னு நானே எதிர்பார்க்கலை. விதின்னுதான் சொல் லணும். வேறென்ன சொல்ல?''என்றான் பீடிகை போல.

அம்மாவுக்கு அடிவயிறு கலங்கியது.

''இன்னும் என்னடா வெடிகுண்டு வச்சிருக்கீங்க?'' என்றார் கலக்கத்துடன்.

சரவணன் பக்குவமாக அம்மாவுக்குச் சொன்னான். சிவஜோதி சொன்னதையும், தான் சொன்னதையும் எல்லாம் விவரமாகச் சொன்னான்.

அம்மா கற்சிலை போல் வெகுநேரம் அமர்ந்து விட்டார். பிறகு ஒன்றுமே பேசாமல் மௌனமாக எழுந்தார்.

''அம்மா!'' என்று ஒரு வித அச்சத்துடன் அவன் எழுந்து பின்தொடர -

''பயப்படாதடா சரவணா! மகனையே வாரிக் குடுத் துட்டேன்... இனிமே எதுவும் என்னைத் தாக்காது. கொஞ்சம் யோசிக்க விடு...'' என்றார்.

அம்மா வெகுவாகத் தளர்ந்து போய் நடந்து செல்வதை அவன் சொல்ல வொண்ணாத வேதனையுடன் பார்த்துக் கொண்டு நின்றான்.



அதிகாலை ஐந்து மணியிருக்கும்.

அம்மா அவன் அறைக்கு வந்தார்..

''தம்பி நான் அந்தப் புள்ளையப் பாக்கணும்டா. இன் னைக்கே...'' என்றார்.

''ஏற்பாடு செய்யறேம்மா,'' என்றான்.

''நீயும், நானும் பத்து மணிக்கு நம்ம செம்மேட்டுத் தோட்டத்துக்குப் போறோம் அந்தப் புள்ளைய அங்க வரவழை...'' என்றார்.

அவனும் அப்படியே செய்வதாகச் சொன்னான்.

பத்து மணிக்கு அலுவலகத்துக்கு ஃபோன் செய்து,

''சிவஜோதி மேடம், ஏதோ ரெண்டு ஃபைல்களைக் கையில் எடுத்துகிட்டு ஜெனிஃபர் மேடம் கிட்டே நான் வரச் சொல்லியிருக்கேன்னு சொல்லிட்டு டாக்ஸி பிடிச்சு வாங்க!'' என்றான்.

ஃபோனை வைத்தான்.

காரில் வரும்போது அம்மா அவனிடம், ''தம்பி... குடும்ப கௌரவத்திற்காக நான் எது சொன்னாலும் ஒத்துக்குவாளா, தம்பி?'' என்று கேட்டார்.

''அம்மா... குழந்தையை வளர்த்தே தீருவேன். என்ன அவமானம் வந்தாலும் சரின்னு உறுதியா இருக்கறாப்ல இருக்குதும்மா!'' என்றான்.

'ஓ...' என்றார். அதற்குப் பிறகு ஒன்றும் பேசவில்லை.

அச்சமும் நடுக்கமுமாய் வந்து நின்ற சிவஜோதியை அம்மா மேலிருந்து கீழ்வரை பார்த்தார்.

நடுக்கத்துடன் நிற்கிற அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

''உட்காரு... அம்மிணி!'' என்றார்.

''அம்மிணி, நீ இளவயசுப் பொண்ணு. நடந்தது நடந்து போச்சு... கலைக்கறதுன்னு... ஏதாவது பண்ணிக்கக் கூடாதா?'' என்று கேட்டார்.

''அம்மா... நீங்களும் ஒருதாய்தானே... இப்படிக் கேக்கறீங் களே. எங்க விஷயத்துல எதுவும் முறையா நடக்கலே. ஆனா, பொறுப்பேத்துக்கறதுக்கு அவரும் பயப்படறவர் இல்லே. நானும் இல்லே. தப்புக்கு நானே பொறுப்பேத்துக் கறம்மா... உங்க சின்ன மகன்கிட்டே சொன்னனே, அவரு பேரை எங்கயும் சொல்ல மாட்டேன்!'' என்று கைகூப்பி அழுதாள்.

''ஐயோ! என்ற தங்கமே...'' என்று அம்மா அவளைக் கட்டிக் கொண்டு அழுதார்.

''சாப்பிட்டியா அம்மிணி!'' என்றார். அவள் இல்லை யெனத் தலையாட்டினாள். பண்ணையாட்களை விட்டு டிஃபன் வாங்கி வரச் செய்து,

''சாப்பிடு அம்மிணி. நாங்களாவது ஒருத்தருக்கொருத்தர் துக்கத்தைப் பங்கு போட்டுக்கிட்டோம்.. நீ தனியாவே சுமந்திருக்கிறியே... அம்மிணி!'' என்று கண்ணீர் விட்ட படியே,

''சாப்பிடு... உனக்காக இல்லேன்னாலும் உன்ற வயித் துப் புள்ளைக்காக... சாப்பிடு...'' என்று தானே ஊட்டி விட்டார்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. தேம்பிக் கொண்டே சாப்பிட்டாள்.



சரவணபவன் வேதனை கலந்த நெகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு அவர்களுக்குத் தனிமை கொடுத்து வெளியே வந்தான்.

அம்மா பக்குவமாகப் பேசி அவளிடம் நடந்த விஷயங்களைத் தெரிந்து கொண்டார்.

''துக்கப்படறதா, சந்தோஷப்படறதான்னே... எனக்கே புரியலை, அம்மிணி!'' என்று புலம்பினார்.

''நீ கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு... தங்கம்!'' என்று அவளை உள்ளே உறங்கச் சொல்லி விட்டு மகனிடம் வந்தார்.

''தம்பி! காலையில உங்கிட்ட அந்தப் பொண்ணைப் பத்தி கேட்டனே... அதே கேள்வியை உன்றகிட்டக் கேக்கறேன்... குடும்ப கௌரவத்தைக் காப்பாத்த அம்மா... எது சொன்னாலும் செய்வியா?'' என்றார்.

அவன் ஒன்றும் புரியாதவனாக,

''இதிலென்னம்மா சந்தேகம்?'' என்றான்.

''அப்ப... சரி...'' என்று நிம்மதியானார்.

வீட்டுக்கு ஃபோன் செய்து கணவரை வரவழைத்தார். அவரிடம் தனியாக வெகு நேரம் பேசினார்.

பகலுணவுக்குப் பிறகு மீண்டும் சிவஜோதியை அழைத் துத் தன்னருகில் அமர்த்திக் கொண்டார்.

சரவணபவனை எதிரில் அமர்த்திக் கொண்டார்.

''சரவணா! நாளன்னைக்கு வெள்ளிக் கிழமை... நீயே இந்தப் புள்ளையக் கூட்டிக் கிட்டுப் போய் ரெஜிஸ்டர் கல்யாணம் பண்ணிக்க. கோயில்ல ஒரு மாலையை மாத்தி கிட்டு... வீடு வந்து சேருங்க!'' என்றார்.

சிவஜோதியும், சரவணபவனும் அதிர்ந்து போய் அம்மாவைப் பார்த்தார்கள். ''ஆமாடா... இப்பக் காலம் மாறிக் கிட்டிருக்கு. அண்ணன் போனா, தம்பிக்குக் கல்யாணம் பண்ணி வச்சர்றாங்க... நான் அதுக்காகச் சொல்லலடா... நாம இத்தனை பேர் இருந்தும் அந்தப் புள்ளை எதுக்குப் பம்பாய்க்கும் டெல்லிக்கும் ஓடோணும்? என்ற வம்ச வாரிசு எதுக்குடா அப்பன் பேர் தெரியாம எங்கயோ வளரணும்?'' என்றார்.

இருவரும் திகைத்துப் போய் அமர்ந்தார்கள்.

''அம்மா... இந்த ஃபோட்டோவெல்லாம் வச்சு... இவங்க ரெண்டு பேருக்கும் ஏற்கெனவே கல்யாணம் ஆயிடுச்சுன்னு சொல்லலாமா?'' என்றான் சரவணன் தயங்கியபடி.

''யாருக்கு நிரூபிக்கப் போறே? யாரு நம்புவாங்க? செத்துப் போனவனையும், உசுரோட இருக்கற இந்தப் புள்ளையையும் சேத்துப் புரளி பேசுவாங்க. செத்ததுக்கப்புறம் இந்த ஊர் ஜனங்க வாயில் அவன் விழோணுமாக்கும்!'' என்றார்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

''அம்மிணி நீ புறப்படு. நீ தைரியமாயிரு. குழந்தைக்கு ஒரு அங்கீகாரத்துக்குத்தான் இந்த ஏற்பாடு. மத்தப்படி உனக்கு எந்தத் தொல்லையையும் இருக்காது... உன்ற ஊட்ல யாருகிட்டயும் எதுவும் சொல்லாதே. எல்லாம் எங்க பொறுப்பு. மாட்டேன்னு மட்டும் சொல்லாதே, அம்மிணி. அப்புறம் எங்க ரெண்டு பேரையும் உசுரோட பாக்க முடியாது!'' என்றார்.

அவள் திகைப்புடனேயே புறப்பட்டுப் போனாள்.

டிரைவரை வைத்து அனுப்பி விட்டு, அவன் அங்கேயே அமர்ந்திருந்தான். அம்மா மறுபடியும் பேசினார்.



''தம்பி.. குழந்தை கௌரவமாப் பொறக்கட்டும்டா... ரெண்டு குடும்பத்து மானத்தையும் காப்பாத்து. அதுக் கப்புறம்... அந்தப் புள்ளை ஒத்துக்கிட்டா... வாழ்க்கை... நடத்து... இல்லயின்னா... டைவர்ஸ் கிய்வர்ஸ்னு.... அப்புறமா ஏதாவது யோசிக்கலாம்டா...'' என்றார்.

அம்மாவிடம் இருந்து இவ்வளவு தெளிவான முடிவுகளை அவன் எதிர்பார்க்கவில்லை. தங்கள் வீட்டுக்குச் சென்ற பிறகும் யோசனையிலேயே இருந்தான்.

பிறகு அம்மாவிடம் வந்தான்.

''அம்மா! நீ என்ன சொல்றயோ செய்றம்மா!'' என்றான்.

அம்மா... அவனைக் கட்டிக் கொண்டு அழுதார். பிறகு, ''டேய்... தங்கம் உங்கண்ணனையோ, நம்ம குடும்பத் தையோ யாரும் எதுவும் சொல்லீடக் கூடாதுன்னுதான்டா... இந்தப் பாடுபடறேன். வயசுப் புள்ளை. நான் போய்த் தனியா இருந்து வளர்க்கறேங்கறா அதைப் பாத்து நாம கத்துக்க வேண்டாமா?'' என்றார்.

''சரிம்மா... எப்படியோ குழந்தையும், தாயும் சந்தோஷமா இருந்தாச் சரி...'' என்றான்.

சிவஜோதி மாலை மாற்றிக் கொள்ள மட்டும் ஒப்புக் கொண்டாள். அவர் போட்ட செயினே இருக்கு. அதுல தாலியைக் கோத்துக்கறேன் என்று அவளே கோத்துக் கொண்டாள்.

சரவணபவன் தடுக்கவில்லை.

அந்தத் திருமணமும் நடந்தது. ரெஜிஸ்டரார் ஆஃபீஸில் பதிவுத் திருமணமாக.

சிவஜோதியின் வீட்டிற்குப் போய் அங்கே நடந்த உணர்ச்சிப் போராட்டங்களுக்குப் பதில் சொல்லாமல் அழைத்துக் கொண்டு வந்து விட்டான்.

திடீர்க் கல்யாணம் என்றாலும் உறவினர்கள் எல்லாரும் அவர்கள் பங்களாவுக்கு வந்து விட்டார்கள்.

''அண்ணன் போன துக்கத்தில் அம்மா ரொம்ப உடைஞ்சு போயிடக் கூடாதேன்னுதான் அவசரமாக இந்தக் கல் யாணங்கறான்.. என்னத்தைச் சொல்ல?'' என்று அம்மா திறமையாகச் சமாளித்தார்.

இப்பத்தானே துக்கம் நடந்திருக்கு. அதனால எந்தக் கொண்டாட்டமும் வேண்டாம் என்று அம்மா சொல்லி விடவே, அன்றிரவு விருந்து மட்டும் கொடுத்தார்கள்.

எல்லாரும் அவரவர் வீடுகளுக்குக் கிளம்பி விட்டார்கள். இருக்கிற முக்கிய உறவினர்களின் திருப்திக்காக அவன் மாடிக்கு வந்தான்.

''ஜோதி, நீங்க அங்கே படுத்துக்குங்க!'' என்று கட்டிலைக் காட்டி விட்டு அவன் சோஃபாவில் களைத்துப் போய்ப் படுத்தான்.

தூங்குவதற்கு முன்பு ஒன்று மட்டும் சொன்னான். ''ஊருக்காக ஒரே ஒரு விஷயத்துக்கு நீங்க ஒத்துக்கணும்,'' என்றான்.

''சொல்லுங்க...'' என்றாள்.

''வேற வழியில்லே... உங்களை வா... போன்னுதான் நான் பேசியாகணும். நீங்களும் அத்தான்... பொத் தான்னு எப்படியாவதுதான் கூப்பிட வேண்டியிருக்கும்,'' என்றான்.

''இவ்வளவுதானே!'' என்று நிம்மதியானாள்.

''பரவாயில்லே. நான் உங்களை விடச் சின்ன வயசுதான். எப்படின்னாலும் முறைக்கு உங்களை அத்தான்னுதான் கூப்பிட்டாகணும்!'' என்றாள்.



''சிவா...ன்னு கூப்பிடவா?'' என்றான்.

''வேண்டாம்...'' என்றாள் அவசரமாக.

ஏன்?

''உங்க அண்ணன் மட்டும்தான் என்னை அப்படிக் கூப்பிட்டவர்!'' என்றாள் தழுதழுத்த குரலில்.

''ஓ...!''என்று சற்று மௌனமானான்.

''சரி... அப்ப ஜோதின்னு கூப்பிடறேன்,'' என்றான்.

''ம்...'' என்றாள்.

உடனே அவன் ஒருமைக்குத் தாவினான்.

''ஜோதி! ஒண்ணு புரிஞ்சுக்க... அண்ணன் எப்போதும் உன்கூட இருக்கற மாதிரி நினைச்சுக்கிட்டு சந்தோஷமா இருக்கணும். ஏன்னா, இப்ப நெகடிவ்வான எண்ணங் கள் இருந்தா குழந்தை பாதிக்கப்படலாம். இப்ப எல் லாத்தைக் காட்டிலும் குழந்தை முக்கியம், தெரியுதா?'' என்றான்.

'ம்...'' என்றாள்.

'ஏன்னா, அண்ணனோட நினைவா இப்ப இருக்கற ஒரே சொத்து இந்தக் குழந்தைதான். அது இளவரசனோ, இளவரசியோ - யாராக இருந்தாலும் சரி, அருமையா வளர்த்தர்லாம்... என்ன?'' என்றான்.

''ம்...'' என்றாள். முக மலர்ந்தாள்.

''சரி... தூங்கு! குட்நைட்!''என்றான். திரும்பி அவளுக்கு முதுகு காட்டிப் படுத்துக் கொண்டான்.

# 23

குழந்தை அந்த வீட்டின் எல்லாச் சோகங்களையும் மறக்கடிப்பதற்கென்றே பிறந்தான் போலும்.

அவன் ஒருவனே பிறப்பதற்கு முன்பும், பின்பும் இரு குடும்பங்களின் மையப் புள்ளியாக இருந்தான்.

அவன் பிறக்கும் வரை குழந்தைக்காக, குழந்தைக்காக என்றே தன்னை நன்றாகக் கவனித்துக் கொண்டாள். அடிக்கடி அம்மா வீட்டுக்குப் போகிறேன் என்று போய் விடுவாள். அவள் மகிழ்ச்சியாய் இருந்தால் போதும் என்று அவனும் சுதந்திரம் கொடுத்தான்.

சுகப் பிரசவம் ஆனது. அப்போதெல்லாம் மகிழ்ச்சி யாகவே இருந்தாள் சிவஜோதி. குழந்தைக்கு ஐந்து மாதம் வரை பாலூட்டினாள். குழந்தைக்காக என்றே அவளது தாயாரும் ஊட்டமான உணவு வகைகளையே அளிப்பார்.

நன்றாகவே இருந்தாள். ஆனால், குழந்தையின் அசைவு கள் அவளுக்குச் சிவஹரியை மறக்கடிப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் நினைவு படுத்துவனவாக அமைந்தன. மெல்ல மெல்ல அவளுக்குள் மாற்றம் ஏற்பட்டது.

குழந்தையைப் பெரும்பாலும் ஜெயஜோதிதான் கவனித்துக் கொண்டாள். சிறு மலர் போன்ற கைகளும், கால்களும், நெஞ்சத்தைக் கொள்ளை கொள்ளும் சிரிப்புமாக இருந்த குழந்தையை அவள் எந்நேரமும் தன் பொறுப்பிலேயே வைத்துக் கொண்டாள்.



ஐந்தாம் மாதத்திலேயே குழந்தைக்குப் பாலூட்டுவதை நிறுத்தி விட்டாள் சிவஜோதி. எல்லா விதத்திலும் ஜெயஜோதி குழந்தையை நன்கு கவனித்துக் கொண்டதால் அது ஒன்றும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

மாதத்தில் ஒரு முறையாவது அவள் எங்கிருந்தாலும் வந்து அவளோடு நேரம் செலவழித்துச் செல்வார் முத்து லட்சுமி. அந்த மாதம் அவர் வந்திருந்த போதுதான் குழந்தை குப்புற விழுந்தான்.

உடனே சரவணபவனின் அலுவலகத்துக்கு ஃபோன் செய்து வரவழைத்தார்கள் ராஜலக்ஷ்மி குழந்தைக்குத் திருஷ்டி சுற்றிப் போட்டுத் தேங்காய் உடைத்தார். தோட்டத்துக்கு வந்து ஒரு வாரமாவது இருந்துட்டு வாம்மா என்று முத்துலட்சுமி வற்புறுத்தி அழைக்கவும் அவளும் வந்தாள்.

சிவஹரியும், சரவணனும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி சாயலில் இருப்பார்கள் என்பதால் குழந்தை பற்றிய எந்த விதச் சந்தேகமும் யாருக்கும் எழவில்லை.

சிவஜோதி தோட்டத்துக்கு வந்ததற்குப் பிறகு சரவண பவனும் தினமும் வந்தான். கம்பீரமான உயரத்துடன் அவன் குழந்தையை மனம் நிறையக் கொஞ்சி மகிழ்ச்சியுடன் சிரிக்கும் போது அம்மாவுக்கே மனம் நெகிழ்ந்து போனது.

அவன்தான் குழந்தைக்குப் பெயர் தேர்ந்தெடுத்தான். பிரகாஷ் எஸ்.பவன் என்று அவன் பெயர் சொல்லி விட்டு ஜோதியிலிருந்து வந்த பிரகாசம் என்று விளக்கம் வேறு கூறினான்.

ஜோதி, ஜோதி என்று இயல்பாகப் பேசினாலும், பழகி னாலும் அவனுக்குள்ளும் ஒரு தயக்கம் இருந்தது. நாகரீகமாக ஒரு விருந்தினரிடம் நடந்து கொள்வது போலவே அவன்

நடந்து கொண்டான். அவளுக்கும் அவனிடம் இயல்பாக இருக்க முடியவில்லை. மரியாதை கொடுத்தாள்.

சிவஜோதி வந்த இரண்டாவது நாளே ஜெயஜோதி அங்கிருந்து ஃபோன் செய்தாள்.

''அக்கா! பயலைப் பார்க்காம இருக்க முடியலே. நான் வரட்டா?'' என்று கேட்டு. அவளும் வந்து இரண்டு நாட்கள் இருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமையன்று சரவணபவனும் வந்திருந்தான். சுற்றி யார் இருக்கிறார்கள் என்பது பற்றிக் கவலைப்படாமல் ஜெயஜோதி அந்தக் குழந்தையின் மீது செலுத்துகிற கவனத்தையும் அன்பையும் பாராட்டினார்கள்.

''ஹலோ! இப்பவே டிரெய்னிங் எடுத்துக்கற மாதிரித் தெரியுது!'' என்று சரவணபவன் கூடக் கேலி செய்தான்.

''அத்தான்! இந்தக் குட்டிப் பய சிரிக்கிற சிரிப்புப் பாருங்களேன். இவன்கிட்டே போயி யாராவது பொய்யாய்ப் பழக முடியுமா?'' என்று அவள் பாதி உண்மையாகவும் பாதி விளையாட்டாகவும் கேட்க,

''அப்படிப் போடு!'' என்று அவன் சிரித்தான்.. அன்று மாலை வீட்டுக்கு முன்னாலே இருக்கிற புல் வெளியில் சேர் போட்டு அமர்ந்து பேசிக் கொண்டிருக்கையில் சரவணபவன் சிவஜோதியிடம், ''ஜோதி! உன் சிஸ்டர் ரொம்ப ஆக்டிவ். நல்ல மாப்பிள்ளையாய், அவளை நல்லா வச்சுக்கறவனாப் பார்க்கணும்,'' என்றான்.

''ஆமா, பார்க்கணும்,'' என்றாள் சிவஜோதி ஆழமான குரலில்.

ஜெயஜோதி அடுத்த நாள் கோயமுத்தூர் போய் விட்டாள்.

மறு நாளிரவு.



சிவஜோதி விரைவில் உறங்கப் போய் விட்டாள். அம்மா திண்ணையில் பிரகாஷை மடியில் வைத்துத் தட்டிக் கொடுத்து உறங்கச் செய்து கொண்டிருந்தார். அருகில் சரவண பவன் திண்ணைத் தூணில் சாய்ந்து கால் நீட்டி அமர்ந் திருந்தான்.

உன் மகன் அப்படியே அப்பனாட்டவே எல்லார் கிட்டவும் ஒட்டிக்கிறான்டா என்று சொன்னார். எப்போதும் போல் தனியான நேரங்களில் தாயும், மகனும் தங்கள் துக்கத்தையும் சந்தோஷத்தையும் பகிர்ந்து கொண்டார்கள்.

சிவஜோதி நடுவே தண்ணீர் குடிக்க எழுந்து வந்தவள், அந்தப் பக்கம் சேரில் அமர்ந்திருந்தது அவர்களுக்குத் தெரியவில்லை.

''ஏண்டா, தம்பி! உங்கண்ணன் மட்டும் இருந்திருந்தான்னா, நிலைமையே வேற, கொண்டாட்டமே வேற இல்லையா?'' என்றார்.

ம்... என்றான் சரவணன் பெருமூச்சுடன்.

''இவன் சிரிக்கிற சிரிப்புக்கு... பார்றா... என்ற மகன்... சிங்கக் குட்டின்னு மீசையை முறுக்கிட்டு எல்லாத்தையும் ஒரு மெரட்டு... மெரட்டியிருப்பான்...'' என்று சொன்னவர் குலுங்கி அழுதார்.

அவனும் மௌனமாகக் கண்ணீர் வடித்தான். சிவஜோதி யின் கண்களிலும் கண்ணீர் திரண்டது.

''ஏண்டா, சாமி! இவங்கம்மா சந்தோஷமா இருக்காளா?'' என்றார்.

அவன் லேசாக மறுபடியும் பெருமூச்சு விட்டான். ''இப்ப வரைக்கும்.. பெரிய சந்தோஷத்தை யெல்லாம் ஒண்ணும் காணோம். ஆனா, இந்தப் பய வந்தது ஒரு பெரிய ஆறுதல்

அந்த நேரம் ஜெயஜோதி குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு புட்டிப் பால் கொடுத்துக் கொண்டு இருந்தாள். சிவஜோதி அதை அமர்ந்து பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''ஹலோ!'' என்று குழந்தையை வாங்கிக் கொண்டான் சரவணபவன். தோளில் சாய்த்துக் கொண்டு தட்டிக் கொடுத்தான்.

ஜெயஜோதி குழந்தை அவன் தோளில் இருக்கும் போது ஒரு டவல் கொண்டு வந்து குழந்தையின் வாயைத் துடைத்து விட்டாள்.

''பாருங்கத்தான்! உங்களைப் பார்த்தா மட்டும் எங்க எல்லாத்தையும் மறந்துட்டுத் தாவி வந்தர்றான்!'' என்றாள் லேசான புன்னகையுடன்.

''இத பார்றா, பயலே! இவங்களுக்குப் பொறாமை பார்றா!'' என்று அவன் குழந்தையின் கன்னத்தில் முத்தம் வைத்தான்.

''அப்புறம்... என்ன ஜெயா? ஒரு மாப்பிள்ளை பாத்துர்லாமா?'' என்று கலாட்டா செய்ய அவள் முகம் சீரியஸாக மாறியது.

''அத்தான்... இந்தக் கல்யாணங்கன்னாலே என்னென்ன குழப்பங்கள் வருது தெரியுமா? பாவம், எத்தனை பொண்ணுங்க வந்து எங்க சங்கத்துல தங்களோட கஷ்டங்களைச் சொல்றாங்க... தெரியுமா? வேண்டாம். கல்யாணம்னாலே வெறுப்பா இருக்கு!'' என்றாள்.

''அப்புறம்... மீதி... வாழ்க்கை பூரா என்ன பண்ணப் போறதா உத்தேசம்?'' என்றான்.



''நீங்களும், அக்காவும் அடுத்ததா இவனுக்கு ஒரு தம்பியோ, தங்கச்சியோ ரெடி பண்ணிக் குடுங்க... சந்தோஷமா வளர்க்கறேன்!'' என்றாள்.

''எல்லாருடைய கல்யாணமும் ஒண்ணும் சோகமா முடியறதில்லே... ஜெயா, இப்ப உங்கக்காவுக்கே என்ன குறைன்னு கேளு,'' என்றான்.

''எங்கக்காவுக்கா... அவளுக்குக் குறைப்படவே தெரியாது. வாயில்லாப் பூச்சி. அவளை மாதிரிப் பொண்ணுங்கள்தான் உங்களை மாதிரி ஆளுங்களுக்கு வசதி!'' என்று நேரடியாகத் தாக்கினாள் ஜெயஜோதி.

''ஐயோ! இது பயங்கரத் தாக்குதலா இருக்கே!''

''வேண்டாம். இது பத்தி நாம இப்பப் பேச வேண்டாம்!'' என்று அவன் ஜகா வாங்க, இதில் கலந்து கொள்ளாமல் சிவஜோதி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஜோதி... இவனைப் படுக்க வச்சர்லாமா?'' என்று அவன் கேட்க, மௌனமாக இருவரும் மாடிக்குப் போனார்கள்.

''ஜோதி... என்ன உன் சிஸ்டர் இப்படிப் பேசறா?'' என்றான் அவன் கவலையுடன்.

சிவஜோதி ஒன்றும் பேசவில்லை.

''என்ன ஒரே யோசனையிலேயே இருக்காப்ல...'' என்றான் சரவணபவன்.

''உங்க அக்காவுக்கு என்ன குறைன்னு... கேட்டீங்களே, எனக்குக் குறையிருக்காதா?'' என்றாள்.

அவன் விளையாட்டுப் பேச்சை நிறுத்தி விட்டு அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்தான்.

''ஜெயஜோதிக்கு... மாப்பிள்ளை பாக்கறது இருக்கட்டும்.. உங்க வாழ்க்கையைப் பத்தி யோசிக்க வேண்டாமா?'' என்றாள்.

''ஏன், என் வாழ்க்கைக்கென்ன? நீயிருக்கே, இந்தப் பயல் இருக்கான்!'' என்றான் - அவள் என்ன கேட்கிறாள் என்பது புரிந்தும் புரியாதவன் போல்.

''ப்ளீஸ்! அத்தான்... நான் என்ன கேட்கிறேன்கறது உங்களுக்குப் புரியுது... அப்புறம்... ஏன் புரியாத மாதிரி...'' என்று நிறுத்தினாள்.

அவன் அவளை வெறித்துப் பார்த்தான்.

''அத்தான்... கொஞ்ச நாள் கழிச்சு என் மனசு மாறும்னெல்லாம் நினைக்க வேண்டாம்... என்னால... அவரை... அவரை... அவரை... மறக்கவே முடியலை!'' என்றாள்.

அவன் புன்னகைத்தான். ''சரி... நோ பிராப்ளம்!'' என்றான்.

''ஆனா! உங்க வாழ்க்கையைக் கெடுக்க என்ன ரைட் இருக்கு... பேசாம... டைவர்ஸுக்குப் போயிரலாமா?'' என்றாள்.

அவன் அவளைச் சிந்தனையுடன் பார்த்தான். ஒரு நிமிடம் மௌனம் சாதித்தான். பிறகு, ''ஜோதி... எங்க பேரண்ட்ஸ் இருக்கறது கிராமத்துல. இன்னும் கிராமங்கள்ல... நம்ம மாதிரிக் குடும்பங்கள்ல... இந்த டைவர்ஸெல்லாம் ஜீரணிக்கப்படறதில்லே. அதுவும் இல்லாம இந்த பயலை நினைச்சுப் பாரு!'' என்றான்.

''அப்ப... உங்க வாழ்க்கை? இல்லாட்டி ஒரு பொண்ணைப் பார்த்து ரெண்டாம் கல்யாணம்... ஏற்பாடு செய்யலாமா?'' என்றாள் ஆர்வமாக.

''சரிவராது... ஜோதி! சுத்தமா சரிவராது. இப்ப இருக்கிற இந்த ஏற்பாட்டுல எனக்கு எந்த ரிக்ரெட்ஸும் இல்லே. நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா... இருந்தா அதுவே... எனக்குப் போதும்...'' என்று உறங்கிக் கொண்டிருந்த குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டான்.



''விளையாட்டுப் போல் அவசரத்துக்கும் பயந்தாங்கொள்ளித் தனத்துக்கும் கிடைத்த கடவுளின் பரிசு.... இவரு...! நிம்மதியா இவரை வளர்ப்போம் புதுசா எதுக்குப் பிரச்சினைகள்?'' என்று அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

விளையாட்டாய் அவன் சொன்ன வார்த்தைகள் அவள் நெஞ்சில் கத்தி போல் பாய்ந்தது என்பதை அவன் உணரவில்லை.

உண்மைதானே. அவசரத்துக்கும், பயந்தாங் கொள்ளித் தனத்துக்கும் பிறந்த குழந்தைதானே இவன்? பொறுக்கிற தன்மை ஹரிக்கு இருக்கவில்லை. மறுக்கிற தைரியம் தனக்கும் இருக்கவில்லை. கடைசியில், மூன்று பேருடைய வாழ்க்கை சின்னா பின்னமானதுதான் மிச்சம். இதில் குடும்ப கௌரவம் என்ற பெயரில் சின்னவர் எதற்கு அலைபாய வேண்டும்.

இளைஞர். அழகானவர். அவர் எதற்காகத் தியாகம் செய்ய வேண்டும்? தான் இருப்பதால்தானே இத்தனை பிரச்சினையும்... தான் இல்லாவிட்டால் குழந்தை...? ஏன்... ஜெயஜோதி பார்த்துக் கொள்ள மாட்டாளா?

பலவும் எண்ணிக் குழம்பியவள் மறுநாள் பவன் அலுவலகம் கிளம்பிப் போனபின் பிற்பகலில் முதலாவதாக அந்த முயற்சியைச் செய்தாள்.

## 24

''யாருடைய வாழ்க்கையில் துக்கம் இல்லை? துக்கங்களுக்காகவும், பிரச்சினைகளுக்காகவும் பயந்து கொண்டு

செத்து விடுவதென்றால் உலகத்தில் தினம் எத்தனை தற்கொலைகள் நடக்கணும் தெரியுமா? உனக்கு என்ன குறை? குழந்தையோட முகத்தைப் பார்த்துக்கிட்டே மீதி நாளை ஓட்டிட முடியாதா? நான்தான் நீ என்ன சொன்னாலும் கேக்கறேன்கறனே... ஏன் இப்படிச் செய்தே?'' என்று நொறுங்கிப் போனவனாய்ப் பேசுகிற சரவணபவனை வெறுமையாய் பார்த்தாள் சிவஜோதி.

''எனக்கு வாழப் பிடிக்கலே...'' என்றாள்..

''அதுதான்... ஏன்ங்கறேன்?''

''எனக்கு உங்கண்ணனை மறக்க முடியலை.''

''யாரும் மறக்கச் சொல்லலியே?''

''இரட்டை வாழ்க்கை வாழ எனக்கு மனசு இடம் குடுக்கலே.''

''ஓ.கே... உன் இஷ்டப்படியே இப்படியே இருக்க வேண்டியதுதானே?''

''அப்ப... உங்க... வாழ்க்கை?''

அவன் கடுப்பானான்.

''இங்க... பார்... ஜோதி... எனக்கு மேரேஜ் லைஃப்ல இன்ட்ரஸ்ட் இல்லை. அப்படி ஒரு இன்ட்ரஸ்ட் வந்தால்... பார்க்கலாம்...'' என்றான்.

''அப்ப... வேற கல்யாணம் பண்ணிப்பீங்களா?'' என்றாள் ஆவலாக.

அவன் கசப்பானதொரு புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

''சரி... பார்க்கலாம். ஆனா, இன்னும் ரெண்டு வருஷத் துக்கு அந்தப் பேச்சு... இல்லே. சரியா?'' என்றான்.



அவன் பிரச்சினையைத் தள்ளிப்போடுவதற்காக அப்படிச் சொல்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. அவளும் அதோடு விட்டு விட்டாள். ஆனால், தனியாக இருக்கும் போதெல்லாம் டிப்ரஷன் வந்தது.

சிவஹரிபவனின் நினைவு அவளை ஆக்கிரமித்தது. கனவுகளில் அவனோடு வாழ்ந்தாள். நனவில் அது பொய் யென்று புரிந்து மனப் போராட்டத்தில் தவித்தாள்.

தங்கள் இருவரின் அவசரத்தால்தானே சரவணபவனின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு விட்டது என்று உள்ளுக்குள்ளே மருகிப் போனாள்.

உணவிலும் உடலைப் பேணிக் கொள்வதிலும் ஆர்வம் குறைந்தது. எல்லாரும் சொல்லிப் பார்த்தார்கள்.

''நான் சாப்பிட மாட்டேன்னா சொன்னேன்? எனக்குச் சாப்பிடப் பிடிக்கலியே!'' என்றாள்.

சரவணபவன் கடைசியில் அத்தையிடம் போய்ப் பேசுவது என்று முடிவு செய்தான். முன்னேயொரு முறை பேசியது நினைவுக்கு வந்தது.

சரவணபவனும், சிவஜோதியும் மாலையும் கழுத்துமாய் அந்த வீட்டில் போய் நின்றபோது அவளுடைய பெற்றோர் இருவரும் நொறுங்கிப் போனவர்களாய் நின்றது அவன் மனதை அறுத்தது.

திருமணம் நிகழ்ந்த இரண்டு நாட்கள் கழித்துப் பகல் வேளையில் அத்தை தனியாய் இருக்கிற நேரமாய்ச் சென்று பார்த்தான்.

நடந்த விவரங்களை யெல்லாம் சொன்னான். இரண்டு குடும்பங்களின் மானத்தைக் காப்பாற்றுவதற்காக அவன் தன் வாழ்க்கையையே விட்டுக் கொடுத்திருக்கிறான் என்பது

புரியவும் சரவணபவனை மிகவும் பிடித்துப் போனது அத்தைக்கு. சிவஜோதிக்கு அவன் கிடைத்திருப்பது எவ்வளவு பெரிய பொக்கிஷம் என்று அடிக்கடி எடுத்துச் சொல்லுவார்.

சிவஜோதி அதையெல்லாம் கேட்கிற நிலையில் இல்லை எனப் புரியவும், விட்டு விட்டார். இப்போது தன்னிடம் வந்து பேசிய மருமகனிடமும் அதையே சொன்னார்.

''விட்டுருங்க... மாப்பிளே... அவள் இஷ்டம் போல இருக்கட்டும். நீங்கதான் அவள் சொல்ற மாதிரி ஒரு கல்யாணம் பண்ணிக்குங்களேன்.''

''நான் மாட்டேன்னு சொல்லலை, அத்தை. ஆனா, அதுக்கப்புறம் உங்க மகளோட நிம்மதி சுத்தமாப்போயிடும். எனக்கு இப்போது எல்லாரைக் காட்டிலும் மகன்தான் முக்கியம்!'' என்றான்.

அத்தை பெருமூச்சு விட்டார்.

''என்ன மாப்பிளே செய்யறது? அவளுக்கு உங்க அண்ணனை மறக்கவும் முடியல. உங்களோடு மனசொப்பி வாழவும் முடியலே... விட்டுருங்க...'' என்றார்.

சரவணபவன் செய்வதறியாமல் விடைபெற்றுப் போனான். ஆனால், அதற்குப் பிறகு அவள் உடல் நிலை மேலும் சீர்கெட்டது. அனீமிக்காக இருக்கிறாள் என்று டாக்டர்கள் எச்சரித்தபோதும் உடலைத் தேற்றிக் கொள்ள அவள் ஒத்துழைக்கவில்லை.

கடைசியில் முடிவும் வந்தே சேர்ந்து விட்டது.

வேறு வழியில்லாமல் மூன்று, நான்கு மாதங்களுக்குக் குழந்தையை விட்டுப் பிரிந்திருந்த சரவணபவனுக்கு மெது



மெதுவாகக் குழந்தையாவது தங்களோடு இருந்தால் தேவலை என்று தோன்றியது.

மறுபடியும் அத்தையிடம் போய்ப் பேசப் போகை யில்தான் ஜெயஜோதி குழந்தையைக் கவனித்துக் கொள்கிற விதத்தை உற்றுக் கவனிக்க ஆரம்பித்தான்.

புதிதாக வேறு கவலை தோன்றியது.

இவ்வளவு அன்பு வைத்திருக்கிற ஜெயஜோதியிடம் இருந்து குழந்தையை எப்படிப் பிரிப்பது என்ற எண்ணம்தான் அது.

அத்தையிடம் பேசிக் கொண்டே அவன் ஜெய ஜோதியைக் கவனிக்க ஆரம்பிக்கையில்தான் அவனுக்கு ஒரு விஷயம் புரிந்தது.

ஜெயஜோதியைத் தனக்குப் பிடிக்கிறது என்பதுதான் அது.

அவன் திடுக்கிட்டுப் போனான்.

சகோதரி இறந்ததற்கே காரணம் ஒரு வகையில் அவன்தான் என்று அவள் நினைக்கிறாள் என்பதும் புரிந்தது.

முதன் முறையாகத் தன்மீதே அவனுக்குப் பச்சாதாபம் பிறந்தது. என்ன செய்வதென்றே புரியாமல் ஆனால், தவறாமல் குழந்தையைத் தினம் பார்க்கப் போனான்.

எதிர்பாராத இடத்திலிருந்து உதவி வந்தது.

அன்றைக்கு,

வீட்டில் ஜெயஜோதியும், குழந்தையும் தவிர யாரும் இல்லை.

ஜெயஜோதி அவனிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு அவனுக்காகக் காஃபி போடப் போனாள்.

யாருமில்லையென்று துணிவில் டைனிங் டேபிளில் அமர்ந்தபடி அடுக்களையில் அவள் நடமாடுவதைச் சரவண பவன் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

எங்கோ வெளியே போய்விட்டு வந்த அம்மா அதைக் கவனித்து விட்டார். அதற்குப் பிறகு தொடர்ந்து அவன் வருகையையும் அவன் பார்வை ஜெயஜோதியிடம் படிந்து மீள்வதையும் கவனித்து வந்தார்.

ஒரு நாள் அவரே பிரச்சினையை ஆரம்பித்தார்.

''மாப்பிளே... சிவஜோதி போய் நாலைஞ்சு மாசமாச்சு. பேசாம நீங்க ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்குங்க!'' என்றார்.

அவன் அத்தை கொடுத்த காஃபியைக் குடித்தபடி மேஜையைப் பார்த்தான்.

''அத்தை... உங்க மக போனாலும் பிரச்சினை அப் படியேதான் இருக்கு. இன்னொருத்தி வந்தா... பிரகாஷை நல்லாப் பாத்துக்கணுமே!'' என்றான்.

''நல்லாப் பாத்துக்கறவளாப் பாக்கறது!''

''கிடைக்கணுமே!''

''கண்ணுக்கு முன்னாலயே வச்சுகிட்டுத் தேடிக்கிட் டிருந்தா... என்ன செய்ய?''

அவன் திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தான்.

''நானும் கொஞ்ச நாளாக் கவனிச்சுகிட்டுத்தான் இருக்கேன்.''

அவன் முகம் சிவந்தது. ''அத்தை! உங்க பொண்ணைப் பொறுத்தவரை... நான்தான் சிவஜோதியின் சாவுக்குக் காரணம்...'' என்று பெருமூச்சு விட்டான்.



''அதெல்லாம் சரியாயிடும். நீங்க எப்படி நடத்திக் கிறீங்கங்கறது உங்க சாமர்த்தியம். ஆனா, எப்படியும் அவ உங்களைப் புரிஞ்சுக்குவா. நீங்க கொஞ்சம் காத்திருக்கணும்,'' என்றார்.

''என்ன... காரணம் சொல்வீங்க?'' என்றான்.

''இந்தப் பயலுக்காக...ன்னு சொல்வேன்,'' என்று குழந் தையை அவன் கையில் திணித்தார். அவன் மனங்கனிந்து போய்த் 'தாங்க்ஸ்... அத்தை!' என்றான்.

''உங்களைப் போல ஒரு தங்கமான மனுஷனை நம்பி... எத்தனை பொண்ணுகளை வேண்ணாலும்... கொடுப் பேன், மாப்பிள்ளே...!''என்று அத்தையும் நெகிழ்ந்தார்.

**எ**ப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான் சரவணபவன்.

அம்மாவுக்கும் அவன் எதையோ சொல்ல நினைக்கிறான் என்பது புரிந்தது.

அவன் அருகில் வந்து அமர்ந்தார்.

''என்னப்பா?'' என்றார். நெஞ்சத்து அன்பெல்லாம் குரலில் குழைந்து வெளி வந்தது.

''அம்மா... பட்ட பாடெல்லாம் வீணாப் போச்சு... அட்லீஸ்ட் குழந்தையாவது நம்மகிட்டே இருந்தாத் தேவலை.''

''ஆமா... எப்படிப் போய்க் குழந்தையைக் குடுங்கன்னு கேக்கறது? எப்படி வளர்க்கறது? இங்கே கொண்டு வந்தர்லாமா?'' என்றார் யோசனையோடு.

''இல்லைம்மா. பையன் அங்கே... என்னோட இருந்தா நல்லாருக்கும்மா. நீ பேசாம அங்கே கொஞ்ச நாள் வர்றியா?''

''வேண்டாம்டா... ராசா... உன்னைப் போல மனத் தைரியம்... எனக்கு இல்லப்பா... பாக்கற இடமெல்லாம் உங்கண்ணன் நிக்கற மாதிரியே இருக்கும். பத்தாததுக்கு இந்தப் புள்ளையும் வேற... நம்மளை வேதனைப்படுத்திட்டுப் போய்ச் சேர்ந்துட்டா...'' பேசிக் கொண்டே போன அம்மாவுக்குத் திடீரென அவன் ஏதோ சொல்ல வருகிறானோ எனத் தோன்றியது. அதனால்,

''ஏப்பா... பேசாம... நீ ஒரு கல்யாணம் பண்ணிக்கயேன்,'' என்றார்.

''மறுபடியும். பிரச்சினை அப்படியேதானம்மா இருக் கும்? வர்றவ பிரகாஷை நல்லாப் பாத்துக்குவான்னு என்ன நிச்சயம்? அதுவும், அந்த ஜெயஜோதிப் பொண்ணு வேற அவன் மேல உயிரையே வச்சிருக்குது. அது கிட்டேயிருந்து இவனை எப்படிப் பிரிக்கறதுன்னு புரியலை.''

அவன் தொட்டுக் காட்டிய இரண்டு கருத்தையும் தொடர்பு படுத்திப் பார்க்கிற அளவுக்கு அம்மாவுக்கு அனுபவம் இருந்தது.

மகனை ஊடுருவுவது போலப் பார்த்தார். அவன் முதல் முறையாக அம்மாவின் பார்வையைச் சந்திக்க மறுத்தான்.

''உனக்குப் பிடிச்சிருக்காப்பா... அந்தப் பொண்ணை?'' என்றார் ஆதரவான குரலில்.

அவன் தரையைப் பார்த்தபடி ம்... என்றான். அவனே தொடர்ந்து, ''ஆனா... அந்தப் பொண்ணுக்கு என் மேல அவ்வளவு நல்ல அபிப்பிராயம் இல்லே!'' என்றான்.

''ஓ!'' என்றார் அம்மா உள்ளடங்கிய குரலில்.

''ஆனா... கல்யாணம்னு ஒண்ணு ஆயிட்டா... கொஞ்ச நாள்ல புரிஞ்சுக்குவான்னு அத்தை சொல்றாங்க...'' என்றான் தயக்கத்துடன்.



அம்மாவின் முகத்தில் புன்சிரிப்பு தோன்றியது.

''அப்ப மாமியாரும் மருமகனும் பேசி ஒரு முடிவுக்கு வந்துட்டீங்க!'' என்றார்.

அவன் திடுக்கிட்டுப் போய் அம்மாவின் முகம் பார்த்தான். ''அத்தையாத்தான் பேச்சை ஆரம்பிச்சாங்க,'' என்றான். பின் தலையைக் குனிந்து கொண்டான்.

''அந்தப் பொண்ணு சம்மதிக்குமா? அவளுக்கு உன்னைப் பிடிக்கணுமே?''

அவன் மெதுவான குரலில் ஆனால் அழுத்தமாகச் சொன்னான்.

''சம்மதிக்க வைக்கணும். பிடிக்கவும் வைக்கணும்!'' என்று.

அம்மா சிரித்து விட்டார். அவனும் லேசான சிரிப்புடன் -

''வாழ்க்கைன்னா ரிஸ்க் எடுத்துத்தான் ஆகணும்!'' என்றான்.

அம்மா முகத்தில் சற்றே கவலை மண்டியது. ''நீ ஏற்கெனவே ரொம்ப ரிஸ்க் எடுத்துட்டியேயில்லையா?'' அவன் இப்போது அம்மாவை நேராகப் பார்த்தான்.

''அம்மா... இது வேற மாதிரி ரிஸ்க். இதுல ஜெயிக்க முடியும்னு எனக்கு நம்பிக்கை யிருக்கு. சைகாலஜிப்படி வெறுப்பே அன்போட வேறு வடிவம்னுதான் சொல்றாங்க!'' என்றான்.

''என்ன... சைகாலஜியோப்பா... இனிமேலாவது உன் வாழ்க்கை நல்லபடி அமைஞ்சா சரி!'' என்று அவன் தலையை வாஞ்சையாய்த் தடவிக் கொடுத்தார்.

## 25

சரவணபவனுக்கு உறக்கம் வரவில்லை.

நடுநிதி தாண்டிவிட்டது. ஆனாலும் உறக்கம் வரவில்லை.

அன்றைக்கு அத்தனை விவரங்களையும் கேட்டுக் கொண்ட ஜெயஜோதி சற்று நேரம் கற்சிலை போல் அமர்ந் திருந்தாள். முகம் இறுகியிருந்தது. அவள் முகம் பார்த்த சரவணபவன் திகைத்துப் போனான்.

''ஜோதி!'' என்று கேள்விக் குறியாய் முகம் பார்த்தான். அவள் அது காதில் விழாதவளாய்த் தனக்குள்ளே ஆழ்ந்தவ ளாய் எழுந்து படுக்கையறைக்குப் போய்விட்டாள்.

சற்று நேரத்திற்கு முன் வாழ்வின் சொர்க்கம் எது என்று காட்டியவள், இப்போது இதுதான் நரகம் என்று காட்டு கிறாளோ?

எல்லாவற்றையும் சொல்லி விட்டால் பாரம் இறங்கும், விடிவு பிறக்கும் என்று நினைத்தது போக, இப்படி விவகாரம் வெடிக்கிறதே!

இதுவரை மறைத்தது தவறோ என்று குழம்பியது போதாதென்று இப்போது சொன்னது தவறோ என்று குழம்ப வேண்டுமோ?

இது என்ன வாழ்க்கை? எப்போதும் எல்லாவற்றையும் சுமப்பதற்குத்தான் இறைவன் தன்னைப் படைத்தானோ?

அண்ணனின் தவறுகள்... சிவஜோதியின் தவறுகள்... குடும்பத்தின் மானம் என்று இத்தனை விஷயங்களையும்



போட்டு மனதுக்குள்ளே அடக்கிக் குடும்பத்தின் மானம், மானம் என்று அலை பாய்ந்த தனக்கு இதுதான் பரிசா?

ஜெயஜோதியாவது தன் உள்ளக் காயத்துக்கு மருந் திடுவாள் என்றால், அவளே தன்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விடுவாள் போலிருக்கிறதே!

பலவும் எண்ணி எண்ணி மருகிப் போனான். மீண்டும் தங்கள் அறைக்குச் செல்வதற்கே தயக்கமாய் இருந்தது. போய்த்தானே ஆக வேண்டும்?

போனான்.

ஜெயஜோதி கண்களை இறுக மூடிக் கொண்டு ஒருக்களித்துப் படுத்திருந்தாள்.

சற்று நேரம் நின்று பார்த்தான். பிறகு நீண்டதொரு பெருமூச்சு விட்டவனாய் அவனும் குழந்தைக்கு அந்தப்புறம் படுத்தான்.

மீண்டும் துவங்கிய இடத்துக்கே வந்து விட்டோம் என்று கசப்புடன் புன்னகைத்துக் கொண்டான்.

விளக்கை அணைத்தான்.

மறுநாள் காலை.

அவன் வேண்டுமென்றே தாமதமாக விழிப்பது போல் விழித்தான்.

ஜெயஜோதி எழுந்து குளித்து முடித்து, குழந்தையையும் குளிக்கச் செய்து, பண்ணையாளை அனுப்பி டிஃபன் வாங்கி வரச் செய்து இயல்பாய் வேலைகளைச் செய்தாள்.

அவன் சற்றே துணிவை வரவழைத்துக் கொண்டு எழுந்தான்.

''குட்மார்னிங்!''என்றான்.

''குட்மார்னிங்!'' என்றாள் அவன் முகம் பார்க்காமல். ஆனால், குழந்தை அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

''அப்பா! செடி காட்டுப்பா... பூ காட்டுப்பா!'' என்று ஆர்வம் காட்ட, குழந்தையுடன் சற்று நேரம் அளவளாவினான்.

''பிரகாஷ்... சாப்பிட வாங்க!'' என்று அவள் அழைக்கவும், வந்தார்கள். வேலைக்காரர்கள் முன் எதையும் காட்டிக் கொள்ளாமல் அவள் பரிமாறினாள். அவனும் குழந்தையுடன் பேசிக் கொண்டே உண்டு முடித்தான்.

அவளும் அமைதியாகச் சாப்பிட்டு முடித்தாள். பிறகு ஊருக்குப் போகலாம் என்றாள். புறப்பட்டார்கள்.

போகும் வழியில், ''என்னைக் கொண்டு போய் அம்மா வீட்ல விடுங்க...'' என்றாள்.

''ஜோ!'' என்றான் திகைத்துப் போய். ''ஜோ! எதுவானாலும் பேசித் தீத்துக்கலாம்!'' என்றான்.

''யோசிக்கணும். நிறைய யோசிக்க வேண்டியிருக்கு. இப்ப எதுவும் பேச விரும்பலே!'' என்றாள்.

அந்தக் கணம் அவன் முகம் இறுகிவிட்டது.

''உன்னிஷ்டம் ஜோ!'' என்றான்.

கொண்டு போய் விட்டு விட்டான்.

தனிமை அவனைக் கொன்றது.

ஜெயஜோதி போய் ஒரு வாரமாகி விட்டது. தினமும் அவள் வீட்டுக்குப் போய் வந்தான். குழந்தையுடன் இருந்து விட்டு வந்தான்.

மற்றவர்கள் முன்னால் பேசிக் கொண்டார்கள். சிரிக்கவும் கூடச் செய்தார்கள். ஆனால், தனிமையில் அழுத்தமான மௌனம் சாதித்தாள்..



''சரி... ஜோ! எப்ப உனக்கிஷ்டமோ அப்பப் பேசலாம்,'' என்றான். அதற்குப் பிறகு தனிமை நாடுவதைத் தவிர்த்து விட்டான்.

தங்கள் அறைக்குப் போனாலும் கூடச் சற்று நேரம் குழந்தையுடன் பேசிவிட்டுப் புறப்பட்டு விடுவான்.

அன்று மாலை கிளம்பியவன் ஏதோ உள்ளுணர்ச்சி வந்து திரும்பிப் பார்த்தான். அவள் அவன் முதுகைக் குறுகுறு வென்று பார்த்துக் கொண்டிருக்கக் கண்டான்.

நின்றவன், ''ஜோ!'' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்க, அவள் கேட்கத் தயாராக இல்லை என்பது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவனுக்கும் கோபம் வந்தது. விர்ரென்றுகிளம்பி வந்து விட்டான்.

வீட்டுக்கு வந்தால் தனிமை அவனைத் தின்றது. முன்பிருந்தது போல் உறவில்லாமலே இருந்திருந்தால் கூட இவ்வளவு பாதிப்பு இருந்திருக்காதோ எனத் தோன்றியது.

உறவு மலர்ந்ததற்குப் பிறகு அவளது இயல்பான சிரிப்பும், அவனைப் பார்த்துப் பார்த்துக் கவனிப்பதும் என்று வேறொரு உலகையே அவனுக்கு உருவாக்கிக் காட்டினாள். இன்று அவளே நெருப்பாய்த் தகிக்கிறாள்.

இந்தப் பெண்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்? நெருப்பும், நீருமாய்ப் போட்டுப் புரட்டி எடுக்கிறார்கள்.

மணியைப் பார்த்தான். பத்துஆகி விட்டது.

ஜோ தூங்கியிருப்பாளா? பையன் உறங்கியிருப்பானா? என்று எண்ணங்கள் மாறி மாறி அவனைத் தாக்க நீண்டதொரு பெருமூச்சு விட்டுப் படுக்கையில் சாய்ந்தான்.

இன்று நிறைய வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்திருந்தான். காலையில் கடுமையான உடற் பயிற்சி செய்ய ஆரம்பித்திருந்தான். களைத்துப் போய்ப் படுக்கையில் விழுந்தால் உறக்கம் உடனே தழுவிக் கொள்கிற மாதிரிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத் திருந்தான்.

அப்போது -

டெலிஃபோன் மணியடித்தது.

எடுத்தான்.

அந்தப் பக்கம் ஜெயஜோதி தேம்பிக் கொண்டே, ''உடனே வாங்க! தம்பி... தம்பி...'' என்று விசும்பினாள்.

அவன் உடனடியாகச் சுறுசுறுப்பானான்.

''தம்பி... தம்பி...க்கு என்ன ஆச்சு?'' என்றான் பதட்டமாக.

''காசை... காசை... முழுங்கிட்டான்!'' என்றாள் கலவர மாக.

''சரி... சரி... இப்ப வந்தர்றேன்,'' என்றவன் லுங்கியைக் கூட மாற்றவில்லை சட்டையை மட்டும் மாட்டிக் கொண்டு காரை எடுத்தான்.

டாக்டர் பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

''ஆ!'' என்று வாயைப் பிளந்து காட்டிக் கொண்டிருந்தான் பிரகாஷ்.

'காசு எங்கடா? காசை என்ன செஞ்சே?'' என்று வெறி வந்தவள் போல் உலுக்கினாள் ஜெயஜோதி.

''தெரியலே?'' என்று கை விரித்தான் பிரகாஷ்.

ஜெயஜோதிக்குக் கடுங்கோபம் வந்தது. முதுகில் ஒன்று வைத்தாள்.



''ஏய்! என்ன நீ? குழந்தையைப் போய் அடிச்சுகிட்டு...' என்று அந்தப் பக்கம் இழுத்தான் பவன்.

அவள் அவனைத் தவிப்புடன் பார்த்தாள். ''பாருங்க! முழுங்கித் தொலைச்சுட்டு ஒண்ணுமே சொல்ல மாட்டேங் கறான்,'' என்று புலம்பினாள்.

டாக்டர் சங்கர் சரவணபவனின் நண்பர்.

''மேடம்! பதட்டப்படாதீங்க! குழந்தைங்கன்னா இதெல்லாம் சகஜம்தான். பையன் நார்மலா இருக்கறதைப் பார்த்தா... காசு எங்கயும் எக்குத் தப்பா மாட்டலேன்னு தெரியுது. எதுக்கும் வாழைப்பழம் சாப்பிடக் குடுங்க.... ஏதாவது... வித்தியாசமாத் தெரிஞ்சா... உடனே எனக்கு ஃபோன் பண்ணுங்க... இல்லேன்னா... வந்துடுங்க...'' என்றார்.

நான்கு கட்டிடம் தள்ளி அவரது ஆஸ்பத்திரி இருந்தது. அவரும் அருகிலேயே குடியிருந்தார் என்பதால் எப்போது வேண்டுமானாலும் போகலாம் என்ற சௌகரியம் இருந்ததால் ஜெயஜோதி சற்றே ஆறுதலானாள்.

எல்லாரும் போனதற்குப் பிறகு காசு எப்படி அவன் கையில் வந்தது என்று கேட்டான் சரவணபவன்.

''என் பர்ஸை இங்க வச்சிருந்தேன். எடுத்து விளையாடிட்டிருந்தான். நல்லா ஞாபகம் இருக்கு. ஒரே ஒரு ஒரு ரூபாய் காயின்தான் வச்சிருந்தேன். எங்கடான்னு கேட்டாத் தெரியலேங்கறான்... அப்பதான் மிட்டாயை முழுங்கற மாதிரி முழுங்கியிருக்கான் போல...'' என்றாள்.

அவள் தவிப்பைப் பார்த்து அவன் இடது கையால் அணைத்துக் கொண்டான். ''சரி... சரி... பயப்படாதே!'' என்று தேற்றினான்.

அவனை 'இருங்க' என்று அவளும் சொல்லவில்லை. அவனும் புறப்படவில்லை. மாறாகச் சண்முகத்திற்குஃபோன் செய்து இங்க தம்பிக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை. நான் காலையில வர்றேன். நீங்க கேட்டைப் பூட்டிக் குங்க... என்று ஃபோன் செய்தபோதும் அவள் தடுக்க வில்லை.

ராஜலட்சுமி... அம்மா மூவருக்கும் டிஃபனை மேலேயே எடுத்து வந்தார்.

''பயப்படாதடி... இந்தா இட்லிய ஊட்டு... மேலே இந்த வாழைப் பழத்தைக் குடு. குழந்தை டாய்லெட் போகும் போது வெளியே வந்தாலும் வந்துடும்,'' என்று ஆறுதல் சொன்னார்.

''மாப்பிளே... இப்பல்லாம்... கால்ல சக்கரம் கட்டிட்டு வர்றீங்க... உடனே போயிடறீங்க. தங்க மாட்டேங்கறீங்க... இவளும் என்னமோ ஒரு வாரமா இங்க இருக்கா!'' என்றார் கவலையுடன்.

அவன் அவள் முகத்தைப் பார்த்தான். பிறகு, ''இல்லைங்கத்தே... ஒரு பத்து நாளைக்கு ஒரு முக்கிய வேலையிருக்கு. டெல்லி ஆர்டர் ஒண்ணு போயிட்டிருக்கு. தினம் லேட்டா வந்தா உங்க மக போர்க்கொடி தூக்கறாப்பல. அதுதான்... அந்த வேலையெல்லாம் முடிக்கற வரைக்கும்... இங்க இருன்னு அனுப்பினேன்,'' என்றான்.

''அப்படியா... விஷயம்...!'' என்று அவர் சமாதானமாகிக் கொள்வதைப் பார்த்து அவனுக்குப் பாவமாக இருந்தது. அவரும் இறங்கிப் போனார்.

போன வாரம் காரில் வரும்போதே நம்ம பிரச்சினை எதையும் எங்க அம்மாகிட்டயும் உங்க அம்மாகிட்டயும்



சொல்லிக்கிட்டிருக்காதீங்க. என்று அவள் கடுப்பானது அவனுக்கு நினைவு வந்தது.

ஜெயஜோதி அவசரமாகப் பாத்திரங்களை எடுத்து அடுக்கிக் கீழே எடுத்துக் கொண்டு போனாள்.

சோஃபாவின் கைப்பிடியில் அவன் தலை வைத்துப் படுத்துக் கொள்ள, மகன் அவன் மார்பில் மேலேறி அமர்ந்து விளையாடினான். அவனும் குழந்தையிடம் கதை பேசிக் கொண்டே இருக்க, குழந்தை அவன் மார்பில் மேலேயே படுத்துக் கொண்டான்.

''ம்..ம்...!'' என்று கதை கேட்டபடி உறங்கியும் விட்டான்.

குழந்தையின் தலையைக் கோதிக் கொடுத்தபடி அவன் கண்மூடிப் படுத்திருந்தான். கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு கிடைத்த அந்த சுகம் அவனுக்குத் தேவையாய் இருந்தது. இதமாய் இருந்தது.

சற்றுக் கழித்து மேலே வந்த ஜெயஜோதி நின்று வைத்த கண் வாங்காமல் அந்தக் காட்சியைப் பார்ப்பதை அவன் அறியவில்லை.

''குட்டியை பெட்ல படுக்க வச்சர்லாமா?'' என்று அவள் கேட்க.

''இல்லை! கொஞ்ச நேரம்... இப்படியே இருக்கட்டும்,'' என்றான், கண்ணைத் திறக்காமலே.

அவள் அதற்குள் படுக்கையை உதறிப் போட்டு விடலாம் என்று உதறினாள்.

கால் மணி நேரம் போயிருக்கும்.

''ஏங்க! எத்தனை நேரம் இப்படியே படுத்திருப்பீங்க... அவனைக் குடுங்க...'' என்று அவள் எடுத்துக் கொண்ட போது தடுக்கவில்லை. அவனும் எழுந்து நின்றான்.

அவள் குழந்தையைப் படுக்கையில் படுக்க வைத்து விட்டு, அவனுக்குப் போர்வையைப் போர்த்தி விடலா மென்று சோஃபாவின் மேல் இருந்த போர்வையை எடுத்து உதறினாள்.

'ணங்'கென்ற ஓசையுடன் அந்த ஒரு ரூபாய் நாணயம் உருண்டோடியது.

அவள் திகைத்துப் போய் அவன் முகம் பார்த்தாள்.

அவன் ஒரே எட்டில் நெருங்கி அந்தக் காசை எடுத்தான்.

'இந்தக் காசுதானா?' என்று கேட்டபடி அவளைப் பார்த்தான்.

அவள் விடுதலை உணர்வும், கலக்கமும் ஒருங்கே தோன்ற 'ஆமாம்!' என்று அவனைப் பார்த்தாள்.

அழுகையும், சிரிப்பும் பொங்க நிற்கிற அவளைப் பார்த்தவுடன் அவன் தன்னை மறந்தான்.

''கொஞ்ச நேரத்துக்குள்ள கலக்கிட்டியேடி. மனுஷங் களோட உணர்வுகளோட விளையாடிக் கலக்கறதே வேலையாப் போச்சு... உனக்கு!'' என்று முணுமுணுத்தபடி தன்னருகில் இழுத்தான். முகம் நோக்கிக் குனிந்தான்.

தொடர்ந்த அவனது முணுமுணுப்பையும் அவனது இதழ்ப் பதிவுகளையும் வாங்கிக் கொண்ட அவள் அதற்கொரு பதிலைச் சொன்னாள்.

அவன் சட்டென்று நிமிர்ந்தான்.

அவளை விலக்கிச் சற்று தூரத்தில் நிறுத்தி வெறித்துப் பார்த்தான்.



## 26

''எல்லாத்தையும் மன்சுல வச்சுப் பூட்டிக்கிட்டு அழுத்தமா நடமாடறது கெட்டிக்காரத்தனம்னு நினைச் சுக்கிட்டிருந்தீங்களே. அது கூட இருக்கறவங்களை எப்படிக் கஷ்ப்படுத்தும்னு கொஞ்சம் நீங்களும் புரிஞ்சுக்கணுமில்லே! அதுக்குத்தான் செஞ்சு காமிச்சேன்!'' என்றாள்.

அதுவும் சரவணபவன் தன்னை மறந்த மயக்கத்தில் ஆழ்ந்தவனாய், 'ஹேய்! ஜோ! ஏன் என்னைப் புரிஞ்சுக்க மாட்டேன்கறே. உன்னை உயிரா நேசிக்கறேன். இப்படி ஒரு வாரமா தூரத்துல நிக்க வச்சுப் போட்டு வாட்டி எடுக்கறயே!'' என்று புலம்பவும்தான் இந்தப் பதிலை அவனைப்போலவே கிறக்கக் குரலில் சொன்னாள்.

அந்தப் பதிலைக் கேட்டுத்தான் திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தான். அப்படி வெறித்தும் பார்த்தான்.

அவளும் சளைக்காமல் பதில் பார்வை பார்த்தாள். ஒரு வாரமாக இறுகியிருந்த அவன் முகம் மெதுவாக மென்மை யாக மாறுவதையும், கண்களில் முதலில் லேசான கோபம் தோன்றிப் பின் வியப்பாக மாறிப் பின் பார்வை கிறக்கமாக மாறுகிற ரசவாதத்தை அவள் லயித்துப் போய்ப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

பாரமிறங்கியவனைப் போல் அவன் கலகலவென்று சிரிப்பதை அவள் ஒரு விதமான நிறைவுடன் பார்த்தாள். அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''இதுக்குப் பேர்தான் ஊடல்!'' என்றாள்.

''ம்...?'' என்று கேள்விக் குறியாய் அவள் முகம் பார்க்க, அவளும் சிரித்து விட்டாள்.

''எப்படி ஜோ உன்னால ஒரு வாரம் இப்படி மெயின்டெயின் பண்ண முடிந்தது?'' என்றான் மனத்தாங் கலுடன்.

சற்று முன் அவன் உளறிய உளறல்கள் அவளுக்கு நினைவுக்கு வந்தன. ''என்னதான் உனக்குக் கோபம்னு சொல்லு. என்கிட்டே என்ன தப்பு... நாலு அடி வேண்ணாலும் அடிச்சுடு. என்னை இப்படிக் கொல்லாதே!'' என்று புலம்பியது மனதில் தோன்றச் சிரித்தாள்.

''அதனாலதான்... அய்யா... அந்தப் புலம்பல் புலம் புறீங்க... மனசுக்குள்ளே இருந்ததெல்லாம் வெளியே வந்துச்சு,'' என்றாள்.

அவனைப் போலவே பேசிக் கிண்டல் செய்தாள். அவன் கிறக்கப் பார்வையுடன் அதை ரசித்துக் கொண் டான். அவள் முகம் நோக்கிக் குனிந்தான். அவள் தடுக்க வில்லை.

சற்றுக் கழித்து நிமிர்ந்தவன், ''அப்படி என்னத்தை நான் மனசுக்குள்ளேயே பூட்டி வச்சுட்டேன்னு இப்படிப் போராட்டம் நடத்தறே?'' என்றான்.

அவள் சற்று நேரம் அமைதியானாள். பிறகு, ''நமக்குக் கல்யாணம்னு பேச்சு வந்தப்பவே இதையெல்லாம் என் கிட்டே சொல்லி இருக்கலாமில்லே?'' என்றாள்.

அவன் சிந்தனையிலாழ்ந்தான். பிறகு கட்டிலில் அமர்ந் தான்.

''சரி! பேச்சுன்னு வந்தாச்சு. எல்லாத்தையும் பேசித் தீர்த்துக்கலாம், வா!'' என்று இரு கைகளும் நீட்ட அவள் அடைக்கலமாகிக் கொண்டாள்.



''ஜோ! நல்லா யோசிச்சுப் பாரு. நீ அப்ப என்னை வில்லன் ரேஞ்சுக்குக் கற்பனை செஞ்சு வச்சிருந்தே. அப்ப சொல்லி யிருந்தா துளியாவது நம்பியிருப்பியா?'' என்றான்.

அவள் ஒத்துக் கொண்டாள். ''ஆமா, நம்பியிருக்க மாட்டேன்,'' என்றாள்.

''ஆனா ஒரு விஷயம் உன்கிட்டே எனக்கு ரொம்பப் பிடிச்சது, தெரியுமா?'' என்றான்.

''என்ன...?''

''வில்லன் ரேன்ஜுக்குக் கற்பனை பண்ணி வச்சிருந்த ஆள் கூட குழந்தைக்காக வாழ்க்கை நடத்தறதுங்கற அளவுக்குத் துணிஞ்சியே... அது...!'' என்றான்.

அவள் மௌனமாக இருந்தாள். பிறகு, ''ஆனா, என்னைச் சம்மதிக்க வைக்கணுங்கறதுக்காகக் கிட்டத்தட்ட பிளாக் மெயில் செஞ்சீங்களே!'' என்றாள்.

'ஆமா...! அது உங்க அம்மா ஐடியா!' என்றாள்

அவள் திகைத்துப் போனாள். ''ஆமா! எந்த நாகரீகமான வழிமுறையையோ கையாண்டு சம்மதிக்க வச்சுக் கன்னாங்க... அதான் பிளாக்மெயில் செஞ்சேன்... அது மட்டுமில்லே... எனக்கு வேற ஒரு பயமும் இருந்தது,'' என்றான்.

''என்ன பயம்?''

''அது... அதுவரைக்கும், உன் வாழ்க்கையில் நீ யாருக்கும் இடம் கொடுக்கலேன்னு எனக்குத் தெரியும்... ஆனா... திடீர்னு யாராவது நுழைஞ்சிட்டா? அதனாலதான்... மகாராணியை முதல்ல... நம்ம கோட்டைக்குள்ளே கொண்டு வந்தர்லாம். அதுக்கப்புறம்... எப்படியும் புரிய வைக்க முடியும்னு ஒரு தைரியம்...'' என்றான்.

''குண்டு தைரியம்தான்!'' என்று அவள் சிரித்தாள்.

அவனும் புன்னகைத்துக் கொண்டான். அவள் விலகி அவன் எதிரில் மண்டி போட்டு அமர்ந்தாள்.

''சரி... அக்கா... ரூம்...சாவியைக் குடுங்கன்னு கேட்டேனே... குடுத்திருக்கலாமில்லே!'' என்றாள்

அவன் சட்டென எழுந்தான். ஜன்னல் புறம் போய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்தான். லேசான அவமான உணர்வு தோன்ற,

''அதுக்குப் பெருசா ஒண்ணும் காரணமில்லே ஜோ! நீ உங்க சிஸ்டரையோ, எங்க அண்ணனையோ எங்கே மட்டமா நினைச்சுருவியோன்னு...'' என்று இழுத்தான்.

''அட! ஆண்டவா!'' என்று தலையில் கையை வைத்துக் கொண்டு கட்டிலில் பொத்தென்று அமரவும், அவன் சட்டென்று சிரித்து விட்டான்.

முகத்தில் இருந்த எல்லா டென்ஷனும் வடிய, அவன் இளகுவதை அவள் ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு வெட்கத்துடன் முறுவலித்தபடி,

''பவன்! பிடிச்சுத்தானே கல்யாணம் செஞ்சீங்க! அப்புறம்... ஏன் உரிமையிருந்தும் கூட...''என்று இழுத்து நிறுத்தினாள்.

அவன் வாஞ்சையாய்ப் புன்னகைத்தான். ''ஜோ! உன் மனசு முழுமையா ஒத்துக்காத வரைக்கும் எந்த உறவையும் திணிக்க நான் விரும்பலே... உன்னை வற்புறுத்தறதில் எனக்கு உடன்பாடில்லே... அது மட்டுமல்ல... உன்னை வருத்தப் படுத்தியோ நோகடித்தோ பார்க்கற சக்தி எனக்கில்லே!'' என்றான்.



உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்த அந்த வார்த்தைகளுக்கு அவளிடமிருந்து சரமாரியாகப் பரிசுகள் கிடைத்தன. அந்தப் பரிசுகளை வாங்கிக் கொண்டு இது கனவா, இல்லை நனவா என்று திகைத்துப் போயிருக்கிற அவனைக் கண்டு அவளுக்குள் புன்னகை மலர்ந்தது.

அவன் தொடர்ந்தான். ''எல்லாத்தையும் நானே ஒரு நாள் சொல்லணும்னு நெனச்சேன். அதுக்குள்ள நீ சாவி செஞ்சு... வேவு பாத்து... ஏகமா கலக்கிட்டே. உன்னோட வேகத்தைப் பார்த்தவுடனே... சொல்லலாமா வேண்டாமான்னு... எனக்குத் தயக்கம் வந்துடுச்சு...'' என்றான்.

''ஆமா, என்கிட்டே யாரும் எதையாவது மறைச்சாத்தான் எனக்குக் கோபம் வரும்...'' என்றாள்.

''சரிங்க! மகாராணி! இனிமே ஞாபகம் வச்சுக்கறேன்...'' என்று அவன் குறும்பாகச் சிரித்தான்.

''லொள்ளுதானே?'' என்று அவள் வைத்த செல்லக் குட்டு ஒன்றைப் பவ்யமாய் வாங்கிக் கொண்டான்.

''அது மட்டுமில்லே... அன்றைக்கு முதமுதலா... நமக் குள்ளே... என்று நிறுத்தினாள்.

''ம்... சொல்லு...!'' என்றான்.

''எல்லாம்... நடந்த... அன்னைக்கு...'

ஆழ்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். ''மறுநாள்... ரொம்ப சந்தோஷமாச் சிரிச்சுகிட்டிருந்தீங்க... அப்ப உங்களை இப்படி சந்தோஷமாப் பார்க்க... ரொம்ப நல்லாயிருக்குனு சொன்னேன்...''

''ஆமா...!''

''அப்ப... நீங்க... வாழ்க்கையின் முதல் அனுபவம்... மனசுக்குப் புடிச்சவளோட அமைஞ்சா எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்னு சொன்னீங்க...''

''ஓ...!மயக்கத்திலே உளறிட்டேனோ?'' என்று சிரித்தான்.

''ஆமா... அதுதான் எனக்குள்ளே... ஒரு பெரிய சந் தேகத்தைக் குடுத்திருச்சு. விஷயம் என்னன்னு தெரிஞ்சே ஆகணும்னு தோணிருச்சு. அதனால் டூப்ளிகேட் சாவி செய்யற அளவுக்குப் போனேன்.''

'ம்...' என்று இழுத்துச் சொல்லியபடி அவள் சொன்னதை உள்வாங்கிக் கொண்டான்.

சற்று நேரம் மௌனத்தில் கழிந்தது.

''சரி.... இன்னும் என்னென்ன கேட்கணுமோ, கேட்டுடு!'' என்றான்.

''இல்லே, எங்கக்காவைப் பத்திப் பேச்செடுத்தாலே பேச்சை மாத்துவீங்களா? அப்ப அக்காவோட வாழ்ந்த வாழ்க்கை பொய்யா? அவளை ஏன் மனசுல இருந்து தூக்கி எறியணும்னு நெனக்கிறீங்கன்னெல்லாம் எனக்குக் கோபம்...'' என்றாள்.

அவன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு தலையைக் கோதியபடி -

''ஜோ! உனக்குத் தெரியாது, உங்கக்காவை நிம்மதியா இருக்க வைக்கணுங்கறதுக்காக நான் எவ்வளவு பாடுபட் டேன்னு. ஆனா, உங்கக்கா அவளுக்குன்னு ஒரு கற்பனை உலகத்தை வச்சுகிட்டு அதுக்குள்றயே ஆழ்ந்து போனாளே... தவிர... இந்தக் குழந்தையை நினைக்கவேயில்லை. அந்தக் கோபம்... எவ்வளவு டிரை பண்ணினேன்.... தெரியுமா? ஷி நெவர் அன்டர்ஸ்டுட்!'' என்றான்.



''அப்ப... அக்கா... கேட்ட மாதிரி... ரெண்டாங் கல்யாணத் துக்கு.. ஒத்துகிட்டிருக்கலாமில்லே...''

''ஜோ! சொன்னாத் தப்பா நினைக்காதே! உங்கக்காவுக்கு அவ்வளவு தைரியம் பத்தாது...'' என்பதற்குள் அவள் இடைமறித்து.

''கோழைன்னு சொல்லுங்க!'' என்றாள்.

''ஆமா! கோழை மனசு! பெண்கள் இரண்டு பேர் இருந்தா எப்படியும் பாலிடிக்ஸ் வரும். பிரச்சினைகள் வரும். எனக்குன்னு வரப்போறவ... உங்கக்காவை இல் ட்ரீட் செஞ்சா என்னால தாங்க முடியாது. ஆகட்டும் பாக்கலாம்னு வரிஞ்சு கட்டிட்டுப் போய்த் தனியா வாழற டைப்புமில்லே.... அவள் தனக்குன்னு ஒரு உலகத்தைப் படைச்சுகிட்டு... எங்கண்ண னோட வாழ்க்கை நடத்திட்டு இருந்தா... அப்ப... இந்தக் குழந்தையோட கதி...'' என்றான்.

''ஓ...'' என்றாள்.

''எங்கண்ணனும் ஒரு தப்பு செஞ்சான். ஆனா, அழகான தப்பு!'' என்று கலகலவெனச் சிரித்துக் கொண்டு உறங்குகிற பிரகாஷின் நெற்றியில் முத்தம் வைத்தான்.

''ஏங்க...?'' என்றாள் சிந்தனையுடன்.

''ம்....'' என்றான் புன்சிரிப்புடன், அவளை நோக்கி.

''ஒருவேளை... அக்கா இருக்கும் போதே இதே மாதிரி... நாம கல்யாணம் செஞ்சிருந்தா, அக்கா... இருந்திருப் பாளோ...'' என்றாள்.

அவன் படுக்கையில் சாய்ந்தான். விட்டம் பார்த்துப் படுத்தபடி தலைக்கு அணையாக இரு கைகளையும் கொடுத் தான்.

''இல்லை.... ஜோ! அதென்னவோ எனக்கு நம்பிக்கை யில்லே. அவளும் பாவம்தான். எங்கண்ணனோட உறவு... இறப்பு... குழந்தை இதெல்லாம் திடீர்னு... ஆனா அடுத் தடுத்து... ஏற்பட்டு அவள் மனசைப் பாதிச்சிருச்சு. இன்னும் சொல்லப் போனா... ஒரு ஸ்டேஜுக்கப்புறம் அவளுக்குக் குழந்தையைப் பத்தின கவலை கூட இல்லாமல் போச்சு... வாழற ஆசையே விட்டுப் போச்சு... மாத்தியிருக்க முடியாது!'' என்றான்.

பிறகு எழுந்து கட்டிலில் நிமிர்ந்து அமர்ந்தான். ''அது சரி... எல்லா அனாலிசிஸ்ஸும் இன்னைக்கே முடிக்கணுமா? என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டியா நீ...?'' என்றான்.

''ஏன் புரிஞ்சுக்காம? அற்புதமான மனுஷராச்சே நீங்க! ரெண்டு குடும்பத்தின் மானம்தான் பெரிசுன்னு தன்னோட வாழ்க்கையையே பணயம் வைக்க முன்வந்தவராச்சே... உங்களைப் புரிஞ்சுக்கவா என்னால முடியாது... உங்களுக் கில்லாததுன்னு என்கிட்டே எதுவுமே இல்லை... மிஸ்டர் சரவணபவன்!'' என்று அதிகாரப் பூர்வமாக அறிவித் தாள்.

அவன் மயங்கிப் போனான்.

தன் மகிழ்ச்சியை விதவிதமாய் வெளிப்படுத்தினான். ஆனால், அவள் இன்னமும் சற்றே விலகியிருக்கிறாற் போல் தோன்றவே கேள்விக் குறியாய்ப் பார்த்தான்.

''இன்னும் ஒரே... ஒரு கேள்வி இருக்கு...'' என்றாள்.

''அவட் வித் இட்'' என்றான்.

''ஒருவேளை... ஒருவேளை... எங்க அக்கா... மனசு மாறியிருந்தா... அவளுக்கு வாழ்க்கை குடுத்திருப்பீங்களா?'' என்றாள்.



''இப்படி ஒரு ஏற்பாட்டுக்கு ஒத்துகிட்டப்ப அதுக்கான வாய்ப்பே இல்லைன்னு சர்வ நிச்சயமாய் எனக்குத் தெரியும். ஆனா... ஒருவேளை... உங்கக்கா... மனசு மாறியிருந்தா... ஏத்துகிட்டிருப்பேன்... ஏன்னா... அது அம்மாவோட கட்டளை!'' என்றான்.

''ஓ...!'' என்றாள் எதுவும் பேசத் தோன்றாதவளாய்.

''எனக்கு என்ன ஆச்சரியம் தெரியுமா? அம்மா இவ்வளவு தூரம் சிந்திச்சு முடிவு சொன்னதுதான். ஆனா, அதே அம்மா நாம ஊருக்குப் போயிருந்தப்ப ஒரு கேள்வி கேட்டாங்க... பாரு...'' என்று பகபகவென்று சிரித்தான்.

''என்ன கேட்டாங்க...?''

'''ஏம்ப்பா... இந்த ஜெயாப்புள்ளையை உசிரா நெனக்கறே. ஆனா, விலகியும் நிக்கறே! எப்படிப்பா முடியுது?'ன்னு சிரிச்சாங்க. அப்புறம்... அவர்களே விளக்கமும் சொன் னாங்க. 'அவளுக்குக் கொஞ்சம் கூட வருத்தம் வரக் கூடாதுங்கறதுக்காக அத்தனை சுமையும் நீ தாங்கிக்கறே! இல்லப்பா... இத்தனை பிரியம்... கிடைக்கறதுக்கு அந்தப் புள்ளை குடுத்து வச்சிருக்கோணும்டான்னாங்க...''

''நீங்க... என்ன சொன்னீங்க..'' என்றாள்.

'''அம்மா... ப்ளீஸ்!'ன்னு கெஞ்சினேன். பாவம்னு அதோட பேச்சை விட்டுட்டாங்க...'' என்றான்.

மறுபடியும் கலகலவென்று சிரித்தார்கள். இப்போது அவள் தானே அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''ஆமா! நான் ரொம்ப அதிர்ஷ்டசாலிதான்!'' என்றாள்.

''நானுந்தான்... .ஜோ!'' என்றான். மனைவியைத்தன் கைப் பிடிக்குள் கொண்டு வந்தான்.

''ஜோ! எங்கண்ணன் இறந்தப்ப என் வாழ்க்கையில வீச ஆரம்பிச்ச புயல்... ரொம்ப வீச்சோடு இருந்தது. உங்க அக்காவை ஏத்துக்க வேண்டி வந்தப்ப... ஏதோ வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமாவது இருக்கட்டும்னு நெனச்சேன். ஆனா, அப்ப என் மனநிலை எப்படி இருந்துச்சுன்னா... ஏதோ ஒரு பெரிய பாலைவனத்துல என் பயணம் தொடங்கிருச்சுன்னு நெனச்சேன்... கண்ணுக்கெட்டற தூரம் பாலைவனம் தான்டா பயலே! ஏதோ பிஸினஸையும், இந்தக் குழந்தையையும் வச்சு மனசைத் தேத்திக்கோன்னு என் மனசு எனக்குச் சொல்லிச்சு. அப்புறம் நீ என் வாழ்க்கையில வந்தே... வாழ்க்கை பனி மலர்ச்சோலையா மாறினதா உணர்ந்தேன். ஜஸ்ட் நீ பக்கத்துல இருந்தாக்கூட போதும்னு நிறைவா இருந்தேன்...'' என்றான்.

அவள் நெகிழ்ந்தாள். அவன் கைப்பிடிக்குள் நெகிழ்ந்தும் கொடுத்தாள். அவன் அவள் கழுத்தில் முகம் புதைத்த கணத்தில் சிரித்தாள். அவன் தொடர்ந்து,

''இந்தச் சோலையில் பூ பூக்கணும் காய் காய்க்கணும். கனியா மலரணும்!'' என்றான்.

''ஆணா, பெண்ணா?'' என்றாள்.

அவன் சிரித்தான். ''முதல்ல ஆண்! அப்புறம் பெண்!'' என்றான் தீர்மானமாக.

''ஏன் அப்படி? முதல்ல பெண்ணா இருக்கக் கூடாதா?'' என்றாள்.

''ஏய்! என்ன இப்படிச் சொல்றே... நான் ஆசையா பேரெல் லாம் செலக்ட் செஞ்சு வச்சிருக்கேன்,'' என்றான்.

''அப்படிப் போடுங்க!'' என்று அவளது வழக்கமான கிண்டலை அவள் செய்தாள்.

''என்ன பேராம்?'' என்றாள்.



லட்சுமிகாந்தன் என்றான். ''ஏன் தெரியுமா? ராஜலட்சுமி அம்மாவும், முத்துலட்சுமி அம்மாவும்தான் இந்தத் தேவியார் எனக்குக் கிடைக்க முழுசா ஒத்துழைச்சாங்க... அதனாலதான் என்றான் பவன்.

''ஆனாலும்... உங்க வாழ்க்கையை ரொம்பத்தான் பெண்கள் ஆட்டிப் படைக்கறாங்க!'' என்றாள் ஜெயஜோதி.

''என்னை மட்டுமல்ல... பெண்ணே?! உலகத்தில் ஆண் அப்படின்னு ஒருத்தன் பிறந்துட்டாலே அவனை ஆட்டிப் படைக்கறதுக்குன்னு ஒரு கும்பலே கூடப் பிறந்தர்றாங்க.... தெரியுமா?'' என்றான் கிறக்கக் குரலில்.

அவள் சிரித்து விட்டாள். ஆனால், ''இனிமே எப்போதும் தேவியாரின் ஆளுகைக்குள் இருக்கச் சம்மதம்!'' என்றான்.

''இதுகூட...ஒரு கெட்டிக்காரத்தனம்தான்!'' என்றாள் அவள்.

''எது...?''

''இப்படி அடிமை, ஆளுகைன்னெல்லாம் சொல்லி கிட்டு... ஆனா... செங்கோல் மட்டும் உங்க கையில்தான்...'' என்றாள்.

''சரி... விடு... அது எப்படியோ ஆகட்டும். இப் போதைக்குக் காம்ப்ரமைஸ்!'' என்று கலகலவெனச் சிரிக்க, அவள் இயல்பாய் இடம் கொடுத்தாள்.

''ஒரு நாட்டுக்காக ஒரு ஊரைத் தியாகம் செய்யலாம்.

ஒரு ஊருக்காக ஒரு குடும்பத்தைத் தியாகம் செய்யலாம்.

ஒரு குடும்பத்துக்காகத் தன்னையே தியாகம் செய்யலாம். தெரியுமா? ஆனால் எந்தத் தியாகத்துக்கும் சரியான பரிசு கிடைக்காமப் போறதில்லே. யு அன்டர்ஸ்டான்ட்!'' என்று

''ஜோ! எங்கண்ணன் இறந்தப்ப என் வாழ்க்கையில வீச ஆரம்பிச்ச புயல்... ரொம்ப வீச்சோடு இருந்தது. உங்க அக்காவை ஏத்துக்க வேண்டி வந்தப்ப... ஏதோ வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமாவது இருக்கட்டும்னு நெனச்சேன். ஆனா, அப்ப என் மனநிலை எப்படி இருந்துச்சுன்னா... ஏதோ ஒரு பெரிய பாலைவனத்துல என் பயணம் தொடங்கிருச்சுன்னு நெனச்சேன்... கண்ணுக்கெட்டற தூரம் பாலைவனம் தான்டா பயலே! ஏதோ பிஸினஸையும், இந்தக் குழந்தையையும் வச்சு மனசைத் தேத்திக்கோன்னு என் மனசு எனக்குச் சொல்லிச்சு. அப்புறம் நீ என் வாழ்க்கையில வந்தே... வாழ்க்கை பனி மலர்ச்சோலையா மாறினதா உணர்ந்தேன். ஜஸ்ட் நீ பக்கத்துல இருந்தாக்கூட போதும்னு நிறைவா இருந்தேன்...'' என்றான்.

அவள் நெகிழ்ந்தாள். அவன் கைப்பிடிக்குள் நெகிழ்ந்தும் கொடுத்தாள். அவன் அவள் கழுத்தில் முகம் புதைத்த கணத்தில் சிரித்தாள். அவன் தொடர்ந்து,

''இந்தச் சோலையில் பூ பூக்கணும் காய் காய்க்கணும். கனியா மலரணும்!'' என்றான்.

''ஆணா, பெண்ணா?'' என்றாள்.

அவன் சிரித்தான். ''முதல்ல ஆண்! அப்புறம் பெண்!'' என்றான் தீர்மானமாக.

''ஏன் அப்படி? முதல்ல பெண்ணா இருக்கக் கூடாதா?'' என்றாள்.

''ஏய்! என்ன இப்படிச் சொல்றே... நான் ஆசையா பேரெல் லாம் செலக்ட் செஞ்சு வச்சிருக்கேன்,'' என்றான்.

''அப்படிப் போடுங்க!'' என்று அவளது வழக்கமான கிண்டலை அவள் செய்தாள்.

''என்ன பேராம்?'' என்றாள்.



லட்சுமிகாந்தன் என்றான். ''ஏன் தெரியுமா? ராஜலட்சுமி அம்மாவும், முத்துலட்சுமி அம்மாவும்தான் இந்தத் தேவியார் எனக்குக் கிடைக்க முழுசா ஒத்துழைச்சாங்க... அதனாலதான் என்றான் பவன்.

''ஆனாலும்... உங்க வாழ்க்கையை ரொம்பத்தான் பெண்கள் ஆட்டிப் படைக்கறாங்க!'' என்றாள் ஜெயஜோதி.

''என்னை மட்டுமல்ல... பெண்ணே?! உலகத்தில் ஆண் அப்படின்னு ஒருத்தன் பிறந்துட்டாலே அவனை ஆட்டிப் படைக்கறதுக்குன்னு ஒரு கும்பலே கூடப் பிறந்தர்றாங்க.... தெரியுமா?'' என்றான் கிறக்கக் குரலில்.

அவள் சிரித்து விட்டாள். ஆனால், ''இனிமே எப்போதும் தேவியாரின் ஆளுகைக்குள் இருக்கச் சம்மதம்!'' என்றான்.

''இதுகூட...ஒரு கெட்டிக்காரத்தனம்தான்!'' என்றாள் அவள்.

''எது...?''

''இப்படி அடிமை, ஆளுகைன்னெல்லாம் சொல்லி கிட்டு... ஆனா... செங்கோல் மட்டும் உங்க கையில்தான்...'' என்றாள்.

''சரி... விடு... அது எப்படியோ ஆகட்டும். இப் போதைக்குக் காம்ப்ரமைஸ்!'' என்று கலகலவெனச் சிரிக்க, அவள் இயல்பாய் இடம் கொடுத்தாள்.

''ஒரு நாட்டுக்காக ஒரு ஊரைத் தியாகம் செய்யலாம்.

ஒரு ஊருக்காக ஒரு குடும்பத்தைத் தியாகம் செய்யலாம்.

ஒரு குடும்பத்துக்காகத் தன்னையே தியாகம் செய்யலாம். தெரியுமா? ஆனால் எந்தத் தியாகத்துக்கும் சரியான பரிசு கிடைக்காமப் போறதில்லே. யு அன்டர்ஸ்டான்ட்!'' என்று

முணுமுணுத்த அவனது உன்னதமான மனதின் அழகில் அவள் மயங்கிப் போனாள்.

தன்னைக் கொடுக்கவும், அவன் வாழ்வில் என்றைக்கும் ஒரு தூணாய் நிற்கவும் அன்பைக் கொடுத்து... வாங்கி... ஆளுகை செய்யவும்... அவள் உள்ளப் பூர்வமாய்த் தயாரானாள்.

காலமும் அவர்களுக்காக உயர்ந்த வாழ்க்கையைத் தங்கத் தட்டில் ஏந்தித் தயாராய்க் காத்து நின்றது.